# ஏழாவது காதல்



விசா பப்ளிகேஷன்ஸ்

பாலகுமாரன்

# ஏழாவது காதல்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55
வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு: டிசம்பர், 2002
இரண்டாம் பதிப்பு : மே, 2007
உரிமை: ஆசிரியருக்கு©
EZHAVATHU KATHAL

By: Balakumaran

Second Edition : May, 2007

வெளியீடு: விசா பப்ளிகேஷன்ஸ்

No. of Pages: 248
031, 3ND, E P7
Paper used: 11.6 N.S. Book Print

விலை ரூ. 75/-
41737
Available at:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696

கிடைக்குமிடம்:
6248617
திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண்: 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தி.நகர், சென்னை–17.
போன்: 24342899, 243427696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 23610810

Printed at: Udayam offsets, Ph : 28454808



# முன்னுரை

இனிய ஸ்நேகிதங்களுக்கு வணக்கம்

வாழிய நலம்.

ஆனாலும் நீ அதிகம் உண்மை சொல்கிறாய் என்று ஆசாரமான என் உறவுகள் சிலர் என்னிடம் சீறுவதுண்டு.

உன்னைப்பத்தி ஏதாவது சொல்லிண்டு போ. என்னை ஏன் வம்புல இழுக்கற என்று ஏதோவொரு கதையைச் சுட்டிக்காட்டி இது நான்தானே என்று என்னிடம் கேட்டு பிறகு சண்டையை துவங்கியிருக்கிற உறவுகள் சிலர் உண்டு. என்னைப்பற்றி மட்டுமே நான் எப்படி எழுத முடியும். என்னைப்பற்றி எழுதும்போது எனக்கு அருகே இருப்பவரைப் பற்றி சிந்திக்காமல் எப்படி இருக்க முடியும். வாழ்வின் நிகழ்ச்சிகள் எல்லாம் கூட்டுமுயற்சிதானே. நான் என்ன தூங்குமூஞ்சி மரமா. தனியாக வளர்த்து தனியே இருப்பதற்கு. முன்னும் பின்னும் அலைந்து மேலும் கீழும் நகர்ந்து நல்லதும் கெட்டதும் பார்த்துக் களித்தவன். என்னைப் பற்றிய கதையாக்குவது வெறும் கர்வத்திற்காக அல்லவே அல்ல. என் கதை ஒரு கருத்தாக எவர் மனதிலேயும் பதிந்து அவர் வாழ்க்கை நடத்த உதவாதா என்கிற அக்கறைதான் காரணம்.

என்ன மறுபடியும் செக்ஸ் எழுத ஆரம்பிச்சுட்ட என்று இந்தக் கதை படித்துவிட்டு எனக்கு தொலைபேசியில் பேசியவர்கள் சிலர் உண்டு.

நான் துறவறம் மேற்கொண்டதாய் யாருக்கும் சொன்னதில்லை. நடந்தவைகளை நினைத்துப் பார்க்கும் வண்ணமாகக் கூட நாமும் எழுதக்கூடாது என்ற ஆசார விதிமுறைகள் எனக்கு இல்லை. இந்த வெள்ளைத்தாடி எதையும் வெறுப்பதற்காக வளர்க்கப்பட்டதல்ல. வேறு

எந்த விருப்பத்தினாலும் மேற்கொண்டது அல்ல. அதுவொரு நடுநிலைமை. தலைமுடியை சிங்காரித்துக் கொள்ளவும் செய்யாமல், சிதைக்கவும் செய்யாமல் இயல்பான தோற்றத்தோடே இருக்கவிடும் பண்பு.

நன்றாக உணவருந்தி முடித்த சுகத்தோடு எழுதப்பட்ட கதை இது.

கதைகளில் கற்றுக்கொள்ள அதிகம் இருக்கின்றன எவர் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறாரோ அவர்களுக்கு விதம்விதமாக சொல்லித்தரவே நான் இடையறாது முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். என் அடுத்த தலைமுறைக்கு மிக நெருங்கிய நண்பரை வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன். இங்கே சகலமும் சொல்லிக் கொடுப்பட்டுதான் மனித சமுதாயம் வளர்ந்து கொண்டிருக்கிறது. நல்லதும் கெட்டதும் போதிக்கப்பட்டுதான் நம் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. ஆழ்ந்து சிந்திக்கவும், அமைதியாக இருக்கவும் ஏற்படும்போதே திகைத்துவிடாமல் அதை தெளிவாகப் பார்க்கவும் என்னுடைய படைப்புகள் உதவுகின்றன. நல்லவைகள் சிலவற்றையாவது நேசிக்க நமக்குத் தெரிந்துவிட்டால் வாழ்க்கை சுவாரசியமாகவும் சுலபமாகவும் இருக்கும்.

நல்ல எழுத்தோடு ஸ்நேகம் கொள்ளுங்கள். எனக்கு உங்கள் படிப்பு அனுபவத்தை எழுதி அனுப்புங்கள். நல்ல கடிதங்களை பிரசுரிப்பதில் எனக்கு விருப்பம் உண்டு.

என்றென்றும் அன்புடன்,

80/4, வாரன் சாலை,
மயிலாப்பூர், சென்னை–4.

பாலகுமாரன்

# ஏழாவது காதல்

## 1

ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் நுழைந்து இடது பக்கமாக இருக்கிற வேணுகோபாலசுவாமி கோவிலுக்கு ஓரமாக போடப்பட்டிருக்கும் மாடிப்படிகளில் ஏறி முன்னும் பின்னுமாகத் தெரிகின்ற ஏழு வானுயர்ந்த கோபுரங்களைப் பார்க்கும்பொழுது மனம் பரவசப்பட்டு நெகிழ்ந்து போயிற்று.

இதற்கு ஏதும் வயதுண்டா என்று கேள்வி எழுந்தது. இருக்கும். இரண்டாயிரம் வருடத்து கோவிலாக இது இருக்கும்.

அதற்கு முன்பும் இது கோவிலாக இருந்ததாமே.

ஆமாம். ஆனால், மணல் அடித்து கோவிலை மூடிவிட்டது. காவிரியில் வெள்ளம் வந்து கோவில் மொத்தமும் மணலால் நிரப்பி திசைமாறி காவிரி நகர்ந்துவிட்டது.

'அடடே, அப்படியா. காவிரி பொங்கி ஸ்ரீரங்கத்தை மூடிக்கொள்ள வேண்டுமென்றால் எப்பேர்பட்ட வெள்ளம் வந்திருக்க வேண்டும்.'

அவனுடைய மனம் அவனோடு பேசியது.

அப்போது மணலுக்கு மேல் விமானத்தின் கலசங்கள் மட்டுமே தெரிந்தன. அந்த கலசங்களில் கிளிகள் உட்கார்ந்து, இது ரங்கன் கோவில். இது

ரங்கன் கோவில், என்று பேசிக் கொண்டிருந்தன. அதைப் பார்தது விட்டு மெல்ல மெல்ல மணலை அப்புறப்படுத்த அங்கு கோவில் இருப்பதை மக்கள் கண்டுபிடித்தார்கள்.

திருமங்கை மன்னன் என்பவன் தன்னுடன் பெரிய படைகளை சேர்த்துக் கொண்டு நாலா பக்கமும் போய் அரசர்களை பார்த்து மிரட்டி காசு பறித்துக் கொண்டு வந்து இந்தக் கோவில் எழுப்பினான். தர மறுத்த அரசர்களின் மீது படையெடுத்தான் என்று கதை உண்டு.

மலைகள் அதிகமில்லாத இந்த ஊரில் எங்கிருந்தோ கற்கள் கொண்டு வந்து பாறைகளால் சுற்றுச்சுவர் எழுப்பி அதன் மீது விமானம் கட்டி அதைச்சுற்றி உத்தரவீதி, சித்திரவீதி என்று அமைத்து, அடாடா, மெல்ல மெல்ல எவ்வளவு பெரிய நகரம் வளர்ந்திருக்கிறது. எத்தனை மகான்கள் நடந்த பூமி. எத்தனை பேர் விஜயம் செய்த ஒரு க்ஷேத்திரம். ராமானுஜர் இங்கு வெகு நாட்கள் தங்கியிருந்தார். ராமானுஜரின் பல நூறு சீடர்கள் இங்குதான் வாழ்ந்து வளர்ந்தார்கள். சரித்திரத்தில் இடம் பெற்றார்கள். பொன்னாத்தாள் என்கிற தாசியும், அவள் அழகிய கண்களுக்கு அடிமையான மல்லனும் அவர்கள் இருவரும் சேர்ந்து ராமானுஜருக்கு அடிமையானதும் இந்த இடத்தில்தான்.

எத்தனை நூறு பாடல்கள். எத்தனை நூறு கதைகள், எவ்வளவு பெரிய நாகரிகம். இங்கு எல்லோரும் தமிழ் பேசியிருக்கிறார்கள். வாழ்ந்து வளர்ந்திருக்கிறார்கள். நிரம்ப குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள். கலைகளை வளர்த்திருக்கிறார்கள். தமிழையும், வடமொழியையும் பேசி சிந்தித்திருக்கிறார்கள். தர்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கோதைப் பிராட்டியின் இந்தப் பாடல் வரிக்கு என்ன அபிநயம் பிடிப்பது என்று தங்களுக்குள் விவாதித்திருக்கிறார்கள்.



இங்கு ஆடல் பாடல் நிகழ்ந்திருக்கிறது. திருமணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. படையெடுப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. முஸ்லீம்கள் கும்பல் கும்பலாக உள்ளே வந்து கதவை உடைத்து எதிர்ப்பட்டவர்களை வெட்டிச் சாய்த்து சூறையாடி பெண்களை இழுத்துப் போன இடம் இந்தக் கோவில்தான். இங்குள்ள பெரும் பொக்கிஷங்கள் முஸ்லீம்களால் வெளியே எடுத்துச் செல்லப்பட்டன.

தனியாக வந்தது எவ்வளவு சௌகரியம். எத்தனை அமைதியாக இந்தக் கோவிலை அனுபவிக்க முடிகிறது.

சாகேதராமன் இறங்கிப்போய் அந்தப் பெரும் கோவிலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இருபத்தேழு வயது வரை வீணடித்து விட்டோம். இந்தக் கோவிலைப் பார்க்க, பிறந்து இருபத்தேழு வருடங்களுக்குப் பிறகுதான் முடிந்திருக்கிறது. இன்னும் இது மாதிரி பல இடங்கள் பார்க்க இருக்கின்றன. இவைகளையெல்லாம் விட்டுவிட்டு வெறுமே கொடைக்கானலுக்கும், ஊட்டிக்கும் மிகப் பெரிய சந்தோஷம் இருக்கிறதென்று அலைந்து கொண்டிருக்கிறோம். இயற்கை அழகுதான். பசுமையான தாவரங்கள் சுகம்தான். ஆனால், அதைவிட மிக சுவாரசியமான விஷயம் மனிதர்கள். மனிதரின் நாகரிகம். நாகரிகத்தை வெளிப்படுத்தும் இதோ இந்த மாதிரி காலத்தால் அழியாத கட்டடங்கள்.

கோவில் என்பது வெறும் வழிபாட்டுத் தலமேயல்ல. அது ஒரு சமூகக்கூடம். சரித்திரப் பின்னணி இருக்கின்ற சந்தோஷமான இடம். மக்கள் நடமாடி நடமாடி அவர்களின் மூச்சுக்காற்றும் உஷ்ணமான உடம்பும் பாதக் குரடுகளும் பட்டு தேய்ந்துத் தேய்ந்து பவித்ரமான பூமி. கொண்டாட்டங்கள் பல லட்சம் நடந்த குதூகலமான நிலம். அதனால்தான் அந்த இடங்களுக்குள் நுழையும் போதே மனதில் ஒரு குதூகலம் நிரம்பி விடுகிறது.

திருச்சிராப்பள்ளியை சுற்றுவது போல திருவண்ணா மலையைச் சுற்ற வேண்டும். அதேபோல மதுரை போய் பார்த்து விட்டு வரவேண்டும். கன்னியாகும ரிக்கு நடக்க வேண்டும். கேரளாவின் சிறிய கோவில் களையெல்லாம் பார்க்க வேண்டும். கர்நாடகத்தில் தர்மஸ்தலா போய் மூன்று நாள் தங்க வேண்டும். கொல்லூரில் ஒரு வாரம் வாழ வேண்டும். சுப்ரமணி யாவில் மூன்று நாள் தங்க வேண்டும். துங்கபத்ரா நதிக்கரையில் வாரக்கணக்கில் வசிக்க வேண்டும். வேலைக்குப் போகக் கூடாது. சம்பாதிக்கக்கூடாது. மனம் எங்கே போகவேண்டுமென்று கட்டளையிடு கிறதோ அங்கே போய் விட வேண்டும். அப்படிப் போவதற்குண்டான காசை யாராவது கொடுத்து உதவ வேண்டும்.

'சாகேதராமா நீ போ. நீ போய் க்ஷேத்திராடனம் செய்து கொண்டிரு' என்று சொல்லிவிட வேண்டும். கைச் செலவுக்கும், தங்குவதற்கும் இடமும், சாப்பாட் டுச் செலவும், உண்பதற்கான பழங்களும் கொடுத்து விட வேண்டும். அவன் சுகமாக இருக்கட்டும் என்று ஒரு நாள் முழுவதும் கண்மூடி அந்தக் கோவிலில் பிராத்தனை செய்ய வேண்டும். அந்தப் பிராத்தனை பலிக்க வேண்டும். அவன் நினைத்ததைவிட சீரும், சிறப்புமாக வாழ வேண்டும். பிறகு வேறொருவரிடம் காசு வாங்கிக் கொண்டு வேறு க்ஷேத்திரம் போக வேண்டும்.

போய் என்ன செய்வது. போய் வந்த அனுபவத்தை எழுதுவதா. கோவில் பற்றிய விவரத்தை ஏதேனும் பத்திரிகைக்கு கொடுப்பதா.

இல்லை. அதுவும் என்னுடைய வேலை இல்லை. வெறுமே... வெறுமே இடையறாது பிரார்த்தனை செய்வதே என் வேலையாக இருக்க வேண்டும்.

இப்படியொரு வாழ்க்கை கிடைக்குமா. இப்படி யாராவது வாழ்ந்திருக்கிறார்களா.



இருந்திருக்கிறார்கள். பிரார்த்தனை செய்வதே தங் களுக்குடைய வாழ்க்கையின் நோக்கமாக வேறு எந்தப் பொறுப்பும் இன்றி இருந்திருக்கிறார்கள். ஊர் ஆதரித் தாலும் கைவிட்டாலும் அதைப்பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் ஊர் ஊராகப் போவதே தங்களின் வாழ்வின் முழுப் பயனாகக் கருதி நடந்திருக்கிறார்கள்.

ஆனாலும், என்னால் அப்படியொரு வாழ்க்கை வாழ இயலுமோ. இல்லை. முடியாது. மனம் சுகங்களுக் காக ஏங்கி ஏங்கி பழக்கப்பட்டு விட்டது. காது குடையும் பஞ்சிலிருந்து குஷன் மெத்தை வரை சுகம் அனுபவித்து உடம்பும் மனசும் போதையில் ஆழ்ந்திருக் கின்றன. புகழ் வேண்டும், பெண் வேண்டும். அந்தப் பெண் சுற்றி சுற்றி வந்து புகழ வேண்டும் என்ற மாளாத காதல் இருக்கிறது. நோய் மாதிரி மனமெல் லாம் இந்தக் காதல் பரவியிருக்கிறது.

மாளாத காதல் நோயாளன் போல் என்பதற்கு என்ன அர்த்தம். செத்துப் போகாமல் செத்துக் கொண்டிருக்கின்ற காதல் நோயாளன் என்று அர்த்தம் கொள்ளலாம். இல்லை. வேறு ஏதாவது.

சாகேதராமனின் மனம் முன்னும் பின்னுமாக அலைந்தது. தொடர்ச்சியின்றி யோசனை செய்தது.

ஊருக்குப் போய் ஸ்ரீரங்கத்தை இப்படி யாராவது பார்த்திருக்கிறீர்களா என்று கேட்க வேண்டும். உள்ளே நுழைந்ததும் இடது பக்கம் இரும்புக் கடைகள் இருக் கும். வாணலியும் அகப்பையும் விற்கின்ற கடைகள் இருக்கும். அதைத் தாண்டி ஒரு மண்டபம் வரும். மண்டபத்தை ஒட்டி புத்தகங்கள் விற்கின்ற ஒரு சிறிய கூண்டு வரும். அந்த கூண்டிற்குப் பின்னால் ஒரு பாதை போகும். அந்த பாதைக்கு அருகே ஒரு மாடிப்படி இருக்கும். அந்த மாடிப்படிகளில் ஏறினால் இப்படித் தெரியும் என்று யாரையெல்லாம் சந்திக்கி றோமோ அவர்களிடமெல்லாம் சொல்லலாம்.

ஆலயங்கள், ஆலயங்களை இப்படி பார்ப்பதற்காக வர வில்லை. கூட்டம் கூட்டமாக ஸ்ரீரங்கத்திற்கு வருகிறார்கள். நேரே கருவறை நோக்கி தபதபவென்று ஓடுகிறார்கள். ஊர் ஊராக போய் தரிசனம் செய்கின்ற டூரிஸ்டுகளே அதிகம் இருக்கிறார்கள். மூன்று நாளில் நாற்பது கோவில்களாம். பிசாசு மாதிரி ஓடுகிறார்கள். உள்ளூர்காரர்களுக்கு வேறுவித அவசரம். தினம் தினம் பார்க்கிற சாமிதானே என்று அலட்சியத்தோடு வீட்டிற் குப் போகின்ற அவசரத்தோடு ரங்கா.. ரங்கா என்று கருவறைக்குள்ளே நின்று கத்திவிட்டு ஓடிப்போய் விடுகிறார்கள்.

ஸ்ரீரங்கத்தை அனுபவிக்க எல்லோராலும் முடி யாது. எத்தனை அனுபவித்தாலும் மனசு நிறையாது. இது தொடர்பாக புத்தகங்கள் படிக்க வேண்டும். படித்து விட்டு மறுபடியும் வரவேண்டும். வந்து மறுபடியும் அனுபவிக்க வேண்டும். மறுபடியும் அனுபவித்து விட்டுப் போய் புத்தகங்கள் படிக்க வேண்டும்.

ஆனால், இதெல்லாம் கற்பனை. வெறும் கனவு சுகம். மூன்று நாளைக்குப் பிறகு மறுபடியும் அலு வலகத்திற்குப் போக வேண்டும். கம்ப்யூட்டருக்கு முன்னால் உட்கார்ந்து இன்னும் யார் யார் கடன் வசூலாகவில்லை என்று கணக்குப் பார்க்க வேண்டும்.

ஐயா, கடந்த நான்கு வருடங்களாக நீங்கள் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் எங்கள் வக்கீல் நோட்டீஸ்களுக்கும் பதில் சொல்லாமல் இருப் பதால் உங்கள் தாவர சங்கம சொத்துக்களை ஜப்தி செய்வதற்காக கோர்ட் நடவடிக்கை எடுக்கப் போகி றோம் என்பதை தெரிவித்துக் கொள்வதாடு, உடனடி யாக கடனை திருப்பி கொடுத்துவிட வேண்டுமென்ற எச்சரிக்கையையும் விடுக்கிறோம் என்று கடிதம் அனுப்ப வேண்டும்.

அட, நீ அந்த பைனான்ஸ் கம்பெனியில வேலை செய்யறியா. ரொம்ப பிரமாதமான கம்பெனியாமே.



அதை நம்பி எத்தனை லட்சம் வேணாலும் பணம் போடலாம்னு சொல்றாளே. உன்னுடைய அபிப்ரா யம் என்ன, நீ கேரண்டி கொடுப்பியா பணம் போட றதுக்கு என்று யாரோ கேட்க, அங்கு போய் பதில் சொல்ல வேண்டும்.

"ஐம்பதாயிரம் ரூபா இருந்தா போதும் ஸார். ஒரு லாரி வாங்கலாம். ஐம்பதாயிரம் ரூபா எங்க கம்பெனி யில கட்டுங்க. மிச்ச காசை நாங்க தறோம். லாரி வாங்கி கையில கொடுக்கிறோம். லாரியை எங்கிட்ட அடமானம் வச்சுடுங்க. நல்லா ஓட்டி சம்பாதிங்க. கொஞ்சம் கொஞ்சமா அடைங்க. ஏழு வருஷத்துல லாரி உங்களுக்கே சொந்தமாயிடும்."

ஆறு லட்ச ரூபாய் லாரியை பத்து லட்ச ரூபாய்க்கு விற்கிற சாமர்த்தியம் தொடர்ந்து செய்ய வேண்டும்.

மாதம் பதினைந்தாயிரம் ரூபாய் வாங்குகிற சம்பளத் திற்கு அப்புறம் எப்போது இன்கிரிமென்ட் எத்தனை இன்கிரிமென்ட் என்று கிசுகிசுப்பாய் பேசவேண்டும்.

அவனுக்கு டக்டக்குனு ப்ரமோஷன் கிடைக் குதுன்னா அதுக்கு வேற காரணம் இருக்கு. எம்டிய கூப்பிட்டு விருந்து வைக்கிறான். பொண்டாட்டிய கூட்டிக் கொடுக்கறான். ப்ரமோஷன் கிடைக்குது. நான் பண்ண முடியுமா, இல்லை நீ பண்ண முடியுமா.

நாராசமான பேச்சுக்களை காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

"உன் பேர்தானப்பா அடிபடுது. ஏதாவது சாமர்த் தியம் இருந்தா இங்கயே தங்கறதுக்கு பார்த்துக்கோ" என்று கூடிப் பேச வேண்டும்.

உனக்கு அக்கா, தங்கை யாருமில்லையா. நீ மட்டும் தானா. பதினஞ்சாயிரம் ரூபா சம்பாதிக்கறயே என்ன செலவு பண்ணுவ. அப்பா இல்லையா. அம்மா மட்டும் தானா. சொந்த வீடா, மோட்டார் சைக்கிள் எப்படி வாங்கின. கடன்லயா, லம்ப் கேஷா, எப்படிடா கேஷ்

கொடுத்து வாங்க முடியறது. கீழ் போர்ஷன் வாட கைக்கு விட்ருக்கேளா. மேல நீங்க குடியிருக்கேளா. அடேங்கப்பா. இத்தனை சௌகரியம் இருக்கு. வயசு இருவத்தேழு ஆச்சு. ஏண்டா இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை. நான் வேணா உனக்கு பொண்ணு பார்க்கட்டுமா.

அவன் யார் என்பது பற்றி கொஞ்சம்கூட யோசிக்காமல், அவன் ஆசை அபிலாஷைகளை பேசாமல் அவனைப் பார்த்து பொறாமைப்படுவார்கள். கூட்டத்திற்கு நடுவே புழுங்குவார்கள்.

"ஏன் கல்யாணம் பண்ணிக்கலைன்னு கேட்கறியா. குடிக்கறான். கெட்ட சகவாசம் இருக்கு. பொம்மனாட்டி பின்னாடியே சுத்தறான். அவனுக்கெல்லாம் கல்யாணம் ஆகாதுடா. அவன் கல்யாணம் பண்ணிக்கறதுக்கே பிறக்கல. வாழ்க்கையை அனுபவிக்கறதுக்கு பிறந்திருக்கான். நேத்து கூட பார்த்தேன். ஒரு பொம்மனாட்டி முதுகுல அட்டை மாதிரி ஒட்டிண்டு போறா. இவன் பிசாசு மாதிரி வண்டி ஓட்டிண்டு போறான். இந்த ஜென்மத்துல நீயும், நானும் அப்படியொரு பொம்மனாட்டியோட மோட்டார் சைக்கிள்ல போகவே முடியாது. நமக்கு டொண்டி ஒன் சி தான். மூத்திர சந்துதான். தீபாவளிக்கு யாராவது லாரிக்காரன் கொண்டு வந்து ஸ்வீட் கொடுப்பான். அதை நக்கி தின்னுண்டு இருப்போம். இருவத்தேழு வயசு அவனுக்கு ஸ்வீட்டே சாப்பிடறதில்லைன்னு ஒரு சங்கல்பமாம். ஏண்டா ஏதாவது சர்க்கரை வியாதியான்னு கேட்டேன். அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஸ்வீட் சாப்பிட்டா மனசு ரொம்ப அல்லாடறது. மனசை கட்டுப்படுத்தறதுக்காக ஸ்வீட் சாப்பிறதில்லை அப்படின்னு சொல்றான். எல்லாம் இருக்கறவனுக்கு சாப்பிட பிடிக்கமாட்டேங்கறது. ஒண்ணும் இல்லாத நமக்கு சாப்பிட ஒண்ணுமே கிடைக்க மாட்டேங்கறது. மயிலாப்பூர் கற்பகாம்பாள் மெஸ்ல நெய் கிச்சடி



போட்டிருக்கான். அதைத் தாண்டிப் போறபோதே வாசனை மூக்கை பிடுங்கறது. அப்போ இருந்த பசியில மூணு கிச்சடி சாப்பிட்டிருப்பேன். இல்லையே காசு இல்லையே. என்ன பண்றது. அதுவே சாகேதராமன் பர்ஸை திறந்தான்னா நூறு ரூபா நோட்டா சலவையா அடுக்கி வச்சுருக்கான். நவ துவாரமும் எரிஞ்சு போச்சு போ."

ஊருக்குப் போய் காதுபட பல பொறாமைகளைக் கேட்டு நொந்து போக வேண்டியிருக்கும்.

"திருச்சிக்கு போகறயா. ராக்போர்ட்தான் கம்ஃபர்டபிள். பத்தரை மணிக்கு வண்டி. ஒன்பதரைக்கே போயிடு. வண்டி உள்ள போறபோதே டப்புனு கடைசி பெட்டியில ஏறி துண்டை போட்டுப் படுத்துரு. ஒரு பய ஒண்ணும் பண்ண முடியாது."

"இல்லை. நான் பத்தே காலுக்குத்தான் போவேன்."

"டேய் இடமே கிடைக்காதுடா."

"நான் ரிசர்வ் பண்ணிட்டேனே."

"என்ன கோச் எஸ் த்ரியா?"

"இல்லை. ஏ.எஸ்.ஒன்."

"ஏ.எஸ். ஒண்ணுன்னா என்ன."

"ஏசி கோச். ஸ்லீப்பர் நம்பர் ஒன்."

"ஏ.சி கோச்சா" டக்கென்று வாயடைத்து நின்று விழி விரியப் பார்த்து, பிறகு மெல்ல அந்த இடம் விட்டு நகர்ந்து விடுவார்கள்.

நீயும் நானும் பேசுவதற்கு எதுவும் இல்லை. உன்னோடு எந்த சங்காத்தமும் இல்லை என்று பிரிந்து விடுவார்கள். இந்தப் பொறாமையையும் தாங்கிக் கொள்ள வேண்டும்.

"என்ன, ரெண்டு பேரும் தனியா பேசிகிட்டிருக்கீங்க."

யாரோ இரண்டு ஆபீஸ் ஆட்களை நெருங்கி அவன் கேள்வி கேட்பான்.

"உனக்கென்னப்பா ராஜா வீட்டு கன்னுக்குட்டி. எனக்கும் என் பொண்டாட்டிக்கும் ஒரு வாரமா சண்டை. அதை எப்படி தீர்க்கறதுன்னு யோசனை பண்ணிண்டிருக்கோம்" என்று பதில் சொல்வார்கள்.

உனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதில் ஈடுபட்டு விடாதே. இதைப் பற்றி அதிகம் கேட்காதே என்பதாய் துரத்தி விடுவார்கள். அலுவலகத்தில் அவனைப் போலவே இருக்கின்ற இளைஞர்களுக்கு சுமைகள் அதிகமிருக்கின்றன. அவனைவிட வயதான நண்பர்களுக்கு காசு பணம் பற்றிய பற்றாக்குறை இருந்தது. உனக்கு எந்தக் கவலையுமில்லை என்று அடிக்கடி அலுவலக நண்பர்கள் சொன்னார்கள்.

ஆனால், சாகேதராமனுக்கு கவலைகள் இருந்தன. தோல்விகள் இருந்தன. அதை யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமல் தானே தடுமாறித் தடுமாறி அனுபவித்துக் கொண்டிருந்தான். அம்மாதான் சொல்லிக் கொடுத்தாள்.

"உனக்கு மனசு ஒரு நிலைப்படமாட்டேங்கறது. அதுக்கு தியானம் பண்ணணும். தியானம் பண்றது எளிதில்லை. ரொம்ப சிரமம். தியானம் பண்றேன்னு உட்காரும்போது மனசு இன்னும் பேயாட்டமா ஆடும். அதுக்காக இன்னொரு வழி பெரியவா சொல்லுவா. எங்கேயாவது க்ஷேத்திராடனம் போயிண்டே இருந்தாக்க ஏதோவொரு இடத்துல ஏதோவொரு காரணத்துனால மனசு அமைதியாகும். மனசு அமைதியானா தான் உனக்கு என்ன வேணும்னு தெரியும். உனக்கு என்ன வேணும்னு தெரியாததுனாலதான் நமக்கு சிக்கல்கள் அதிகம்."

"என்ன வேணும்னு தெரியும்மா. ஆனா கிடைக்க மாட்டேங்கறதே."



"ஆங்... அதுதான் பிரச்சினை. கிடைக்கணும்னு பிரார்த்தனை பண்ணு. கை கூப்பிக் கேளு. நீயா தேடிக் கண்டுபிடிக்கறது சொத்தையாவோ, சொள்ளை யாவோ போகலாம். சுவாமியா பார்த்து கொடுக்கறது ரொம்ப நல்ல விஷயமா கொடுப்பார். பயப்படாம கேளு. வெட்கப்படாம கேளு."

"நீ கேட்டிருக்கியாம்மா."

அவன் அம்மாவை பதிலுக்குக் கேட்டான்.

"நான் கேட்டேனே."

"என்ன கேட்ட."

"நல்ல புருஷன் வேணும்னு எல்லாப் பெண்கள் மாதிரியும் கேட்டேனே."

"கிடைச்சுதா."

"இதென்ன கேள்வி. உங்கப்பாவை விட ஒரு நல்ல புருஷன் ஒருத்தர் உண்டா."

"ஆனா, நாப்பத்தஞ்சு வயசுல உன்னை தனியா விட்டுட்டு செத்துப் போயிட்டாரே."

"ச்சு... தனியா விட்டுட்டு செத்துப் போகலைடா. உன்னை அழகா வளர்த்துட்டுதான் செத்துப்போனார்."

"அப்பா இருந்தார்னா உனக்கு இப்போ சந்தோஷமா இருக்குமில்லையா."

"உங்கப்பா இருந்தார்னா அதுவொரு வகையான சந்தோஷம். இல்லைங்கறபோது வேறு வகையான சந்தோஷம்."

"என்னம்மா பேசற. அப்பா இல்லாதது சந்தோஷமா."

"ஆமாண்டா. உனக்கு சொன்னா புரியாது. என் உடம்பு தளர்ந்துண்டே வருது. புருஷன் இல்லேங்கற போது என்னுடைய வாழ்க்கை இன்னும் அமைதியா ஆகுறது. அவர் வரார்ரேன்னு நான் தடுக்குனு எழுந்து

நிக்க வேண்டாம். அவசர அவசரமா காரியங்கள் பண்ண வேண்டாம். அவருக்கு என்ன வேணும்னு யோசிக்க வேண்டாம். புருஷனைப்பத்தி யோசிக்கறத அறவே விட்டுட்டு நான் என்னை பத்தி யோசிக்க ஆரம்பிச்சுட்டேன்."

"ஏம்மா, என்னைப்பத்தி யோசிக்கலை?"

"இல்லை. உன்னை நீயே சரி பண்ணிண்டு நீயே உன் வாழ்க்கையை அமைச்சுக்கணும். அதுக்குண்டான எல்லாவிதமான புத்தியும் உனக்கு இருக்கு. உங்கிட்ட இல்லாதது பிரார்த்தனை. அந்த பிரார்த்தனைக் காகத்தான் கொஞ்சம் ஊர் ஊரா போயிட்டுவான்னு சொல்றேன்."

"ஆபீஸ்ல ரிஷிகேஷ் டூர் போறாம்மா."

"போகாத."

"ஏன்."

"இந்த ஆபீஸ் டூர் மாதிரி கேவலமான ஒரு விஷயம் உலகத்துல எதுவுமே இல்லை. ரிஷிகேஷ்ல உட்கார்ந் துண்டு அவன் நாற்பத்திரெண்டு லட்ச ரூபாய் தரணும். திவாலாயிடுவான் போலிருக்கு. என்ன பண்றதுன்னே தெரியலை அப்படின்னு ஒரு மனுஷன் அலட்ட அதைப் பார்த்து இன்னொன்னு கூடுதலா அலட்ட அங்கபோய் உட்கார்ந்துண்டும் இந்த ஆபீஸைப் பத்திதான் பேசிண்டிருப்பேள்."

"நாங்க ஃப்ரெண்ட்ஸா போனா."

"அதுவும் வேண்டாம். தனியா போ."

"ஏம்மா."

"அப்போதான் அனுபவிக்க முடியும். ஒருத்தன் குளிக்கணும்பான். ஒருத்தன் திங்கணும்பான். குளிக்கற தும் முழுக்க செய்யாத, திங்கறதும் முழுக்க செய்யாத நாலு பேரோட போறபோது எல்லாம் குழப்படியா போயிடும்."



"தனியா டூர் போயிருக்கியாம்மா."

"போக முடியாதே. போகற வாய்ப்பில்லையே. ஆனா, போகணும்னு ஆசை இருக்கு. அதனாலதான் உன்னை போயிட்டுவான்னு சொல்றேன்."

"நீ வாயேன்மா. நீயும், நானும் போகலாமா."

"வேண்டாம். அம்மா கூட சுமை. பெத்தவ கூட சுமை. என்னத்துக்கு. அப்படியொரு தடவை போக வேண்டிய அவசியமிருந்தால் எனக்கு இதமா இருக்கற வாளோட நான் போயிட்டு வரேன். நீ தனியா போக பழகிக்கோ. தனியா இருக்க பழகிக்கோ. அப்போதான் உன்னைப் பத்தி உனக்கு தெரியவரும்."

"எங்கம்மா போகலாம்."

"அதைகூட நீ யார்க்கிட்டேயும் கேட்காத. நீயா தீர்மானம் பண்ணு. மனசு என்ன சொல்றதோ அதுப்படி போ."

"அம்மா என்னை கொஞ்சம் லூஸுன்னு நினைக் கிறயா."

சாகேதராமன் அம்மாவுக்கு அருகே போய் அவள் கைகளை கோர்த்துக் கொண்டு கேட்டான்.

"இல்லைடா நீ நல்லவன். அதனால வெளியாள் கண்ணுக்கு லூஸா தெரியற. ரொம்ப நல்லவன். அதனால மனசுல இருக்கறத பேசற. யாருமே மனசுல இருக்கறத பேசமாட்டாடா."

"அப்போ திருட்டுத்தனமா இருக்கணுமா."

"அதையும் நீ தீர்மானம் பண்ணு."

"ஏம்மா சொல்லித் தரமாட்டேங்கற."

"நான் சொல்லித் தரமாட்டேன்னு சொல்லலை. எல்லாத்தையும் நீயா புரிஞ்சுக்கோன்னு சொல்றேன். சொல்லித்தர வயசை நீ தாண்டிட்ட சாகேதராமா. ஒவ்வொரு விஷயத்துலயும் மத்தவாகிட்ட கைகட்டி கேட்கற ஒரு தன்மையை உதறிடு. ஆடுகள்தான்

அடங்கி நிற்கும். மந்தை மந்தையா போகும். பெரியவா என்ன சொல்றாளோ அதுப்படி கேட்கறேன் அப்படின்னு பவ்யம் காட்டும். உண்மையில அது பவ்யம் இல்லை. அதுவொரு பரிதாபமான, சோம்பேறியான, யோசிப்பே இல்லாத ஒரு மக்கு நிலை. ஒரு வாரப் பத்திரிகையில ஒருத்தன் கேள்வி கேட்கறான். ராகு காலத்துல ஆபீஸ் போகலாமா அது நல்லதான்னு. இது என்ன கேள்வி. இதுக்கு ஒருத்தர் என்ன பதில் சொல்ல முடியும். போயேன். போய்ப் பாரேன். யாரையாவது பார்த்து எதையாவது கேட்கணும். பதில் முக்கியமே இல்லை. கேள்வி கேட்டவனை பார்த்து என்னப்பா இந்த பதில் புரிஞ்சுதான்னு கேளு. அதைப்பத்தி அக்கறை இல்லை. என் கேள்வி பத்திரிகையில வந்துடுத்துன்னு சொல்லுவான் அவ்ளோதான்."

"எனக்கு நல்ல அப்பா கிடைச்சார்ம்மா. நல்ல அம்மா கிடைச்சா. நல்ல குரு கிடைக்கலைம்மா."

"அவசியமில்லை. உனக்கு நீயே குரு. உன்னை நீ கேள்வி கேட்டு உங்கிட்டேயிருந்து வர பதில் உண்மையா இருந்ததுன்னா உனக்கு நீயே குரு. தனக்குத்தானே பொய் சொல்லி முன்னயும் பின்னயும் அலையறவாளுக்குத்தான், பேராசை ஜாஸ்தி இருக்கறவாளுக்குத்தான் குரு தேவைப்படறது. இவாளுக்குத்தான் ஒரு மனுஷா அவசியமாகறா. நீயே சரியா இரேன். தட்டுத்தடுமாறி கத்துக்கோயேன். தப்புன்னா வெட்கப்படாம தப்பை ஒத்துக்கோ. இதைவிட பெரிய குரு வேணுமா. வாழ்க்கைதான் பாடம். வாழ்வுதான் குரு."

"நமக்குள்ள இருக்கற குரு எப்போ வெளிய வருவார்."

"கும்பலா இருக்கும் போது வரமாட்டார். தனியா இரு. உனக்குள்ள இருக்கற குரு வெளிய வந்து உன்னை எங்க நடத்திண்டு போகணுமோ நடத்திண்டு போவார். தனியா இருக்கறதுக்கு முதல் வழி க்ஷேத்திரா



டனம். வேலை, சம்பளம் எல்லாத்தையும் மறந்துட்டு போ. லீவு இருக்கா?"

"அப்பாவோட திவசத்துக்காக ஒரு நாள் லீவு போட்டேன். அவ்ளோதான். மத்தபடி பத்தொன்பது நாள் லீவு கையில இருக்கு."

"பத்து நாள் லீவு போடு. எல்லா இடத்தையும் சுத்திப் பார்."

"நீ தனியா இருப்பியாம்மா."

"நான் எங்கடா தனியா இருக்கேன். கீழ குடித்தனக்காரா இருக்கா. ஒருத்தருக்கு ரெண்டு பேர். அந்த கல்யாண'மான பொண்ணும் ஓடி வந்து கவனிச்சுக்கறது. பையன் பிரியமா இருக்கான். இன்னொரு குடித்தனக்காரர் வயசானவர் இருக்கார். பகல் முழுக்க வராண்டாவுல உட்கார்ந்து உள்ள யார் போனாலும் கேள்வி கேட்கறார். என்ன பயம் சொல்லு."

"புரிஞ்சுடுத்து."

"என்ன புரிஞ்சுடுத்து."

"நீ தனியா இருக்கணும்னு என்னை விரட்டறியா."

"ஆமான்னு வச்சுக்கோயேன். என்ன தப்பு."

"நீ ரொம்ப திமிராயிட்ட போ."

"ஆமாண்டா. நீ சொல்றது கரெக்ட். எனக்குள்ள ஒரு திமிர் இருக்கு. யாரோடயும் ஒட்டாத திமிர். எதுவும் வேண்டாத திமிர். நான் தனிங்கற திமிர் இருக்கு. அங்கேயிருந்துதாண்டா நல்ல விஷயங்கள் வெளிய வருது. அங்கேயிருந்துதான் ஞானம் பிறக்கறது. நிக்க பயந்து அடுத்தவாளோட முதுகுல சாய்ஞ்சுண்டிருந்தா, இன்னொருத்தர் தோள்ல சவாரி பண்ணிண்டிருந்தா எதுவுமே புரியாது. கூடைக்குள்ள இருக்கற கோழி மாதிரி அங்கேயே தூங்கி, அங்கேயே வெளிக்கு போயிண்டு. ச்சீ... அப்படியொரு வாழ்க்கை வேண்டாம்."

"ஸ்ரீரங்கம் பார்த்திருக்கியோ."

"எப்போவோ ஒரு தடவை. இருவது வயசுல உங்கப்பாவோட போனது. தெளிவா ஞாபகமில்லை."

அம்மாவை இங்கே கூட்டிவர வேண்டும். இங்கே நிறுத்தி வைத்து இந்த ஏழு கோபுரங்களையும் காட்ட வேண்டும். அம்மா பரவசப்படுவாள். ஏதேனும் புதிய விளக்கம் சொல்வாள்.

"ஸ்ரீரங்கம் சத்திய பூமி. அதனாலதான் ஸ்வாமி அங்க ஆதிசேஷன்ல படுத்துண்டிருக்கார்."

எப்போதோ ஒரு முறை அம்மா சொல்லியிருக்கிறாள்.

"சத்தியத்துக்கும், ஆதிசேஷனுக்கும் என்ன சம்மந்தம்."

அவன் வியப்போடு அம்மாவைக் கேட்டான்.

"சேஷம் என்றால் எஞ்சியது. இறைவன் இதுவா... இதுவா... என்று தேடிவிட்டு எல்லாமும் இல்லையென்று சொல்லி, எது எஞ்சியிருக்கிறதோ அந்த இடத்தில் இறைவன் இருக்கிறான்."

"எனக்கு புரியலையேம்மா நீ சொல்றது."

"இறைவன் என்பவன் யார். சிவனா, விஷ்ணுவா, பிரம்மாவா, வாக்கா, மனமா, உயிரா, உடம்பா என்று பல்வேறு வகையாக விசாரித்துவிட்டு இவை எதிலும் இல்லை. இவை எல்லாம் தாண்டி வேறு ஏதோ ஒன்று என்று நகர்ந்து அதைக் கண்டு பிடிக்கறபோது, அந்த கண்டு பிடித்த இடத்தின் நடுவில் மையத்தில் இறைவன் இருக்கிறான். ஆதிசேஷன், ஆரம்பத்திலிருந்து எஞ்சியிருப்பது. எதனோடும் ஒட்டாது இருப்பது. அதிலே இறைவன் இருக்கிறான். அவன் வெறுமே படுத்துக் கொண்டிருக்கிறான். எதுவும் செய்யாமல் இருக்கிறான். எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். சாட்சியாக இருக்கிறான். பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு எது சாட்சியாக இருக்கிறதோ அது இறைவன்."

"எனக்குப் புரியலையேம்மா."

இப்பவும் அவன் மறுபடி கேட்க, "விட்டுடு. எப்போவாவது புரியும். எனக்கே ஒரு சமயம் புரிஞ்சா மாதிரி இருக்கு. இன்னொரு சமயம் குழப்பமா இருக்கு. இதை உங்கிட்ட சொல்லியிருக்கக் கூடாது."

அம்மாவையே வியப்போடு பார்த்துக் கொண்டிருக்க அவள் அவன் தலையை கலைத்துவிட்டுப் போவாள்.

இப்படி கவித்துவமான ஒரு அம்மா கிடைத்த தாலோ என்னவோ வாழ்க்கையில் பல்வேறு சமயங்களில் குழப்பங்களும், வேதனைகளும் வந்தன. தானாகத் தேடிக் கொண்ட வேதனைகள் அதிகமாயின. மற்றவர் போல் பொய்யும் புரட்டுமாக இருக்க முடியாமல் போயிற்று. எல்லாவற்றையும் திகைத்துப் பார்த்து அறை வாங்கி, அறை வாங்குவதையே உற்றுப் பார்த்து மனிதர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று வியக்கும்படி ஆயிற்று.

"அது வாஸ்தவம். நம்ம குடும்பத்திலேயே யாருக்கும் சாமர்த்தியம் போறாது. திருட்டுத் தனம்தான் உலகத்துல பெரிய சாமர்த்தியம் அப்படின்னா, நமக்கு சுத்தமா போறவே போறாது. உங்கப்பாவுக்கும் அந்த மாதிரி புத்தி இல்லை. எனக்கும் அந்த மாதிரி புத்தி இல்லை. உனக்கு மட்டும் எப்படி வரும். இப்படி சின்னச் சின்னதா அவமானப்பட்டுட்டு ஏன் இப்படி ஆயிடுத்து, ஏன் இப்படி ஆயிடுத்துன்னு விதிர்த்து போயிருப்ப."

"அம்மா திருட்டுத்தனம்தான் கெட்டிக்காரத் தனமா."

"ஒரு வகையில் ஆமாம். களவும் கற்று மற. இதுக்கு எந்த மறைபொருளான அர்த்தமும் இல்லை. நேரடி

யான அர்த்தம். களவு எதுக்குக் கத்துக்கணும். ஏன் மறக்கணும். திருடாள கண்டுபிடிக்கணும்னா உனக்கு திருடத் தெரிஞ்சாதான் திருடாளத் தெரியும். கோள் மூட்டிகளை புரிஞ்சுகறதுக்கு கோள் மூட்ட கத்துக்க ணும். பொய் சொல்றவனை புரிஞ்சுகறதுக்கு பொய் சொல்லப் பழகிக்கணும். பழகி விட்டுடணும். இதுதான் திருட்டா. ச்சே... சே... எத்தனை அசிங்கமா இருக்கு. இதுதான் பொய்யா. கடவுளே எவ்வளவு பெரிய ஆபாசம். இதுதான் கோள் மூட்டுதலாப்பா. இதுக்கு பதிலா செத்துப் போகலாம். அப்படின்னு ஒரு எண்ணம் வந்து அதை உதறி உறுதியா நிக்கணும், அப்போ எதிர்க்க திருடறவனோ, கோள் சொல்ற வனோ, பொய் சொல்றவனோ வந்தால் பிரிச்சு தனியா தூர தூக்கிப் போட்டுடலாம். களவும் கற்று பிறகு மற.

எங்களுக்குத் திருடவோ, பொய் சொல்லவோ தெரியாது. உனக்கு எங்கேயிருந்து நான் கத்துக் கொடுக்கறது. இது தெரியாததுனாலதான் நீ ஏமாந்து போற. அடிவாங்கற அழற."

அம்மா மறுபடியும் வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

"அம்மா நான் லவ் பண்ணி அவமானப்பட்டதை மறைமுகமா சுட்டிக் காட்டறியா."

சாகேதராமன் வெகுளியாய் அம்மாவைப் பார்த்துக் கேட்டான். அவன் அம்மா வேதனையாகச் சிரித்தாள்.

"நீ பண்ணது லவ்வா. என்னமோ தத்தக்கா பித்தக் கான்னு உளறிட்டு அதை லவ்வுன்னு ஏன் சொல்ற. எது லவ்வுன்னு புரிஞ்சுகறதுக்கே உனக்கு வயசு போறலை. அனுபவம் இல்லை. இதை சரியா சொல்லி கொடுக்கறதுக்கு உனக்கு அப்பா இல்லை. சகோதரன் இல்லை. மாமா இல்லை. நானா எப்படி சொல்லித் தரதுன்னு எனக்கொரு சங்கடம். சரி, இவனா போய் தெரிஞ்சுகிடட்டும்னு உன்னை விட்டுட்டேன்.



பகவான் இருக்கார். அவர்கிட்ட கையேந்து. பகவானே குருவா வந்து நிறைய சொல்லித் தருவார்."

"சில சமயம் கடவுளை நம்பறது கூட ஒரு சந்தே கத்தை கிளப்பறதும்மா. நிஜமா, பொய்யா அப்ப டின்னு ஒரு கேள்வி வருது."

"நிச்சயமா வரும். வந்தாதான் மனுஷா. வராட்டா அசடு. கடவுள் பத்தின சந்தேகம் நிச்சயமா மனுஷா ளுக்கு வரணும். இருக்கா இல்லையான்னு திரும்பத் திரும்ப கேட்டுக்கணும். இருக்கு அல்லது இல்லை. ஏதாவது ஒரு இடத்துல நிக்கணும். நாப்பது வயசு வரைக்கும் இல்லைன்னு சொல்லிட்டு அம்பது வயசுக்கு அப்புறம் இருக்குமோன்னு சந்தேகப்பட்டு அறுவது வயசுல கடவுளே... காப்பாத்துன்னா அதைவிட அசிங்கம் வேற எதுவும் இல்லை. கடவுள் இருக்காரான்னு சந்தேகப்பட்டு ஒரு முடிவுக்கு வா. இல்லைன்னு சொன்னா அதுவொரு கம்பீரம். இருக்குன்னு சொன்னா அது உளமார்ந்த பணிவு. கடவுள் இருக்குன்னு சொல்றதும், இல்லைன்னு சொல்றதும் கடவுளைப் பற்றிய விஷயமில்லை. மனிதர்களைப் பற்றிய விஷயம். நீ கம்பீரமா இருக்கியா. இல்லை பணிவா இருக்கியா அப்படின்னு ரெண்டு குணநலன். அவ்வளோதான். ரெண்டுவிதமான புத்தி, அவ்வளோதான். ரெண்டு விதமான வழிமுறை, ரெண்டு விதமான நிலை. நான் சொல்றது உனக்குப் புரியறதா."

அம்மா கேட்டாள்.

அவன் அம்மாவையே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இங்க இருக்கற பத்து பேர் சேர்ந்துண்டு கடவுள் இல்லைன்னு சொல்றதனாலயோ, கடவுள் இருக் குன்னு சொல்றதனாலயோ கடவுள் பத்தி நமக்கு தெரிஞ்சுட்டதா ஆயிடாது. கடவுள் ரொம்பப் பெரிசு. அப்பாலுக்கு அப்பாலுமாய் இருக்கறது. அங்கிங்

கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கறது. தெரிஞ்சுடுத்துன்னா பேச்சே இல்லை. இல்லைங்கறத பார்த்து சிரிப்பு. இருக்கறவனைப் பார்த்தும் சிரிப்பு. ரெண்டு பேர் பார்த்தும் சிரிப்புதான் வரது. அதைவிட பெரிய சிரிப்பான விஷயம் மதம். என் கடவுள்தான் ரொம்ப பெரியவன் அப்படின்னு எவன் சொல்றானோ அவன் நிர்மூடன். அவனுக்கு கடவுள் பத்தி எதுவும் தெரியலைன்னு அர்த்தம். அந்த முயற்சியிலேயே இல்லைன்னு அர்த்தம். கடவுளைப் பற்றிய பயம் இருக்கறதுனால கடவுள் பற்றிய கேள்வி வரது. மரணம் பற்றிய பயம் இல்லாமல் போனால் கடவுள் பற்றிய அக்கறை இல்லாதுதான் இருக்கும்."

"இதெல்லாம் எங்கம்மா கத்துண்ட."

"உங்கப்பா சொல்லிக் கொடுத்தார்."

"எப்போம்மா."

"என்னிக்கு கல்யாணம் பண்ணிண்டேனோ அன்னிலேர்ந்து."

"அப்பா பெரிய தத்துவவாதியம்மா."

"இல்லை. எல்ஐசியில சாதாரண கிளார்க். சாகற போது பதினாலாயிரம் ரூபா சம்பளம். கடனெல்லாம் பிடிச்சது போக கைக்கு ஒன்பதாயிரம் ரூபா வரும். பரம சந்தோஷமா குடித்தனம் பண்ணேன். அமெரிக்கா வறியா ஆஸ்திரேலியா வறியான்னு கூப்பிட்டா. நாங்க காசிக்குதான் நாலு தடவை போனோம். ஒரு தகர டின் நிறைய கங்கா ஜலம் எடுத்துண்டு வந்து உன்னுடைய பிறந்த நாளைக்கு அபிஷேகம் பண்ணினோம்."

"எதுக்காகம்மா அந்த மாதிரியெல்லாம் செய்யத் தோணித்து."

"நல்லவனா இருக்கணும். கெட்டிக்காரனா இருக்கணுங்கறதுக்காகத்தான்."



"அம்மா நீதானம்மா சொன்ன. நல்லவனா இருக்கறதும், கெட்டிக்காரத்தனமா இருக்கறதும் சரியா வராதுன்னு."

"இல்லைடா. உனக்கு நல்ல புத்தி வந்துடுத்து. நீ நல்ல குணவான். எல்லாரையும் நேசிக்கிற மனப்பக்குவம் உனக்கு இருக்கு. எல்லாரையும் நேசிக்கணும்னு தோன்றது. ஆனா, அதை எப்படி செயல்படுத்தணும்னு தெரியலை. அந்த இடத்துல ஒரு அசட்டுத்தனம் பண்ணிடற. இது பெரிய தப்பு இல்லைடா. மெல்ல மெல்ல அனுபவப்பட்டு தெரிஞ்சுக்கோ. இன்னிக்கு இல்லைன்னாலும் முப்பத்தஞ்சு நாப்பது வயசுல நீ ரொம்ப தேஜஸ்வியா இருப்ப."

"நான் சாமியாரா போகணும்னு நினைக்கறியாம்மா."

"எதுக்கு சாமியாரா போறது. பல்லை கடிச்சுண்டு பிரம்மச்சாரியா இருக்கறத போல பாபம் உலகத்துல வேற எதுவும் இல்லை. அது நரக வேதனை. சாமியாரா போறதுங்கறது தானா மலரணும். சங்கல்பம் இல்லை. சாமியாரா மாறுவேன் அப்படின்னு யாரும் உறுதி எடுத்துக்க முடியாது. விளாம்பழம் விட்டுடறா மாதிரின்னு சொல்றது இதைத்தான். தானா விடணும். எந்தப் பக்கமும் ஒட்டாத விடணும். சந்நியாசின்னு சொல்லி பெரிய ஆசிரமத்தை கட்டி அதனோட கணக்கு வழக்கு, ஆள்படை, டொனேஷன், டேக்ஸுன்னு ராத்திரி முட்டிண்டு உட்கார்ந்திருக்கறது தப்பான விஷயம். துறவி அப்படின்னா எல்லாவற்றையும் துறந்தவன்தான். பொம்மனாட்டிய மட்டும் துறந்தவன் இல்லை. காரும், பங்களாவும் காசும் ஒட்டிண்டா பொம்மனாட்டியும் தானா வந்து ஒட்டிப்பா. வெறுமே கிடப்பதுதான் துறவியினுடைய லட்சியம். அதான் துறவியினுடைய லட்சணம். வெறுமே கிடப்பது. எதிலும் ஒட்டாமல் வெறுமே இருப்பது. இது ரொம்ப கடினம். நேர்மையா இருக்கறவாதான் இதை கடை

பிடிக்க முடியும். சத்தியசந்தர்களாலதான் சந்நியாசியா இருக்க முடியும். காவி உடுத்தியோ, காவி உடுத்தாமலோ சந்நியாசி பிரம்மச்சாரின்னு வேஷம் போட்டுக்கலாம். கடவுள் பேரைச் சொல்லி வியாபாரம் பண்ணலாம். உபதேசம் பண்ணலாம். உள்ளம் நிறையாது. உள்ளம் நிறையாம வாக்கு பலிக்காது. இது ரொம்ப கடினமான பாதை. இதுல சன்னியாசி பெரிய குடும்பி. ஊர் முழுவதும் ஒவ்வொரு ஜீவனா பார்த்து உருகற குடும்பி. இவனுக்கு வேலை கிடைக்கலையே. இவளுக்கு கல்யாணம் ஆகலையே. அந்த வீட்ல நோய் தீரலையே. இந்த வீட்ல காசு கிடைக்கலையே அப்படின்னு தன்னை சுத்தி இருக்கறவா எல்லாருக்காகவும் தவிச்சு தவிச்சு பிரார்த்தனை பண்ற பெரிய குடும்பி."

"அப்படியெல்லாம் யாராவது இருக்காளா."

"இல்லை. அதனாலதான் நேரத்துக்கு மழை பெய்ய மாட்டேங்கறது."

அம்மா பெரிதாக மூச்சிறைக்க சொல்லி முடித்தாள்.

"லவ்வுங்கறது ஆம்பளைக்கு பொம்மனாட்டியோட முடிஞ்சு போயிடறது. பொம்மனாட்டிக்கு ஆம்பளையோட முடிஞ்சு போயிடறது இல்லை. யானை, பூனை, எறும்பு, ஈ, காக்கா, குருவி, மரம், மட்டை, நதி, வானம், காத்து, நெருப்பு எல்லாத்தையும் நேசிக்கறதுக்கு பேர்தான் லவ். இன்னார், இனியார்னு எல்லோரையும் ஒரே விதமா பார்க்கறதுக்கு பேர்தான் லவ். நீ பண்ணியே அதுக்கெல்லாம் லவ்வுன்னு பேரே இல்லை. அது ஒரு விதமான சுயநலம். அந்தப் பொம்மனாட்டி அழகா இருக்கான்னு அவகிட்ட போய் நின்னு பேச்சு கொடுத்து அவ ஒரு கட்டத்துல கடிச்சு குதறினவுடனே ச்சீ, இந்தப் பழம் புளிக்கும்னு ஓடி வந்து, அவ மகாகெட்டவோன்னு சொல்றது பெரிய பொய். ஏமாத்து வேலை. நீ ஏமாத்தப் போய் நீயே ஏமாந்து அவ ஏமாத்திட்டான்னு ஊர்ல இருக்கறவாளை ஏமாத்தற வேலை. இல்லியா."



அம்மா தடுக்கென்று முகத்தில் குத்த அவன் அதிர்ந்து போய் நின்றான்.

"உன்னை நான் குறை சொல்லலை. உனக்கு இதெல்லாம் சொல்லித் தரலை. இதை கொஞ்சமாவது நான் சொல்லித் தரலாமேன்னு இந்த வாக்கியம் சொன்னேன். மத்தபடி உன்னை வருத்தப்பட வைக்கணும்னு ஆசை இல்லை. நீ யார், என்ன பண்ற அப்படின்னு யோசனை பண்ணு. யோசனை பண்றதுக்கு தனியா இரு. தனியா போறதுக்கு நல்ல உபாயம் வீட்ல உட்கார்ந்திருக்கறதில்லை. தோள்ல ஒரு பைய மாட்டிண்டு ஊர் ஊரா கிளம்பு. பத்து நாள் லீவுதானே போ. எங்கேயாவது மனம் போன போக்குல போ. அதுக்காக கோவில்ல தூங்கி, ஏதாவது மடத்துல சாப்பிட்டு உன்னை இழிவுபடுத்திக்க வேண்டாம். கையில் காசு இருக்கு. நல்ல ஹோட்டல்ல தங்கு. நல்லா சாப்பிடு. சும்மா போய் ஒரு கோவில்ல உட்கார்ந்துண்டிரு. திரும்ப திரும்ப சுவாமி தரிசனம் பண்ணு. அந்தப் பத்து நாளும் இடையறாது சுவாமி நினைப்பாவே, உன் நினைப்பாவே, உன் உள்ளுக்குள்ள இருக்கற மனசு நினைப்பாவே இரேன். என்னமோ, எங்கயோ பளிச்சுனு ஒரு தடவை பல்பு எறிஞ்சா மாதிரி உள்ளுக்குள்ள ஒரு வெளிச்சம் படரும். அந்த வெளிச்சம் ஒரு தடவை மனசுக்குள்ள பரவிடுத்துன்னா போகவே போகாது. ஒரு தடவை தெளிவு வந்துடுத்துன்னா காலம் பூரா தெளிவா, திடமா வாழ்ந்துடலாம். மறுபடியும் சொல்றேன். தெளிவு வரத்துக்கு தனிமையா இருக்கணும். தனிமையா இருக்கறதுக்கு தனியா க்ஷேத்திராடனம் போகணும். கும்பல் கும்பலா போய் சாமியையும் பார்க்காம, உன்னையும் பார்க்காம வெறுமே புல் மேயப் போன ஆடு மாதிரி ஆட்டு மந்தை மாதிரி க்ஷேத்திராடனம் போகக்கூடாது. நான் உன் கூட வந்தாகூட உன் கவனம் சிதறும். நீ, ஸ்வாமி இது ரெண்டுந்தான் எப்பவும் ஞாபகத்துல இருக்கணும். போயிட்டு வாடா கண்ணு."

அம்மா கிட்டத்தட்ட துரத்தி அனுப்பினாள்.

அலுவலகத்தில் லீவு கேட்டு கிடைத்தவுடன் வேண்டிய விஷயங்களை எடுத்துக் கொண்டு முதுகில் மாட்டக்கூடிய உறுதியான பையில் மூட்டையாகச் சுமந்து கொண்டான்.

"திருச்சிராப்பள்ளியில என்ன விசேஷம்."

"ஒரு விசேஷமுமில்லை."

"ஒரு விசேஷமுமில்லாம ஏன் போற."

அலவலகத்தில் கேள்வி கேட்டார்கள்.

"சும்மா அப்படியே ஊர் ஊராக போயிண்டிருப் பேன்."

அவனைப் புரிந்து கொண்டு சொன்னவர்கள் சிலர் மட்டுமே.

"நெரூர் போ. திருச்சிராப்பள்ளிலேர்ந்து நெரூர் வரைக்கும் காவேரி ஓரமா பெருகமணி, சிறுகமணி, பேட்டை வாய்த்தலை, குளித்தலை, மாயனூர், கரூர்னு போயிண்டேயிரு. நெற்பயிரான நெற்பயிர், கரும்பான கரும்பு. ஏகப்பட்ட கோவில். தமிழர் நாகரிகம் பார்க் கணும்னா அந்தக் கரை பக்கம் தான் பார்க்கணும்."

ஒருவர் சொல்லிக் கொடுத்தார்.

"அதெல்லாம் வேண்டாம். ஸ்ரீரங்கத்தை பார்த்து முடி. ஒரு நாளைக்கு இந்த சன்னதியில உட்கார்ந் துக்கோ. ஒரு நாளைக்கு அந்த சன்னதியில உட்கார்ந் துக்கோ. திரும்பத் திரும்ப ரங்கநாதரைப் பார். ஒவ் வொரு மண்டபமா உட்கார். அவ்ளோ பிரம்மாண்ட மான கோவில் அது. ஏகப்பட்ட மடங்கள். ஒவ்வொரு மடத்திற்கும் ஒரு கதை இருக்கு. ஒவ்வொரு மடத்திலும் ஏகப்பட்ட ஞானிகள் வாழ்ந்திருக்கா. ஒருவாரம் ஸ்ரீரங்கத்துல மட்டுமே இருக்கலாம். அத்தனை அற்புதமான இடம்."

வேறொருவர் சொல்லிக் கொடுத்தார்.



"அவன் வைஷ்ணவன். ஸ்ரீரங்கத்தைத் தவிர அவ னுக்கு வேற இடமே தெரியாது. அகிலாண்டேஸ்வரி கோவில்னு ஒண்ணு இருக்கு. திருவானைக்காவல் போயிருக்கியா. அகிலாண்டேஸ்வரி அங்க சாதார ணமா அம்பாள் மாதிரிதான் நின்னுண்டிருப்பா. ஆனா, வாராஹி சொரூபம். அங்கே போய் உட்கார்ந்து வாராஹி மந்திரம் சொல்லு. முப்பத்தாறு அட்சரம். அம்பாளுக்கு நேர் எதிர்க்க பலகையில் ஒரு பிளாட் பாரம் போட்டிருக்கும். உட்கார்ந்தா அம்பாள் மறைக்காத தெரியும். திரும்பத் திரும்ப உட்கார்ந்து அம்பாளை பார்த்தபடியே சொல்லு. எங்கயோ போயிடலாம்."

இன்னொருவர் உபதேசித்தார்.

"மாணிக்க விநாயகர் வரப்பிரசாதிய்யா. போய் என்ன கேட்டாலும் கிடைக்கும்."

இன்னொருவர் சொன்னார்.

"நீ எதுக்கு சம்பாதிக்கற. நல்ல பொண்டாட்டி. நல்ல குடும்பம். நல்ல குழந்தைகள். இது வேணும்னா மலையேறி தாயுமானவர் சுவாமி முன்னாடி கைகூப்பி நெக்குருக வேண்டு. நான் நல்லபடியா குடித்தனம் பண்ணணும். என்னை புரிஞ்சுக்கற பொண்டாட்டியா வரணும். எனக்கு பிடிச்ச மாமனாரா வரணும். எனக்கு பிடிச்ச மாமியார் வரணும். என்னுடைய உறவுகளெல் லாம் என்னை கொண்டாடணும்னு தாயுமானவ சுவாமிகிட்ட கேளு. அது குடும்ப க்ஷேத்திரம். எனக்கு நல்ல குழந்தைகள் பிறக்கணும்னு கைகூப்பி சர்வசத்தி யமா கேட்டா கிடைக்கும். இந்த சன்னதியில வேண் டிண்டு கல்யாணம் பண்ணவனெல்லாம் ரொம்ப சௌக்கியமா இருக்கான். இது என் அபிப்ராயம்."

வேறொரு சிவபக்தர் பதில் சொன்னார்.

"நெரூர் போயிருக்கியா. நெரூர் சதாசிவ பிரும்மேந் திரர் தெரியுமா. மதுரை காளியம்மன்னு கேள்விப்

பட்டிருக்கியா. இந்த கும்பல்ல அதைப் பத்தி பேச வேண்டாம் தனியா வா சொல்றேன்" என்று விதம் விதமாக அவனுக்கு ஆலோசனைகள் சொல்லப் பட்டன.

சகலமும் கேட்டுக் கொண்டு திருச்சிராப்பள்ளிக்கு பயணமாகி ஸ்ரீரங்கத்திற்கு வந்து நின்றான்.

வடக்கேயிருந்து கூதற்காற்று மேனியைத் தாக்கிற்று. இறங்கி கோவிலுக்குள் நடந்து போனான்.

கும்பல் கும்பலாய் யாத்ரீகர்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். காசு கொடுத்து ஸ்பெஷல் தரிசனத்திற்கு டிக்கெட் வாங்குகிற இடத்திலும் கூட்டம் இருந்தது.

கிளிமண்டபத்திற்குப் போய் அங்கிருந்து விமானத்தில் தெரியும் அரங்கரையே பார்த்து நின்றான்.

காலம் காலமாக தென் திசை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கிறாய். அந்தப் பக்கமிருந்து அன்னியர் யாரும் வராதிருக்க நீயே காவல் இருக்கிறாய். உனக்கு நமஸ்காரம். எத்தனை மகான்கள் உன்னை தரிசித்திருக்கிறார்கள். உன்னை தரிசிக்க நானும் வந்திருக்கிறேன். என்னை அழைத்து நீ யார் என்று எனக்குக் காட்டு.

மெல்ல மனசுக்குள் பேசினான்.

“கொஞ்சம் தள்ளி நில்லுங்க. நாங்களும் பார்க்கணும்.”

ஏதோ பெண் குரல் கேட்க அவசர அவசரமாக விலகிக் கொண்டான். படியருகே நின்று கொண்டான்.

காசு கொடுத்து டிக்கெட் வாங்கி உள்ளே பார்த்து விடலாமா என்று அந்த வழியை பார்த்துக் கொண்டிருக்கும் போது யாரோ மண்டபத்தின் கதவுகளை இழுத்துப் பூட்டிவிட்டு இறங்கி வந்தார்கள். வந்தவர் கழுத்தில் தங்கச் சங்கிலி இருந்தது. பெரிய டாலரில் ரங்கநாதர் பள்ளி கொள்ளும் படம் இருந்தது.

அட, இந்த டாலர் அழகாக இருக்கிறதே என்று டாலரையே பார்த்துக் கொண்டிருக்க வந்தவர்



யாருக்கோ விடை கொடுத்துத் திரும்பி படியில் தவறாகக் கால் வைக்க முதல் படி தடுக்கி அப்படியே கீழே சாய சரட்டென்று இரண்டடி போய் அவரைத் தாங்கி கொண்டான். கையிலிருந்த சாவிக்கொத்து அவன் நெற்றியைத் தாக்கியது. இருந்தாலும் பிடித்த பிடியை விடாமல் அவரைத் தாங்கி நிறுத்தி கீழே இறக்கினான். பிறகு தள்ளிப் போய் நெற்றியைப் பிடித்துக் கொண்டான்.

“என்ன முரளி பார்த்து வரப்படாதா.”

யாரோ கத்தினார்கள்.

முரளி மேற்கொண்டு உள்ளே போக முயற்சி செய்து விட்டு சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தார். அவன்தானே தாங்கி நிறுத்தினான் என்பது போல் உற்று நோக்கினார்.

“தலையில இடிச்சுட்டேனா” என்று அருகே வந்து மரியாதையாகக் கேட்டார்.

இல்லை என்று அவன் சாதாரணமாகச் சொல்லி விலகிக் கொள்ள முயற்சிக்கிறபொழுது மறுபடியும் தலையை தடவினான்.

“புடைக்கப் போறது கொஞ்சம் இரு” என்று சொல்லி எங்கிருந்தோ தண்ணீர் ஊற்றி அவன் நெற்றியை துடைத்தார். ஈரத்தால் சமனப்படுத்தினார். ஆனாலும் தலையில் லேசாக புடைத்துக் கிளம்பியது.

“ஐயய்யோ, தேவையில்லாத உங்களை வேதனைப் படுத்திட்டேனே. மன்னிச்சுக்கோங்கோ.”

அவன் கைபிடித்துக் கொண்டு இறங்கினார்.

“இல்லை பரவாயில்லை” என்று அவன் பின்வாங்கினான்.

“எந்த ஊர்.”

“மெட்ராஸ்”

“எதுக்கு வந்திருக்கேள்.”

"சுவாமி தரிசனம் பண்ணணத்தான்."

"பண்ணியாச்சா."

"இல்லை."

"வாங்கோ, நான் கூட்டிண்டு போறேன்."

அவர் அவன் வலது கையை பற்றிக் கொண்டார். மெல்ல உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

பல ஆயிரம் மக்கள் வரிசையில் நிற்க அவன் அவருக்குப் பின்னே போனான்.

"பாத தரிசனம் பாருங்கோ."

முரளிதர பட்டர் சிறிய அகல் விளக்கைத் தூக்கிக் காண்பிக்க அவன் பரவசமாக பார்த்து நின்றான்.

மிகப் பெரிய உருவம் மிகப் பெரிய நாகத்தினுடைய மடியில் கிடந்தது. வெறுமே. இருந்தது. அதன் கையில் கூட எந்தச் செயலும் இல்லாமல் வெறுமே இருந்தது. எதையும் பற்றிக் கொள்ளாமல், எங்கு இருக்கிறோம் என்ற பிரக்ஞை இல்லாமல், எந்த அசைவும் இல்லாமல், மிக அடர்த்தியாய் ஆழமாய் அதே சமயம் உயிர்ப்பாய் ஒரு விஷயம் அங்கே இருந்தது.

ப்பா... இந்த இடத்தைப் பற்றி என்னவெல்லாம் கேள்விப் பட்டிருக்கிறோம். யாரெல்லாம் இதோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று அவன் பரவச மானான். விழிவிரிய சுவாமியை பார்த்துக் கொண் டிருந்தான்.

மனம் கதறியது. என்னவோ கதறியது. ஏன் இந்தக் கதறல். உடனே கேள்வி எழுந்தது.

பொன்னாத்தாள் என்ற தாசிக்கு குடை பிடித்து அவள் துணிகளை கூடையில் எடுத்து வந்து அவளுக்கு விசிறி விட்ட ஆணைப் பார்த்து ஸ்ரீரங்கம் சிரித்தது. அப்படி என்ன மயக்கம் அவள் மீது என்று அவனைக் கேள்வி கேட்டது. ராமானுஜரும் கேட்டார்.



"எவ்வளவு அழகிய கண்கள். நீரோட்டமுள்ள கண்கள். அந்தக் கண்களை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறதே. உங்களுக்கு ஏன் இந்த அழகை ரசிக்கத் தெரியவில்லை. இப்படி நான் அழகை ரசித்தால் என்ன தவறு."

அவன் வாய் விட்டு கேட்டான்.

"பொன்னாத்தாளின் கண்களைவிட அழகிய கண்களை உனக்கு நான் காண்பித்தால் அப்பொழுது நீ திசைமாறுவாயா"

ராமானுஜர் கேட்டார்.

"இவளை விட பெரிய அழகிய கண்களா. அப்படி யொன்று உலகத்தில் உண்டா."

"உண்டு."

ராமானுஜர் திடமாகச் சொல்லி அவனுக்கு அரங் கனை அறிமுகப்படுத்தி வைத்தார். அரங்கன் விழித்து அவனைப் பார்க்க அவன் மனம் விழித்துக் கொண்டது.

தாசி பொன்னாத்தாளும், மல்லனும் ராமானுஜ ரையே குருவாக ஏற்றார்கள். கடைசி வரை அவரோடு இணை பிரியாது வாழ்ந்தார்கள்.

இதோ இந்த இடத்தில்தானே மல்லன் நின்றிருப் பான். இங்குதானே பொன்னாத்தாள் நின்றிருப்பாள். இந்த இடத்தில் நின்றுதானே ராமானுஜர் அவர்களுக்கு சுட்டிக் காட்டியிருப்பார். திருப்பாணாழ்வாரை அந்தணர் தோளில் தூக்கி வந்த சன்னதியல்லவா இது.

தீர்த்தமும், சடாரியும் தரப்பட்டன.

அவன் மெல்ல வெளியே வந்தான்.

நான் அரங்கரை எப்படிப் பார்த்தேன் தெரியுமா. எனக்கு என்ன மரியாதை செய்தார்கள் தெரியுமா. நீ சொன்னது நடந்தது. உள்ளுக்குள்ளே கைகூப்பி உன் தரிசனத்தை காட்டமாட்டாயா என்று வேண்டினால்

போதும். ஏதோ ஒரு வகையில் கடவுள் தரிசனம் கிடைத்து விடுகிறது.

முரளிதர பட்டரிடம் "ரொம்ப சந்தோஷம்" என்று கைகூப்பி விடை பெற, "எத்தனை நாள் திருச்சியில இருப்பேள்" என்று முரளிபட்டர் கேள்வி கேட்டார்.

"மூணு நாலு நாள் திருச்சியில தங்கி தினமும் ஸ்ரீரங்கம் வரணும்னு ஆசை."

அவன் பதில் சொன்னான்.

"அப்படியா, இன்னிக்கு ஒண்ணும் அவசர வேலையில்லையே."

"ஒரு வேலையும் இல்லை."

"வாங்கோ. ராமர் சன்னதிக்கு கூட்டிண்டு போறேன்."

முரளிதர பட்டரும் அவனும் பேசிக்கொண்டு நடந்தார்கள்.

அவன் தன்னைப் பற்றிய விவரம் சொல்ல, முரளிதர பட்டரும் தன்னைப் பற்றிய விவரங்களைச் சொன்னார்.

ஈசான்ய மூலையில் இருக்கிற ராமர் சன்னதிக்கு அழைத்துப் போய், "இது பல தலைமுறைகளாக நாங்கள் நிர்வாகம் செய்து வருகின்ற ராமர் சன்னதி. எனக்கு இப்போ வீட்லேர்ந்து டிபன் வரும். நீங்களும் சாப்பிடறேளா" என்று முரளிதர பட்டர் கேட்க, அவன் வெட்கத்துடன் மறுக்க அவர் செல்போனில் யாருடனோ தொடர்பு கொண்டு நெற்றி காயத்திற்கு மருந்தும் கூடுதலாக டிபனும் சொல்லி அனுப்பினார். இரண்டு இட்லியும் உப்புமாவும் வர அதை சாப்பிட்டு விட்டு அவர் வீட்டுக் காபி குடித்தான். காபி அற்புதமாக இருந்தது. டிபன் ருசியாகச் செய்யப்பட்டிருந்தது.

நன்றி சொல்லிவிட்டு எழுந்திருக்க "இல்லை. உட்காருங்கள். பின்னால் தோட்டமிருக்கிறது. இங்கே



ஒரு அறை இருக்கிறது. இது தியான அறை. இங்கேகூட நீங்கள் படுத்துக் கொள்ளலாம்" என்று சொல்லி ஒரு பாய் விரித்து மனைக்கட்டை கொடுக்க அவன் இரண்டையும் அருகருகே வைத்துக் கொண்டு கண்மூடி அமர்ந்து கொண்டான். உணவு சாப்பிட்டது கண்ணை இழுத்தது. சிறிது நேரம் அமர்ந்தவன் கதவை ஒருக்களித்து சார்த்திவிட்டு நீட்டிப் படுத்துக் கொண்டான்.

மண்டபத்திற்கு மேலே மின் விசிறி சுழன்றது. மண்டபம் அமைதியாக இருந்தது.

வெறுமே கிடப்பது என்றால் என்ன. அவன் யோசித்தான்.

எங்கே இருக்கிறோம். எதற்காக இருக்கிறோம் என்ற லட்சியம் இல்லாமல் வெறுமே இருப்பது என்று உள்ளே ஒரு எண்ணம் ஓடிற்று.

ஏன் வெறுமே இருக்க வேண்டும். வெறுமேயில்லாமல் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்று யோசிக்க அவன் மனம் அவனை ஆராயத் துவங்கியது.

வேலை கிடைத்த ஆறாவது மாசமே மதுமதியை காதலித்தோம். அதுதான் பிசகு.

மிக வலுவான உண்மையான ஃபைனான்ஸ் கம்பெனி அது. அன்னிய தேசத்திலும் அதற்குக் கிளைகள் இருந்தன. வெளிநாட்டிலிருந்து பலபேர் அதில் முதலீடு செய்திருந்தார்கள். லாரிக்கு கடன் கொடுக்கும் பிரிவில் அவன் வேலை செய்து வந்தான். அவன் கெட்டிக்காரத்தனம் நேர்முகத் தேர்விலேயே உறுதியாயிற்று. இன்னும் ஒரு வருடத்தில் ஓய்வு பெறப்போகிறவர் கீழே அவனை பணிபுரிய அனுப்பினார்கள்.

"கார்த்தால சாப்பிட்டியா" அவன் முகமன் சொன்னதும் அவர் முதல் கேள்வியாகக் கேட்டார்.

"சாப்பிட்டேன்" என்று அவன் பதில் சொன்னான்.

"என்ன சாப்பிட்ட"

"நாலு இட்லி. கொஞ்சம் உப்புமா."

"தொட்டுகறதுக்கு என்ன."

"இட்லிக்கு மிளகாய் பொடி உப்புமாக்கு முருங்கைக்காய் குழம்பு."

"உப்புமாக்கு சர்க்கரை தொட்டுண்டு சாப்பிட மாட்டியா."

"சின்ன வயசுல சாப்டுண்டிருந்தேன். இப்போ அப்படி சாப்பிடறதில்லை."

"இட்லிக்கு வடைகறின்னு ஹோட்டல்ல ஒண்ணு தொட்டுக்க போடுவாளாமே. அதை சாப்பிட்டிருக்கியா."

"ஒரேயொரு தடவை சாப்பிட்டிருக்கேன். எனக்கு பிடிக்கலை."

"ஏன் பிடிக்கலை."

"ரொம்ப மசால் நெடி. பிடிக்கலை."

"நான் உன்னை சாப்பிட்டியான்னு கேட்டேன், நீ அதுக்கு பதிலுக்கு கேட்டியா."

"கேட்கறேன் ஸார். நீங்க சாப்பிட்டேளா."

"வெறும் கஞ்சி மட்டும் குடிச்சேன்."

"ஏன் ஸார்."

"வேற எது சாப்பிட்டாலும் எனக்கு பேதியாகும். தினம் கார்த்தால வந்தவுடனே எங்கிட்ட என்ன சாப்டேன்னு சொல்லணும். எந்த ஹோட்டல்ல எது நன்னாயிருக்குன்னு சொல்லணும்."

"எதுக்கு ஸார். ஏன் அப்படி சொல்லணும்."

"என்னால சாப்பிட முடியலைடா. காது கொடுத்தாவது கேட்கப்படாதா, மனசுலயாவது சாப்பிடப்படாதா, அதுக்காகத்தான்."

அம்மாவிடம் வந்து இதைச் சொன்ன போது "அடப்பாவி மனுஷா. அம்பத்தெட்டு வயசுலயுமா



இத்தனை நாக்கு. இவ்வளவு ருசி. இது எங்க உருப்படப் போறது. இவங்கிட்டயா நீ மாட்டிண்ட, சரி. ஜாஸ்தி ஒட்டாத. இதெல்லாம் மனோவியாதி கேஸ், வேலையை கத்துண்டு வேற இடம் போறதுக்கு பார். தானும் சந்தோஷமா இல்லாம மத்தவாளையும் சந்தோஷப்படுத்தாம எப்போவும் சாப்பாடு பத்தியும், உடுப்பு பத்தியும், பொம்மனாட்டி பத்தியும் நினைச்சுண்டிருக்கிறது."

"இவர் பொம்மனாட்டி பத்தி நினைப்பாராம்மா. எனக்கு அப்படி தோணலை."

"சோத்தை பத்தி நிறைய நினைக்கறவன் பொம்மனாட்டி பத்தியும்தான் விதம் விதமா நினைப்பான். யார் போய் நின்னாலும் வெறிச்சுதான் பார்ப்பான். சோறுதான் பூமி. பூமியினுடைய இன்னொரு விஷயம் பொம்மனாட்டி. சாப்பிட வேண்டிய நேரத்துல சாப்பிட்டா இந்த வயசுல சஞ்சலம் தேவைப்படாது. பாவம் சாப்பிட வேண்டிய நேரத்துல வறுமை பிடுங்கி தின்னுருக்கும். சம்பாதிக்கிற நேரத்துல வயிறு சுருண்டு போயிடுத்து. என்ன பண்றது. அவன் வாங்கிண்டு வந்த வரம்."

அம்மாவின் பேச்சு ஆச்சரியமாக இருந்தது. ஆனால், அதுவே உண்மையாகவும் ஆயிற்று. அம்மா கெட்டிக்காரி என்பதை அவள் கணிதம் நிரூபித்தது.

வேலைக்கு சேர்ந்த மறு வாரமே பெண்களைப் பற்றி அவர் மிக மோசமாக பேச ஆரம்பித்தார். இடையறாது கூடலைப் பற்றியே மற்றவரோடு உரக்கப் பேசினார்.

யாராவது எதிரே கொட்டாவி விட்டால் "என்னாச்சு, ராத்திரி ரொம்ப வேலையா" என்று கேட்பார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை சுவாமி. நன்னா தூங்கினேன். இன்னும் தூக்கம் போறலை." என்று பதில் சொன்னால் "எதுக்கு தூங்கற. ராத்திரி தூங்கற

துக்கா இருக்கு. கல்யாணத்தை பண்ணிண்டு வேலை செய்ய வேண்டாமா" என்று கேட்பார்.

திருமணமான இளைஞர்களை கூப்பிட்டு எப்படி கூடலில் ஈடுபட வேண்டுமென்று படம் போட்டுக் காட்டுவார். அதைப்பற்றி விலாவரியாய் பேசுவார்.

சாகேதராமனுக்கு அவரைக் கண்டால் பயமாக இருந்தது. இவரிடத்தில் வேலை செய்யலாமா என்று தோன்றியது. ஆனால், அந்தக் கிழவர் வேலையில் கெட்டிக்காரராக இருந்தார். பல்வேறு லாரி ஓனர்களின் விலாசங்கள் அவருக்கு மனப்பாடமாக இருந்தன. நூற்றுக்கணக்கான வண்டியின் நம்பர்களும் அதற்கு கடன் வாங்கப்பட்ட தேதியும் அந்தக் கடன் பாக்கியும் விரல் நுனியில் வைத்திருந்தார்.

பத்து வருடத்திற்கு முன்பு நடந்த விஷயங்களை அவரால் தெள்ளத் தெளிவாக சொல்ல முடிந்தது. வெறும் அலுவலக விஷயங்கள் மட்டுமல்ல. இந்திரா காந்தி இறந்த தினம், லால்பகதூர் ஸாஸ்திரி மரணம் அடைந்த நாள், மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகம் என்று பல்வேறு விஷயங்களை அவர் ஞாபகம் வைத்திருந்தார். அவருக்கு அந்த அலுவலகத்தில் மிகப் பெரிய மரியாதை இருந்தது.

"அப்பா, எம்.டி. உன்னை கூப்பிடறாரு. அவர் மாப்பிள்ளையோட பிறந்த தேதி என்னன்னு தெரியணுமாம். உனக்கு தெரியுமாமே வந்து சொல்றயா."

"அவன் கூப்டானா. அவனைப் போய் நான் என்னத்துக்காக பார்க்கறது. இந்தா. பதினாலு எட்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுவத்தஞ்சு. மகநட்சத்திரம், சிம்மராசி, விருச்சிக லக்னம்னு சொல்லு."

எம்.டி. கூப்பிட்டும் போகாத கிழவனுக்கு அந்த அலுவலகத்தில் மிகப் பெரிய மரியாதை இருந்தது.

எம்.டி.க்கு அன்று பிறந்த நாள். என்றுமில்லாத திருநாளாய் அன்று வேட்டியிலும், வெள்ளைச் சட்டை



யிலும் வந்திருந்தார். நேரே மாடிக்கு வந்து கிழவரைப் பார்த்தார். காதுகளில் கை வைத்து அபிவாதயே... என்று குனிந்து வணக்கம் சொல்ல ஆரம்பித்தார். கிழவரின் காலில் விழுந்து வணங்கி நீங்க எனக்கு அண்ணா போல ஆசிர்வாதம் பண்ணணும் என்று சொல்ல இரண்டு கைகளையும் உயரத்துக்கு தூக்கி எம்.டி.யை ஆசிர்வதிக்கும் கிழவரை சாகேதராமன் வியப்போடு பார்த்தான். சாதாரண கிளார்க். ஆனா, என்ன மரியாதை என்று நினைத்துக் கொண்டான். ஆனால், அடுத்த ஐந்தாவது நிமிடமே "எச்சக்கலை படவா நாப்பத்தெட்டு வயசு ஆகுது. இருவத்திமூணு வயசு பொண்ண கூத்தியாளா வச்சுண்டிருக்கான். நாலாவதா அஞ்சாவதான்னு தெரியலை" என்று உரக்கச் சொல்ல ஆபீஸ் கூட்டம் சிரித்தது.

"மாமிக்கு முடியலை. மாமியை தொந்தரவு பண்ணாம இருக்கணுமேன்னு பெரிய மனசு பண்ணி அவர் ஒதுங்கியிருக்கார்."

"கீழ ஒரு கல்லு. மேல ஒரு கல்லு வச்சு ஓங்கி அடிச்சேன்னா படவா."

கோபம் வந்தது போல் நடிப்பார்.

அவர் உண்மையான முகம் என்ன என்பது சாகேதராமனால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

"கஷ்டம் ஓய், இவருக்கு நாப்பத்தெட்டு வயசு. அவளுக்கு இருவத்து மூணு வயசு. என்ன பண்ண முடியும்னு நினைக்கறீர்."

"ஆங், அப்படிக் கேளு. சொல்லித் தரேன். யாரோ சினிமாவுல முருங்கக்காய் சாப்பிடுன்னு சொன்னான்னு சொல்லிட்டு இங்க இருக்கிற அத்தனை பசங்களும் முருங்கக் காயை விழுங்கிட்டிருக்கானுங்க. முருங்கக் காயில் ஒண்ணும் இல்லை ஓய். முருங்கக் காயில பொம்மனாட்டிக்குண்டான வலுவுதான் இருக்கு. சின்ன வெங்காயம். சின்ன வெங்காயத்துல

ரசவாங்கி பண்ணலாம் தெரியுமா. நாப்பது வெங்காயத்தை உறிச்சு ஆத்துக்காரிய சாம்பார் வைக்கச் சொல்லு. அப்படியே ஒரு கலக்கு கலக்கி அடி வண்டலோட இருவது வெங்காயத்தோட சாம்பாரை கவிழ்த்துக்கோ. சாதம் சாப்பிடு. கனுக்கால் இருக்கோன்னோ கனுக்கால் அந்த கனுக்காலை அப்படியே லேசா தேய்ச்சு விடு. மத்தியானம் பசிக்கிறபோது தேன்ல தோய்ச்ச நெல்லிக்காய் ஒரு மூணு சாப்பிடு. நடந்துட்டு வா. ரசம் குடி. கலகலன்னு ஒரு அரைமணி நேரத்துல போகும். வயிறை சுத்தம் பண்ணிண்டு பாதி இனிப்பை சாப்டுட்டு பசும்பால் ஒன்றரை டம்ளர் சாப்பிடு. உனக்கு பிடிச்ச பொண்களா மனசுல நினைச்சுக்கோ. அப்படியே ஆத்துக்காரி வரபோது மெல்ல தடவி தடவி அவளை உசுப்பேத்தி ஆரம்பிச்சேன்னா கோட்டைச் சுவத்தை உடைச்சுண்டு டேங்க் உள்ள போகுமே அந்த மாதிரி போயிடலாம். சாகேதராமன் பார் பேயா முழிக்கிறான். விட்டா உடனே போய் வெங்காயம் தின்பான்."

பெண்களைப் பற்றி தான் அதிகம் சிந்திக்க ஆரம்பித்ததற்கு மறைமுகமாக அவர் காரணமோ என்ற பயம் இருந்தது. அவர் பல அனுஷ்டானங்கள் செய்து ஆசாரமாக இருப்பவர் போல தோற்றமளித்தாலும் வெகண்டையாகப் பேசுவதில் மன்னனாக இருந்தார். வெகண்டையாகப் பேசுவது வெறும் பயல்களின் வேலை என்று இதுவரை கேள்விப்பட்டிருந்ததைத் தகர்த்து மிகச்சிறந்த உத்தியோகஸ்தராய் விளங்கினார். அவரைக் கண்டு சகலரும் நடுங்கினார்கள்.

மார்ச் மாதம் கூடுதலாய் உழைக்க வேண்டியிருந்தது. கொடுதத கடன் என்ன. நிலுவையில் இருப்பது எவ்வளவு. வசூலித்தது என்ன. வசூலித்ததில் வட்டி வீதம் எத்தனை சதவீதம் என்று ஒரு பெரிய கணக்கு போட வேண்டியிருந்தது. இரவு பகலாக மூன்று நாள் அசராமல் அலுவலகத்தில் உட்கார்ந்து இந்த வேலையை



முடித்து விட்டு அவர் இரண்டு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டார். மறுநாள் அலுவலகத்திற்கு வந்தார்.

"ரொம்ப பிரமாதமா இருக்கு நீங்க கொடுத்த ஸ்டேட்மெண்ட். நல்ல லாபம் வரும்னு தோன்றது. எம்.டி உங்களுக்கு தனியா பாராட்டுதல்கள் தெரிவிக்கச் சொன்னார்" என்று எம்.டி.யின் பி.ஏ. சொல்ல "டேய்... போறும்டா. இத்தோட நான் வேலைலேர்ந்து நின்னுக்கறேன்னு அவன்கிட்ட சொல்லு. இன்னிக்கு சாயந்தரம் சூரியஹோரை. என்னுடைய ரெஸிக்னேஷன் லெட்டரை கொடுக்கறேன். எனக்கு உண்டானத உடனடியா செட்டில் பண்ணித்தரச் சொல்லு. காஞ்சிபுரத்துக்கு போறேன். ருத்ரபூமி அங்கதான் இருக்கு."

யார் யாரோ வந்து கேட்டும் அவர் அசரவில்லை. எனக்கு வேலை இங்கு இல்லை என்று தெரிவித்து விட்டார்.

வேதபாடசாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டும். முடிந்தவர்கள் காசு கொடுங்கள் என்று சுற்றறிக்கை அனுப்பினார். பிரிவு உபசாரவிழா நடத்தக் கூடாது என்று அதில் சொல்லப்பட்டிருந்தது.

சாகேதராமன் உட்பட அவருக்குக் கீழே வேலை செய்த பதினோரு பேர் பற்றி அவரை ஒரு அபிப்ராயம் எழுதித் தரச் சொன்னார்கள்.

தானே உட்கார்ந்து மூன்று மணி நேரம் அதை கம்ப்யூட்டரில் டைப் செய்தார். பிரிண்ட் அவுட் எடுத்தார்.

பதினோரு பேரையும் அழைத்து உங்களைப் பற்றி இன்னது எழுதியிருக்கிறேன் என்று உரக்கப் படித்துக் காண்பித்தார்.

சாகேதராமன் உண்மையான இளைஞன். கடுமையான உழைப்பாளி. எதையும் சீக்கிரம் கிரகித்துக் கொள்கின்ற புத்தி அவனிடம் இருக்கின்றது. ஆனால், அவன் இன்னும் தயார் செய்யப்பட வேண்டும்.

ஃபைனான்ஸ் கம்பெனியின் முழு எல்லைகள் அவனுக்கு இன்னும் கற்றுக் கொடுக்கப்படவில்லை. இப்படி தயார்படுத்துவதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும் அவனுக்கு கூடுதலாக பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டும். கொடுக்கப்படலாம் என்று நான் பலமாக சிபாரிசு செய்கிறேன். அப்படி கொடுக்கப்படும் பொழுதே அவனுக்கு நல்ல சம்பளமும் கொடுக்கப்பட்டால் அவன் இந்த அலுவலகத்திற்கு உண்மையாக இருப்பான் என்று உறுதி கூறுகிறேன்.

சாகேதராமனுக்கு கண்ணில் ஜலம் வழிந்தது. அவன் விழுந்து நமஸ்கரித்தான். லேசாக குலுங்கினான்.

“போறும்டா. எழுந்திரு”.

அவர் அதட்டி எழுப்பினார்.

“எனக்கு கார் ஓட்டத் தெரியாது. கத்தரிக்காய் வாங்கத் தெரியாது. கம்ப்யூட்டர்ல பெரிய வித்தை காட்டெல்லாம் தெரியாது. போன் கெட்டுப்போனா ரிப்பேர் பண்ணத் தெரியாது. சுவத்துல ஆணி அடிக்கத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சதெல்லாம் ஒரே ஒரு வேலை. ஃபைனான்ஸ் கம்பெனி வேலை. வட்டி, கூட்டு வட்டி, வட்டிக்கு வட்டி அப்படின்ற கணக்கை உட்கார்ந்த இடத்துல பென்சிலை கையில தொடாத சொல்லுவேன். கம்பெனியோட அஞ்சு வருஷத்து பேலன்ஸ் ஷீட் ரிப்போர்ட் எனக்கு மனப்பாடம். வேலையில் உண்மை. புத்தியில தெளிவு. வேலையில திறமை இருந்தா போறும். நீ என்ன கேட்டாலும் அது தானா உன் மடியில வந்து உட்காரும். நீ கெட்டிக்காரனா இல்லைன்னு வச்சுக்கோ, நீ பண்ண தப்பை பெருசா சொல்லுவா. நீ கெட்டிக்காரனா இருந்துட்டேன்னு வச்சுக்கோ, நீ என்ன தப்பு பண்ணாலும் அவாளா முன்னால வந்து மன்னிச்சு அதனால என்ன அப்படின்னு பேசுவா. கெட்டவனா இருக்கறவன் நல்லவனா ஆகறது சுலபம். முட்டாளா இருக்கறவன் கெட்டிக்காரனா ஆகறது கஷ்டம். முதல்ல கெட்டிக்காரனா இருக்கறதுக்கு என்ன பாடு உண்டோ அத்தனையும் படு. பொறுப்பாயிரு. கஷ்டப்பட்டு உழைச்சு கம்பீரமா இரு. உண்மையாவும் இருந்தேன்னா உன்னை கையில பிடிக்க முடியாது. திறமைசாலிக்குத் தான்டா மதிப்பு. திறமை இல்லாதவன் உயிரோடு இருந்தும் இல்லாதவன். உலகத்திலுள்ள சகல சௌபாக்கியங்களும் திறமையுள்ளவன் காலடியில வந்து விழுந்து கிடக்கு. ஆனால், இது பெரிய ஆனால்...”



அவர் குரல் மாற்றி அவன் காதருகே பேசினார்.

“உலக சுகங்களை அனுபவிக்க உனக்கு கொடுத்து வச்சுருக்கணும். நான் கெட்டிக்காரன். நிறைய சுகம் அனுபவிச்சேன். என்னைத் தேடி வந்த எல்லாத்தையும் அனுபவிச்சேன். டக்குனு ஒரு வியாதியை பகவான் எனக்கு கொடுத்து என்னை உலக சுகங்கள்லேர்ந்து வெளிய எடுத்து போட்டான். இந்த ஆபீஸ்ல உட்கார்ந்தா திரும்பத் திரும்ப அப்போ அனுபவிச்ச சுகங்களோடயே நான் கிடப்பேன். அதான் உதறி ஓரமா போய் உட்கார்ந்துக்கறேன். வேதபாடசாலையில இருந்தா நல்லது வருமோன்னு நினைப்போட நகர்ந்துக்கறேன். சௌக்கியமா இருடா. உண்மையா இரு. கடுமையான உழைப்பாளியா இரு. வாழ்க, வாழ்க சாகேதராமன். ரொம்ப அழகான பேருடா உன்னுது” என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

அவர் உட்கார்ந்த இடத்தில் சாகேதராமனை உட்கார வைத்தார்கள். அந்த நாற்காலி காரணமா அல்லது அவனுக்குள் ஏற்பட்ட நம்பிக்கை காரணமா, மதுமதி என்கிற பெண்ணின் தொடர்பு அவனுக்கு ஏற்பட்டது.

அவர் அறிக்கை கொடுத்தது போலவே அவனுடைய பொறுப்புகளை அதிகப்படுத்தி அவன் சம்பளத்தையும் ஆயிரம் ரூபாய் கூட்டினார்கள். மோட்டார்

சைக்கிள் வாங்கச் சொல்லி வட்டியில்லா கடன் கொடுத்தார்கள். பெட்ரோலுக்கு அலவன்ஸ் கொடுத்தார்கள். ஓய்வு பெற்ற அந்தக் கிழவரை யோசித்துக் கொண்டிருக்கும்போது அவர் சொன்ன சில கெட்ட ஜோக்குகள் அவனுக்கு ஞாபகம் வந்தன. அந்த கிளர்ச்சியில் வண்டியை ஓட்டிக் கொண்டு போகும் போது, அங்கு வளைந்து திரும்பிய ஒரு மாருதி கார் திருப்பத்தில் அப்படியே நின்று விட்டது. முன்னும் போகாமல், பின்னும் போகாமல் இருபக்க போக்கு வரத்தையும் அடைத்துக் கொண்டு நின்று விட்டது. உள்ளுக்குள் இருந்து ஒரு பெண்மணி இறங்கினாள். அவளே உந்தித் தள்ள முற்பட்டாள். எல்லோரும் வாய்க்கு வந்தபடி கத்தினார்கள்.

என்னா எழவுடி நீ என்று ஒருவன் கை நீட்டி ஏசினான்.

மிக அருகேயிருந்து இதைப் பார்த்த சாகேதராமன் மோட்டார் சைக்கிளை ஓரம் நிறுத்தி வைத்து விட்டு தானே தடுமாறி தள்ளுகின்ற அந்தப் பெண்மணிக்கு அருகே போய், "நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள். நான் தள்ளுகிறேன்" என்று சொல்லி கை வைத்துத் தள்ள இன்னும் இரண்டு பேர் உதவிக்கு வந்தார்கள். வண்டி ஓரம் கட்டப்பட்டது. அவள் வெளியே வந்து கை கூப்பி நன்றி சொன்னாள்.

வண்டி நின்ற படபடப்போ இறங்கி வண்டியயைத் தள்ளியதால் ஏற்பட்ட பயத்தாலோ அவள் உடைகளை சரியாகப் போடாமல் இருந்தாள். புடவை ஒரு பக்கம் ஒதுங்கியிருந்தது. மார்பகங்கள் பொங்கியிருந்தன. பார்த்து விட்டு முகம் திருப்புவதற்குள் அவள் உடைகளை சரி செய்து கொண்டு விட்டாள். அவள் மிக்க நன்றி என்று சொன்னாள். மறுபடியும் வண்டி ஸ்டார்ட் செய்ய முடியவில்லை.



''என்ன பிரச்சினை'' என்று அவன் கேட்க, "தெரியலையே கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்களேன்" என்று அவள் மறுபடியும் படபடப்போடு கேட்டாள்.

எனக்கு கார்பத்தி அதிகம் தெரியாது மேடம் என்று சொல்ல வாய் திறந்தான். அதற்குள் அவள் முன்பக்க இன்ஜின் மூடியை திறக்க புகை வாரி அடித்தது. ஒரு கர்சிப்பை ரேடியேட்டர் திருகின் மீது போட்டு அதைத் திறக்க ஆவி அடித்தது.

''தண்ணியில்லைன்னு நினைக்கறேன்'' என்று சொல்ல, "ஆமாம். சுத்தமா தண்ணியில்லை, என் டிரைவர் ஏன் இப்படி வச்சுருக்கான்" என்று சிறலாய் அதட்டினாள்.

"இன்னொரு ஹெல்ப் பண்றீங்களா."

"என்ன."

"ரெண்டு பாட்டில் மினரல் வாட்டர் வாங்கிட்டு வந்துருங்களேன். இதுல ஊத்திடலாம்."

"மினரல் வாட்டர் எதுக்கு."

"இதுக்கு பிஸ்லரி வாட்டர் கிடைக்குமா."

"பிஸ்லரி வாட்டர் இங்க கிடைக்காது."

"மினரல் வாட்டர் வாங்கிட்டு வாங்க. ப்ளீஸ்."

அவன் ஓடிப்போய் இரண்டு பாட்டில் மினரல் வாட்டர் வாங்கி வர அதை அதில் ஊற்றியதும் அந்த ரேடியேட்டர் வெப்பம் தணிந்தது. இப்பொழுது ஸ்டார்ட் செய்ய இன்ஜின் மெல்ல உறுமிக் கிளம்பியது.

''என் பேர் மதுமதி. நான் அபிராமபுரத்துல இருக்கேன்" என்று மெல்ல இழுத்தாள். மறுபடியும் வண்டியின் மீது தன் கவனத்தை சிதறவிட்டாள்.

உன்னுடைய பெயர் மிக அவசியமில்லை என்பது போல் லேசான அலட்சியம் காட்டினான்.

"நான் ஒண்ணும் முக்கியமான ஆள் இல்லைங்க மேடம். பை" என்று நகர, "ப்ளீஸ் உங்க பேர் சொல் விட்டுப் போங்க" என்று மறுபடியும் அழைத்தாள்.

"என் பெயர் சாகேதராமன்."

"ஹா... நல்லாயிருக்கே. சாகேதராமா சல்மேரரா. அந்த சாகேத்ராமன்தானே"

"இருக்கலாம்"

இவன் விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

"எங்க ஒர்க் பண்றீங்க" என்று கேட்க அவன் சற்றுத் தயங்கினான்.

"உங்க முகம் எங்கயோ பார்த்தாப்போல இருக்கு. அதனால கேட்டேன்," என்று அவள் மலர்ச்சியாக முகத்தை வைத்துக் கொண்டாள்.

சட்டென்று அவன் தன் பைனான்ஸ் கம்பெனி பேரைச் சொன்னான்.

"அங்கயா இருக்கீங்க. அங்க என் மாமா ஒருத்தர் இருக்கார் தெரியுமா" என்று அவனுடைய கிழ அதிகாரியின் பெயரை அவள் சொன்னாள்.

சாகேதராமனுக்கு சட்டென்று ஒரு மரியாதை அவள் மீது ஏற்பட்டது.

"அவருக்கு நீங்க என்ன வேணும்."

"என்னுடைய சொந்த தாய் மாமா. எங்க அம்மாவுக்கு அண்ணா."

"எனக்கு அவர் பாஸா இருந்தார்."

"பெரிய பாடா இருக்குமே."

"இல்லியே ரொம்ப நல்ல மனுஷர்."

"முதன் முதல்ல எங்க மாமாவை நல்லவர்னு சொல்றது நீங்க ஒருத்தர்தான். சும்மா விளையாட்டுக் குதானே சொல்றீங்க."



"இல்லீங்க. ரொம்ப நல்லவர். ரொம்ப தெளிவான வர். ரொம்ப கெட்டிக்காரர்."

"கெட்டிக்காரத்தனமெல்லாம் சரிதான். மனுஷங்க கெட்டிக்காரங்களா இருந்தா போதுமா. ஒரு மனுஷனா இருக்கறவன் நல்லவனா இருக்கணும். கெட்டிக்காரனா இல்லாட்டாலும் பரவாயில்லை" என்று அவள் சொல்ல அவளை முதன் முறையாக சாகேதராமன் உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்.

"இங்கதான் என் வீடு" என்று அவள் வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.

அவன் மௌனமாக நின்றான்.

"ப்ளீஸ். தயவு செய்து வாங்க. மாமா பத்தி உங்க கிட்ட இன்னும் நிறைய தெரிஞ்சுக்கணும்" என்று கொஞ்சலாக சொல்ல அவன் சரியென்று தலை யசைத்தான்.

அந்த மாருதி வண்டி முன்னால் போக அவன் மோட்டார் சைக்கிளில் பின்னால் போனான்.

அபிராமபுரத்தில் பெரிய பங்களா. போர்டிகோவில் வண்டி நின்றது. உள்ளே நுழையும் போதே யாரையோ திட்டிக் கொண்டே நுழைந்தாள். இவன் வண்டியை வாசலுக்கு வெளியே வைத்துவிட்டு பூட்டிவிட்டு உள்ளே மெல்ல போனான்.

"யாரு, என்ன வேணும்" என்று ஒரு வேலைக்காரி கேட்க, அவள் திரும்பி "சும்மாயிரு. அவர் என்னை தேடிட்டு வந்திருக்காரு " என்று அதட்டினாள்.

பெரிய ஹால். மிக ஆடம்பரமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

"உள்ள வாங்க."

அவள் அவனை வரவேற்பறையிலிருந்து உள்ளே அழைத்துப் போனாள்.

"இது என்னுடைய சின்ன குடிசை" என்று டைனிங் ஹாலை காட்டினான்.

அது இன்னும் ஆடம்பரமாக இருந்தது.

மதுமதியின் அப்பாவுக்கு பித்தளைப் பாத்திர வியாபாரம். அதனாலோ என்னவோ வீடு முழுக்க பித்தளை கலைப் பொருட்கள் இருந்தன. டைனிங் டேபிளில் அவனை அமரச் செய்து அவள் அம்மாவை அழைத்து வந்தாள். இதுதான் எங்கம்மா என்று அறிமுகப்படுத்தினாள்.

அவனைப் பார்த்ததும் அன்னியரைப் பார்த்த ஒரு வேகத்தில் மதுமதியின் அம்மா புடவையை தோளைச் சுற்றி போர்த்திக் கொண்டாள். சற்று பின்னடைந்து நமஸ்காரம் என்று நாணத்தோடு சொன்னாள்.

நாற்பத்தைந்து வயதுக்கும் மேலான ஒரு பெண்மணி நாணப்பட்டால் பார்ப்பதற்கு அவ்வளவு நன்றாக இல்லை என்று சாகேதராமன் நினைத்துக் கொண்டான்.

"பித்தளை வியாபாரம்னா என்ன அர்த்தம். தகடு தகடா விப்பீங்களா!" -ஆச்சரியமாக சாகேதராமன் கேட்டான்.

"தகடும் வாங்குவோம். விப்போம். ஆனா, தகடை விட தட்டா மாத்தினா பித்தளைக்கு விலை ஜாஸ்தி. தட்டா மாத்தறதை விட அதுவொரு கலைப்பொருளா மாறினா இன்னும் விலை ஜாஸ்தி. ஒரு மயில், அதுக்கு பின்னால தட்டு மாதிரி ஒரு தோகை. வெறும் தட்டு நாப்பது ரூபா. மயில் தோகைன்னா நானூறு ரூபா."

மதுமதி சொல்லிவிட்டு சிரித்தாள்.

"அதனாலதான் இவ அப்பா நன்னா சம்பாதிச்சு காசா கொண்டு வந்து கொட்டறார். நாங்க விக்கற பொருளெல்லாம் அமெரிக்கா, ஜப்பான், ஸ்பெயின், பிரான்ஸ் எல்லா இடத்துக்கும் போறது. ஜப்பான்காரா ளுக்கு புத்தர் சிலை, புத்தர் உருவம் போட்ட தட்டு



மட்டும் லட்சத்துக்கும் மேல வித்துருக்கோம். நீங்க இருக்கறது சொந்த வீடா."

மதுமதியின் அம்மா கேட்டாள்.

அவன் சாதாரணமாக பதில் சொன்னான்.

"இதுவும் எங்களுக்கு சொந்த வீடுதான். இதைத் தவிர இன்னொரு வீடு காஞ்சிபுரத்துல இருக்கு. ஸ்ரீபெரும்புதூர்ல வயல் இருக்கு. உங்களுக்கு ஏதாவது தோட்டம் தொரவுன்னு இருக்கா."

"இல்லையே. இந்த வீடே அப்பா கஷ்டப்பட்டுதான் வாங்கினா."

"ஓ... அதன் மேல இன்னும் கடன் இருக்காக்கும்."

"கடனெல்லாம் இல்லை. வீட்டை மெயின்டெயின் பண்றது கஷ்டமா இருக்கு."

"எங்க வேலை செய்யறேள்."

அவன் தன் கம்பெனி பேரைச் சொன்னான்.

"அங்கயா... எங்க அண்ணா அங்கதான் இருக்கார்."

"அதனாலதாம்மா கூட்டிண்டு வந்தேன். மாமாக்கு ரொம்ப தெரிஞ்சவராம். மாமாவை வந்து ரொம்ப நல்லவர், ரொம்ப கெட்டிக்காரர்னு சொல்றார்."

"ஆமாம். அவனுக்கு ஆயிரம் மூஞ்சி. அதுல ஒரு மூஞ்சி கெட்டிக்கார மூஞ்சி. இன்னொரு மூஞ்சி நல்ல மூஞ்சி. நிஜ மூஞ்சி நமக்குத்தான் தெரியும்."

மதுமதியின் அம்மா அலட்டலாகப் பேசினாள்.

அவள் அலட்டலை உற்றுப் பார்க்கும்போது அவள் உடம்பையும் உற்றுப் பார்க்க சாகேதராமனுக்குத் தோன்றியது.

நல்ல உடம்பு. உறுதியான முகவாய். கனிந்த உதடுகள். கூர்மையான மூக்கு. பெரிய கண்கள். சற்று மேடு நெற்றி. கொழுத்த கன்னங்கள். கைகளெல்லாம் சதைப்பற்று மிகுந்து காணப்பட்டன. தலையில்

கொண்டை போட்டிருந்தாள். மடிசார் புடவை அணிந்திருந்தாள். புடவையில் முன்னும் பின்னுமாக நடக்க அவள் அசைவுகள் மிகத் தெளிவாகத் தெரிந்தன.

"சொல்லுங்க. எங்க மாமாவைப் பத்தி தெரிஞ் சுக்கணும். அவர் எவ்வளவு நல்லவர்."

"எனக்கு அவர்தான் வேலை சொல்லிக் கொடுத்தார்."

"அதனால நல்லவரா."

"ஜாலியா பேசுவார்."

"ஜாலியான்னா."

"திடீர்னு ரெண்டு மூணு கெட்ட வார்த்தைசொல்லி இடத்தையே கலகலப்பாக்கிடுவார்."

"ரெண்டு மூணு கெட்ட வார்த்தைதானா. வாயைத் திறந்தா சாக்கடையா கொட்டுவாரே."

"இல்லை. ஒரு அளவாத்தான் இருக்கும். எவ்ளோ ஜாலியா பேசறமோ அவ்ளோ ஜாலியா பேசுவார். திடீர்னு அமைதியாயிட்டு வேலையில இறங்கிடுவார். நல்ல மெமரிபவர். எப்படி ஞாபகசக்தியை வளப்படுத் திக்கணும் அப்படின்னு சொல்லிக் கொடுத்தார். கெட்டிக்காரனா இருக்கறது எவ்ளோ அவசியம்னு சொல்லிக் கொடுத்தார்."

"கெட்டிக்காரனா இருக்கறது அவசியமா?" மதுமதி கூர்மையாகக் கேட்டாள்.

அவள் அம்மா அடுத்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"இல்லைன்னா பிழைக்க முடியாதே."

"நல்லவனா இருக்கறது முக்கியமில்லையா."

"முதல்ல கெட்டிக்காரனா இரு. அதுக்கப்புறம் நல்லவனா இருக்கறதா, கெட்டவனா இருக்கறதான்னு



சூழ்நிலைக்கு ஏத்தபடி முடிவு பண்ணிப்போம்னு சொன்னார்."

"முதல்ல நல்லவனா இரு. அப்புறம் கெட்டிக் காரனா இருக்கறதா, சாதாரணமா இருக்கறதான்னு முடிவு செய்வோம்."

மதுமதி அதையே புரட்டிப் போட்டு பேசினாள்.

"மக்கா இருக்கறவன் கெட்டிக்காரனா ஆயிடலாம். கெட்டவன் நல்லவனாகவே முடியாது. உள்ள அழுகிப் போச்சுன்னா அது தொடர்ந்து நாத்தமாகத்தான் இருக்கும். நல்ல புத்தி வரவே வராது. எத்தனை அடி பட்டாலும் எத்தனை மிதிபட்டாலும் திரும்ப திரும்ப மத்தவாளுக்கு கெடுதல் பண்ணத்தான் தோணும்."

மதுமதி சீற்றமாய் பேசினாள்.

"நீங்க யாரைச் சொல்றேள்."

"எல்லாம் உங்க அதிகாரியைத்தான். எங்க மாமா வைத்தான் சொல்றேன்."

"எனக்குத் தெரிஞ்சு ஆபீஸ்ல யாருக்கும் அவர் கெடுதல் பண்ணதில்லை."

"எங்க கெடுதல் பண்ணணும், எப்போ கெடுதல் பண்ணணும், எவ்வளவு கெடுதல் பண்ணணும்னு அவருக்குத் தெரியும். உங்ககிட்ட பொம்மனாட்டி பத்தி கன்னாபின்னான்னு பேசியிருப்பாரே."

"பேசியிருக்கார்."

"அது தேவைதானா அப்படின்னு யோசிச்சேளா."

"அதுல என்ன தப்பு. சில ஆண்கள் அப்படி பேசறது வழக்கம்தான்."

"நீங்க பேசுவேளா."

"எனக்கு பழக்கமில்லை."

"ஏன் பழக்கமில்லை."

"கொஞ்சம் வெட்கம்."

"யாரைப் பார்த்து."

"அடுத்தவாள பார்த்து."

"அடுத்தவான்னா குறிப்பா யாரைப் பார்த்து."

"லேடீஸ் பத்தி அப்படி பேசற பழக்கம் எனக்கு எதனாலயோ வரலை."

"ஏன் வரலைன்னு சொல்லுங்கோ."

"லேடீஸ் மேல எனக்கொரு மதிப்பு மரியாதை உண்டு."

"ஆங்... அதுதான் கரெக்ட். லேடீஸ் மேல உங்களுக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு. ஏன்னா உங்களுக்கு அப்படிசொல்லி கொடுத்திருக்காங்க. இவருக்கு லேடீஸ் மேல மரியாதை இல்லை. ஏன் உலகத்துல யார்மேலயும் மரியாதை இல்லை. எல்லாரையும் இழிவா பேசறதுக்குன்னே ஒருத்தர் பிறந்திருக்கார்னா அது எங்க மாமாதான்."

"ஒரு வேளை மனசு வேதனையினால அந்த மாதிரி குரூரமாக புத்தி மாறியிருக்கலாம். அவருக்கு ஒண்ணும் நல்ல உடம்பு இல்லை இல்லியா."

"அதெப்படி நல்ல உடம்பு இருக்கும். ஊரார் வயித்தெரிச்சலை கொட்டிண்டா நல்ல உடம்பு இருக்குமா. ஒரு கவளம் சோறு தின்னாக்கூட கழியும். அப்படித்தான் ஆயிடுத்து உடம்பு."

"ஐய்ய... இதப் போய் ஏன் இப்படி கேலியா பேசறிங்க. அவர் பாவம் ரொம்ப அவஸ்தை படறார்."

"அப்படித்தான் படணும். படும்படியா பகவான் வைப்பான். தின்னு தின்னு கொழுப்பெடுத்த உடம்பு. திமிர்ல எத்தனை பேரை நீ அவஸ்தை பட வச்சுருக்க. எத்தனை பேரை அவமானப்பட வச்சுருக்க."

"என்ன சொல்றேள் புரியலையே."



"வேண்டாம். உங்களுக்கு புரியவேண்டாம். மாமா உங்களுக்கு நல்லவராவே இருந்துட்டுப் போகட்டும். சரி, நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை."

மதுமதி கேட்டாள்.

"கல்யாணமா... எனக்கு இருவத்தாறு வயசுதான் ஆறது."

"இருவத்தாறு வயசுதான் சரியான வயசு. இன்னும் எத்தனை நாள் தள்ளிப் போடுவேள்."

"இப்போதானே வேலை கிடைச்சுருக்கு."

"நிரந்தரமாயிடுத்து இல்லியா."

அவள் அம்மா கேட்டாள்.

"ஆயிடுத்து."

"அப்புறம் என்ன. சொந்த வீடு இருக்கு. கையில மோட்டார் சைக்கிள் இருக்கு. வேலை நிரந்தரமா இருக்கு. டக்குனு ஒரு கல்யாணத்தை பண்ணிண்டு ஜாம்ஜாம்னு குடித்தனம் பண்ண வேண்டியதுதானே."

"அம்மாவுக்கு தெரியும் எப்போ கல்யாணம் பண்ணி வைக்கறதுன்னு."

"அடடே. அம்மா பிள்ளையா இருப்பேள் போலிருக்கு."

"அந்த மாதிரி இல்லை. அம்மா மேல ரொம்ப மரியாதை உண்டு. எங்கப்பாவே எங்கம்மாவ ரொம்ப மரியாதையா நடத்துவார். எங்கம்மாவை வாங்கோ போங்கோன்னுதான் பேசுவார். சாதம் போடுங்கோளேன். தட்டை எடுத்து கொடுங்களேன். அப்படின்னு பன்மையில்தான் கூப்பிடுவார்."

"விழுந்து நமஸ்காரம் கூட பண்ணுவாராக்கும்." சொல்லிவிட்டு மதுமதியின் அம்மா உரக்க அதிதமாய் சிரித்தாள்.

அவனுக்கு அவள் சிரிப்பு ஆச்சரியமாக இருந்தது. அவள் சிரித்தபோது அவள் அங்கங்கள் ஆடின.

"பேய் மாதிரி சிரிக்காத."

மதுமதி அம்மாவை அதட்டினாள். அதுவும் ஆச்சரியமாக இருந்தது.

"ஒரு தட்வை அந்த மாதிரி நமஸ்காரம் பண்றதையும் பார்த்திருக்கேன். அன்னிக்கு எங்காத்துல சுமங்கலி பிரார்த்தனை பண்ணா. சுமங்கலிக்கு மரியாதைன்னா முதல்ல உனக்குத்தான் நான் மரியாதை பண்ணணியாக ணும். அப்படின்னு அம்மாவை விழுந்து நமஸ்காரம் பண்ணார் அப்பா."

"கொடுத்து வச்சவோ."

"எங்கப்பா உயிரோட இல்லை. அவர் இறந்து போய் நாலு வருஷம் ஆச்சு."

"அடப்பாவமே. எதனால."

"ரெண்டு மூணு நாள் ஜுரம். அப்புறம் ஒரு ஹார்ட் அட்டாக். பளிச்சினு உயிர் போயிடுத்து."

"உங்களுக்கு ஏன்னு தெரியாதா. சின்ன வயசுலேர்ந்தே ப்ராப்ளம் இருக்கா."

"அதை பெருசா மதிக்கலை. அதனாலயும் டெவலப் ஆகியிருக்கலாம்."

"மறைச்சு வச்சுருக்கா உங்க அம்மாகிட்டேயிருந்து. அதைச் சொல்லு." அம்மா சொல்ல மறுபடியும் மதுமதி அம்மாவைக் கண்டித்தாள்.

"மறைக்கலை. கல்யாணத்தும்போதே தெரியும்னு எங்கம்மா சொன்னா."

"சரி பொம்மையாட்டம் பக்கத்துல பக்கத்துல உட்கார்ந்து வாழ்ந்துண்டிருப்பா அப்படித்தான் நடந்திருக்கணும்." மீண்டும் அம்மா சொல்ல, அவனுக்கு என்ன என்று புரிவதற்கு சற்று நேரமாகியது.

"கல்யாணத்துக்கு யாரும் பார்க்கறதுக்கு மனுஷா இல்லைன்னு உங்கம்மா தயங்கறாளோ என்னமோ."

"இல்லை சொந்தக்காரா எல்லாம் இருக்கா."



"சொந்தத்துல பொண்ணு இருக்கோ."

"பொண்கள் இருக்கு. அவாள பண்ணிக்கறா மாதிரி இல்லை. ரொம்ப வயது வித்தியாசம்."

"எங்க மதுமதியை பண்ணிக்கறேளா."

டக்கென்று அந்த அம்மாள் கேட்க அவன் அசந்து போனான்.

நல்ல பிளாஸ்டிக் பொம்மை ஸார். நல்லா உழைக்கும் வாங்கிக்கோங்க என்று தட்டிக் காட்டுவது போல அது இருந்தது. ஒரு வேளை இது பித்தளை பொம்மையோ அலங்காரமாக வைத்திருக்க வேண்டிய விஷயமோ என்று மனசு தொடர்ந்து யோசித்தது.

அவன் திகைத்துப் போய் மதுமதியை பார்த்தான்.

"எங்கம்மா அப்படித்தான். யார் வீட்டுக்கு வந்தாலும் இவளைக் கல்யாணம் பண்ணிக்கறயா. இவளைக் கல்யாணம் பண்ணிக்கறயான்னு ஏலம் போடுவோ. எனக்கு கல்யாணமாகலைன்னு அவளுக்கு ரொம்ப கவலை."

"நீங்க எவ்ளோ பணக்காரா. உங்களுக்கும் எனக்கும் ஏணி வச்சா எட்டுமா."

"நாங்க ஏழையா இருந்தா அவளை கல்யாணம் பண்ணிப்பியா."

மெல்ல சிரித்தான்.

"எங்களை மாதிரியே நீயும் பணக்காரனா ஆயிட்டாக்கா அவளை கல்யாணம் பண்ணிப்பியா. எங்காத்துக்காரர்கிட்ட சொன்னா டக்குனு உன்னை பணக்காரர் ஆக்கிடுவார்."

"உளறாத." மதுமதி அதட்டினாள்.

"வாங்க. என் ரூமை காண்பிக்கறேன்" என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

முதல் நாளே முதல் சந்திப்பிலேயே இவ்வளவு வேகமாகப் பேசுகிறார்களே என்று ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது.

அந்த அறையில் ஆங்கில நாவல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலப் படங்களின் சி.டிக் களும், டேப்புக்களும் நிறைய இருந்தன.

"ஜீஸஸ் ஆஃப் நாசரேத் பார்த்திருக்கீங்களா. இல் லையா. நிச்சயம் பார்க்க வேண்டிய படம். ரூட்ஸ்னு ஒரு படம். நீக்ரோஸ் பத்தி. நிச்சயமா இந்த சினிமா பார்க்கணும்."

"உங்களுக்கு சினிமா பிடிக்குமா."

"ரொம்பப் பிடிக்கும். சினிமா ஒரு பிரமாதமான ஆர்ட். அதுல எப்படியாவது உள்ள புகுந்து பெரிய டைரக்டரா வரணும்னு ஆசை."

"ஆனா... லேடீஸ்."

"என்ன லேடீஸ். லேடீஸ் நினைச்சா பண்ண முடியாதது உண்டா." மதுமதி கேட்க வாயடைத்துப் போனான். அதேவிதமாக அவள் புத்தகங்கள் பற்றியும் அலுத்துக் கொண்டாள். நிறைய புத்தகங்களின் பெயர்களைச் சொன்னாள்.

"ஏதாவது எடுத்துண்டு போங்களேன்" என்று கேட்க அவனுக்கு சில புத்தகங்களை எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று தோன்றியது.

இன்னொரு சமயம் பார்க்கலாம் என்று அவன் மறுக்க அவன் கையில் வேண்டுமென்றே இரண்டு புத்தகங்கள் திணித்தாள்.

"எதுக்கு? எனக்கு நேரம் கிடைக்குமான்னு தெரியலை."

"முடிஞ்சா படியுங்க. முடியாட்டி திருப்பி கொடுத்து டுங்கோ."



"அதனாலதான் கேட்கறேன். எதுக்கு இந்த புஸ்தகங் கள்."

"அப்போதானே திருப்பி கொடுக்கறதுக்கு இன் னொரு தடவை வருவீங்க."

அவள் சொல்லிவிட்டு கண் சிமிட்டினாள்.

சாகேதராமனுக்கு அதை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை. அவள் இனிமை யாக, இதமாக, எளிமையாக பழகுகிறாளா அல்லது திட்டமிட்ட பேச்சா. இது தயாள குணமா. இல்லை தந்திரமா என்று புரியாமல் தவித்தான்.

புத்தகங்களோடு வீட்டிற்கு வந்தான்.

துடுக்காக இருந்த அம்மாவையும், திடமாக இருந்த பெண்ணையும் சுற்றிச் சுற்றி அவன் மனம் வந்தது.

அம்மாவிடம் இந்தப் பெண்ணைப் பற்றி பேசலாமா வேண்டாமா என்று தெரியவில்லை. வேண்டாம் என்று பலமாக எண்ணம் வர அவன் மௌனமாக இருந்தான்.

"ஏதுடா புக்."

அம்மா கேட்டாள்.

"ஒரு ஃப்ரெண்ட் கொடுத்தாங்க" என்று அவன் பொதுவாக பதில் சொன்னான்.

"இதெல்லாம் வெறும் குப்பை. இதை படிக்காத."

"என்னம்மா சொல்ற."

"இதை நான் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் போதே படிச்சுட்டேண்டா. சும்மா பிழியப் பிழிய அழறதுக்கு துக்கப்படறதுக்கு எழுதப்பட்ட புக். அவ இப்படி கஷ் டப்பட்டா, அப்படி கஷ்டப்பட்டா. இவன் துன்புறுத் தினான். அவன் தொந்தரவு பண்ணான். இவன் இப்படி இழிவா பேசினான்னு ஒரே சோகமயமா இருக்கும்."

நடுவே ஒரு முறை யார் அந்த ஃப்ரெண்ட் என்று அம்மா விசாரித்தபோது அவன் சரியாக பதில்

சொல்லவில்லை. மறைத்துவிட்டான். ஏன் மறைத்தோம் என்று அவனுக்கே புரியவில்லை.

அந்த ஆங்கிலப் புத்தகத்தை பிரித்துப் படித்த போது அதைப் பாதிக்கு மேல் படிக்க முடியவில்லை. அம்மா சொன்னது போலவே பிழியப் பிழிய அழுவதற்காகவே எழுதப்பட்ட புத்தகமாக இருந்தது. நிறைய சம்பவ சேர்க்கைகள் இருந்தன. திடுக்கிடும் திருப்பங்கள் நிறைந்த புத்தகமாக இருந்தது. அதில் வருபவர்கள் மிகக் கொடுமையாக நம்பவே முடியாத அளவுக்கு அகங்காரம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

சாகேதராமன் நான்கு நாட்கள் கழித்து அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அவளுடைய வீட்டிற்குப் போனான்.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே போய் மணிக்குமிழை அசைத்தான். சிறிது நேரம் கழித்து கலைந்த தலையோடு மதுமதியின் அம்மா வந்தாள்.

"என்ன திடீர்னு வந்திருக்கேள்" என்று லேசான பதட்டத்தோடு கேட்டாள்.

"புஸ்தகம் திருப்பி கொடுக்கணும்."

"அது அவ இருக்கும்போது வந்தாதானே முடியும். அவ இருக்கும்போது வரப்படாதா."

"போன் நம்பர் கேட்க மறந்துட்டேன்."

"நல்ல வேளை. நேரங்கெட்ட நேரத்துல வராம இருந்தேளே."

"என்ன தப்பா வந்துட்டேனா."

"இது அவர் வர நேரம். சீக்கிரம் போயிடுங்கோ. அவர் வந்தா கத்துவார்."

"யார்"

"மதுமதியின் அப்பா."

அன்று வந்த போது பலமாக வரவேற்று மகளைத் திருமணம் செய்து கொள்கிறாயா என்று கேட்ட ஒரு



முகம், படியேறியதும் சீக்கிரம் திரும்பிப் போ என்று விரட்டுகின்ற இன்னொரு முகம். இந்தப் பெண்மணி யார் என்று புரியாமல் அவன் தவித்தான்.

"இந்தாங்க புஸ்தகம்" என்று அவளிடம் நீட்டினான்.

"அங்க வச்சுட்டுப் போங்கோ" என்று அவனை தீண்டத்தகாதவன் போல் அவள் நடத்தினாள்.

அவன் புத்தகத்தை டீபாயில் வைத்துவிட்டு மோட்டார் சைக்கிளை நோக்கி போனான்.

"ஸாரி. தப்பா நினைச்சுக்காதீங்கோ. எங்காத்துல அவர் கொஞ்சம் ஸ்டிரிக்ட்."

"புரியுது."

அவன் மோட்டர் சைக்கிளில் சாவி செருகினான்.

அவள் வாசப்படியில் நின்று கேட்டாள்.

"உங்கம்மா பேர் என்ன சொன்னேள்."

"சரஸ்வதி."

"சரஸ்வதியை விசாரிச்சதா சொல்லுங்கோ."

"சரி. சொல்றேன்."

"இங்க வந்துட்டு போனதை சொன்னேளா."

"இல்லை. சொல்லலை."

"அப்புறம் எப்படி விசாரிச்சதா சொல்லுவேள்."

"இனிமே ரெண்டுத்தையும் சொல்றேன். இங்க வந்துட்டுப் போனதை. நீங்க விசாரிச்சதை."

"மதுமதியை கல்யாணம் பண்ணிக்கறேளான்னு நான் கேட்டதையும் சொல்லுங்கோளேன்."

"அதெப்படி டக்குனு சொல்றது."

"உங்கம்மான்னா பயமா, அம்மா யாரை சொல்றாளோ அவளைதான் கல்யாணம் பண்ணிப்பேளா. நாங்க சொன்னா பண்ணிக்கமாட்டேளோ."

சொல்லவில்லை. மறைத்துவிட்டான். ஏன் மறைத்தோம் என்று அவனுக்கே புரியவில்லை.

அந்த ஆங்கிலப் புத்தகத்தை பிரித்துப் படித்த போது அதைப் பாதிக்கு மேல் படிக்க முடியவில்லை. அம்மா சொன்னது போலவே பிழியப் பிழிய அழுவதற்காகவே எழுதப்பட்ட புத்தகமாக இருந்தது. நிறைய சம்பவ சேர்க்கைகள் இருந்தன. திடுக்கிடும் திருப்பங்கள் நிறைந்த புத்தகமாக இருந்தது. அதில் வருபவர்கள் மிகக் கொடுமையாக நம்பவே முடியாத அளவுக்கு அகங்காரம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

சாகேதராமன் நான்கு நாட்கள் கழித்து அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அவளுடைய வீட்டிற்குப் போனான்.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே போய் மணிக்குமிழை அசைத்தான். சிறிது நேரம் கழித்து கலைந்த தலையோடு மதுமதியின் அம்மா வந்தாள்.

"என்ன திடீர்னு வந்திருக்கேள்" என்று லேசான பதட்டத்தோடு கேட்டாள்.

"புஸ்தகம் திருப்பி கொடுக்கணும்."

"அது அவ இருக்கும்போது வந்தாதானே முடியும். அவ இருக்கும்போது வரப்படாதா."

"போன் நம்பர் கேட்க மறந்துட்டேன்."

"நல்ல வேளை. நேரங்கெட்ட நேரத்துல வராம இருந்தேளே."

"என்ன தப்பா வந்துட்டேனா."

"இது அவர் வர நேரம். சீக்கிரம் போயிடுங்கோ. அவர் வந்தா கத்துவார்."

"யார்"

"மதுமதியின் அப்பா."

அன்று வந்த போது பலமாக வரவேற்று மகளைத் திருமணம் செய்து கொள்கிறாயா என்று கேட்ட ஒரு



முகம், படியேறியதும் சீக்கிரம் திரும்பிப் போ என்று விரட்டுகின்ற இன்னொரு முகம். இந்தப் பெண்மணி யார் என்று புரியாமல் அவன் தவித்தான்.

"இந்தாங்க புஸ்தகம்" என்று அவளிடம் நீட்டினான்.

"அங்க வச்சுட்டுப் போங்கோ" என்று அவனை தீண்டத்தகாதவன் போல் அவள் நடத்தினாள்.

அவன் புத்தகத்தை டீபாயில் வைத்துவிட்டு மோட்டார் சைக்கிளை நோக்கி போனான்.

"ஸாரி. தப்பா நினைச்சுக்காதீங்கோ. எங்காத்துல அவர் கொஞ்சம் ஸ்டிரிக்ட்."

"புரியுது."

அவன் மோட்டர் சைக்கிளில் சாவி செருகினான்.

அவள் வாசப்படியில் நின்று கேட்டாள்.

"உங்கம்மா பேர் என்ன சொன்னேள்."

"சரஸ்வதி."

"சரஸ்வதியை விசாரிச்சதா சொல்லுங்கோ."

"சரி. சொல்றேன்."

"இங்க வந்துட்டு போனதை சொன்னேளா."

"இல்லை. சொல்லலை."

"அப்புறம் எப்படி விசாரிச்சதா சொல்லுவேள்."

"இனிமே ரெண்டுத்தையும் சொல்றேன். இங்க வந்துட்டுப் போனதை. நீங்க விசாரிச்சதை."

"மதுமதியை கல்யாணம் பண்ணிக்கறேளான்னு நான் கேட்டதையும் சொல்லுங்கோளேன்."

"அதெப்படி டக்குனு சொல்றது."

"உங்கம்மான்னா பயமா, அம்மா யாரை சொல்றாளோ அவளைதான் கல்யாணம் பண்ணிப்பேளா. நாங்க சொன்னா பண்ணிக்கமாட்டேளோ."

மறுபடியும் அவள் பல் தெரிய சிரித்தாள்.

அவள் சிரிப்பில் ஒரு கவர்ச்சி இருந்தது. கண்களில் லேசாக சிமிட்டல் இருந்தது. கன்னம் குழி விழுந்தது.

அம்மா அழகா, பெண் அழகா என்று தவித்தான்.

அவள் வேண்டுமென்றே ஒரு உடம்பு முறுக்க லோடு நிற்பதாக அவனுக்குப் பட்டது.

"சரி. நான் கிளம்பறேன்."

"இருங்கோளேன். பேசிட்டு போகலாம்."

அவன் புரியாமல் திகைத்தான்.

"உள்ள உட்கார வச்சு பேசினாதான் ஏதாவது சொல்வார். இப்படி வாசலோட நின்னு பேசினா ஒண்ணும் சொல்ல மாட்டார்."

அந்த அம்மாள் மீண்டும் ஒரு கவர்ச்சியான புன்னகையோடு பேசினாள்.

என்ன எழவு இது. ஒரு ஆணை உள்ளுக்குள் கூப்பிட்டுக் கொண்டு வந்து பேசினால் தவறு என்றும், வெளியே நிற்க வைத்துப் பேசினால் தவறில்லை என்றும் ஒரு புருஷன் சொல்வாராயின் அவன் புருஷனா இல்லை, இவள்தான் மனைவியா. எதற்காக நிறுத்திப் பேச வேண்டும்.

"உங்க வீடு எங்க இருக்கு" அவள் இடம் கேட்டாள்.

அவன் இடம் சொன்னான்.

"என்ன ஒரு முப்பது பெறுமா."

"கீழ மேல ரெண்டும் சேர்த்து ரெண்டாயிரத்து அறுநூறு ஸ்கொயர் ஃபீட். நாப்பது ரூபா போகும்னு சொல்றாங்க."

"இன்னும் நிலமா வாங்கிப் போடுங்கோ."

அவள் பேச்சு எதுவும் சுவாரசியமாக இல்லை. ஆனால், அவள் விடுவதாகவும் இல்லை. அவனை நிற்க வைப்பதிலேயே கவனமாக இருந்தாள்.



"உங்களுக்கு என்ன ரொம்ப பிடிக்கும். சாப்பிறதுக்கு" என்று மறுபடி தொடர அவனுக்கு அந்த இடம் விட்டு போய் விடலாம் என்று தோன்றியது.

"நான் சாப்பாட்டுல பெரிய அக்கறை இல்லாதவன். நான் வரட்டுமா."

அவன் கிளம்ப தயாராக இருக்கும்போது, "அதெப்படி ஒரு வயசுப் பையன் சாப்பிடறதுல இஷ்டமில்லைன்னு சொல்றது. சன்னியாசி ஆயிட்டியா நீ" என்று மறுபடியும் அவள் பேச்சு கொடுக்க வெளியே கார் சத்தம் கேட்டது.

குள்ளமாய், அகலமாய் அசட்டுச் சிரிப்போடு முரட்டு முகத்தோடு ஒரு ஐம்பது வயது மனிதர் நடந்து வந்தார்.

"என்னது" என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

அவன் மௌனமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"மது ஏதோ புக் கேட்டா. அதை கொண்டு வந்து கொடுக்க வந்திருக்கார்."

"கொடுத்தாச்சோன்னோ."

"ஆமாம். கொடுத்தாச்சு. அதான் வாசல்லயே நின்னு வாங்கினுட்டேன்," என்று சொல்ல அவனுக்கு அவள் நடவடிக்கை வேதனையாக இருந்தது.

"நீங்க போயிட்டு அப்புறம் வாங்கோ" என்று சொல்லி சரட்டென்று உள்ளே போய் கதவு சார்த்திக் கொண்டாள்.

கதவு முகத்தில் அடித்தாற் போல் இருந்தது.

என்ன... என்ன தவறு இந்தக் குடும்பத்தில். தேவையில்லாமல் எதற்கு இங்கு நின்று கொண்டிருக்கிறோம் என்று தோன்ற, ஒரு கோபத்தோடு வண்டி உதைத்து வீட்டை விட்டு வெளியேறினான்.

மறுபடியும் அவள் பல் தெரிய சிரித்தாள்.

அவள் சிரிப்பில் ஒரு கவர்ச்சி இருந்தது. கண்களில் லேசாக சிமிட்டல் இருந்தது. கன்னம் குழி விழுந்தது.

அம்மா அழகா, பெண் அழகா என்று தவித்தான்.

அவள் வேண்டுமென்றே ஒரு உடம்பு முறுக்க லோடு நிற்பதாக அவனுக்குப் பட்டது.

"சரி. நான் கிளம்பறேன்."

"இருங்கோளேன். பேசிட்டு போகலாம்."

அவன் புரியாமல் திகைத்தான்.

"உள்ள உட்கார வச்சு பேசினாதான் ஏதாவது சொல்வார். இப்படி வாசலோட நின்னு பேசினா ஒண்ணும் சொல்ல மாட்டார்."

அந்த அம்மாள் மீண்டும் ஒரு கவர்ச்சியான புன்னகையோடு பேசினாள்.

என்ன எழவு இது. ஒரு ஆணை உள்ளுக்குள் கூப்பிட்டுக் கொண்டு வந்து பேசினால் தவறு என்றும், வெளியே நிற்க வைத்துப் பேசினால் தவறில்லை என்றும் ஒரு புருஷன் சொல்வாராயின் அவன் புருஷனா இல்லை, இவள்தான் மனைவியா. எதற்காக நிறுத்திப் பேச வேண்டும்.

"உங்க வீடு எங்க இருக்கு" அவள் இடம் கேட்டாள்.

அவன் இடம் சொன்னான்.

"என்ன ஒரு முப்பது பெறுமா."

"கீழ மேல ரெண்டும் சேர்த்து ரெண்டாயிரத்து அறுநூறு ஸ்கொயர் ஃபீட் நாப்பது ரூபா போகும்னு சொல்றாங்க."

"இன்னும் நிலமா வாங்கிப் போடுங்கோ."

அவள் பேச்சு எதுவும் சுவாரசியமாக இல்லை. ஆனால், அவள் விடுவதாகவும் இல்லை. அவனை நிற்க வைப்பதிலேயே கவனமாக இருந்தாள்.



"உங்களுக்கு என்ன ரொம்ப பிடிக்கும். சாப்பிறதுக்கு" என்று மறுபடி தொடர அவனுக்கு அந்த இடம் விட்டு போய் விடலாம் என்று தோன்றியது.

"நான் சாப்பாட்டுல பெரிய அக்கறை இல்லாதவன். நான் வரட்டுமா."

அவன் கிளம்ப தயாராக இருக்கும்போது, "அதெப்படி ஒரு வயசுப் பையன் சாப்பிடறதுல இஷ்டமில்லைன்னு சொல்றது. சன்னியாசி ஆயிட்டியா நீ" என்று மறுபடியும் அவள் பேச்சு கொடுக்க வெளியே கார் சத்தம் கேட்டது.

குள்ளமாய், அகலமாய் அசட்டுச் சிரிப்போடு முரட்டு முகத்தோடு ஒரு ஐம்பது வயது மனிதர் நடந்து வந்தார்.

"என்னது" என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

அவன் மௌனமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"மது ஏதோ புக் கேட்டா. அதை கொண்டு வந்து கொடுக்க வந்திருக்கார்."

"கொடுத்தாச்சோன்னோ."

"ஆமாம். கொடுத்தாச்சு. அதான் வாசல்லயே நின்னு வாங்கினுட்டேன்," என்று சொல்ல அவனுக்கு அவள் நடவடிக்கை வேதனையாக இருந்தது.

"நீங்க போயிட்டு அப்புறம் வாங்கோ" என்று சொல்லி சரட்டென்று உள்ளே போய் கதவு சார்த்திக் கொண்டாள்.

கதவு முகத்தில் அடித்தாற் போல் இருந்தது.

என்ன... என்ன தவறு இந்தக் குடும்பத்தில். தேவையில்லாமல் எதற்கு இங்கு நின்று கொண்டிருக்கிறோம் என்று தோன்ற, ஒரு கோபத்தோடு வண்டி உதைத்து வீட்டை விட்டு வெளியேறினான்.

"ப்பா... என்ன கோபம். ஆம்பளைங்களுக்கு கோபம் ஜாஸ்தியா வருது. மோட்டர் சைக்கிளை விருட்டுனு எடுத்துண்டு போனேளாமே. எங்க அம்மா சொன்னா."

மறுபடியும் மதுமதி போன் பண்ணி அவனிடம் பேசியபோது அலுவலகத்தில் சில பேர் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"டேய். லேடீஸ் போன் காலெல்லாம் வருது. இங்க இருக்கற பசங்க வம்பனுங்க பார்த்துக்கோ.

"என்ன ஸார் ஆகும்."

"ஏதாவது போட்டு கொடுப்பாங்க."

"யார்கிட்ட ஸார்."

"உன் தலைக்கு மேல இருக்கறவன் கிட்டடா."

"நான் பாட்டுக்கு என் வேலைய செய்துண்டிருக் கேன் ஸார். ஒரு ரெண்டு கால் வரத்தானே செய்யும்."

"வரும்டா. நீ தப்பு பண்றபோது டப்புனு அதை வச்சுடுவோம்."

"என்னது வச்சுடுவோம் ஸார்."

"ஒழுங்கா ஓடறவரைக்கும் யாரும் ஒண்ணும் செய்யமாட்டாடா. எங்கேயாவது தப்பு பண்ணுவ. மனுஷான்னா தப்பு நடக்காத போகுமா. அந்த தப்பு வரும்போது சும்மா லேடீஸ்கிட்டயே பேசிண்டிருந்தா இப்படித்தான் மிஸ்டேக் வரும் அப்படின்னு அங்க தொடுவான்."

"என்ன ஸார். ஏன் அப்படி சொல்றேள்."

"அப்படித்தான் நடக்கும் பாரேன்."

"காரணம் என்ன ஸார்."

"வேற யாருக்கும் லேடீஸ்கிட்டயிருந்து போன் வர்றதில்லையே. இங்க இருக்கறவன் எல்லாரும் கிழவன். வரும்போது வெங்காயம் வாங்கிண்டு வாங்கோ அப்படின்னு பொண்டாட்டிதான் சொல்லுவா.



அப்பா ஆபீஸ்லேர்ந்து பென்சில் எடுத்துண்டு வா. அப்படின்னு பொண்ணு போன் பண்ணும். மத்தபடி இந்த மாதிரி இப்படி குயில் கூவறாமாதரி ஒரு பொண்ணு போன் பண்றாளேன்ற வயித்தெரிச்சல் தான்."

"இது ஒண்ணும் தப்பில்லை ஸார். சாதாரண ஒரு நட்பு தான்."

"எங்களுக்கு அதெல்லாம் தெரியாதுப்பா. நீ ஆம்பளை, அவ பொம்பளை. நீங்க ரெண்டு பேரும் பேசறேள்னா ஒரேயொரு விஷயம்தான் காரணமா இருக்கும். செக்ஸ்" என்று சொல்லிவிட்டு அவனுக்கு அடுத்த ஸீட்டில் இருந்தவர் உரக்க சிரித்தார்.

"நீங்களும் அப்படி நினைக்கிறேளா."

"ஆரம்பத்துல நினைச்சுண்டிருந்தேன். ரொம்ப சிரமப்பட்டு அதுலேர்ந்து விலகி வந்தேன். யார் எப்ப டிப் போனா எனக்கென்ன அப்படின்னு புரிஞ்சுகற துக்கே எனக்கு நாலு வருஷமாச்சு. நிறைய பேருக்கு இது புரியாது."

"இந்த போன் வராம இருக்கறது நல்லதுன்னு சொல்றீங்களா."

"உன் அனுபவத்தை நீயே தெரிஞ்சுப்பே."

சாகேதராமன் வேலையில் இன்னும் கூர்மையாக இருந்தான்.

ஒரு நாளைக்கு மூன்று முறையாவது அவனுக்கு மதுமதியிடமிருந்து போன் வந்தது.

"இன்னிக்கு சனிக்கிழமை ஏதாவது புரோகிராம் வச்சுண்டிருக்கியா" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்று அவன் சொன்னான்.

"அப்படியானால் உட்லண்ட்ஸ் போகலாமா."

"நான் மத்தியானம் உட்லண்ட்ஸ்ல சாப்டுட்டுதான் வீட்டுக்கு போவேன்."

"அதான் கேட்டேன் உட்லண்ட்ஸ் போகலாமான்னு."

அவள் உளறினாள்.

"எனக்கு புரியலை. நான் வழக்கமா உட்லண்ட்ஸ் போறது வழக்கம். நீ என்ன சொல்ற," என்று மதுமதியிடம் கேட்க, "நானும் ஜாயின் பண்ணிக்கலாமான்னு கேட்கறேன்."

சரி என்று வாக்கு தப்பி வந்தது போல் விழுந்தது. ஆனால், உள்ளூர மதுமதியோடு போய் டிபன் சாப்பிட்டால் சந்தோஷமாகத்தான் இருக்கும் என்று நினைத்தான். ஒரு பெண்ணோடு அவன் ஹோட்டலுக்கு இதுவரை போனதே இல்லை.

அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லலாமா அல்லது வேண்டாமா. அம்மாவுக்கு இது பிடிக்குமா அல்லது பிடிக்காதா. வேண்டாம். எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது.

ஆனால், டிரைவின் ஹோட்டலில்தான், மதுமதியை அவன் சரியாகப் பார்த்தான். அது டிரைவின் ஹோட்டல் என்பதால் அவன் சரியாகப் பார்த்தானா இல்லை ஒன்றாக உட்கார்ந்ததால் சரியாகப் பார்த்தானா என்பது புரியவில்லை. எல்லார் கவனத்தையும் கவரும்படிதான் மதுமதி உடுப்பு உடுத்தியிருந்ததாள். மிக மெல்லியதான புடவை. மிக மெல்லியதான ஜாக்கெட் உள்ளாடைகள் தெரியும்படி வலம் வந்தாள். ஏய்... இங்க உட்காரலாமா என்று ஒரு டேபிளுக்கு அழைத்துப் போனாள்.

அங்கு உட்கார்ந்ததும், "வேண்டாம், இங்க புழுக்கமா இருக்கு. ஃபேன்கிட்ட போயிடுவோம்." -இன்னொரு டேபிள் தாவினாள்.

அவனும் எழுந்து அவள் பின்னால் போனான்.



அந்த டேபிளுக்கு போய் உட்கார்ந்ததும், "ஏய் இங்க காத்து வருது. ஆனா, என்னமோ லேசா ஒரு எண்ணெய் வாசனை அடிக்கறது இல்ல."

"ஹோட்டல் முழுக்க எண்ணெய் வாசனை இருக்கத்தான் செய்யும்."

"ஐயோ... இந்த வாசனை குமட்டறதுப்பா. அந்த கார்னர் போயிடலாம். அங்க நேச்சுரல் ப்ரீஸ் வரும்."

மறுபடியும் அவள் இன்னொரு இடம் மாற்றினாள்.

எல்லோரும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யாரோ தொலைவில் வாய்விட்டு சிரிப்பது கேட்டது.

சாகேதராமன் லேசாக வெட்கமடைந்தான்.

இந்தப் பெண்ணிடம் ஏதோவொரு தப்பு இருக்கிறது அல்லது என்னிடம் இருக்கிறது. எது தப்பு அல்லது இரண்டு பேருமே தவறா என்று யோசிக்கத் துவங்கினான்.

புத்தியே... புத்தியே... விழிப்பாக இரு என்று புத்தியை வேண்டிக் கொண்டான். ஆனால், வெள்ளை வெளேர் என்ற இடுப்பு. வட்டமான பிருஷ்டம். கோடு கிழித்தால் போல நடுமுதுகு. நல்ல தலை முடி. சிவந்த உதடுகள் என்று அந்தப் பெண் எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுது மெல்ல கிறங்கித்தான் போயிற்று. அடேயப்பா... இவ்வளவு பெரிய மார்பகமா என்று ஒரு வியப்பு ஏற்பட்டது. இப்படி எடுப்பாக பொம்மைகள் செய்வார்கள். ஆனால், இவள் நிஜ மனுஷி அல்லவா. இவ்வளவு அற்புதமான ஒரு பெண் கிடைத்தால் வாழ்க்கை சந்தோஷமாகத்தானே இருக்கும். எல்லோரும் பார்த்து பொறாமைப் படுகிற ஒரு வாழ்க்கையாகத்தானே இருக்கும் என்று நினைத்தான்.

புத்தியை உதறிவிட்டு விழிப்பை மறந்து விட்டு அவளோடு சிரித்துப் பேச அல்லது அவளுக்கு நான் மிக

வும் வேண்டப்பட்டவன் என்று நிரூபித்துக் கொள்ள அவனும் முயற்சி செய்தான்.

அவர்கள் இனிப்புகளை ஆர்டர் செய்தார்கள். பலமாக சிரித்தார்கள். அருகருகே உட்கார்ந்து கொண்டு காதோரம் கிசுகிசு என்று பேசிக் கொண்டார்கள். மறுபடியும் பலமாக சிரித்தார்கள். எல்லார் கவனமும் அவர்கள் பக்கம் இருந்தது.

ஒன்றரை மணிநேரம் அந்த ஹோட்டலில் செலவழித்து விட்டு வெளியே வரும் பொழுது மதுமதி தன்னை உயிருக்குயிராய் நேசிப்பதாக அவன் நினைத்துக் கொண்டான். மனதில் ஒரு கிறக்கம் அப்படி ஊன்றப்பட்டது.

"உங்களை ஒரு கேள்வி. உங்கப்பாக்கும், உங்கம்மாவுக்கும் ஆகாதா" என்று அவன் கேட்க அவள் சட்டென்று தலை குனிந்தாள். முகத்தை வேறுபக்கம் வைத்துக் கொண்டாள்.

"என்ன. கேட்கக் கூடாத கேள்வி கேட்டுட்டேனா."

அவன் மறுபடியும் சொல்ல தன் தந்தை கோபக்காரர் என்றும் கொடுமைக்காரர் என்றும் தாயைக் கொடுமைப்படுத்துவார் என்றும் தன்னையும் தொந்தரவு செய்வார் என்றும் அவள் கண்ணில் நீர்வழிய சொல்ல அதையும் பல பேர் வேடிக்கை பார்த்தார்கள்.

அவன் மெல்ல அவள் தோளைத் தொட்டு அணைத்துக் கொண்டான். அவளும் நெருங்கி அவன் மீது சாய்ந்து கொணடாள். தொலை தூரத்தில மறுபடியும் சிரிப்பு சத்தம் கேட்டது.

ஏன் சிரிக்கிறார்கள். ஒரு பெண்ணோடு ஒரு ஆண் பழகுவது தவறா. யார் சிரிக்கிறார்கள். ஒரு வேளை ஆபீஸிலுள்ள அடுத்த வீட்டில் இருப்பவர் சொல்வது போல பல கிழவர்களுக்கு பொறாமையோ, சாவுங்கடா நாய்ங்களா என்று இன்னும் மதுமதியை இறுக்க அணைத்துக் கொண்டான்.



ஆனால், பொய்யில் ஆரம்பித்து பொய்யாய் முடிந்தது.

தனக்குள்ளே பொங்குகின்ற காதலா அது என்று உணராமல், மற்றவர் எதிரே ஒரு பெண்ணை அணைத்துக் கொள்ளவும் கைகோர்த்துக் கொள்ளவும் ஆரம்பித்த விஷயம் மற்றவரால் அழிந்து போயிற்று.

"உன் மோட்டார் சைக்கிள்ல மகாபலிபுரம் போகலாமா" என்று சொல்வாள். பாதி தூரம் போகும்போது "வேண்டாம். வேண்டாம் அப்பாக்கு தெரிஞ்சுதுன்னா கொன்னுடுவாரு. என்னை அடிச்சாலும் பரவாயில்லை. அம்மாக்கு அடிவிழும்" என்று சொல்லி, அவனைத் திரும்ப வைப்பாள். வீட்டில் இறங்கி உள்ளுக்குள் போய்விடுவாள்.

இவன் சகல கனவுகளும் நொறுங்க வீட்டிற்குள் வந்து வெறுமே மல்லாக்க படுத்துக் கொண்டிருப்பான்.

"என் ஃப்ரெண்டுக்கு கல்யாணம். நீயும் வறியா. நாம ரெண்டு பேரும் ஜோடியா போய் உட்கார்ந்துக்கலாம்."

அவன் அருமையாக உடுத்திக் கொண்டு அங்கு வர, கல்யாண வீட்டு வாசலில் காத்திருக்க அவள் வரவேயில்லை. மெல்ல உள்ளே போய் அவள் வந்து விட்டாளா என்று விசாரிக்க "கார்த்தாலயே வந்துட்டு போயிட்டாளே. சாயந்தரம் வரமாட்டேன்னாளே" என்று சொல்ல அவன் பேந்தப் பேந்த முழித்தான்.

அவர்கள் அவனை பரிதாபமாகப் பார்த்தார்கள்.

"பரவாயில்லை சாப்டுட்டு போங்கோ" என்று ஒருவர் அவனைச் சொல்ல அவன் வேண்டாமென்று வெளியே வந்தான்.

ஏன் இப்படிச் செய்கிறாள் என்று வேதனைப் பட்டான்.

"உனக்கு தெரியாது என்ன நடந்ததுன்னு. வீட்ல ஒரே கலாட்டா. என்னை சாயந்தரம் போகப்படா

துன்னு எங்கப்பா சொல்லிட்டார் . எங்கம்மாக்கு சும்மா சொல்லி வச்சேன் நீயும் வரேன்னு, அம்மா வாய் தவறி சொல்லிட்டா. எவன் கூடயாவது போனேன்னு தெரிஞ்சுது முட்டியை முறிச்சுடுவேன் நாயே அப்படின்னார். அதனாலதான் கார்த்தால போயிட்டு வந்துட்டேன். ப்ளீஸ் என்னை மன்னிச்சுடுங்கோ" என்று சொல்ல வெகு எளிதில் மன்னித்தான்.

ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரை மூன்று மணி நேரம் ஒரு கல்யாண வீட்டு வாசலில் வெறுமே நின்று கொண்டிருந்த வேதனை அவனுக்கு சாதாரணமாக மறந்து போயிற்று.

முரடனாக ஒரு தகப்பன் இருந்தால் ஒரு பெண் என்ன செய்வாள் பாவம் என்று ஒரு பரிதாபமும் வந்தது. தகப்பன் பெயரைச் சொன்னதுமே முகம் மாறி சிவந்து பயந்து கண்கள் மருள நிற்கின்ற மதுமதியை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு அவன் பச்சாதாபப்பட்டான். அவள் மீது ஏற்பட்ட பரிதாபமே அவனுக்கு காதலாக வளர்ந்து வந்தது.

இவ்வளவு அழகான பொண்ண உள்ளங்கையில் வச்சு பாதுகாக்க வேண்டாமா.

பாதுகாப்பேன் மதுமதி என்று பைத்தியக்காரன் போல் தானே கண்ணாடி முன்பு நின்று பேசிக் கொண்டான். கைகளை மார்புக் குறுக்கே கட்டி தனக்குப் பின்னே அவள் நின்று கண்ணாடியில் எட்டிப் பார்ப்பதாய் கற்பனை செய்து கொண்டான்.

அம்மா ஜன்னல் வழியே அதை ஒரு முறை பார்த்து விட்டு விலகிப் போனாள்.

"கன்னுக்குட்டி... கண்ணாடி முன்னாடி நின்னு பேசக் கூடாதுடா. கொஞ்சம் ஜாக்கிரதையா தெளிவா இருக்கணும். அப்படிப் பேசற போது நாம பேசறது சரிதானா இது நமக்குத் தேவைதானா அப்படின்னு



ஒரு க்ஷணம் யோசனை பண்ணிண்டு அதுக்கப்புறம் கண்ணாடி முன்னாடி பேசலாம். சரியா யோசனை பண்ணா கண்ணாடி எதிர்லேர்ந்து நகர்ந்துடுவ."

அம்மா ஒரு முறை மெல்லச் சொன்னாள்.

அவன் காதில் அது ஏறவேயில்லை.

மதுமதியிடமிருந்து எப்பொழுது அழைப்பு வரும் என்று ஏங்கிக் கொண்டிருந்தான். வந்தவுடன் எல்லா வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு ஓடினான்.

"டேய், ஒரு தௌஸண்ட் ருபீஸ் கொடுறா. டாக்டர் கிட்ட போகணும். ரொம்ப வயத்த வலிக்கறது." கொஞ்சிக் கேட்டாள்.

"தௌஸண்ட் ருபீஸ் போறுமா."

அவன் பதிலுக்குக் கேட்டான்.

"சரி. டூ தௌஸண்ட் கொடு."

அந்த காசு வாங்கிய பிறகு ஒரு வாரம் அவள் அவனை சந்திக்கவேயில்லை. தொலைபேசியிலும் அவள் கிடைக்கவில்லை.

உடம்பு ரொம்ப மோசமாயிடுத்தோ. படுக்கைலேர்ந்து எழுந்திருக்க முடியாம இருக்காளோ.

அவன் வீட்டிற்கு போக நினைத்தான். போக பயமாகவும் இருந்தது.

அலுவலகம் முடிந்த பிறகு மோட்டார் சைக்கிளை எடுத்து அவள் வீட்டு வாசலுக்குப் போனான. அந்தத் தெருமுனையில் நின்று கொண்டு அவள் எங்கேனும் போகிறாளா என்று ஒரு மணி நேரத்திற்கு மேல் காத்திருந்தான். என்னை மறந்ததேன் நெஞ்சமே என்று பாட்டு பாடினான்.

"ஏன் சரியா சாப்பிட மாட்டேங்கற. ஏதோ உள்ள வேதனை பிடுங்கி திங்கறா மாதிரி முகத்தை வச்சுண்டிருக்கியே என்ன."

"ஒண்ணுமில்லைம்மா நல்லாதான் இருக்கேன்."

"இல்லை. என்னமோ தப்பு. என்னன்னு சொல்லு."

"ஒண்ணுமில்லைம்மா."

அம்மாவிடம் சுத்தமாக மறைத்தான்.

இன்றைக்கு வீட்டுக்குப் போய் பார்த்துவிடுவது என்று ஒரு ஞாயிற்றுக்கிழமை வண்டியை எடுத்துக் கொண்டு அவள் வீட்டினுள் போய் வண்டியை நிறுத்தினான்.

வீட்டு வாசலில் நிறைய செருப்புகள் இருந்தன.

மதுமதி அம்மா வெளியே ஓடி வந்தாள்.

"என்ன அவ வரச் சொன்னாளா."

"இல்லையே. வரச் சொல்லலை."

"அவளுக்கு இன்னிக்கு நிச்சயதார்த்தம். பாக்கு வெத்தலை மாத்திண்டிருக்கா. இப்போ வராதே. வந்தா அவங்கப்பா சத்தம் போடுவார்."

"எங்கிட்ட சொல்லவே இல்லையே."

"உங்கிட்ட எதுக்கு சொல்லணும். நீதான் அவளுக்கு நல்ல புடவையே இல்லை வாங்கிக்கோன்னு ரெண்டாயிரம் ரூபா கொடுத்தியாமே."

"அது புடவை வாங்கறதுக்காக கொடுக்கலை."

"எங்கிட்ட அப்படித்தானே சொன்னா.'

அவள் அம்மா சொன்னாள்.

"சரி. அவ ஏதாவது பொய் சொல்லியிருப்பா. ஒழிஞ்சு போகட்டும். நீ கிளம்பி போயிடேன்" என்று சொல்லி வேகமாக உள்ளுக்குள் போய் பெண்கள் கூட்டத்தில் கலந்து மறைந்தாள்.

அந்தக் கூட்டத்தில் இருந்தபடியே அவனை உறுத்துப் பார்ப்பதும், கண்களால் அவனை போகச் சொல்வதும் அவனுக்கு அவமானமாக இருந்தது.



அவன் மெல்ல வெளியேறினான். மனசு விகித்துப் போயிருந்தது.

ஏன். என்ன தப்பு. கை கோர்த்து தோளில் சாய்ந்ததற்கெல்லாம் என்ன அர்த்தம். எல்லா விஷயங்களிலும் மதுமதி பொய் சொல்லியிருக்கிறான். கொத்துக் கொத்தாக மாறி மாறி தாயும் மகளும் ஏன் பொய் சொல்ல வேண்டும். ஏன் நாடகமாட வேண்டும். இவர்களிடம் என்ன பிழை. ஏன் இந்த அலட்சியம். எதற்காக இந்த தந்திரம்.

அவன் திகைத்துப் போனான்

ஒற்றையாய்ப் போர்த்திய புடவையும், துள்ளுகின்ற அந்த மார்புகளும், இடுப்பும், முதுகும், பிருஷ்டமும், தலைமுடியும், உதடும், பெரிய கண்களும் அவன் நினைவில் வந்து வந்து அலைக்கழித்தன.

நிச்சயதார்த்தத்தை மறுபடியும் நினைத்துப் பார்த்தான். தனக்கும் அவளுக்கும்தான் நிச்சயதார்த்தம் என்பதாய் கற்பனை செய்து கொண்டான். மெல்ல அதைக் கலைத்தான்.

இல்லை. எனக்கு ஏதோ போறவில்லை. ஏதோ ஒரு விதத்தில் சரியாக இல்லை. அதனால்தான் உதறுகிறார்கள்.

யாரைத் திருமணம் செய்து கொண்டான். ஏன் திருமணம் செய்து கொண்டான் என்று விசாரிக்க வேண்டாமா.

அவன் தயங்கித் தயங்கி போன் செய்தான்.

"ஏய், எப்படியிருக்க."

மறுமுனையில் துள்ளலாய் அவள் குரல் கேட்டது.

"கங்ராஜீலேஷன். கல்யாணமாமே."

"ஆமாண்டா. ஏனோ எனக்கு பிடிக்கவேயில்லை."

"ஏன்."

"எனக்கு பிடிக்காதவனை கல்யாணம் பண்ணி வைக்கறாடா."

"யாரது."

"ஏதோ பெரிய டாக்டராம். ஃபாரின்ல படிச்சுட்டு வந்துருக்கானாம். அவனுக்கு சிகப்பா, அழகா நிறைய தலை முடியோட ஒரு பொண்ணு வேணுமாம். என்னை மாட்டி விட்டாடா. தற்கொலை பண்ணிக்கலாம் போலிருக்கு."

அவன் மறுபடியும் அவளுடைய நிலைக்காக மனம் இளகத் துவங்க சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

"இப்போ உடம்பு சரியாயிடுத்தா. உடம்பு சரியில்லைன்னு வாங்கினியே."

"உங்ககிட்டே காசு வாங்கின சாயந்திரமே சரியாயிடுத்து. அந்தக் காசை உங்கிட்ட திருப்பிக் கொடுத்துடணும்னு நினைச்சேன். அப்புறம்தான் இந்த மாதிரி மேரேஜ் ஃபிக்ஸ் ஆச்சா. சட்டுனு அதுக்கொரு புடவை வாங்கினுட்டேன். உன் ஆசிர்வாதமா இருக்கட்டுமேன்னு. இருக்கலாமோன்னோ."

அவன் அந்த சாமர்த்தியம் பார்த்து திகைத்துப் போனான்.

"என்ன.. வேணும்னா சொல்லு. ரெண்டாயிரத்தையும் இப்பவே கொண்டு வந்து கொடுத்துடறேன்."

"சரி. கொண்டு வந்து கொடு."

அவன் மனதை கடுமையாக்கிக் கொண்டு சொன்னான். டெலிபோனை கீழே வைத்தான். அதற்குப் பிறகு அவன் மதுமதியைப் பார்க்கவே இல்லை. வருவாள் என்கிற நம்பிக்கை அரை மணி நேரம் இருந்தது. யோசித்துப் பார்த்தபோது இன்னொரு பொய் என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

"பொண்டாட்டி பின்னாடியே சுத்திண்டிருக்கான். அவகிட்டயே பல்லை காமிச்சுண்டிருக்கான். அப்போ



அம்மாவை மதிப்பானா, அப்பாவை மதிப்பானா."

வேறு யார் பிரச்சினையையோ பக்கத்தில் வேலை செய்யும் அதிகாரி உரத்து டெலிபோனில் பேச அதை அவன் விசாரிக்க முயன்றான்.

"பொம்பளை பின்னாடி சுத்தக்கூடாது. நீதான் பெருசு. நீதான் முக்கியம். நீதான் எனக்கு அப்படின்னு சொல்லவே கூடாது. சொன்னால் உடனே அதை உபயோகப்படுத்தத்தான் எல்லா பொம்மனாட்டிக்கும் தோணும். நீ அப்படி சொல்றியே என் செருப்பை தொடு பார்க்கலாம். நீ அப்படி சொல்றியே என் புடவைய தோய்ச்சு கொடு பார்க்கலாம் அப்படின்னு டக்குனு ஆரம்பிச்சுடுவாள். நம்ம மதிப்பு கெட்டுப் போன பிறகு, நம்மளை பத்தின அக்கறை போய், யார் முறைப்பா இருக்கானோ, யார் விரைப்பா இருக்கானோ, அவங்கிட்ட அவ புத்தி போயிடும். அவ பிரியத்தை நீ சம்பாதிக்கணும்னு, நீ குழையப் போய், நீ குழைஞ்சதே அவளுக்கு வெறுப்பாப் போயிடும். இது ரொம்ப முக்கியமான சைகாலஜி."

"ஒரு ஆள் முறைப்பா இருக்கணுமா, குழைவா இருக்கணுமா."

"இது ரெண்டுக்கும் மத்தியில இருக்கணும்டா. அதுவொரு டாக்டிக்ஸ். ஒரு கெட்டிக்காரத்தனம். எல்லாருக்கும் வராது."

"எப்படி கத்துக்கறது. எங்க கத்துக்கறது அந்தக் கெட்டிக்காரத்தனத்தை."

"அனுபவப்பட்டு அனுபவப்பட்டுதான் பழகிப் பழகிதான்."

அவர் சாதாரணமாக சொல்லிவிட்டு தன் வேலையை கவனிக்கத் துவங்கினார்.

மதுமதியின் திருமணப் பத்திரிக்கை அவனுக்கு தபாலில் வந்தது. சிறிது நேரம் புரட்டிப் பார்த்துவிட்டு அதைக் கிழித்துப் போட்டான். மறுபடி பழைய சாகேத

ராமனாக ஆக வேண்டும் என்று நினைத்தான். ஆனால், முடியவில்லை. சாகேதராமன் என்கிற ஒரு அழகான குளத்தில் ஒரு நெடி ஏற்பட்டது போல, மனதில் அவளைப்பற்றி ஒரு வலி இருந்து கொண்டே இருந்தது. ஹோட்டலில் யாரோ விசாரித்தார்கள்.

"ஏன் ஸார் மேடம் வரலையா."

"எந்த மேடம்." அவன் அப்பாவியாய் கேட்டான்.

"அன்னிக்கு வந்தீங்களே ஸார். சேர் மாறி மாறி உட்கார்ந்தீங்களே."

"அவங்களை தெரியும். அவ்ளோதான்."

"அவங்களை லவ் பண்ணலையா ஸார்."

"இல்லியே. அதெல்லாம் கிடையாதுப்பா. என்ன திடீர்னு இவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் சொல்ற."

அவன், கேட்டவனை வியப்போடு பார்க்க "அந்தம்மா நிறைய பேரை இப்படி கூட்டிட்டு வரும் ஸார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தரை கூட்டிட்டு வரும். வேணும்டாலும் டேபிளை மாத்திமாத்தி உட்காரும். எங்க பாஸ் ஒருநாள் கேட்டார். ஏங்க டேபிளை மாத்தி மாத்தி உட்கார்ந்துக்கறீங்கன்னு. ஒரு ஆள் நம்ம பின்னாடி வரானா அப்படின்னு தெரிஞ்சுக்கறதுக்கு. இதுவொரு நல்ல டெஸ்ட் அப்படின்னு சொன்னாங்க. எங்க முதலாளி ரொம்ப கடுப்பாயிட்டாரு. எவ்வளவு மோசமான பொம்பளை. எப்படி இந்தப் பசங்களெல்லாம் ஏமாந்து போறாங்க அப்படின்னு ரொம்ப வருத்தப்பட்டாரு. உங்களைப் பார்த்தும் சொன்னாரு. இவன் ஒருத்தன் புதுசா வந்திருக்கான். குழந்தை மூஞ்சி. இவனும் மாட்டப்போறான் அப்படின்னாரு. நல்ல வேளை நீங்க அதுக்கப்புறம் வரலை."

அதற்குப் பிறகு டிரைவின் ஹோட்டலுக்கு போகக் கூடாது என்று அவனுக்குத் தோன்றிவிட்டது.



காதலிக்கிறவர்கள் கண்மூடிக் கொள்ள, காதலிக்கிறவர்களை உலகம் இன்னும் பெரிதாய் கண் விழித்துப் பார்க்கிறது. எது செய்தாலும் குறிப்பெடுத்துக் கொள்கிறது என்பதை புரிந்து கொண்டான். அடுத்த முறை காதலிக்கும்போது கவனமாய் இருக்க வேண்டும் என்று யோசனை செய்தான்.

சட்டென்று சிலிர்த்தான்.

இன்னொரு முறை காதலிப்போமா என்று மறுபடியும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

ஏன், இன்னொரு தடவை காதலிச்சா என்ன தப்பு. மதுமதிதான் உலகமா. மதுமதிதான் முடிவா. அப்படியொன்னும் இல்லை. வேற இன்னும் நல்ல பெண்கள் உலகத்துல இருப்பாங்க. அவங்களை லவ் பண்றதுல ஒண்ணும் தப்பில்லை. பொம்மனாட்டியோட ஊர் சுத்தறது சந்தோஷமாத்தான் இருக்கு.

மதுமதியை மறந்த நாட்களில் மனதில் ஒரு உலர்ந்த தன்மை ஏற்பட்டது. எல்லாவற்றின் மீதும் வெறுப்பு வந்தது. எல்லாவற்றையும் இழிவாகப் பார்க்கின்ற ஒரு தன்மை ஏற்பட்டது. குறிப்பாய் பெண்களை, அசிங்கமாய், ஆபாசமாய் ரசிப்பதற்குத்தான் மனம் தயாராக இருந்தது. பெண் ஒரு போகப் பொருள் என்ற ஒரு ஆத்திரம் எழுந்தது.

வேகமாக வளர்ந்த அந்த விஷயத்தை சட்டென்று ஒரு நாள் நிறுத்தினாள்.

இல்லை. இப்படி யோசித்துக் கொண்டு போனால் உனக்குத் தெரிந்த பெண்களும் உன் அம்மா உட்பட, மோசமானவள் என்கிற நிலைமைக்கு நீ தள்ளப்படுவாய். அப்படியில்லை. அம்மாவின் மிருதுத் தன்மையும், கம்பீரமும் மற்ற பெண்களிடமும் இருக்கக் கூடும். மதுமதி மாதிரி ஏதோவொரு பெண் தவறாக நடந்து கொண்டால் எல்லாரையும் அவ்விதமாக சொல்வது நியாயமா.

சாகேதராமா, அசிங்கமாய் நடந்து கொள்ளாதே. உனக்கு கம்பீரம் போதவில்லை. அதனால்தான் மது மதி எட்டவில்லை. இன்னும் கம்பீரமாக நடந்து கொள்.

அவனுடைய அலுவலகம் பெரிதாயிற்று. எல்லோருக்கும் தனி கம்ப்யூட்டர். எல்லோருக்கும் தனி டெலிபோன் என்று ஏற்பாடாயிற்று

நம்ம கம்பெனிக்கு மட்டுமே பதினாறு லைன் எக்ஸ்ட்ராவா கேட்டிருக்கோம். தரேன்னு சொல்லியிருக்காங்க. ஆனால், இது சீக்கிரமா வரணும்னா கொஞ்சம் நேரா போனாதான் முடியும். சாகேதராமா, நீ கொஞ்சம் சிரமம் பார்க்காம காலையில வீட்லேர்ந்து வரும்போது, டெலிபோன் டிபார்ட்மெண்ட் போய் முடிச்சுட்டு வந்துடேன்."

அவனுடைய மேல் அதிகாரி சொல்ல, பதினாறு டெலிபோன்களுக்கு உடனடியாக இணைப்பு கொடுக்கக் கோரி இவன் டெலிபோன் டிபார்ட்மென்டில் முறையிட்டான்.

"பைனான்ஸ் கம்பெனிலேர்ந்து வந்திருககறது யாரு."

திடீரென்று ஒரு குயில் கூவிற்று.

சாகேதராமன் எழுந்து நின்றான்.

"நீங்கதானா."

"ஆமாம்."

"உங்க பேர் என்ன."

அவன் பையிலிருந்து கார்ட் உருவி அவளிடம் நீட்டினான்.

"சாக்தராமன், அப்படின்னா."

"சாகேதராமன்" அவன் திருத்தினான்.

"ஓ... ஸாரி."

அவள் மன்னிப்புக் கேட்டாள்.



உள்ளுக்குள் அழைத்துப் போனாள். ஒரு அதிகாரியிடம் அறிமுகப்படுத்தினாள்.

"உட்காருங்க." அந்த டெலிபோன் அதிகாரி உட்கார வைத்தார்.

"ஸார். இன்னும் ரெண்டு நாள்ல உங்களுக்கு இணைப்பு கிடைச்சுடும். உடனடியா இந்த வேலையில இறங்கும்படியா இன்ஜினியர்கிட்ட சொல்லியிருக்கேன் ஸார். டெலிபோன் டிபார்ட்மென்ட்ல இருக்கறவங்களுக்கு பர்சனல் லோன் உங்க பைனான்ஸ்ல தருவீங்களா."

"இல்லை ஸார். அந்த மாதிரி பர்சனல் தர புராஜெக்டே எங்க கம்பெனியில கிடையாது. உங்க டெலிபோன் டிபார்ட்மென்ட்ல இருக்கறவங்க என்ன லோன் எதிர் பார்ப்பாங்க முப்பதாயிரம், நாற்பதாயிரம், அம்பதாயிரம்தானே.

நாங்க லோனே ஒரு லட்ச ரூபாய்க்கு மேலதான் தரோம். பத்து லட்ச ரூபா லோன் இருந்தா தான் நாங்க அதை உற்சாகப்படுத்தறோம்."

"சரி. டூ வீலர் வாங்கறதக்கு உதவி செய்யக் கூடாதா."

"இல்லை. ஸார். டூ வீலர்னா சீப் பிஸ்னஸ். அதுல ஏமாத்து வேலை அதிகம். ஒரே டூ வீலரை பத்து இடத்துல ரிஜிஸ்டர் பண்ணி பத்து பைனான்சியர் கிட்ட கடன் வாங்கறான். அப்புறம் யாராவது ஒருத்தர் கிட்ட வித்துடறான். இதை ஒரு குடும்பமா உட்கார்ந்து செய்துகிட்டிருக்காங்க ஸார். கண்டே பிடிக்க முடியலே. போலீஸ்ல புகார் கொடுக்கமாட்டேன்னு சத்தியம் பண்ண பிறகுதான் எப்படி ஏமாத்தறான்னு எங்களுக்கு சொல்லிக் கொடுத்தான். மறுநாளே டூ வீலருக்கு கொடுக்கற கடனை நிறுத்திட்டோம். உங்களுக்கு வேணும்னா நான் வேற பைனான்ஸ் கம்பெனியில ஏற்பாடு பண்றேன் ஸார்."

"இல்லை. இல்லை. எனக்கு வேண்டாம். எனக்கு ஆபீஸ் கார் இருக்கு."

அவர் மறுத்து விட்டார்.

மற்ற விஷயங்களைப் பேசினார்.

இரண்டு நாளைக்குள் டெலிபோன்கள் கொண்டு வந்து வைக்கப்படும். இரண்டு நாளைக்குள் எல்லா டெலிபோன்களும் உயிர் பெற்றுவிடும் என்று சொன்னார்.

உடனடியாக சில இன்ஜினியர்களை நேரிலும், தொலைபேசியிலும் அழைத்து வேகமான உத்தரவுகள் பிறப்பித்தார். இன்னும் சிலரை கேபினுக்கு வரச் சொல்லி அவர்களை, அவனுக்கு அறிமுகப்படுத்தி, அவனை அதிகாரியிடம் கூட்டிக் கொண்டுபோன அந்தக் குயில் சகல வேலைகளையும் முடித்து அவன் பின்னே வந்தது.

"ஸார் டூ வீலர் கடன் அதிகாரிக்கு தேவையா. எங்களை மாதிரி ஏழைப்பட்டவாளுக்கு தேவை. பெரிய கம்பெனிய நம்பி நிறைய வாங்கி நிம்மதியா அடைக்கலாமேன்னு பார்த்தார். அவர்கிட்ட போய் டூ வீலர் கடன் வேணுமா வெளிய வேறு இடத்துல ஏற்பாடு பண்றேங்கறேள். அவருக்கு எதுக்கு ஸார். ஆபீஸ் கார், வேன், லாரி எல்லாத்தையும் அவர் ஒருத்தரே உபயோகப்படுத்திண்டிருக்கார்."

அந்தக் குயில் சிரித்தது.

"உங்க பேர் என்ன."

பாக்கெட்டில் கைவிட்டுக் கொண்டு ஒயிலாகத் திரும்பி அவளைப் பார்த்துக் கேட்டான்.

"சீதாலட்சுமி."

அவள் மிருதுவாகப் பதில் சொன்னாள்.



"உங்களுக்கு லோன் வேணும் அவ்ளோதானே. நான் ஏற்பாடு பண்றேன். என்ன வண்டி வாங்கப் போறீங்க."

"இனிமேதான் தீர்மானம் பண்ணணும்."

"நல்ல ஸ்ட்ராங்கான வண்டி வாங்குங்க. நல்ல ஸ்கூட்டர் வாங்குங்க."

அவனுடைய பைனான்ஸ் கம்பெனிக்கு கடன் வாங்கித்தர ஆட்கள் அழைத்துவரும் ஏஜன்ட்டுகள் உண்டு. அவர்களில் பலர் அவனுக்கு நெருக்கமானவர்கள். அவனுடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள்.

"ஒரு ஸ்கூட்டருக்கு பைனான்ஸ் வேணும்னா யார் கிட்ட கேட்கலாம்."

"யார்கிட்ட கேட்கணும். நானே தரேன். உங்களுக்கா."

"எனக்குதான். ஒரு ஸ்கூட்டர் விலை எவ்ளோ."

"முப்பத்தாறாயிரம் ரூபாய்."

"முப்பத்தாறாயிரம் ரூபாயா. எனக்கு வேண்டாம்."

சீதாலட்சுமி பெரிதாக விழிகளை விரித்து வேகமாகப் பின்னடைந்தாள். அவள் பேசும்போது அவளுடைய குரல் மட்டும் பேசவில்லை. உதடு மட்டும் பிரிந்து பேசவில்லை. விழிகளும், மூக்கும், மூக்கு நுனியும், கைகளும் விரல்களும் சில சமயம் உடம்பே கூட ஒரு மொழியை வெளிப்படுத்தின.

"அடடா... நிதானமா சொல்ல முடியாத ஏன் இவ்வளவு பதட்டம்."

அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே சாகேத ராமன் கேட்டான்.

அவள் நிதானமானாள்.

"ஸாரி. முப்பத்தாறாயிரம்னு சொன்னவுடனே மனசு பதறிடுத்து."

"காசு பத்தின எந்த விஷயத்துக்கும் பதறவேப் படாது. காசு வரும். போகும். காசே நமக்கு வராதுன்னு நினைச்சுக்க வேண்டாம். வந்த காசு நம்மகிட்டயே நிக்கணும்னு சொல்ல வேண்டாம். பணம், அதுவொரு சாதாரண விஷயம்னு எடுத்துக்கணும். ஸ்கூட்டர் வாங்க எவ்ளோ காசு வச்சுருக்கீங்க."

அவள் வாய் திறக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சொல்லுங்க. ஸ்கூட்டர் வாங்க எவ்ளோ காசு வச்சுருக்கீங்க."

"சொன்னா சிரிப்பேள்."

"ஒரு ரூபா அம்பது பைசா வச்சுண்டிருக்கேன்னு சொன்னா சிரிப்பு வரும்."

"இல்லை. ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா வச்சுண்டிருக்கேன்."

"நல்ல காசாச்சே. இது போதுமே."

"நீங்க முப்பத்தாறாயிரம் ரூபா சொன்னேளே."

"எங்கயாவது கஷ்டப்பட்டு இன்னொரு ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா பிடுங்கிண்டு வந்துடுங்கோ. அஞ்சாயிரம் ரூபா ஆச்சு. அஞ்சாயிரம் வச்சு உங்களுக்கு நான் லோன் வாங்கித் தரேன்."

அவன், அவளின் சம்பளக்கவர் வாங்கிப் பார்த்தான்.

டெலிபோன் ஆபீஸின் பெரிய ரிசப்ஷன் ஹாலில் அவர்கள் இரண்டு பேரும் அருகருகே உட்கார்ந்து கொண்டு விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்து சில பத்திரங்களில் கையெழுத்து வாங்கி தன் கம்பெனி போய் இன்னும் சில விண்ணப்பங்களை இணைத்து அதே ஆபீஸில் உள்ள சண்முகம் பிள்ளையிடம் கொடுக்க சண்முகம் பிள்ளை, "யாரு பாப்பா" என்று கேட்க "தெரிஞ்சவங்க" என்று சொன்னான். ஒன்றும்



சொல்லாமல் தன் மனைவியின் அக்கவுண்டிலிருந்து முப்பதாறாயிரத்து ஐநூத்தி அம்பது ரூபாய்க்கு செக் எழுதி ஸ்கூட்டர் கம்பெனி பேருக்குக் கொடுத்தார்.

"பிரச்சினை வராது இல்ல" என்று கேட்க "வந்தா சாகேதராமனை கேட்கலாம்" என்று அவன் தன் நெஞ்சில் கை வைத்துச் சொல்ல "அப்போ எனக்கு பாண்டு பத்திரமே வேண்டாம்" என்று சொல்லிய படியே பாண்டு பத்திரத்தை ஜாக்கிரதையாக சண்முகம்பிள்ளை உள்ளே வைத்துக் கொண்டார்.

அதிகாரிகள் எப்பொழுதுமே அப்படித்தான். அவர்களுக்கு வாய் நிறை வாக்குறுதிகளும் வேண்டும். கை நிறைய கையெழுத்து பத்திரங்களும் வேண்டும். குறைவான காசாக இருந்தாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுவார்கள்.

காசோலையை பையில் வைத்துக் கொண்டு சீதாலட்சுமிக்கு போன் செய்தான்.

"அனேகமா இன்னிக்கு நாளைக்கு ஸ்கூட்டர் வாங்கிடலாம்."

"அப்படியா, கடவுளே, அதுக்குள்ள நான் ஒரு வேலை பண்ணி ஆகணுமே."

"என்ன"

"ஸ்கூட்டர் கத்துக்கணுமே."

"கடவுளே... என்ன சொல்றீங்க நீங்க ஸ்கூட்டர் கத்துக்கணுமா."

"ஆமாம். இதுவரைக்கும் ஸ்கூட்டர் ஓட்டினதே இல்லை."

"ஓட்டினதே இல்லையா."

"பின்னாடி உட்கார்ந்துகூட போனது இல்லை."

"அப்போ ஸ்கூட்டர் வாங்கணும், ஸ்கூட்டர் வாங்கணும்னு சொன்னீங்க."

"எல்லாரும் சொன்னாங்க. ஸ்கூட்டர் வாங்கினா நல்லதுன்னு. அதனால நானும் சொன்னேன். நீங்க டக்குனு கொண்டு வந்து கொடுப்பீங்கன்னு நான் நினைக்கவேயில்லை."

"எல்லா பத்திரத்துலயும் கையெழுத்துப் போட்டீங்களே."

"சரி. அப்ளிகேஷன்தானே போடறோம்னு நினைச்சேன்."

"சீதாலட்சுமி... விளையாடறீங்களா. நாளைக்கு கார்த்தால ஸ்கூட்டர் உங்க வீட்டு வாசல்ல இருக்கும்."

"வேற என்ன பண்றது. வீட்டு வாசல்லயே இருக்க வேண்டியதுதான்."

"ஸ்கூட்டர் ஓட்ட கத்துக்கோங்களேன்."

"எங்க ஓட்ட கத்துக் கொடுப்பாங்க."

"நான் கத்து கொடுக்கட்டுமா."

மறுநாள் கம்பெனிக்கு அரைநாள் லீவு போட்டுவிட்டு, மோட்டர் சைக்கிளை கம்பெனியிலேயே வைத்துவிட்டு, ஆட்டோ பிடித்து டெலிபோன் ஹவுஸ் போய், டெலிபோன் ஹவுஸிலிருந்து அவளை ஏற்றிக் கொண்டு ஸ்கூட்டர் விற்பனையாளரிடம் போய் அங்கு நின்று காசோலை கொடுத்து ஸ்கூட்டர் வேண்டுமென்று கேட்க, அவர்கள் எழுந்து நின்று அவனை வரவேற்றார்கள். பைனான்ஸ் கம்பெனி என்ற மரியாதையை மிக பலமாகச் செய்தார்கள்.

"டூ வீலர் பைனான்ஸ் ஒண்ணு ஆரம்பிச்சுடுங்க ஸார். நல்லா போகுது. மணி ஃபார் ஆபீஸ் கோயர்ஸ்னு வச்சுடுங்க. ஸ்டேட் கவர்மெண்ட், சென்ட்ரல் கவர்மெண்ட்கூட பிரச்சினையே இல்லை ஸார். குறிப்பிட்டபடி காசு வந்துடும்."

கைனடிக் ஹோண்டா வண்டியை அவர்கள் வாங்கினார்கள். பளபளக்கும் வெள்ளி நிறத்தில் வண்டி இருந்தது.



வண்டியில் பல முறை அவன் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தான். அவளும் பின்னால் ஏறிக் கொண்டாள். மிகுந்த சந்தோஷப்பட்டாள். ஒரு முறை ஏறி உட்கார்ந்து ஓட்ட முயற்சித்து இடதுபக்கமாகவே போக அவன் ஓடிப்போய் அவளையும் ஸ்கூட்டரையும் தாங்கிக் கொண்டான்.

"நாலு மணிக்கு வண்டி ரெடியாயிடும்னு சொன்னான். ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரோட பெயிண்ட் பண்ணி கொடுத்துடுவான். நான் உங்களை கிரவுண்டுக்கு கூட்டிட்டு போறேன். உங்களை முன்னாடி உட்காரவச்சு கத்துத் தரேன்" என்று சொல்ல, அவள் வெட்கத்தோடு சரி என்று சொன்னாள்.

கைபட்டது, கால்பட்டது, தொடைபட்டது, முழங்கால்பட்டது, முகவாயும் பட்டது. காதோரம் கன்னம் இழைந்தது. பின் கழுத்தில் ஊசி குத்தியது, உடம்பு முழுவதும். அவன் மார்பு படர்ந்தது. அவள் மார்பில் இரண்டு மூன்று முறை அவன் கைகளும் பட்டன.

"தயவு செய்து இதுக்கெல்லாம் வெட்கப்படாதீங்க. ஸ்கூட்டர் கத்துக்கணும். உங்களை வேணும்டாலும் தொடலை. தயவு செய்து புரிஞ்சுக்கோங்க" என்று அவன் சொல்ல "நான் தப்பா ஒண்ணும் எடுத்துக்கலை" என்று அவள் மிருதுவாக பதில் சொன்னாள். அவன் நிம்மதியானான்.

பல மணி நேர போராட்டத்திற்குப் பிறகு, அவளுக்கு சுமாராக ஓட்டவந்தது. மெதுவாகவே ஓட்டப் பழகினாள். வெய்யில் மறையும் வரை கிரவுண்டில் சுற்றிச் சுற்றி வந்தாள்.

"வாங்க மெல்ல ரோடுக்கு போகலாம்."

"ஐயோ, ரோடுக்கெல்லாம் வேண்டாம்."

"ஏன், ரோடுலதானே வண்டி ஓட்டணும். கிரவுண்ட்ல ஓட்டறதுக்கா முப்பத்தாறாயிரம் ரூபா பணம் கொடுத்து வாங்கினது. பயப்படாதீங்க. வாங்க."

அவன் சாலையின் மீது வண்டியை செலுத்தி பின்னர் அவளை ஓட்ட வைத்தான். பின்னால் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டான்.

கொட்டும் குளிரும் அவனுடைய நெருக்கமும் அவளுக்கு பிடித்திருந்தன. எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிப்போய் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு தலையணையில் முகம் பொதித்துக்கொள்ள வேண்டும் போல ஒரு ஆனந்த பரவசம் ஏற்பட்டது.

ப்பா... நானா. ஸ்கூட்டர் வாங்கறதா, வாங்கி ரோடல ஓட்டறதா. இதெல்லாம் நடக்குமா, பள்ளிக்கூடத்துக்கு நடந்து போகும் போதே பின்னி பின்னி பயந்து பயந்து நடந்து போவேனே. எதுக்கெடுத்தாலும் ஒரு பயம். எதுக்கெடுத்தாலும் ஒரு கலவரம். இப்படித்தான் வளர்த்தா என்ன, இப்படி ஸ்கூட்டர் ஓட்டிண்டு போய் திடீர்னு வீட்ல நின்னா என்ன சொல்வா.

அவள் மனம் சந்தோஷத்தில் துடித்தது.

சிற்சில தவறுகள் செய்தாலும் புத்தியை கூர்மையாக்கி மனசை ஒருமுகப்படுத்தி தெருவில் ஓட்ட கற்றுக் கொண்டாள். ஸ்டாண்ட் போட சொல்லிக் கொடுத்தான். அடிப்படையாக என்ன செய்ய வேண்டும் என்று பல விஷயங்களை விளக்கினான். எப்படி கிக் ஸ்டார்ட் செய்வது என்பதையும் போதித்தான்.

“வீட்டு வரைக்கும் வரட்டுமா. இல்ல, தெருமுனையிலயே நின்னுகட்டுமா.”

அவள் யோசித்தாள்.

“நான் தெருமுனையிலயே நின்னுக்கறேன். நீங்க வீட்டுக்கு போங்கோ” என்று சொல்ல அவள் சரியென்று தலையசைத்தாள்.

மன்னித்து விடுங்கள் என்று அந்தக் கண்கள் பேசின.

அவன் ‘‘பரவாயில்லை’’ என்று வாய் திறந்து அவளை சமாதானப்படுத்தினான்.



நன்றி என்று கண்கள் மீண்டும் சொன்னன.

அவனும் சந்தோஷமானான்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு அவன் வீட்டுக்கு போன் வந்தது.

“வண்டி ஸ்டார்ட்டே ஆகலை. கொஞ்சம் வரேளா.”

“எங்க.”

“வீட்டுக்கு.”

அவன் வாய் விட்டு சிரித்தான்.

“கிக் ஸ்டார்ட் பண்ணிப் பாருங்களேன்.”

“ஐயோ, நூறு தடவை உதைச்சுட்டேன். காலே விட்டுப் போயிடுத்து. பக்கத்து வீட்டு மாமாவேற வந்து உதைச்சார். அவருக்கும் தெரியலை.”

“நான் வந்துடறேன். வீட்ல என்ன சொன்னாங்க. வண்டி வாங்கினதுக்கு.”

“ஒரு மாதிரி பார்க்கறா.”

“ஒரு மாதிரின்னா...”

“எங்கப்பாவுக்கு பிடிக்கலை.”

“முப்பதாயிரம் ரூபா என்ன கொல்லைப்புறத்து மாங்காயா. சொளையா கொண்டு போய் கொடுத்துட்டு வந்திருக்கியே அப்படின்னாங்க. இவ்வளவும் நாமதானே கட்டணும். தேவைதானா இது. இது வேற பெட்ரோல் செலவு. தண்ணியிலயா ஓடறது அப்படிங்கறா. கூட்டி கழிச்சு கணக்கு பார்த்தா ஆயிரத்து ஐநூத்து அம்பது ரூபா கூட செலவாகுது.”

“பஸ் சார்ஜ் கழிக்க வேண்டாமா.”

“கழிச்சுதான் சொல்றேன்.”

“இது ரொம்ப சௌகரியமில்லையா.”

“எதுக்கு சௌகரியம். காசு இருக்கறவாளுக்கு சௌகரியம். காசு இல்லாதவாளுக்கு சௌகரியமா அப்படின்னு அம்மா கேட்கறா.”

அவன் பதில் சொல்லாமல் விழித்தான்.

"இதோ வரேன்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு டெலிபோனை வைத்தான்.

அம்மாவிடம் அவசர வேலை இருக்கிறது. டிபன் வேண்டாம் என்று சொல்லிவிட்டு முழுக்கை வெள்ளைச் சட்டையும் நீல நிற பேண்ட்டும், ஷூவும் அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அவள் தெருவுக்குப் போனான். அவள் வீடு தேடினான். வீட்டு வாசலில் அவள் நின்றிருந்தாள். அவனைப் பார்த்து உற்சாகமா கையசைத்தாள். அவளுக்குப் பின்னால் அவள் அப்பா, அவள் அம்மா, அவள் தங்கை எல்லோரும் நிற்பது தெரிந்தது.

யாருடா நீ, துக்கடா பயலே என்று கண்களில் ஒரு அலட்சியத்தோடு, வாயில் ஒரு வெற்றிலைக் குதப்பலோடு சீதாலட்சுமியின் அப்பா நின்றிருந்தார். முகத்தில் தஞ்சாவூர்க்காரர் என்று எழுதி ஒட்டியிருந்தது. அம்மாவுக்கு பரபரப்பு, கவலை, சந்தேகம் என்று பல்வேறு உணர்ச்சிகள் முகத்தில் பின்னிப் பின்னி எழுந்தன. தங்கை வியப்போடு இப்படிப்பட்ட ஒரு ஆள் எங்கள் வீட்டிற்கு வந்ததே இல்லையென்ற அதிசயத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனை வீடு வரவேற்றது. உட்கார வைத்தது. வீட்டில் சரியான நாற்காலிகள் கூட இல்லை. ஸ்கூட்டர் வாங்கியதற்கு நல்ல நாற்காலி வாங்கியிருக்கலாம் என்று சாகேதராமனுக்குப் பட்டது.

காசு வந்தாலும் அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று தெரியாத குடும்பமோ என்று தோன்றியது. சாப்பாட்டுக்கும் துணிக்கும் தவிர, வேறு எதற்கும் அதிகம் செலவு செய்யக்கூடாது என்று கட்டுப்பாடுகள் சில குடும்பத்தில் இருப்பதை அவன் அறிவான். அந்த மாதிரியான விஷயமோ என்றும் யோசனை வந்தது.



தொட்டுக்கறதுக்கு கூட்டு மட்டும்தானா. கோஸ் கறியும் பண்ணிடேன். பொடிமாஸ் மட்டும் பண்ணா எப்படி சாப்பிடறது கூட அப்பளம் இருந்தாதான் பொடிமாஸுக்கு காம்பினேஷன் நன்னா இருக்கும் என்று உணவு பற்றியே நிறைய பேசுகிற குடும்பங்களை சாகேதராமன் அறிவான். முகம் சுளித்திருக்கிறான்.

இங்கும் அந்த மாதிரி வசனங்கள் பேசப்படலாம். கால் டம்ளர் காபி கொடுத்தார்கள். காபி கலவை நன்றாக இருந்தது. நாகரிகம் தெரிந்தது. காபி போட்டு பழக்கப்பட்ட கை என்று தெரிந்தது.

"ஏ... க்ளாஸ் காபி" பாராட்டாகச் சொன்னான்.

அந்த அம்மாள் அதிகமாக வெட்கப்பட்டாள்.

நடந்து ஸ்கூட்டரிடம் போனான். வண்டியை உதைத்துப் பார்த்தான். உதைக்கும்போது டப்பென்று வெடித்தது. பெட்ரோல் டாங்க்கை அவசரமாக திறந்து பார்த்தான். சுத்தமாக காலியாகியிருந்தது.

"கடவுளே... எப்படி ஸ்டார்ட் ஆகும். பெட்ரோலே இல்லையே சுத்தமா."

"அப்படியா. அது தெரியலையே."

"இங்க இன்டிகேட்டர் இருக்கே, இது சொல்லுமே."

"நான் இன்டிகேட்டர் பார்க்கவே இல்லையே."

"எம்டியா வச்சாக்க ஏர் லாக் ஆயிடும். இருங்க நான் போய் பெட்ரோல் வாங்கிண்டு வரேன். ஒரு பாட்டில் கொடுங்க."

அவன் ஒரு பிளாஸ்டிக் பாட்டிலை வாங்கி சுத்தம் செய்து தன்னுடைய மோட்டார் சைக்கிளிலிருந்து டியூப்பை பிரித்து எடுத்து பெட்ரோலை இறக்கிக் கொண்டு ஸ்கூட்டரில் ஊற்றி கிக் ஸ்டார்ட் செய்ய, ஸ்கூட்டர் என்ஜின் உதறிக் கொண்டு ஓட ஆரம்பித்தது. புகை படர்ந்தது.

"மறக்காம பெட்ரோல் பங்குக்கு போய் பெட்ரோல் போட்டுக்கோங்க."

"அம்மா.. பெட்ரோல் போட்டுக்கோ. காசெல்லாம் எங்கிட்ட கேட்காத எங்கிட்ட இல்லை." அவள் அப்பா உரக்கச் சொன்னார்.

அந்த வீடு திகைத்து அவனைப் பார்த்தது.

"யாரும் எனாமா பெட்ரோல் தரமாட்டாளே."

சிரித்தபடியே சாகேதராமன் சொன்னான்.

அவருக்கு கோபம் வந்துவிட்டது.

"யாரும் தரமாட்டா அது எங்களுக்கு தெரியும். நாங்க எனாமா எதுவும் கேட்கறாவாளும் இல்லை. நமக்கு ஸ்கூட்டர் தேவையா, தேவையில்லைன்னு அவ்ளோ தடவை சொல்லியிருக்கேன். தடுக்குனு வாங்கிட்டு வந்து நிக்கறா. முப்பதாறாயிரம் ரூபா ஸ்கூட்டர் தேவைதானா. வீட்ல ஆயிரம் செலவு இருக்கு"

"எங்கப்பா ஏண்டி வாங்கினேன்னு கத்தறார். வித்துடுங்கறார்."

"இந்தாங்க வாங்கிக்கோங்கோ. உங்களுக்கு தேவைப்படும். நீங்க கூடுதலா சம்பாதிக்க முடியும். நீங்க டெலிபோன்ஸ்லதானே வேலை செய்யறேள். நாலு மணிக்கு ஆ:பீஸ் முடிஞ்சுடுத்துன்னா வேற சில இடங்கள்ல வேலை செய்து இந்த ஆயிரத்து சொச்ச ரூபாயை வாங்கிடலாம். மேல இரண்டாயிரம் ரூபா சம்பாதிக்கலாம்."

"யார் தருவா வேலை."

"தேடினா கிடைக்காதது எதுவும் இல்லை ஸார்."

"ஸ்கூட்டர் வாங்கி கொடுத்த நீங்களே, வேலையும் வாங்கி கொடுத்துடுவேளா."

"பெரிய கஷ்டம் ஒண்ணுமில்லை. இவங்க சென்ட்ரல் கவர்மெண்ட் சர்வெண்ட். நிச்சயம் ஹிந்தி தெரிஞ்சுருக்கும். நாலு குழந்தைகளுக்கு ஹிந்தி சொல்



லிக் கொடுத்தேள்னாக்க, ஒரு குழந்தைக்கு ஐநூறு ரூபா. நாலு குழந்தேளுக்கு ரெண்டாயிரம் ரூபா, சாதாரணமா ஒன் ஹவர் டியூஷன் சம்பாதிச்சு கொடுத்துடும். சொல்லிக் கொடுக்க வேண்டாம். இவா சமஸ்கிருதம் படிக்கணும்னு சொன்னாக்க ஆயிரம் ரூபா ஸ்டைபண்ட் தர ஆள் ரெடியா இருக்கா. எனக்குத் தெரிஞ்ச ஒரு பணக்காரர் பட்டதாரியா இருக்கறவா, அரசாங்க வேலையில இருக்கறவா சமஸ்கிருதம் படிச்சு ஒரு வருஷத்துக்குள்ள ஒரு பரீட்சை பாஸ் பண்ணினா ஆயிரம் ரூபா தரா."

"அப்படியா எங்க. விலாசம் சொல்லுங்கோ."

"எதுக்கு கேட்கறேள்."

"நான் போகலாமேன்னு பார்க்கறேன்."

"உங்களை ரிஜக்ட் பண்ணிடுவா."

"ஏன்."

"வயசு கம்மியா இருக்கணும். இளைஞர்கள்கிட்ட யுவதிகள்கிட்ட சமஸ்கிருதம் போகணும்கறதுக்காக பணக்காரர்கள் செய்த ஏற்பாடு இது. இங்கிலீஷ் மட்டுமே கத்துக்கறாளே, தமிழ்கூட தெரியலையே. அப்படிங்கறதுனால தமிழோட சமஸ்கிருதமும் கத்துக்கணும். மொழி பெயர்ப்பு அளவுக்கு நான் படிப்பேன் அப்படின்னு உறுதி சொல்லணும்."

"எனக்கு நிச்சயம் தரமாட்டாளா" என்று தகப்பன் கேட்க "எனக்குத் தருவாளா" என்று தங்கையும் கேட்டது.

தங்கை பள்ளிக்கூட பருவத்தில் இருக்கிறாள் என்று அவள் உடைகளும் கீழே கிடந்த புத்தகங்களும் சொல்லின.

"பள்ளிக்கூடத்து குழந்தேளுக்கும் அவா கொடுக்கறதில்லை. படிப்பு முடிச்சாச்சுங்கறவா வடமொழி படிச்சா நன்னாயிருக்கும்னு நினைக்கறா. படிக்கற

துக்கு ஏகப்பட்ட பாடங்களை வச்சுண்டு இதையும் தலையில தூக்கி வச்சுகறதுக்கு சில குழந்தைகளால முடியும். சில குழந்தைகளாக முடியாது. அதனால குழந்தேளை அவா சேர்க்கறதே இல்லை."

"அப்போ வாங்கிக் கொடுத்துடுங்கோ ஸார். பெட்ரோல் சார்ஜ்க்கு என்னை அவ தொந்திரவு பண்ணமாட்டா."

"ஹையர் கிரேட் அஷ்யூரன்ஸூக்கே வாங்கி கொடுத்துடறேன்."

"அப்படின்னா."

"ஆயிரத்து ஐநூறு ரூபா ஒரு மாசம். குறிப்பிட்ட ஒரு அளவு வரைக்கும் சமஸ்கிருத்த்துல பேசற ஞானம் வரவரைக்கும் கத்துப்பேன்னு எழுதித்தரணும்."

"எழுதி கொடுத்துடு. மறுக்காத" என்று தகப்பன் சொல்ல சரி என்று பொம்மையாய் சீதாலட்சுமி தலையசைத்தாள்.

அவன் விடைபெற்றுக் கொள்ள கை கூப்பினான்.

"ஒரு செகண்ட். இதெல்லாம் சொல்லிக் கொடுத்து டுங்களேன்" என்று அவனை அவள் கேட்டாள்.

அவர்கள் உள்ளே போனார்கள்.

சாகேதராமனும் சீதாலெட்சுமியும் நின்றார்கள்.

"ரொம்ப தாங்க்ஸ். எங்க வீடு கொஞ்சம் சாதாரண மானது. இவாளுக்கெல்லாம் கொஞ்சம் போறாது. உங்களை காயப்படுத்தியிருந்தா மன்னிச்சுக்கோங்கோ. எவ்ளோ பெரிய உதவி பண்ணியிருக்கேள். அதை சர்வ சாதாரணமா கேலி பண்றா. நிஜமாவே எனக்கு ஸ்டைபண்ட் கிடைக்குமா."

"பார்ப்போம்."

"ஒரு சின்ன ஹெல்ப் பண்றேளா."

"என்ன."



"தெரு முனையில கொஞ்சம் நேரம் நிக்கறேளா. ஒரு இருபது நிமிஷத்துல நான் ஜாயின் பண்ணிக் கறேன்."

வெகு நேரமாயிற்று.

மறுபடியும் ஒரு பெண்ணுக்காக கை கட்டி எங்கோ காத்திருக்கிறோம் என்ற வேதனை அவனை மெல்ல அசைத்துப் பார்த்தது. ஆனாலும், அவன் பொறுமை யாக காத்திருந்தான். அவள் வண்டி ஓட்டிக் கொண்டு முன்னால் போக பின்னால் நிதானமாகப் போனான்.

அவள் பயந்து பயந்து பிளாட்பாரம் ஓரமாக வண்டியை ஓட்டிக் கொண்டு போனாள். நெளிந்து நெளிந்து வண்டி ஓட்டினாள்.

அவள் ஆபீஸை அடையும்வரை பயமாகவே இருந்தது. ஆபீஸில் போய் இறங்கியதும் வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு அவள் அவனுக் கருகே வந்தாள்.

"நாம எங்கேயாவது உட்கார்ந்து பேசலாமா."

அவர்கள் இருவரும் மோட்டர் சைக்கிளில் ஏறிக் கொண்டு ஹோட்டலுக்குப் போனார்கள்.

"எங்க வீடு பத்தி என்ன நினைக்கறீங்க."

அவள் நெருங்கி உட்கார்ந்து கொண்டு, அவனைக் கேட்டாள்.

அவன் மெல்ல அவள் வீடு பற்றி விளக்க ஆரம்பித்தான்.

"அப்பா... அஞ்சு நிமிஷம் பார்த்ததுக்கே இவ்ளோ சொல்றயே. எப்படி இது."

ஆச்சரியப்பட்டாள்.

அந்த குழந்தைக்கு வெளி உலகமே தெரியவில்லை என்று அவள் பேசப் பேச அவனுக்குத் தெரிந்தது. அவர்கள் பத்து மணி வரை பேசி விட்டு பிரிந்தார்கள். மறுபடியும் மாலை சந்தித்தார்கள்.

"எனக்கு ஸ்டைபண்ட்டுக்கு ஏற்பாடு பண்ணணுமே."

"இதோ பேப்பரெல்லாம் கொண்டு வந்திருக்கேன். ஒரு லெட்டர் ஒண்ணு எழுதிக் கொடுங்கோ. இந்த மாதிரி நான் இன்னன்னது படிச்சருக்கேன். இன்னன்ன தகுதி அப்படின்னு."

அவள் மடமடவென்று பேப்பரைப் பிரித்து பேனாவால் ஆங்கிலத்தில் ஒரு மனு எழுத ஆரம்பித்தாள்.

அழகான ஆங்கிலம், தெளிவான கையெழுத்து, தெளிவான வாசகங்கள். அவனுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது.

வாழ்க வேதம். வளர்க சமஸ்கிருதம் என்பது போல் ஆங்கிலத்தில் கடைசி வரிகள் எழுத, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

"உங்கிட்ட நிறைய கெட்டிக்காரத்தனம் இருக்கு. ஆனா கூட பயமும் இருக்கு."

"உங்க பக்கத்துல உட்காரும் போது என்னமோ பயமே இல்லை."

குழந்தை மாதிரி குதூகலத்தோடு சொன்னாள்.

தன் கல்லூரி வாழ்க்கையை விவரித்தாள்.

ஒரே வாரத்தில் அவளுக்கு வண்டி ஓட்டுவது அற்புதமாக வந்துவிட்டது. போக்குவரத்து நெரிசலில் பேருந்துகளை மிக அலட்சியமாகத் தாண்டினாள். சிக்னலில் கிறிச்சிட்டு நின்றாள். விருட்டென்று எடுத்தாள். இடதிலிருந்து வலது நிலைக்கு மாறி, வலதிலிருந்து இடது நிலைக்கு மாறி நெளிந்து நெளிந்து ஓட்டினாள். ஐம்பது, அறுபது என்று சாவ சாதாரணமாகத தொட்டாள். சரட்டென்று நின்றாள். எச்சரித்தான். சரி என்று கேட்டுக் கொண்டாள்.

"ஸ்டைபண்ட் ஒரு பத்துப் பதினைஞ்சு நாள்லயே கிடைச்சுடுமா. எடுத்தவுடனேயே கொடுக்க ஆரம்பிச்சு



டுவாளா" என்றெல்லாம் கேட்க அவளுக்கு பணத்தினுடைய நிர்ப்பந்தம் அதிகம் இருப்பது தெரிந்தது.

"உடனே பண்ணமாட்டா. ஒரு ஆயிரத்து ஐநூறு ரூபா நான் தரேன். வீட்ல ஸ்டைபண்ட் கிடைச்சுடுத்துன்னு சொல்லு. அடுத்த மாசத்துக்குள்ள ஸ்டைபண்ட் கிடைச்சுடும். அப்போதான் ஸ்கூட்டர் பத்தி வாயையே திறக்க மாட்டா" என்று சொல்ல அவள் சந்தோஷமானாள்.

அவன் பர்ஸ் பிரித்து காசு எண்ணிக் கொடுத்தான்.

அவள் வெட்கப்பட்டாள். வாங்கத் தயங்கினாள்.

"என்னவோ போல இருக்கு. நான் இதுவரைக்கும் யார்கிட்டயும் காசு கடன் வாங்கினதே இல்லை. வாங்கக் கூடாதுன்னு ஒரு சங்கல்பமும் உண்டு."

"இது யார் சொன்னா கடன்னு."

"பின்ன."

"ஒரு அன்பளிப்பு."

"ஐயையோ... ஆயிரத்து ஐநூறு ரூபா அன்பளிப்பா, எதனால."

"தெரியலை. என்னமோ கொடுக்கணும்னு தோணறது."

"என்னன்னு சொன்னாதான் எடுத்துப்பேன்."

"சொல்லுவேன். வாங்கிக்க மாட்டேன்னு சொல்லிடுவீங்க."

"எதனால வாங்கிக்க மாட்டேன்னு சொல்லப் போறேன். அப்படியென்ன சொல்லப் போறேன்."

"ஐ லவ் யூன்னு சொல்லப் போறேன்."

அவன் சொல்லிவிட்டு அவளை உற்றுப் பார்த்தான்.

அவள் திகைத்தாள். வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். தலை குனிந்து கொண்டாள்.

அவள் கண்களில் நீர் துளிர்த்தன.

"என்ன, என்னை பிடிக்கலையா."

இல்லை என்று தலையசைத்தாள்.

"நான் சொன்னது தப்பா."

இல்லை என்று மீண்டும் தலையசைத்தாள்.

"உனக்கு ரொம்ப சிரமமாயிடுத்தா."

இல்லை என்று சொன்னாள்.

"என்னென்னு வாயைத் திறந்து சொல்லேன்."

"ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனா, நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில காசைப்பத்தி பேசாத நேரம் இருக்கும்போது இதை சொல்லியிருந்தேன்னா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன். இப்போ லவ் யூன்னு சொல்லிட்டு காசு கொடுக்கறபோது என்னமோ ஒரு வலி இருக்கு."

"ச்சே... முட்டாள். போடி அறிவு கெட்டவளே" என்று சொல்ல அவளுக்கு சிரிப்பு வந்தது.

"என்ன லவ்வுன்னு வந்தவுடனே வாடி போடின்னு சொல்றேளா" என்று சொல்ல அவனும் சிரித்தான்.

அவள் கைகளில் காசு திணித்தான். அவள் வாங்கி பர்ஸில் திணித்துக் கொண்டாள். நகர்ந்து அவன் முழங்காலைப் பற்றிக் கொண்டாள்.

அங்கு நெற்றி நிலம்பட வணங்குகின்ற ஒரு தன்மை இருந்தது.

அவள் பேசுவதைவிட செய்கையில் அதிகம் தன்னை வெளிப்படுத்துகிறாள் என்பதை அவன் மறுபடியும் உணர்ந்தான்.

இரண்டு மாதம் சென்னையின் எல்லா பகுதிகளிலும் அவர்கள் கொட்டமடித்தார்கள். எல்லா ரெஸ்டாரண்டுகளுக்கும் போனார்கள். கடற்கரையில், பொருட்காட்சி வளாகத்தில், வண்டலூர் மிருக காட்சி



சாலையில், மகாபலிபுரம் சாலையில் உள்ள முட்டுக்காடுக்கு அருகேயுள்ள திருவிடந்தை கோவிலில், காளிகாம்பாள் கோவிலில், திருவேற்காடு அம்மன் சன்னதியில் என்று பல இடங்களில் சந்தித்துக் கொண்டார்கள். தொட்டுக் கொண்டார்கள். கட்டிக் கொண்டார்கள். முத்தமிட்டுக் கொண்டார்கள்.

சீதாலட்சுமி, சீதாலட்சுமி என்று மனம் கிறுகிறுக்கவே ஆரம்பித்து விட்டது.

அம்மாவிடம் மெல்ல சொல்லலாமா என்று எண்ணத் துவங்குகிறபோது சீதாலட்சுமி அவசரமாக அழைத்தாள். இருவரும் தனியாக சந்தித்தார்கள்.

அவள் முகம் இருண்டிருந்தது. அவன் வந்ததும் ஒரு கடிதம் காண்பித்தாள். அதுவொரு மொட்டைக் கடிதம்.

சாகேதராமன் என்பவனோடு ஊர் சுற்றுவதாக அவள் அப்பாவுக்கு வந்த கடிதம். அந்தக் கடிதத்தை அப்பா படித்து விட்டு அவளிடம் கொடுத்து விட்டாராம். அவள் அப்பா இது என்ன என்று கேட்டாராம். அவள் வாங்கிக் கொண்டு ஆபீஸுக்கு வந்து விட்டாளாம். மாலை போனால் பதில் சொல்ல வேண்டியிருக்குமாம்.

"முரட்டுத்தனமாக நடந்த கொள்வாரா" என்று அவன் கேட்டான்.

"இல்லை. ஒரு விதமாக முரண்டு பிடிப்பார். திருட்டுத்தனம், முள்ளமாறித்தனம், முடிச்சவிழ்த்தனம் என்று பேச ஆரம்பிப்பார். நிறைய கோபித்துக் கொள்வார்" என்று சொன்னாள்.

அவனுக்குப் புரிந்தது.

"நான் வந்து பேசட்டுமா" என்று கேட்டான்.

"நான் பேசிட்டு உங்களை கூப்பிடறேன்" என்று சொன்னாள்.

அன்று இரவு ஒன்பதரை மணிக்கு மறுபடியும் போன் வந்தது.

"பார்க்க முடியுமா" என்று கேட்டாள்.

அவன் உடுத்திக் கொண்டு கிளம்பிய போது அம்மா, "என்னடா, இந்த நேரத்துக்கு வெளிய" என்று கேட்க "நான் ஒரு ஃப்ரெண்டை பார்த்துட்டு வரேம்மா."

"ஃப்ரெண்டா" என்று அம்மா அவனை ஊடுருவிப் பார்த்தாள்.

"ஆமாம்மா" என்று பதிலுக்குப் பார்த்தான்.

"நல்லபடியா போயிட்டு வா" என்று அம்மா கை தூக்கி ஆசிர்வாதம் செய்தாள்.

அவனுக்கு அம்மாவின் செய்கை விசித்திரமாக இருந்தது.

"என்னம்மா. என்னமோ மாதிரி சொல்ற."

"நீ சின்ன குழந்தைடா. உன் முகம் சொல்லும். எங்கயோ மாட்டிண்டிருக்க. யாருக்காகவோ வருத்தப்படற. யாருக்காகவோ கடன் வாங்கற. அவாள உனக்குப் பிடிச்சுருக்கு. தூக்கத்துல உளர்ற."

"என்னம்மா உளறேன்."

"சீதா... சீதாங்கற... டெலிபோன்ஸ்ல வேலை செய்யறா போல இருக்கு. இல்லையா."

அம்மா கேட்டாள்.

"எப்படிம்மா தெரிஞ்சுது."

"ஒரு பேப்பர் இருந்தது. ஆயிரத்து ஐநூறு ரூபா ஸ்டைபண்ட் கொடுங்கோ. நான் சமஸ்கிருதம் படிக்கறேன்னு சொல்லியிருந்தா. பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர். அதைத் தவிர ஃபிரெஞ்ச் வேற டிப்ளமோ வாங்கியிருக்கா. சமஸ்கிருதம் படிக்கணும்னு சொன்னா, பிராமணப் பொண்ணாதான் இருக்கணும். நீ உளறிண்டே



இருக்க. அதுல மத்த எல்லா செய்தியும் இருந்தது. அதை வச்சுண்டு பார்த்துக்கோ ஜாக்கிரதைன்னு சொல்றேன்."

அவன் தலை குனிந்து நின்றான்.

"உனக்கு பொண்டாட்டியா வரவோ உதவி செய்யறவளாவும் வரப்படாது. உதவியை எதிர் பார்க்கறவளாவும் வரப்படாது. நமக்கு ஈக்வலா இருந்தா உன் வாழ்க்கை சந்தோஷமா இருக்கும். இதைத்தான் இனம் இனத்தோட சேரும்னு சொல்றது. இனம்கறதுக்கு ஜாதின்னு அர்த்தம் இல்லை. ஸ்டேட்டஸ்னு அர்த்தம். உதவி செய்துண்டே இருந்தா ஒரு அலுப்பு வந்துடும். அவாளுக்கு ரொம்ப மெத்தனமும் அலட்சியமும் வந்துடும். உதவி கேட்டுண்டே இருந்தா நமக்கே ஒரு இழுக்கு வந்துடும். உதவி நமக்கு செய்யறவாளுக்கு நம்மள பத்தின மதிப்பு அழிஞ்சு போயிடும். அதனால தான் நமக்கு பத்து ரூபா காசு இருந்தா நமக்கு பொண் கொடுக்கறவாகிட்டயும் பத்து ரூபா காசு இருக்கா அப்படின்னு பார்க்கணும். அதுதான் முதல். அதுக்கப்புறம் தான் ஜாதகம். தெளிவா நடந்துக்கோ. நிதானமா நடந்துக்கோ. என்ன பிரச்சினை வந்தாலும் அம்மா உன்கூட இருப்பேன்."

அம்மா சொல்ல, அவன் அருகே போய் அம்மாவின் கைகளை பிடித்துக் கொண்டான். கண்ணில் ஒற்றிக் கொண்டான். விருட்டென்று வெளியே வந்தான்.

அவன் சீதாலட்சுமியை சந்தித்தான்.

"எங்கப்பா கல்யாணம் பண்ணிக்கோங்கறார்."

"யாரை."

"எங்க மாமாவை."

"என்ன சீதா இது."

"தெரியலை. எங்க மாமாவும் இப்போ பண்ணிக்கறேங்கறார்."

"எப்போ."

"இன்னிக்கு மத்தியானம் பேச்சு நடந்திருக்கு."

"ஏன். என்ன பண்ணப் போற."

"தெரியலையே."

அவன் உள்ளுக்குள்ளே உடைந்து போனான்.

என்னவாயினும், நீ எனக்கு வேண்டும் என்று ஏன் சொல்ல மறுக்கிறாய் என்று ஆச்சரியப்பட்டான்.

"நான் வந்து உங்கப்பாகிட்ட பேசட்டுமா."

"யோசனை பண்ணி பேசுங்கோ."

"என்ன யோசனை பண்ணணும்."

"எங்க அப்பா ஏதாவது அவமானப்படுத்துவார்."

"எதுக்காக அவமானப்படுத்தணும். நான் என்ன தப்பு பண்ணினேன்."

"ஏன் லவ் பண்ணேன் அப்படின்னு அவருக்கு ரொம்ப கோபம். அவருக்குத் தெரியாம நான் உங்களை லவ் பண்ணது அவருக்கு வருத்தம்."

"இது என்ன சொல்லிட்டா லவ் பண்ணணும்னு சொ றார்."

"உன்னை வந்து நம்பி ஆபீஸுக்கு அனுப்பியிருக்கேன். இப்படி துரோகம் பண்றியே அப்படின்னு கத்தறார். இன்னும் என்னல்லாம் பண்ணியிருக்கியோ, இன்னும் யாரோடெல்லாம் படுத்துண்டிருக்கியோ அப்படியெல்லாம் பேசறார்."

"சரி. நான் வந்து பேசறேன்."

"எப்போ."

"நாளைக்கு கார்த்தால."

"இல்லை. இப்பயே கூட வரலாம்."

ஒரு பத்தரை மணிக்கு அவன், அவள் வீட்டிற்குள் நுழைந்தான். மூலைக்கு ஒருவராக அமர்ந்திருந்தார்கள்.



அவன் போய் உட்கார்ந்ததும் வா என்று எவரும் கூப்பிடவில்லை. பெரிய கொலை செய்து விட்டு வந்திருக்கிறான் என்பதாக முகம் திருப்பி வைத்துக் கொண்டார்கள்.

"நமஸ்காரம்."

"ம்... ம்..."

அவன் வணக்கத்திற்கு அவர்கள் வெறுமே தலையசைத்தார்கள்.

"ஒரு நல்ல நாள் பார்த்து எங்கம்மாவை கூட்டிண்டு வரலாம்னு இருக்கேன். உங்க வீட்டுக்கு என்னிக்கு வரட்டும்."

"எதுக்குன்னு சொல்லுங்கோ, அப்புறம் என்னிக்குன்னு சொல்றேன்."

எல்லாம் தெரிந்து கரைத்து குடித்தவர் போல, அவர் வெற்றிலையை மென்றபடியே பேசினார்.

"உங்க பொண்ண நான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு ஆசைப்படறேன் ஸார்."

நேரடியாக சாகேதராமன் சீதாலட்சுமியின் அப்பாவிடம் பேசினான்.

"நீங்க ஆம்பளை, சம்பாதிக்கறேள். பெரிய குடும்பம். ஆயிரம் ஆசைப்படலாம். ஆசையையும் நிறைவேத்திக்கலாம். உங்காத்து பொண்ண நான் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்னு சொல்றது கூட நம்ம வழக்கப்படி தப்பு. உங்காத்து பொண்ணை எங்க பையனுக்கு பண்ணிக்கறேளான்னு வீட்ல இருக்கற பெரியவா வந்து கேட்கணும். அப்போ நான் யோசிக்கலாம். இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லணும்னு அவசியமே இல்லை. நம்ம கல்யாணங்களெல்லாம் ஆசைப்பட்டு நடக்கற கல்யாணங்கள் அல்ல. அரங்கேற்றப்படுகிற கல்யாணங்கள். அரேன்ஜ்டு மேரேஜ்னு சொல்லாமல், அரங்கேற்று கல்யாணம்னு சொல்ல

ஆசைப்படறேன். ஒரு நாடகம், நாட்டியம் அரங்கேற்றத்துக்கு மெல்ல மெல்ல எத்தனை விஷயங்கள் இருக்கோ, அதுக்கு எப்படி நான் குறிக்கறாளோ, அதுக்கெப்படி ஆள் சேர்க்கறாளோ, அந்த மாதிரி ஒண்ணுக்கு நூறு ஆள் சேர்ந்து இந்தக் கல்யாணத்தை நடத்தறதுதான் நம்ம பழக்கம். அதுதான் இந்தக் குடும்பத்துல தலைமுறை தலைமுறையா நடந்துண்டு வந்திருக்கு. ஒரு குடும்பத்துக்கு ஹானி இல்லாமல், ஒரு குலத்துக்கு ஹானி இல்லாமல், மதத்துக்கு ஹானி இல்லாமல் நல்ல குழந்தேள் பிறக்கறதுக்கு இவா ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்தா நல்லதுங்கற நினைப்போட நடத்தப்படுவதே திருமணம். உங்களுக்கு இதெல்லாம் தெரியாது. எதுவோ சினிமா பார்த்துட்டு அதே மாதிரி பாட்டுப்பாடி, அதே மாதிரி கையைக் கோர்த்துண்டு ஊரை சுத்திண்டு வரணும்னு பார்க்கறேள்."

"இல்லை ஸார்."

"எது இல்லை. நீங்க ஊரைச் சுத்தலைன்னு சொல்ல வரேளா, எனக்குத் தெரியும். நான் அப்போ கேட்டிருந்தா நட்பு, நட்பை புரிஞ்சுக்க தெரியாத முட்டாள்னு சொல்லியிருப்பேள். உங்க வாயாலயே கல்யாணம்னு வந்தபோது, இதை நிறுத்தணும்னு தீர்மானம் பண்ணேன். எங்க வீடு பத்தி விசாரிச்சுட்டியா அம்பி. உங்க வீடு நல்ல பெரிய இடம். அப்பா நிறைய சோத்து வச்சுட்டு போயிருக்கார். உங்களோட கம்ப்பேர் பண்றபோது எங்களுக்கு ஒண்ணுமே கிடையாது. வாடகை வீடு. அலுமினிய சட்டி. ஆடற கட்டில். ஓடாத ஃபேன். இதான் வச்சுண்டிருக்கேன். இவ சென்ட்ரல் கவர்மெண்ட் சம்பளத்துலதான் என் குடித்தனம் ஓடறது. என் போறாத காலம். எனக்கு நல்ல வேலை கிடைக்கவே இல்லை. இவ கவர்மெண்ட் வேலை கிடைச்ச பிறகுதான், ஒரு மாதிரி மூணு வேளை சாப்பிடறோம். கல்யாணம் பண்ணி



கொடுத்துட்டா என்ன பண்றது. கவலைப்படாதீங்கோ, நான் சாதம் போடறேன்னு சொல்றேளா. நீங்க சாதம் போடுவேள். நல்லவா. நான் எடுத்தக்கணுமோன்னோ. பொண்ணு சம்பாதிக்கறா சாப்பிடறேன். மனசுக்கு எவ்வளவு இதமா இருக்கு. இந்தப் பொண்ண கல்யாணம் பண்ணி கொடுத்து மாப்பிள்ளை கையால சாப்பிடறேன்னா அதே காசுன்னாலும், அதே சென்ட்ரல் கவர்மெண்ட் சம்பளம்னாலும் இளப்பமாகதானே இருக்கு. உங்கம்மாகிட்ட சொல்லி இன்னும் நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்கோங்க ஸார்."

அவர் நீளமாகப் பேசி முடித்தார்.

"ஏன் இவ்வளவு முரட்டுத்தனமா பேசறேள். உங்க குடும்பம் நன்னா நடக்கணும். நான் இங்க வந்துட்டா நன்னாதானே நடக்கும்."

"எப்படி... எப்படி... வயசான அப்பா இல்லாத ஒரு அம்மாவை விட்டுட்டு இங்க வரேன்னு நீங்க சொன்னாலே அது தப்பு. உங்க மேல இருக்கற மதிப்பு எனக்கு டக்குனு குறைஞ்சு போயிடுத்து. உங்கம்மாவை நீங்க ரொம்ப நன்னா வச்சுண்டிருக்கறதா சொன்னா. ஒரு பொண்டாட்டிக்காக, வாலிபமான ஒரு பொண்ணுக்காக அம்மாவை தூக்கிப் போட்டு வருவாளா, அது உங்களுக்கு மரியாதையா."

"நீங்களெல்லாம் அங்க வந்துருங்கோ ஸார்."

"ஆங்... என்ன பேசறதுன்னு தெரியலை. எப்படியாவது இந்தப் பொண்ணு வேணுங்கற ஆவலாத்தான் இருக்கு. எந்த சம்பிரதாயம் சரியா இருக்கும். எந்த நடவடிக்கை சரியாக இருக்கும்னு யோசிக்கவே இல்லை. டக்டக்குனு வாய்க்கு வந்ததை பேசறேள். சப்ஜாடா உங்க வீட்ல வந்து குடித்தனம் பண்ணி உங்க அம்மாவுக்கு சமைச்சு போடணுமா. அல்லது உங்க அம்மா எனக்கு சமைச்சு போடுவாளா. அது நன்னாயிருக்குமா. உங்க அம்மா வந்தா நான் எழுந்து

நிக்கணுமா. இல்ல கால் மேல கால் போட்டுண்டு காபி கொண்டு வாங்கோ அப்படின்னு சொல்லணுமா. ஒத்த ரூம், ஒத்த ஹால் இருந்தாலும் இங்க கால் மேல கால் போட்டுண்டு காபி கொண்டு வா அப்படின்னு ஒரு உரிமையில் சொல்லிண்டிருக்கேன். இந்த சுதந்திரம் உங்க வீட்ல வருமோ. என் சுதந்திரத்தை அடகு வச்சு என் பொண்ணுக்கு கல்யாணம் அவசியமோ, அப்படி சுதந்திரம் போன ஒரு அப்பாவை தினம் தினம் அவ பார்த்துண்டிருந்தா அவ மலர்ச்சியா இருப்பாளோ. என் வீடு என் பேச்சு கேட்குமா. இன்னிக்கு தலைய வலிக்கறது டிவி வேண்டாம்பேன். நாளைக்கு டிவியை ராத்திரி வரைக்கும் போட்டுக்கோ அப்படிம்பேன். ரெண்டும் என் இஷ்டம். இவா கேட்பா. நான் அங்க வந்து, என்ன ஆளுமை யாரை பண்ண முடியும். என் வீடு பெரிசு. மேல கீழ இருக்கு. கீழ நீங்க இருந்துக்கோங்கோ. மேல நான் இருக்கேன் அப்படிம்பேள். அதுவும் தப்பு ஸார். எனக்கு மரியாதை கம்மி."

"நாம பேசி தீர்த்துக்கலாமா."

"ஸார். பேசித் தீர்த்துக்கலாம்தான். ஏதோ ஒரு வரை முறைக்கு வரலாம்தான். இதெல்லாம்தாண்டி என் பொண்ண உனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாம்தான். தப்பில்லை. ஆனால், உன்னைப் பத்தி எனக்கு அத்தனை ஒண்ணும் நல்ல மதிப்பில்லை. பொண்ணுக்கு கல்யாணம் பண்றவன் எவனையுமே பெருசா நினைக்கலை. அப்பா அம்மா சொல்படிக்கு காத்துண்டில்லாம தானா பொண்ண பார்த்து, தானா லவ் பண்ணி இருக்கறவன் ஒரு நாலு வருஷம் பொறுத்து இன்னொரு பொண்ண பார்த்து இன்னொரு இடத்துல லவ்யூன்னு சொல்லத்தான் சொல்வான். தனக்கு கல்யாணம் ஆயிடுத்தேன்னு நினைப்பில்லாமல் அவன் காலாகாலத்துக்கும் லவ் பண்ணிண்டுதான் இருப்பான். இந்த ஒரு தடவை லவ்



பண்ணவன், ஒரு தடவையோட அடங்கிடுன்றது நூத்துல அஞ்சு பேர். லவ் பண்ணி பழக்கப்பட்டவாளுக்கு லவ் பண்ணிண்டே இருக்கணும். ஹீரோவா திரிஞ்சுண்டே இருக்கணும். ரொமான்ட்டிக்கா ஆடிண்டே இருக்கணும். உங்க கண்ணு, மூக்கு, நீங்க நிக்கறது, உட்காரது, ட்ரெஸ் போக்குவரத்து சகலமும் நீங்க ரொமான்ட்டிக்கான ஆளுன்னு படறது. நீங்க நாலு வருஷத்துக்குள்ள வேற ஒரு சின்னப் பொண்ணைப் பார்த்து ஐ லவ் யூ நீ எத்தனை அழகா இருக்கேன்னு சொன்னாலும் சொல்வேள். உன் மேல எனக்கு அதிகமா நம்பிக்கை வரலை அம்பி. நான் கடுமையான வார்த்தைகள் ஏதாவது சொல்றதுக்கு முன்னாடி நீங்க போயிடுங்கோ."

"அப்பா."

இந்த முறை சீதாலட்சுமி முன் வந்தாள்.

"எனக்கு அவரை ரொம்ப பிடிச்சுருக்குப்பா. அவரோட இருந்தா நான் சந்தோஷமா இருப்பேன்னு தோன்றது."

"உள்ள போடி."

எழுந்து நின்று பெரிதாகக் கத்தினார்.

வீடே அதிர்ந்து நின்றது.

"என்னைத் தாண்டி இப்போ பேசினியே இதே தப்பு, இதே ரொம்ப பாவம். நான் சரியா குடித்தனம் பண்ணலேங்கறதுக்கு திரும்பத் திரும்ப நீதான் சாட்சியா இருக்க, மறுபடி சொல்றேன் என்னைத்தாண்டி நீ வெளிய போனா, இதோ இந்த மேஜையை இழுத்துப் போட்டுட்டு மேல கொக்கியில கயித்தை மாட்டி மறு கயித்தை சுருக்கு பண்ணி உங்கம்மாவையும், தங்கையையும் வெளிய விட்டுட்டு கதவை தாழ்ப்பாள் போட்டுண்டு, ஜன்னலை திறந்து வச்சுண்டு ஊர்ல இருக்கற எல்லாரையு'ம் கூப்பிட்டு பாருங்கோ பாருங்கோன்னு சொல்லி கழுத்துல தூக்கை மாட்டிண்டு

தொங்குவேனே தவிர, உனக்கு இவனைக் கல்யாணம் பண்ணித் தரமாட்டேன். இவனை எனக்கு பிடிக்கலை. இன்னிக்கு இல்லைன்னாலும் நாளைக்கு உங்கப்பன் என்ன பண்ணினான் அப்படின்னு நாக்கு மேல பல்லை போட்டு கேட்பான். அன்னிக்கு நான் நொந்து சாகறதைவிட இன்னிக்கு நான் உனக்கு கல்யாணம் பண்ண வக்கு இல்லையேன்னு தொங்கி சாகறது எத்தனையோ உத்தமம். அவனை வெளிய போகச் சொல்லு."

அம்மா சீதாலட்சுமியை உள்ளே தள்ளிக் கொண்டு போனாள். தங்கையும் பின்னே ஓடினாள். கிடுகிடு வென்று பேசினார்கள்.

என்ன செய்வதென்று தெரியாமல் சாகேதராமன் திகைத்துக் கிடந்தான்.

சமையல் அறையிலிருந்து சீதாலட்சுமி ஓடிவந்தாள்.

அப்பாவின் காலில் விழுந்து பணிந்தாள்.

"மன்னிச்சுக்கோங்கோ, நான் பேசினதுல தப்பு இருந்தா."

"ம்... ம்..." என்று உறுமல் மட்டும் கேட்டது.

"நீங்க போயிருங்கோ, எங்க வீடு உங்களை ஏத்துக் கலை. எங்கப்பா உங்களை ஏத்துக்கலை. எங்க வீட்ல யாருமே உங்களை ஏத்துக்கலை. எங்க வீட்ல யாருமே ஏத்துக்காம உங்களை கல்யாணம் பண்றது கஷ்டம். ஏதாவது ஆசை மூட்றபடி பேசியிருந்தா என்னை தயவு செய்து மன்னிச்சுக்கோங்கோ. எனக்கு உங்களை விட எங்கப்பா முக்கியம். எங்க அம்மா முக்கியம். என் தங்கையோட எதிர்காலம் முக்கியம். நீங்க எனக்கு வேண்டாம்."

அவள் சொல்ல, சிறிது நேரம் அமர்ந்துவிட்டு அவன் வெளியே நடந்தான். அவன் வெளிய போவ தற்கு அவன் வீடு காத்திருந்தது. படியிறங்கி மோட்டார்



சைக்கிளைத் தொட்டதும், பின்னே கதவு தடேர் தடேர் என்று அடித்து மூடிக் கொண்டது.

இன்னொரு தடவை உள்ள வந்தியோ காலை வெட்டிடுவேன் என்று அந்த சத்தம் சொல்லியது.

அவன் மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து, கிக் ஸ்டார்ட்டை உதைத்து, வண்டியை கிளப்பி மெல்ல நகர்ந்தான்.

மோட்டார் சைக்கிள் இடதும், வலதும் ஓடியது. நேரே போய் கடற்கரையில் நின்று கொண்டான். குளிர்ந்த காற்று வீசியது. கண்களிலிருந்து ஏனோ கண்ணீர் பெருகியது.

அவன் மெல்ல மெல்லிய குரலில் வாய்விட்டு அழத் துவங்கினான். எலும்புக் கூடு ஏறி இறங்க, வயிறு குழைய கைகளை கட்டிக்கொண்டு அவன் நெடு நேரம் அழுதான்.

யாரோ இறந்து போனதற்கு அழுவது போலவே அழுதான். மிகப்பெரிய அவமானம் கவிழ்ந்துவிட்டது போல அழுதான்.

ஏன்... ஹோட்டலுக்கும், பீச்சுக்கும் வந்து கை கோர்த்து பேசும் பொழுதெல்லாம் அப்பாவைப் பற்றிய பயம், ஞானம் வரவில்லையா. சட்டென்று ஒரு உறவை, ஒரு நட்பை தூக்கிப் போட எப்படி மனம் வந்தது. இத்தனை பயம் வீட்டைப் பற்றி இருக்குமெனில் நீ ஏன் காதலித்தாய். இத்தனை கலவரம் உன் முகத்தில், உன் தந்தை பேசப் பேச வரும் எனில் உனக்கு காதல் எதற்கு. எதற்காக இன் னொருவரை காயப்படுத்த வேண்டும்.

அவன் வாய்விட்டு கடற்கரையை நோக்கி பேசினான். பொங்குகின்ற கடல் அலையை கேள்வி கேட்டான்.

கடல் அலைகள் திரும்பத் திரும்ப தடும்.. தடும்.. என்று ஒரே வார்த்தைாய் பதில் சொல்லிக் கொண்டிருந்தன.

"அழுதியாடா."

அம்மா உடனே கண்டுபிடித்து விட்டாள்.

"இல்லையேம்மா."

"டேய்.. கோடு இருக்குடா கன்னத்துல. மூஞ்சியைக் கூட துடைக்காம வந்திருக்க. சொல்லு அழுதியா."

"இல்லைம்மா. கண்ணுல தூசி விழுந்தது."

"நீ கண்ணாடி போட்டுக்கறவன், வண்டி ஓட்டற போது ஹெல்மேட் போட்டுக்கறவன். உன் கண்ல எப்படிடா அது வரும். என்னா, கண்ணு இவ்ளோ கலங்கியிருக்கே சொல்லு. மூஞ்சி நன்னாயில்லை. சொல்லு."

அம்மா உலுக்கிக் கேட்க, அவன் அவளை நகர்த்தி விட்டுப் போனான்.

அம்மா தொடர்ந்து வந்தாள்.

"உன் மனசுல என்ன வேதனை இருந்தாலும் சொல்லு. நான் உன் ப்ரெண்ட் இல்லையா."

அம்மா கேட்டாள்.

அவன் திரும்பி அம்மாவைப் பார்த்தான்.

"சீதாலட்சுமின்னு ஒரு பொண்ண லவ் பண்ணேன்."

"ஆமாம். தெரியும். டெலிபோன்ல இருக்கற பொண்ணு."

"எப்படிம்மா தெரியும்."

"ரெண்டு மூணு தடவை இந்த இடத்துக்கு போன் வந்திருக்கு. யாருமான்னு கேட்டா சீதாலட்சுமி டெலி போன்ஸ்னு சொல்லும். பேசறபோது பார்த்தேன். ஒரே குழைவா இருந்தது. என்ன சமாச்சாரம்."



"அவா ஆத்துக்கு போய் கல்யாணம் பண்ணிக்க றேன்னு சொன்னேன். அவா அப்பா கூடாது. வெளியே போன்னு சொல்லிட்டார். அந்தப் பொண்ணு எங்கப்பாக்கு பிடிக்கலைன்னா எனக்கும் பிடிக்கலைன்னு சொல்லிடுத்து."

அவன் விவரமாக அம்மாவிடம் பேசினான். அம்மா சகலமும் கேட்டுக் கொண்டாள்.

மெல்ல அவன் தலையை அணைத்துக் கொண்டாள்.

"நான் உன் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணட்டுமா" என்று கேட்டாள்.

"வேண்டாம்மா. உள்ள என்னமோ, ரொம்ப பெரிய காயமா இருக்கு. இப்போதைக்கு வேண்டாம்" என்று அவன் பதில் சொன்னான்.

அம்மா நான்கு நாள் கழித்து மறுபடியும் அவனிடம் வந்தாள்.

காலையில் இட்லி பரிமாறும் பொழுது அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

"நான் சீதாலட்சுமி நிலையில் இருந்தாலும் இப்படித் தான் சொல்வேன்."

"வேணாம்மா. இப்போ அதைப்பத்தி பேசாத."

"இல்லைடா. லவ் பண்ணணும்னு ஆசை இருக்கு. வீட்டை மீறி சுதந்திரமா செயல்படணும்னு எண்ணம் இருக்கு. ஆனால் மீற முடியாது. ஏதாவது வேலைக்குப் போற சாக்குல கொஞ்சம் நேரம் சுதந்திரம் அனுப விச்சிட்டு மறுபடியும் ஜெயிலுக்கு போயிடணும். இந்த ஜெயில்லேர்ந்து வெளிய வேலைக்கு வர்றவா சாராயக்கடைக்கு போயிட்டு வராமாதிரி நடந்துண்டிருக்கா."

"இதெல்லாம் உனக்கு எப்படிம்மா தெரியும்."

"எதெல்லாம்."

"ஜெயில் சாராயக்கடையெல்லாம்."

"எத்தனையோ கதைப் புஸ்தகம் படிக்கறேனே. உண்மைக் கதைகள். அதுல வந்ததுதான். அந்தப் பொண்ணுக்கு ஆபீஸ் போற சுதந்திரத்துக்கு நடுவில இன்னொரு சுதந்திரம் அவளாதான் தேடிண்டா. அதைப் போய் வீட்ல நின்னு அப்ருவல் கேட்டாக்க பளிச்சுனு உடைஞ்சு போச்சு."

"ஏம்மா அப்போ கூப்பிட்டா."

"கல்லு விட்டுப் பார்ப்போம். விழுந்தா மாங்காய். இல்லைன்னா கல்லு. அவா சரின்னு சொல்விட்டா அப்படின்னு ஆசைப்பட்டிருக்கா. இன்னும் பக்குவமா இன்னும் நிதானமா செய்திருந்தா அழகா இருந்திருக்கும். நீயும் என்னை ஒரு வார்த்தை கேட்டுண்டு போயிருக்கலாம். தடுக்குனு நீ போனது அந்த பிராமணனுக்குப் பிடிக்கலையோ என்னமோ. ஒழிஞ்சு போறது. மறுபடியும் வேணா பேசிப்பார்."

"இல்லைம்மா நான் பேசமாட்டேன்."

"ஆத்திரப்படாதடா."

"ஆத்திரமில்லை. அவ எப்படி என்னை விலக்கினாளோ அதே மாதிரி நானும் அவளை விலக்கிட்டேன். மறுபடியும் எனக்கு ஒப்பாதும்மா."

"நான் கல்யாணம் பண்ணி வைக்கறேன். வேற ஒரு நல்ல பொண்ணா பார்த்து."

"இப்போ வேண்டாம்மா. நான் அதுக்கு தயாரா இல்லை."

"ஏன்."

"உள்ள நான் சரியில்லைம்மா. என்னமோ தப்பு. அது என்னென்னு தெரியலை. அதனாலதான் நான் அழுதேன். மத்தபடி யார் மேலயும் துக்கப்பட்டோ, கோவப்பட்டோ அழலை. என்னை எனக்கு ஏன் புரியலை. நான் ஏன் சரியா இல்லை. நான் ஏன் இப்படி ஏமாளியா முட்டாளா இருக்கேன் அப்படின்னெல்லாம் அழுதேன். என்னை சரி பண்ணிக்கறேம்மா. அந்த அழுகை நான் என்னை சரி பண்ணிக்கிற ஆரம்பம்."



அவன் தனித்தனியாக வார்த்தைகளை சொல்லி திடமாகப் பேசினான்.

அம்மா எழுந்து நின்றாள். அவன் தலையை தடவிக் கொடுத்தாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

"உனக்கு இன்னும் ரெண்டரை வருஷம் போறாத வருஷம். நீ ஜெயிப்படா. நீ ஓஹோன்னு வருவ. உன் மேல எனக்கு ரொம்ப நம்பிக்கை இருக்கு." அவனை அணைத்துக் கொண்டாள். இட்லியை மிளகாய் பொடியில் தோய்த்து அவன் வாயில் ஊட்டினாள். அவன் அம்மாவின் புஜத்தில் சாய்ந்து கொண்டான்.

பல மாதங்கள் எந்த வித சஞ்சலமும் இல்லாமல் ஓடிற்று.

எப்போதாவது துக்ககரமான சினிமாப்பாட்டு கேட்கும் பொழுது உள்ளுக்குள் வேதனை பொங்கும்.

நீதானா என்னை நினைத்தது
நீதானா என்னை அணைத்தது
நீதானே என் இதயத்திலே
நிலை தடுமாறிட உலவியது

குரல் கம்ம மேல் மாடியில் பாடிக் கொண்டு உட்கார்ந்திருப்பான்.

உன் காலடி ஓசையிலே
உன் காதலை நானறிவேன்
அந்த மானிடக் காதலெல்லாம்
ஒரு மாலைக்குள் வாடிவிடும்
நம் காதலின் ஜீவன் மட்டும்
எந்த நாளிலும் கூட வரும்

என்று செத்துப் போன காதலுக்காக துக்கப்பட்டு பாடினான்.

வார்த்தைகள் பொருத்தமாக இல்லாவிட்டாலும் ஏதோ நெஞ்சை தடவிவிடுவது போல் இருந்தது.

தனியே உட்கார்ந்து பாடிக் கொண்டிருக்கிறோமே என்று எழுநூத்தைம்பது ரூபாய் கொடுத்து கிடார் வாங்கினான். கிடார் வாங்கி வாசித்துப் பார்த்தான். அபஸ்வரம் அதிகம் தட்டியது. போய் ஒரு மாஸ்டரிடம் மாலையில் ஒரு மணி நேரம் கிடார் கற்றுக் கொண்டான். சுமாராக வாசிக்க வந்தது.

"பாடிகிட்டே வாசிக்கணும்னு பார்க்கறீங்களா, ரெண்டு மூணு கார்ட் இதை மட்டும் தட்டிட்டு வாசிச்சிங்கன்னா சுருதியோட நல்லா வரும். இதுக்கு பேஸ் கிடார் போதும். இந்த கிடார்லயும் வாசிக்கலாம். தினம் ரெண்டு மணி நேரம் விதம் விதமான சினிமாப் பாட்டு ட்ரை பண்ணிகிட்டே இருங்க. பளிச்சினு ஒரு நாள் கிடார்ல எல்லாவிதமான வாசிப்பும் தெரிஞ்சுடும்."

அவர் சொன்னது போலவே, நாற்பதாம் நாள் சற்று பிசிரோடு சினிமாப்பாட்டு வாசிக்க முடிந்தது. இருபது நாட்களில் பிசிரில்லாமல் வாசிக்க முடிந்தது. நூறு நாட்கள் தாண்டிய பிறகு கமகங்கள் கூடின. கிடார் வாசிப்பு அவனை பெரிதாக மாற்றியது. அலுவலகத்திற்கு கிளம்பும் வரை கிடாரில் வாசித்துக் கொண்டிருப்பான்.

"ஏன் சினிமாப்பாட்டே வாசிச்சுண்டிருக்கே. ஏதாவது ஒரு கீர்த்தனை பழகேன்."

**குழலூதிடும் பொழுதில் ஆடிடும் குழைகள் போலவே மனம்**
**வேதனை மிகவொரு, அலைபாயுதே கண்ணா...**

என்று பாட்டு கற்றுக் கொண்டு வாசிக்க, அம்மா சந்தோஷப்பட்டாள்.

"என்ன விடாமுயற்சி. என்ன பலம்டா உனக்கு. கொண்டுபோய் பொம்மனாட்டி கால்ல அடகு வைக்கறேங்கற. ராமா..."



அம்மா கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள்.

"ஏம்மா என்னை நீயே இழிவாப் பேசற."

"இழிவாப் பேசலைடா. உன்னை புரிஞ்சுக்கற நல்ல பொம்மனாட்டியா உனக்கு வரணுமேன்னு ஆசைப் படறேன். உன்னுடைய கடுமையான உழைப்பு, உன்னுடைய அன்புக்கு ஏங்கற சிந்தனை, உன்னுடைய அகம்பாவமில்லாத நட்பு, ஒரு பொம்மனாட்டி புரிஞ்சுண்டு உன்னை அரவணைச்சு உசத்தியா வளர்க்கணுமேன்னு பார்க்கறேன்."

"எல்லாம் நீ கொடுத்ததுதானேம்மா."

"இருக்கட்டும்டா. ஆனால், இது பெருசா வளரணும். ஊருக்கு பயன்படணும். அந்த மாதிரி ஒரு பொண்டாட்டி உனக்கு கிடைக்கணும்டா."

"ரொம்ப நல்லா வாசிக்கறீங்களே. கர்நாடக சங்கீதமெல்லாம் போடறீங்க."

"அலைபாயுதே" மாஸ்டருக்கு வாசித்துக் காண்பிக்க அவர் கைகுலுக்கினார்.

"இதுக்கு மேல சொல்லிக் கொடுக்கறதுக்கு எனக்கு ஒண்ணும் இல்லை. நடராஜன்னு சொல்லி சினிமாவுல வயலின் வாசிக்கறவர் ஒருத்தர் இருக்கார். அவர் கர்நாடக சங்கீதமும் வாசிப்பார். சினிமாப் பாட்டுக்கும் வாசிப்பார். அவராண்ட போய் கத்துக்கோங்க."

"வயலின் வாசிக்கறவர்கிட்ட எப்படி கிடார் கத்துக்க முடியும்."

"எல்லாம் அடிப்படையில் ஒண்ணுதான். அவர் ஸ்வரம் சொல்லிக் கொடுத்தார்னா, இங்க வைக்க வேண்டிய இடத்துல கையவச்சு அழகா வாசிச்சுடுவீங்க. உங்களுக்கு இனிமே சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. வழிகாட்டினா போதும். நான் சொல்ற ஆள்கிட்ட போங்க. அவர் ரொம்ப ஞானஸ்தர்.

"கிடார் வாசிச்சு என்ன பண்ணப் போறீங்க."

நடராஜன் கேட்டார்.

"சும்மா ஒரு சந்தோஷத்துக்குத்தான்."

"வேலையெல்லாம் விட்டுட மாட்டீங்களே."

"ஐய்ய... நல்ல வேலைங்க. எனக்கு பிடிச்சு செய்யற வேலை. ஒன்பதுலேர்ந்து அஞ்சு மணி வரைக்கும்தான் ஆபீஸ். அஞ்சே காலுக்கு வீட்டுக்கு வந்துடுவேன். எங்க ஆபீஸ்ல நிறைய பேர் கிளப்புக்கு போறாங்க. சீட்டாடு றாங்க. குடிக்கறாங்க. எங்கயோ தொலை தூரத்துல போய் வீடு கட்றாங்க. அந்த மாதிரிதான் இருக்காங்க. எனக்கு அப்படி என்னுடைய பொழுதைக் கழிக்க விரும்பலை. அதனாலதான் ஏதாவது கத்துக்கலா மேன்னு கிடார் கத்துண்டேன்."

"அப்படின்னா நான் சொல்லித் தரேன். சினிமாவுல வாசிக்கறதுக்கு வரணும்னு சொல்லமாட்டீங்களே."

"இல்லைங்க. சினிமா பக்கமெல்லாம் வரத்துக்கு எனக்கு பொறுமையில்லை."

"ரொம்ப சந்தோஷம். ஒரு கிளாஸ் ஒரு மணி நேரம். ஒரு மணி நேரத்துக்கு நூறு ரூபா. உங்களுக்குன்னு பாடத்திட்டம்னு கிடையாது. நாம ரெண்டு பேரும் உட்கார்ந்து சேர்ந்து வாசிக்கப் போறோம். அவ்ளோ தான். உங்களுக்கு சம்மதம்னா இப்பவே ஆரம்பிக்க லாம்."

"ஆரம்பிக்கலாங்க."

நடராஜன் வீடு சாதாரணமாக இருந்தது.

நடராஜன் தரையில் உட்கார்ந்து வாசிக்க, அவன் ஒரு மர பெஞ்சில் உட்கார்ந்து வாசிப்பான். துணிகள் அங்கங்கே தொங்கிக் கொண்டிருக்கும். வீடு பெருக் காமல் இருக்கும்.

அவர் மனைவி எதனாலேயோ அசிரத்தை காட் டினாள்.



சாகேதராமன் உறையைப் பிரித்து கிடாரை எடுத்த தும் அவள் உள்ளே வந்து "ஏங்க அரிசி வாங்கணும். ஏதாவது காசு கொடுங்களேன்" என்று கேட்டாள்.

அவர் நிமிர்ந்து அவளைப் பார்த்தார்.

"இப்போதான் ஒரு டியூஷன் ஒத்துண்டிருக்கேன். வரட்டும் தரேன்" என்று சொன்னார்.

சாகேதராமன் திகைத்துப் போனான்.

அவரைப் பார்த்தான். அவர் மனைவியைப் பார்த்தான். சட்டையிலிருந்து இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

"பத்து மணி நேரம் கிளாஸுக்கு இப்பவே காசு கொடுத்துடறேன்" என்று சொன்னான்.

அவர், ஒரு ஐநூறு ரூபாயை அவளிடம் நீட்டி விட்டு, இன்னொரு ஐநூறு ரூபாயை தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

"வாசிங்க" என்று சொன்னார்.

அவர் மனைவி அவரை முறைத்துவிட்டு வெளியே போனாள். ஐநூறு ரூபாய் கொடுத்ததாலோ என்னவோ அவர் மிக நுணுக்கமாக வாசிப்பு பற்றி சொல்லிக் கொடுத்தார்.

"வயலின்ல வர குழைவு கிடார்ல வராது. ஆனா ட்ரை பண்ணலாம். கமகம் வாசிக்கறதுக்கு விரலை அழுத்தி ஒரு அசைப்பா செய்யுங்க. முன்னால அசைச்சா ஒரு விதமான கமகம். இடதும் வலதுமா அசைச்சா இன்னொரு விதமான கமகம். ரெண்டும் சேர்ந்தாப்போலவும் அசைக்கலாம்" என்று வாசித்துக் காட்டினார்.

"முதல்ல கீர்த்தனை பாடம் பண்ணிக்குவோம்."

**தெரதி எக்கராதா ஸ்ரீ திருப்பதி**
**வேங்கடவரணமு நா தெரதி...**

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மணியைப் பற்றிய அக்கறையில்லாமல் மிக ஆர்வமாக சொல்லிக் கொடுத்தார். அந்தப் பாட்டு அவனுக்கு சரியாக வரும் வரை வாசிக்கச் சொன்னார். ஓரளவு சரியாக வந்ததும் 'நல்லது' என்று கைகூப்பி விடை கொடுத்தார்.

"நானும் வரேன்" என்று சொன்னார்.

"டப்புனு ஆயிரம் ரூபா கொடுத்துட்டீங்க. ரொம்ப சந்தோஷம். பெரிய நிம்மதி. ரொம்ப நாளைக்கு அப்புறம் இன்னிக்கு நல்லா சாப்பிடப் போறேன். சாப்பிடுவீங்களா" என்று கேட்டார்.

என்னது என்பது போல் புரியாமல் அவரைப் பார்த்தான்.

"தண்ணி சாப்பிடுவீங்க இல்ல."

"இல்லைங்க. எனக்கு பழக்கமில்லை."

"அடடே விட்டுட்டீங்களே. நல்லா ஒரு குவார்ட்டர் சாப்டுட்டு பஃப் எடுத்து மேலும் கீழுமா இழுத்தோம்னா உள்ளுக்குள்ள ஒரு நாதம் பரவும். அனுபவிச்சுருக்கீங்களா. கலைஞர்கள் கொஞ்சம் குடிக்கணும். அது நல்லது."

"இல்லைங்க. என்னால குடிக்க முடியலை. குடிச்சா ஒரு அமைதியின்மை வந்துடுது. அதனாலதான் நான் குடிக்கறதே இல்லை."

"அப்போ போதையான விஷயமே இல்லாம எப்படிய்யா கலைஞரா இருக்க முடியும். வெத்தலை பாக்கு, புகையிலையாவது பழகிக்கோ. களிப்பாக்கை உடைச்சு வாயில போட்டுண்டு, வெத்தலைய முறுக்கி முறுக்கி உள்ள அனுப்பிட்டு ஒரு கொத்து புகையிலை உருட்டி உருட்டி கொஞ்சம் சுண்ணாம்போட வாயில அதக்கிண்டோம்னா, அதுவும் தண்ணி போட்ட பிறகு சாப்பிட்டோம்னா நெத்தி முழுக்க பூரா பிடிப்பு இருக்கும். ஒரு விறுவிறுப்பு இருக்கும். கண்ணை மூடிக்க வேண்டியது. அந்த பிடிப்பை அந்த விறுவிறுப்பை



அப்படியே சங்கீதமா மாத்த வேண்டியது. தெருவுல ஜன்னல் கம்பியை பிடிச்சுண்டு அழுவேன்யா. எந்நேரமும் நின் சன்னதியில் இருக்க வேண்டுமய்யா. இதான் மூணு மணி நேரம் திரும்ப திரும்ப வாசிச்சுருக்கேன். மொத்த ஜனமும் வாசல்ல நின்னு முகத்துல கை வச்சுண்டு அழறது. எதனால, என் கலைத் திறமை மட்டுமில்லை. அந்த மெல்லிய மதுவர்க்கம். குடிச்சுட்டு ஆடறதை விட குடிச்சிட்டு பாடிப்பாரு. ரொம்ப சுகமா இருக்கும்."

சட்டென்று உள்ளுக்குள்ளே செய்தால் என்ன என்று தோன்றியது. அம்மாவின் முகம் வந்தது. துடைத்தெறிந்தான். அவருக்கு விடை சொல்லிவிட்டு நகர்ந்தான்.

மறுநாள் மிகப்பெரிய அலம்பல் அந்த வீட்டில் அவர் செய்திருக்கிறார் என்று அவன் கேள்விப்பட்டான். பிறகு தொடர்ச்சியாக போய் வந்தான். பல நுணுக்கங்களை கற்றுக் கொண்டான்.

'குறையொன்றுமில்லை மறைமூர்த்திகண்ணா' என்று வாசிக்கத் துவங்கினான்.

இருபத்தைந்து முறைகள் மீண்டும் மீண்டும் வாசித்து அதனுடைய எல்லா நுணுக்கமும் அவன் கற்றுக் கொண்டு எம்.எஸ். சுப்புலட்சுமியின் குரல்போலவே கிடாரில் கொண்டு வர முயற்சித்தான்

மாடியில் ஒரு வராண்டா. அவனுக்கென்று ஒரு பெரிய ரூம். பாத்ரூம் ஒன்று இருந்தது. அவனுடைய அறையை ஒட்டி ஒரு திறந்தவெளி இருந்தது. அந்தத் திறந்த வெளியில் கயிறுகள் குறுக்கும் நெடுக்குமாக கட்டப்பட்டு துணி உலர்த்த வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வீட்டுக்குள் வாசிக்கறபோது அறையில் எதிரொலித்து சப்தம் அதிகமாகிறது என்பதால் அவன் வெட்ட வெளிக்கு போய் விடுவான். இரவு எட்டு மணியிலிருந்து ஒன்பதரை வரை அவரவர், டிவியில் மூழ்கிக் கொண்டிருக்கும் பொழுது

இவன் கிடாரோடு உட்கார்ந்து பல்வேறு கர்நாடக சங்கீதப் பாடல்களை வாசிப்பான். அதற்கான கேசட்டு களை வாங்கி, மகாராஜபுரம் சந்தானம், ஜேசுதாஸ், மதுரை மணி ஐயர், லால்குடி ஜெயராமன் என்று விதம் விதமாகத் திரும்பத் திரும்ப கேட்டு கீர்த்தனை களை மனதில் பதிய வைத்துக் கொண்டான். சில கீர்த்தனைகளை எழுதி வாங்கிக் கொண்டான். புத்தகங்கள் பலதும் சங்கீதம் பற்றி வாங்கினான்.

வீட்டில் அவன் வாசிப்பதைக் கேட்டு விட்டு அலுவலக நண்பன் ஒருவன் அலுவலகத்தில் எல்லோரி டமும் சொல்ல ஒரு ஆயுதபூஜைக்கு அவனை வாசிக் கச் சொன்னார்கள். மெய்மறந்து கேட்டார்கள்.

“பிச்சு உதறிட்டடா கண்ணா.”

அதிகாரி வந்து தழுவிக் கொண்டார். எம்.டி. அருகே வந்து “ரொம்ப நன்னா வாசிக்கறியே. இம்ப்ரூவ் பண் ணிக்கோ. வேலையை விட்டுடாத” என்று சொல்லி தலையை தடவி விட்டுப் போனார்.

“பொம்மனாட்டி பின்னாடி சுத்திண்டிருந்த அந்த நேரத்தை வேற பக்கம் திருப்பின. என்ன லாபம் பார்த்தியா.”

அம்மா சொன்னாள்.

அவன் சிரித்தான்.

“திருப்பியும்... திருப்பியும்... என்னை பத்தி எனக்கு நீ ஞாபகப்படுத்திண்டே இருக்கணும்மா” என்றான்.

மாடியில் இரண்டு பிளாஸ்டிக் நாற்காலி போட்டு, ஒரு பிளாஸ்டிக் நாற்காலியில் காலை தூக்கி, வைத்துக் கொண்டு வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது அடுத்த மொட்டை மாடியிலிருந்து யாரோ ஸ்டூல் போட்டு எட்டிப் பார்த்தார்கள். ஹலோ என்று சொன்னார்கள்.

அவன் திடுக்கிட்டு எழுந்து நின்றான். “யாரு” என்று கேட்டான்.



முப்பது வயது பெண்மணி ஒருத்தி நின்றிருந்தாள்.

ஒல்லியாக, உறுதியாக, கீழ் உதடு மடிந்து பெரிய கண்களும், அகன்ற நெற்றியும், கூர்மையான நாசியும், வளைவான முகவாயுடன் நின்றாள். முகவாயில் ஒரு சிறிய வெட்டுத் தழும்பு இருந்தது.

“என் பெயர் சியாமளா. நமஸ்காரம்” என்று கை கூப்பினாள்.

அந்த க்ஷணமே காணாமல் போனாள். தடேரென்ற சத்தம் அடுத்த நொடியில் எழுந்தது. என்னவென்று தெரியாமல் இவன் நாற்காலியைப் போட்டு சுவர் தாண்டிப் பார்த்தான். கீழே விழுந்து கிடந்தாள்.

“என்ன, என்னாச்சு உங்களுக்கு.”

“ஸ்டூல்ல ஏறி நமஸ்காரம் பண்ணணும்னு பார்த் தேன். நான் ஏறி நின்ன வேளை ஸ்டூல் உடைஞ் சுடுத்து” என்று அவள் இடுப்பைப் பிடித்துக் கொண்டு எழுந்திருந்தாள்.

“அடி ஏதாவது பட்டுத்தா.”

“அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீங்க ரொம்ப நன்னா வாசிக்கறேள். இதைப் பாராட்டணும்னு தோணித்து. அதுக்குத்தான் ஸ்டூல்ல ஏறினேன்.”

“குரல் கொடுத்திருந்தாலே போதும் அல்லது வாசல்ல வந்து பார்த்திருக்கலாமே. உங்களை இதுக்கு முன்னாடி நான் பார்க்கலையே.”

“இல்லை மாடிக்கு புதுசா குடித்தனம் வந்திருக் கோம். இதுக்கு முன்னாடி கோயம்புத்தூர்ல இருந் தோம். அவருக்கு இங்க டிரான்ஸ்பர் ஆயிடுத்து. நாங்க வந்து ஒரு மாசம் ஆகறது. உங்க அம்மாவை பார்த்து பேசியிருக்கேன். உங்களை பார்க்க முடியலை. ஆனா, கிடார் மட்டும் கேட்கும். கிடார் கேட்கறதுக்கே நான் வந்துடுவேன்.”

“அப்படியா டி.வி. பார்க்க மாட்டேளா.”

"ஐயோ டி.வி. போர். என்னால உட்காரவே முடியலை. எதிர்வீடு, அடுத்த வீடு எல்லார் வீட்லயும் டிவி இருக்கா குழந்தை அடிக்கடி ஓடிப்போய் உட்கார்ந்துடறான். படிப்பு கெடறது. அதனால குழந்தைய அழைச்சுண்டு மேல் மாடிக்கு வந்துடறேன். இங்க காத்து சிலுசிலுன்னு வருது. குழந்தையும் படிக்கறா."

"நான் வாசிக்கறது இடைஞ்சலா இருக்கோ."

"இல்லை. நாங்க சாயந்தரம் அஞ்சுலேர்ந்து ஏழு வரைக்கும் தான் படிப்போம். அப்புறம் குழந்தை கீழப் போய் உட்கார்ந்து டிவி. பார்க்கும். நான் இங்கயே நீங்க எப்போ வருவேள்னு காத்துண்டு உட்கார்ந்துண்டிருப்பேன். இந்தக் கல்யாணத் தேன் நிலா அதை வாசிங்கோளேன். ரொம்ப நன்னாயிருக்கு. கிடார்ல இவ்வளவு கமகம் கொண்டு வர முடியுமா. நான் முதல்ல வீணைன்னு நினைச்சேன். அப்புறம் தான் உங்க அம்மா சொன்னாங்க கிடார்னு."

அவன் நேயர் விருப்பம் அன்று தொடங்கியது.

என் அன்புக் காதலா
எந்நாளும் கூடவா
பார்ப்போமே ஆவலாய்
வா வா நிலா நிலா

என்று அவன் வாசித்த போது, அடுத்த பக்கம் கிறங்கியிருக்க வேண்டும். ஒரு பெண் தன் வாசிப்பில் கிறங்குவது அவனுக்கும் ஆனந்தமாக இருந்தது.

"போதை வேணும்யா. போதை, புகையிலை போதை. குடிபோதை அல்லது வேற ஏதாவது பவுடர் போதை வேணும். அது இருந்தாதான்யா கலைஞனால் வாசிக்க முடியும்."

அவர் சொன்னது என்ன என்பது இப்போ புரிந்தது.

பக்கத்தில் வாளிப்பான ஒரு பெண்மணி ரசிகத் தன்மையோடு தன்னுடைய பாட்டைக் கேட்கிறாள்



என்கிற போது அவன் பாடலில் கூடுதலாக மெருகேறியது. குழைவு அதிகமாகிறது.

அப்போ, எனக்கு என்ன போதை.

பொம்மனாட்டி போதை.

அவன் சொல்லிக் கொண்டான். சிரித்தான்.

"வரேங்க" என்று சொல்லிவிட்டு கிடாரை எடுத்துக் கொண்டு கீழே போனான்.

மனம் மொட்டை மாடியிலேயே வாசித்துக் கொண்டிருந்தது.

**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்**
**இது யார் பாடும் பாடலென்று**
**நீ கேட்கிறாய்...**

வாய் ஊமையாக, மனம் உரக்கப்பாடத் துவங்கியது.

மறுபடியும் காதல் வந்து விட்டதோ.

அவன் சிரித்தான்.

எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் உள்ளுக்குள் ஏற்படுகின்ற ஆசைக்கு என்ன அர்த்தம் என்று கேள்விகள் கேட்டுக் கொண்டான்.

கல்யாணமாகி குழந்தை பெற்றவள். இருப்பினும் அவளிடம் ஒரு கவர்ச்சி. நான் பெண்ணின் அண்மைக்கு ஏங்குகிறேனா, அன்புக்கு ஏங்குகிறேனா.

அவன் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டான்.

அவனுக்கு கேள்வி மட்டுமே முக்கியமாக இருந்ததே தவிர, பதில் முக்கியமில்லை.

**நான் பார்த்ததிலே...**

மனம் நிதானமாகப் பாடியது.

**அவள் ஒருத்தியைதான்.**

இழுத்து இழுத்துப் பாடியது.

**நல்ல அழகி என்பேன்**

என்று முடித்தது.

அவன் உறைந்து போனான்.

எண்ணங்கள் என்ன கூத்து அடிக்கின்றனவோ அதற்கேற்பத்தான் வாழ்க்கை திசைமாறுகிறது. எண்ணங்கள் தோன்றுகிற பொழுதே, அதை சரி செய்து விட்டால் வாழ்க்கையில் தடுமாற வேண்டிய அவசியம் இருக்காது. ஆனால், இதை யாரும் யாருக்கும் சொல்லித் தருவதில்லை.

காலையில் எழுந்தபோது மனசு குதூகலமாக இருந்தது. மொட்டை மாடிக்குப் போக வேண்டும் என்ற ஆசை வந்தது.

ஆபீஸ் போக வேண்டுமா என்ற எண்ணம் தோன்றியது. எத்தனை நாள் லீவு இருக்கிறது என்று கணக்கு போட்டுப் பார்க்க, வருடத்தில் நான்கு நாட்கள் மட்டுமே லீவு எடுத்திருப்பது தெரிந்தது.

"ஸார். வயித்தை வலிக்கறது. நான் வரணுமா இன்னிக்கு. ஏதோ தப்பா சாப்பிட்டேன் போலிருக்கு சார். லேசா கொஞ்சம் பிறட்டறது. வாய் எடுக்கற உணர்வு இருந்துண்டே இருக்கு ஸார். வெறும் மோர் குடிச்சு சரி செய்துக்கலாமான்னு பார்க்கறேன்."

"அடடா... வராத."

அவனுடைய உயர் அதிகாரி உடனடியாக மறுத்தார். மருந்துகள் எடுத்துக் கொள்ளச் சொன்னார். அவரும் மருந்துகள் பற்றிய குறிப்புகள் கொடுத்தார்.

அவன் குளித்து விட்டு வர, அம்மா ஒரு சொம்பு நிறைய மோர் கொடுத்தாள்.

"என்னம்மா காபி இல்லையா."

"வயிறு சரியில்லைன்னா காபி எதுக்கு."

"அம்மா சும்மா பொய் சொன்னேன்."

"எதுக்குடா."

"தினம் ஆபீஸ் போறது போர் அடிக்குதும்மா. நாம இல்லைன்னா என்ன ஆகும் அப்படின்னு அவாளுக்கு தெரியணும். என்னுடைய முக்கியத்துவம் அவாளுக்கு புரியணும். அதுக்காகத்தான் நான் லீவு போட்டேன். இன்னிக்கு உருளைக்கிழங்கு பொடிமாஸ், கத்தரிக்காய் கூட்டு, கடலைப் பருப்பு போட்டு வெங்காயம், முருங்கைக்காய் சாம்பார், மிளகு ரசம் அப்படின்னு வை. நிறைய வாசிக்கப் போறேன். வாசிச்சுட்டு வந்து சாப்பிடப் போறேன்."

"பொம்மனாட்டி பைத்தியம் போய் கிடார் பைத்தியம் பிடிச்சுடுத்தாக்கும்."

அம்மா மெல்லிய குரலில் சொன்னாள்.

அம்மாவைத் திரும்பிப் பார்த்து விட்டு, அவன் படியேறினான்.

நான் உட்கார்ந்தாலும், எழுந்தாலும், உடுத்திண்டாலும், உடுத்திக்காட்டாலும், கிடார் வாசிச்சாலும், பாட்டு பாடினாலும் என்னுடைய புத்தி ஒரே இடம். நல்ல மனைவி. என்னை கொண்டாடற மனைவி. நான் கொண்டாடறதுக்கு எல்லா யோக்கிதையும் இருக்கற மனைவி எனக்கு வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவன் மெல்ல மனசுள் பேசியபடியே படியேறினான்.

**தண்ணிலவு தேனிறைக்க**
**வாழைமரம் நீர் தெளிக்க**
**வண்ண மயில் நடைபயின்று வந்தாள்.**

கிடாரில் வாசிக்க ஆரம்பித்தான். மெல்ல பாடவும் செய்தான்.

அடுத்த பக்கம் கைதட்டும் சத்தம் கேட்டது.

அவன் ஸ்டூல் மீது ஏறி நின்றான்.

அவள் சிகப்பு நூற் புடவையில், மிக அலட்சியமாக இடுப்பில் கையூன்றி நின்றாள். அவள் மார்பு கண்களை தாக்கின.

"என்ன ஆபீஸ் போகலியா. இதுக்குத்தான் கூப்பிட்டேளா. காலங்கார்த்தால கிடார் சத்தம் கேட்கற

தேன்னு அடுப்பை அப்படியே போட்டுட்டு ஓடி வந்தேன். என்னாச்சு இன்னிக்கு. உடம்பு சரியில்லையா. அதுதான் ஒரு பதபதப்பாயிடுத்து."

"உடம்பெல்லாம் நன்னாயிருக்கு. நிறைய வாசிக்கணும்னு தோணித்து அதான் உட்கார்ந்துட்டேன்."

"இப்போ என்ன இந்தப் பாட்டு."

"என்னமோ தோணித்து."

"யாரை நினைச்சு."

"தெரியலை."

அவள் பொய்யான சீற்றத்துடன் அவனைப் பார்த்து சீறினாள்.

"யாரை நினைச்சுன்னு நான் சொல்லணும்னு நீங்க எதிர்பார்க்கறேள்."

"சொல்ல வேண்டாம். நீயே வச்சுக்கோ. ஆனா, வாசிக்கறதை நிறுத்திடாத. பத்து நிமிஷம் கேப் கொடுத்தீன்னா கீழ எல்லா காரியத்தையும் முடிச்சுட்டு மேல மிளகாய் உலர்த்த வந்துடுவேன்."

"பத்து நிமிஷம் போறாது. இன்னும் முக்கால் மணி நேரம் கழிச்சு வாசிக்கறேன். மேல வந்துடுங்கோ."

அவன் சொல்லிவிட்டு கீழே இறங்கினான்.

வாரப்பத்திரிகைகளை புரட்டிப் பார்க்கத் துவங்கினன்.

"என்னடா வாசிக்கலையா."

கீழிலிருந்து அம்மாவின் குரல் வந்தது.

"இல்லைம்மா. மனசுக்குள்ள வாசிச்சுண்டிருக்கேன்."

அவன் பதில் சொன்னான்.

"நன்னு பாலிம்ப... வாசியேண்டா."

அம்மா மறுபடியும் குரல் கொடுத்தாள். அம்மா அப்படி கேட்க மாட்டாள். ஆனால் இப்போது



வாசிப்பதில்லை. முக்கால் மணி நேரம் பொறுத்து வாசிக்கிறேன் என்று சொன்னதால், அவன் என்ன செய்வது என்று தெரியாமல் தலையை சொரிந்து கொண்டான்.

எனக்காக நடந்து வந்தாயா ராமா என்கிற கீர்த்தனையை மெல்ல ஆரம்பித்தான். பிறகு சட்டென்று கம்பியை தளர்த்தி விட்டான்.

கம்பி சுருண்டு கீழே விழுந்தது.

"என்னடா ஆச்சு நிறுத்திட்ட."

"தந்தி அறுந்து போயிடுத்தும்மா."

"ஐயோ... வாசிக்க முடியாதா."

"இல்லை. கட்டிண்டிருக்கேன். வாசிப்பேன். ஒரு முக்கா மணி நேரம் ஆகும்" என்று பதில் சொன்னான்.

மறுபடியும் கம்பியை இறுக்கினான்.

அம்மாவை ஏமாற்றுகிறோமே என்று மனம் லேசாக வருத்தப்பட்டது. அரை மணி நேரத்திற்கு பிறகு மெல்லியதாய் பாடிக் கொண்டே வாசிக்க ஆரம்பித்தான்.

எனக்காக நடந்து வந்தாயா ராமா என்று கீர்த்தனை குழைவாக வாசிக்க வாசிக்க அவனுக்கே சந்தோஷமாக இருந்தது. கீர்த்தனை வாசித்து முடித்ததும் அடுத்த பக்கத்திலிருந்து கைதட்டல் கேட்டது.

"முக்கா மணி நேரம் காத்துண்டிருக்கேன்னு சொன்னேனே."

"நீங்க காத்துண்டிருக்க மாட்டேள்னு தெரியும். பத்து நிமிஷத்துலயே மேல வந்தாச்சு."

"சொல்ல வேண்டியதுதானே."

"என்னதான் பண்றேள்னு பார்ப்போம்னு உட்கார்ந்துண்டிருந்தேன்."

"கையிலே மிளகா இருக்கா."

"ஆமாம். எப்படி தெரிஞ்சுது."

"பேச்சு காரமா இருக்கே."

"காரமா இருந்தா என்ன, இனிப்பா இருந்தா என்ன, ரெண்டு பேருக்கும் நடுவுல ஒரு சுவர் இருக்கோன்னோ."

அவள் பூடகமாகப் பேசினாள்.

"சொல்லுங்கோ. தாண்டி வந்துடறேன்."

"நான் சொல்லி நீங்க வந்துடுவேள். வேற யாராவது கேட்டா என்ன சொல்லுவேள்."

"ஜட்டி விழுந்துடுத்து ஸார். எடுக்கறதுக்காக வந்தேன். ஸாரி" என்று போலியான குரலில் அவன் சொல்ல, அவள் சதங்கை ஒலியாய் சிரிப்பது கேட்டது.

**நீ சிரித்தால் நான் சிரிப்பேன்.**
**சிங்காரக் கண்ணே**
**நீ அழுதால் நான் அழுவேன்**
**மங்காதப் பொன்னே.**

இது குழந்தையைப் பார்த்துப் பாடும் பாட்டா. காதலியைப் பார்த்துப் பாடும் பாட்டா.

காதல் வயப்பட்டவனுக்கு எல்லாப் பாட்டும் காதல் பாட்டுதான்

கைத்தல நிறைகனி கூட திருப்புகழ் பாட்டு கூட காதலியைப் பார்த்துப் பாடும் பாட்டுதான்.

"ஸ்டூல்ல ஏறி நின்னு முக தரிசனம் காட்டக்கூடாதா."

அடுத்த பக்கத்திலிருந்து அவள் குரல் கொடுத்தாள்.

"பார்த்து என்ன பார்க்காத என்ன. நீங்க சுவர் குதிச்சு இந்தப் பக்கம் வரப்போறதில்லை."

"யார் சொன்னா வரப்போறதில்லைன்னு."

அவள் அட்டகாசமாகப் பேசுவது கேட்டது.

"வந்துடுவேளோ."

"வந்துடுவேனே."



"வந்துட்டு என்னென்னு சொல்வேள்."

"புடவைய உருவி எடுக்கும் ரெண்டு கிளிப் எகிறி அந்தப் பக்கம் விழுந்துடுத்து மாமி. இவர், க்ளிப் வாங்கித் தாங்கோன்னு கேட்டா வாரத்து பன்னெண்டு க்ளிப்.. விளையாடறியான்னு கத்தறார். அதனாலதான் வேற வழியில்லாம ஏறி இந்தப் பக்கம் குதிச்சேன். ஸாரி மாமி."

அவள் பொய்யான குரல் கேட்க, அவனும் வாய் விட்டுச் சிரித்தான்.

ஸ்டூலில் ஏறி நின்றான். அவள் மேஜை போல் ஒரு விஷயத்தில் ஏறிக் கொண்டிருப்பது தெரிந்தது. இரண்டு பேரும் அருகருகே நின்று கொண்டார்கள்.

"இப்போ ஏதாவது வாசிங்கோ."

அவள் சுவரில் முழங்கை வைத்து முகவாயை தாங்கியபடிய கேட்டாள்.

சிவந்த உதடுகள், பெரிய கண்கள், கூர்மையான நாசி, சுருளான கேசம், காதுகளில் ஆடுகின்ற ஜிமிக்கி, நெற்றியில் திலகமான பொட்டு, முகவாயில் மெல்லிய வெட்டு.

**உத்தரவின்றி உள்ளே வா**
**உன்னிடம் ஆசை கொண்டேன் வா**
**பூமியில் மானிட ஜென்மம் எடுத்தது**
**காதலி உன்னைக் காண**
**புடவையின் அழகென்ன**
**கூந்தலின் வளைவென்ன**
**ஏழையின் கண்பாரம்மா.**
**அந்தரி சுந்தரி என் முகம் பார்த்த பின்**
**இன்னொருவன் முகம் பாராதே சுபாஷினி**
**ஸுஹாங்கினி...**

என்று விதம் விதமாக இழுத்தான். அவள் இறங்கிப் போனாள்.

"என்னைப் பத்தி உங்களுக்கு இப்போ என்ன தோன்றதோ, அதை ஒரு பாட்டா வாசிங்கோ."

சற்றும் தயக்கமில்லாமல் மிக தைரியத்தோடு...

கண்மணி நீ வரக் காத்திருந்தேன்
ஜன்னலில் பார்த்திருந்தேன்
கண்மணித் தாமரை பூத்திருந்தேன்
என்னுடல் வேர்த்திருந்தேன்
ஒவ்வொரு ராத்திரி வேளையிலும்
மங்கை உன் ஞாபகமே...

என்று வாசித்தான்.

அவள் முகம் சிவந்தாள். நெகிழ்ந்து, முகத்தை சுவரில் பதிய வைத்துக் கொண்டாள்.

"அப்பா.. போறும்" என்று சொன்னாள்.

அவன் சட்டென்று வாசிப்பை நிறுத்தினான்.

"ஏன், நன்னா வாசிக்கலையா."

"நான் அதைச் சொல்லலை."

"வேற."

"இது போறும் அப்படின்னு சொன்னேன்."

"எது போறும்."

"நான் ஒரு பாட்டு சொல்லி, எனக்காக அதை நீங்க குழைஞ்சு குழைஞ்சு வாசிக்கறீங்களே அது போதும்."

"எனக்குப் புரியலை."

"உனக்குப் புரியாது."

"என்னன்னு தெளிவாக சொல்லுங்களேன்."

"இப்படியெல்லாம் ஒரு பாக்கியம் கிடைக்கவே கிடைக்காதோ. ஆடு மாதிரி எவனையோ பார்த்து விழுந்து நமஸ்காரம் பண்ணி அவன் நன்னாயிருக்கு, நன்னாயில்லைன்னு சொல்லி, அவன் நன்னாயில் லைன்னவுடனே கொல்லை போய் அழுது, நன்னா யிருக்குன்னவுடனே ஐய்யான்னு குதிச்சு, தாலியை



கட்டிண்டு ஃபர்ஸ்ட் நைட்டுன்னு போய் அவுறு டின்னு அவன் சொல்ல, அவுத்துப் போட்டுண்டு நிக்க, அந்த மாதிரியெல்லாம் தான் வாழ்க்கை நகருது. யாரும் மதிச்சு குழைவா இதமா உன் பேரென்ன அப்படின்னு கேட்டதேயில்லை. உனக்கு என்ன பிடிக்கும் அப்படின்னு விசாரிச்சதே இல்லை. எனக்கு பிடிச்சதை யாரும் எப்பவும் செய்ததே இல்லை. முதன்முதலா இருவத்தியாறு வயசுல முதன் முதலா நீ பண்ணியிருக்க. நீ சௌக்கியமா இருக்கணும். யார் பெத்த பிள்ளையோ ரொம்ப சௌக்கியமா இருப்பே."

"ச்சே... என்னாச்சு உங்களுக்கு"

அவள் கண்களைப் பார்த்து அவன் விசாரிக்க, அவள் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது.

"காதல்ன்னு ஒரு விஷயத்துக்கு நான் ரொம்ப ஏங்கியிருக்கேன்டா. ஏனோ என்ன பயத்தினாலயோ, என் வீட்டினுடைய முரட்டுத்தனத்தினாலயோ அல் லது என் ஜாதாகக் கோளாறோ கிடைக்கவே இல்லை. இப்படி லவ் பண்ணாமயே செத்துப் போயிடுவோ மோன்னு நினைச்சேன். நான் உன்னை லவ் பண்றேன். நீ லவ் பண்றதை நான் நன்னா அனுபவிக்கணும். இது போறும்டா."

அவள் மேஜையைவிட்டு கீழே குதித்தாள். இறங்கிப் போனாள்.

அவன் ஸ்டூலை விட்டு இறங்கினான். கிடாரின் உறையை மூடினான்.

அவள் மெல்ல வீட்டுக்குள் போகும்போது கைதட் டும் சத்தம் கேட்டது.

"என்ன" என்று கேட்டாள்.

அவள் கொஞ்சலாகக் கேட்டாள்.

"வரேன்."

அவன் வார்த்தையில் பதில் சொன்னான். கீழே போனான். மனம் துள்ளி குதித்தது

இது சரியா, மரபா, விவேகமா என்று எந்தக் கேள்வியையும் கேட்டுக் கொள்ளவில்லை ஒரு பெண்ணின் மனதை ஜெயித்து விட்டோம் என்கிற அகம்பாவம் நெஞ்சில் தளும்பி நின்றது.

வேறு என்ன பாட்டு வாசித்தால் இறங்குவாள், என்று மனம் கணக்கு போட்டது.

உணவை ருசித்துச் சாப்பிட்டு முடித்ததும் கண்ணை இழுத்துக் கொண்டு தூக்கம் வந்தது. தூங்கலாம் என்று அறைக்குள் நுழைந்து மின்விசிறியை முழு வேகத்தில் போட டெலிபோன் மணி அடித்தது.

"சாகேதராமா, ஆபீஸ்லேர்ந்து கூப்பிடறா."

அவன் கீழிறங்கி ஓடினான். என்ன என்று கேட்டான்.

"ஒரு அரை மணி நேரம் வந்துட்டு போக முடியுமாடா. ஏதோ பிரச்சினைங்கறார் எம்.டி. உன்னைதான் பேர் சொல்லி கூப்பிட்டார். முடிஞ்சா வரச்சொல்லுன்னு சொன்னார். உனக்கு வயித்த வலிக்கறதுன்னு சொல்லிப் பார்த்தேன். கேட்கலை. வரச்சொல்லுடா நான் சொன்னா அவன் வருவான் அப்படிங்கறார். வந்துட்டு போறியா."

அவன் உடனடியாக உடை அணிந்து கொண்டு மோட்டர் சைக்கிள் எடுத்துக் கொண்டு அலுவலகம் நோக்கி வண்டியைச் செலுத்தினான். நடுவே மருந்து கடையில் நின்று வயிற்று வலிக்கு என்ன டானிக் இருக்கிறது என்று கேட்டு வாங்கி பேக்கட்டில் வைத்துக் கொண்டான்.

"ரங்கசாமி அண்ட் கம்பெனி ஆறு லாரிக்கு நம்மகிட்ட கடன் வாங்கியிருக்கறதா சொல்றானே, உண்மையா."

"இல்லை ஸார். பொய்."

"உன் ரிப்போர்ட்ல அப்படித்தான் எழுதியிருக்க. ஏன்."



"ஸார். அவர் எந்தெந்த கம்பெனியோ தன் கம்பெனின்னு டுப் அடிச்சுண்டு திரியறார். நான்தானே பிஸினஸ் பிடிச்சு கொடுத்தேன். அது என் கம்பெனி தானே அப்படின்றா மாதிரி பேசறார். அவர் எடுத்தது ரெண்டே ரெண்டு. மத்த நாலு லாரியும் வெவ்வேற பார்ட்டி. அவர் இந்தமாதிரி பொய் சொல்லுவார்னு எனக்குத் தெரியும். மத்த லாரி பார்ட்டியை நான் கூட்டிட்டு வந்திருக்கேன். அதுல ஒரு சாட்சி கையெழுத்து கூட இவர் போடலை, கேரண்டியரா கூட இருக்க முடியாதுன்னு சொல்லிட்டார். அதே நேரத்துல கோயம்புத்தூர்ல, நாமக்கல்ல ரெண்டு கம்பெனியில ரெண்டு லாரி வாங்கியிருக்கார்."

"இது எப்படி உனக்குத் தெரியும்"

"அவருக்கு எதிரிங்க இருக்காங்க ஸார். அவங்களெல்லாம் நமக்கு நல்ல நண்பர்கள்."

"நேரா உட்கார். நான் ரெங்கசாமியை பிடிக்கறேன். எல்லாத் தகவலும் எழுதி வை."

அவன் ஃபைல்களைப் புரட்டி மடமடவென்று குறிப்புகளை எழுதி அவரிடம் வரிசைக் கிரமமாக நீட்டினான். முக்கியமான விஷயங்களை சிவப்புக் கோடிட்டுக் காண்பித்தான்.

அவருக்கு தொலைபேசி இணைப்பு கிடைத்தது.

"ரெங்கசாமி சௌக்கியமா" என்று கேட்டு விட்டு, மெல்ல மெல்ல விஷயத்திற்கு வந்து அடுத்த ஐந்தாவது நிமிடம் கடும் வேகத்தில் பேசத் துவங்கினார்.

"ஏமாத்த பார்க்கறயா. என் கம்பெனி என்ன, குப்பைக் கம்பெனின்னு நினைச்சியா. இஷ்டமிருந்தா வியாபாரம் பண்ணு. இல்லைன்னா விட்டுட்டுப் போ. உன்னை யாரும் தடுக்கலை. ஆனா, என் கம்பெனி பத்தி எங்கயோ தப்பா நீ பேசறேன்னு தெரிஞ்சா நாக்கை இழுத்து வச்சு அறுத்துடுவேன் படவா. சொந்தக்காரன்னு பார்த்தேன். என்ன நினைச்சுண்

டிருக்க" என்று உரக்கக் கத்த அந்தக் கூச்சல் வெளியே பல பேருக்குக் கேட்டது.

"ரெங்கசாமி அண்ட் கம்பெனி ரெஃபர் பண்ணி யார் வந்தாலும், அவுங்களுக்கு எதுவும் செய்யாதே" என்று உத்தரவு வாய்மொழியாகப் போட்டார்.

அதை அவன் வேகமாக கம்ப்யூட்டரில் டைப் செய்து, இது அடிப்படை விதி என்று சொல்லி அவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டான்.

ஃபைலில் சொருகினான். கம்ப்யூட்டரில் ஏற்றினான்.

மணி நாலே முக்கால்.

"ஏண்டா வயித்த வலிக்கைலயா" என்று பக்கத்தில் இருக்கிற அதிகாரி கண் சிமிட்டியபடியே கேட்டார்.

"ஏன் ஓய்... என்னைப் பார்த்தா என்ன பொய் சொல்றவன் மாதிரி தெரியறதா. இதோ பாரும்" என்று பாட்டிலை எடுத்துக் காண்பித்தான்.

"வரும் போது கடையில டானிக் வாங்கிண்டு வந்தியாக்கும்."

"ஸார். என்ன ஸார். இப்படி சொல்றீங்க."

"நீ எப்பேர்பட்ட திருடன்னு எனக்குத் தெரியாதா. டேய்... இந்த ஆபிஸ்ல சேரும்போது அப்பாவியா இருந்த. ரெண்டே வருஷத்துலே பக்கா திருடனா போயிட்டேடா. இந்த ரங்கசாமியை என்ன அழகா மாட்டி வச்ச. எனக்குத் தெரியாதா, அந்த ரங்கசாமிக்கு வேண்டியப்பட்டவன் நாலஞ்சு பேர் இங்க வயித்துல நெருப்பை கட்டிண்டு உட்கார்ந்திருக்கான்."

"தெரியும்... தெரியும்... ஒரு க்ஷண நேரத்துல போட்டுக் கொடுத்திருப்பேன். நமக்கு என்னாத்துக்கு பொல்லாப்பு அப்படின்னு விட்டுட்டேன்."

"இப்போ போட்டுக் கொடுக்கறயா."



"மறந்து போயும் அந்தக் காரியத்தை நான் பண்ண மாட்டேன் ஓய். போட்டு கொடுக்கறது, முதுகுல குத்தறது இதெல்லாம் எனக்கு வராது. நான் இருக்கணுமா போகலாமா."

வீட்டுக்குக் கிளம்பிய மானேஜிங் டைரக்டர், அவனை வாசலுக்கு பேசக் கூப்பிட அவன் தடுக்கென்று எழுந்தான்.

மேஜையில் வைத்திருந்த பாட்டில் உருண்டு ஸ்டூலில் பட்டு அவன் பேண்ட் முழுவதும் சாயமாகியது. அதை துடைத்து விட்டுக் கொண்டே வாசலுக்கு ஓடினான்.

"என்னடா அது, தொடையெல்லாம்."

"மருந்து ஸார்."

"என்ன மருந்து."

"மிக்சர். வயித்து வலிக்கான மருந்து. சேர்லேர்ந்து வேகமா எழுந்தேன் உடைஞ்சு போயிடுத்து."

"அடடா, மெதுவா வரப்படாதா. அந்த ரங்கசாமிக்கு வேணுங்கறவன் நம்ம ஆபீஸ்ல அதிகமா இருக்கானா."

"அப்படியொன்னும் தெரியலையே ஸார்."

"அப்படி யாராவது இருந்தா, அவானை ஒரு வார்த்தை சொல்லி வை. ஆபீஸ் சமாச்சாரம் கஸ்டமருக்குப் போச்சுன்னா எனக்கு கெட்ட கோவம் வரும்னு சொல்லி வை. இந்தா நூறு ரூபா."

"எதுக்கு ஸார்."

"மருந்து பாட்டிலை உடைச்சுட்டியே வாங்கிக்கோ."

"சும்மாயிருங்க ஸார்."

அவன் ரெண்டு கையையும் கூப்பி பணிவாக வணங்கினான்.

"இந்தாடா வாங்கிக்கோ."

"வேண்டாம். வயித்து வலி சரியாப் போகணும்னு நீங்க ஆசீர்வாதம் பண்ணாப் போதும். சரியாப் போயிடும்."

அவர் சிரித்து விட்டு காசை தன் பையில் வைத்துக் கொண்டார். அவன் தலையை மெல்லத் தடவினார்.

வண்டி கிளம்பியது.

அலுவலகத்தில் பல பேர் அதைப் பார்த்தார்கள்.

"மவனே... சொல்லி சொல்லி கோல் போடறியேடா. பெரிய ஆளாயிட்ட போ" என்று அடுத்த சீட் அதிகாரி அவனை கட்டிக்கொண்டு கொஞ்சினார். கன்னத்தில் முத்தமிட்டார்.

அவன் வீட்டுக்கு வரும்போது மணி ஐந்தேகால். கைகால் அலம்பி முகம் கழுவி நெற்றிக்கு இட்டு கிட்டாரோடு மாடிக்குப் போய் உட்காரும்போது மணி ஐந்து ஐம்பது.

மெல்ல மீட்ட அடுத்த பக்கம் சத்தமே வரவில்லை. ஸ்டூலில் ஏறிப்பார்க்க அடுத்த பக்கம் இருளோ என்றிருந்தது. எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டிருந்தன.

என்ன ஆளைக் காணும் என்று வருத்தத்துடன் உட்கார்ந்தான். கிட்டாரை உறையில் போட்டு மூடினான். கீழே வந்து அலுவலகத்தில் தன்னை மேனேஜிங் டைரக்டர் பாராட்டியதைச் சொன்னான்.

"பரண்லேர்ந்து தாம்பாளம் எடுத்துக் கொடு. மாடியில வடாம் போடலாம்னு இருக்கேன்."

அம்மா சொன்னபோது அவன் லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு திறந்த மார்போடு மேலேறி கதவு திறந்து பரணுக்குள்ளிருந்து தாம்பாளங்களை எடுத்து நீட்டினான்.

"இந்த ரெண்டு போறும். மத்ததை வச்சுடு."



வாசக்கதவு தட்டும் சத்தம் கேட்க அம்மா வேகமாக வெளியேறினாள். கதவு திறந்தாள். வாசலில் பரிச்சயமான குரல் கேட்டது. யார் என்று குனிந்து பார்த்தபோது சியாமளா தேவதை மாதிரி உள்ளே நுழைந்தாள்.

அவள் விரல்களைக் கோர்த்துக் கொண்டு ஐந்து வயது பெண் குழந்தை உள்ளே வந்தது.

கை கூப்பினாள்.

"என் பெயர் சியாமளா. இது என் பிள்ளை," என்று சொல்லி விட்டு அம்மாவுக்குத் தெரியாமல் கண் சிமிட்டினாள்.

"ஏய்... கண் அடிக்கிற."

அவளுடைய பெண் அம்மாவைப் பார்த்துச் சொன்னது.

"ச்சீய்... கண்ல தூசு விழுந்துடுத்துடி. இந்த இடம் முழுக்கவே என்னமோ தூசா இருக்கு" என்று அவள் வேண்டுமென்றே கண்களை கசக்கிக் கொண்டாள்.

"உள்ளேர்ந்து தட்டு எடுத்தான். ஃபேனை நிறுத்திட்டு எடுறான்னு சொன்னேன். ஃபேனை போட்டுண்டே எடுத்தானா தூசு சுத்தறது. போய் ஹால்ல உட்கார்ந்துக்கோ."

அம்மா அவர்களை வெளியே கூட்டிக்கொண்டு போனாள்.

அவன் கீழேயிறங்கி கொல்லைப்புறம் போய் கைகளைக் கழுவிக் கொண்டே தன் உடம்பைப் பார்த்துக் கொண்டான்.

கட்டுமஸ்தான தேகம். ஐந்தே முக்கால் அடி உயரம். சரியான முகவாய். கூர்மையான நாசி என்று தன்னைத் தானே அழகு பார்த்துக் கொண்டான். ஒரு டவலை உருவி மேலே போர்த்திக் கொண்டு ஹாலுக்கு வந்தான்.

மரியாதையாக அவர்களைத் தாண்டி மாடிக்கு ஓடி, மெல்லிய ஜிப்பாவை எடுத்து போட்டுக் கொண்டான். மேலே பாடிஸ்ப்ரே பீய்ச்சிக் கொண்டான்.

கீழேயிறங்கி வந்து சுவரோரம் கை கட்டிக் கொண்டு நின்றான்.

அவள் சோஃபாவில் ஒரு மாதிரியான கோணத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். குழந்தை பூச்செடிகளை, அலமாரியில் இருக்கும் பொம்மைகளை வியப்பாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அம்மாவும் அவளும் வடாம் பிழிவதைப் பற்றி விவரமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் வாய் அம்மாவோடு பேசிக்கொண்டிருந்தாலும் புத்தியும், கண்ணும் மாறி மாறி அவனை தொட்டு வருவது தெரிந்தது. இரண்டு பேரும் சேர்ந்து வடாம் பிழிவது என்று முடிவாயிற்று.

மறுநாள் காலை அவள் அவன் ஆபீஸுக்கு கிளம்பும் முன் பாத்திரங்களுடன் மாவு கிளற வீட்டுக்கு வந்துவிட்டாள்.

நேற்றைவிட மிக அழகாக உடுத்தியிருந்தாள்.

"பாலும் பழமும் டிஸைன். இவ்ளோ அழகான புடவையை ஏன் வடாம் பிழியறதுக்கு கட்டிண்டிருக்க."

"பழசு மாமி. தூக்கிப் போடணும். போடறதுக்கு முன்னாடி ஆசையா கட்டிகலாமேன்னுதான் கட்டிண்டு வந்தேன்."

அவன் குளித்து டிபன் சாப்பிடுவதற்குள் அவள் வடாம் கூழ் கிளறி முடித்து விட்டாள்.

அவன் உடுத்திக் கொள்ள ம்ாடிக்குப் போகும்போது சுடச்சுட வடாம் கூழோடு பின் தொடர்ந்து வந்தாள். அவள் அறையை வாசலிலிருந்தே நோட்டமிட்டாள்.



இவ்ளோ பெரிய ரூம் இருக்கா என்று வியந்தாள். மொட்டை மாடிக்குப் போனாள். பிளாஸ்டிக் பேப்பரை விரித்து செங்கல் அடுக்கி வேற ஏதாவது கனமான பொருள் இருக்கா, ஒரு பக்கம் பறக்கறது என்று அவன் அறைக்குள் வந்தாள்.

நெத்தியில் லேசாக வியர்வை பூத்திருந்தது.

அவன் ஒரு பேப்பர் வெயிட் கொடுத்தான். பீரோவைத் திறந்து இரண்டு கர்சீப் எடுத்து அவளிடம் நீட்டினான்.

"என்ன."

"ரொம்ப வேர்க்கறது துடைச்சுச்கோங்கோ."

"தேங்க்ஸ்."

அவள் வாங்கிக் கொண்டாள்.

இதற்பு முன்பு இரண்டு பெண்களோடு பழகி அவனுக்கு குளிர் விட்டுப் போயிற்று. அவளோ பயமே இல்லாதவளாக இருந்தாள். அவன் எதிரே வேண்டுமென்றே தோள் பட்டையில் குத்தயிருந்த பின்னை எடுத்து மறுபடியும் புடவைத் தலைப்பை உதறி நீவி மடித்து மேலே போட்டுக் கொண்டாள்.

அவள் அழகு பூராவும் அவன் கண்களுக்கு தெரிந்தன. அவன் தன்னை கட்டுப் படுத்திக் கொள்ள மிகவும் கஷ்டப்பட்டான். உடம்பிலிருந்து உஷ்ணம் பொங்கி எழுந்தது. தலைக்கு ஏறியது. கண்கள் சிவந்தன. உதடுகளை கடித்துக் கொண்டான். பற்கள் இறுகின. உஷ்ணப் பெருமூச்சு சீறி எழுந்தது.

"என்ன, டென்ஷன் ஆயிட்டேளா."

அவள் அருகில் வந்து கேட்டாள்.

அவன் கண்களை மூடிக் கொண்டு ஆமாம் என்று தலையசைத்தான்.

"ரொம்ப புதுசா" என்று மறுபடியும் கேட்டாள்.

ஆமாம் என்று சொன்னான்.

''தொட்டதே இல்லையா'' என்று மறுபடியும் கேட்டாள்.

"இல்லை" என்று கண்களை மூடிக் கொண்டு பதில் சொன்னான்.

"கண்ணைத் திறந்து என்னை பார்க்கறது."

"பயமா இருக்கு."

"ஏதோ ஒரு காலகட்டத்துல பயம் போயிடும். தெரியாத வரைக்கும் தான் எல்லா பயமும். தெரிஞ்சுடுத்துன்னா பயமே இல்லை."

அவள் இன்னும் அருகில் இருந்தபடியே சொன்னாள்.

"பாவம். எனக்கு கர்ச்சீப் கொடுத்துட்டு இது எப்படி வியர்த்து வழியறது பார். உங்களைப் பார்த்தா எனக்கு பாவமா இருக்கு."

புடவைத் தலைப்பால் அவன் முகத்தைத் துடைத்தாள்.

வேண்டாம். வேண்டாம். இதில் ஈடுபடாதே விட்டு விடு. தள்ளி நில். அம்மாவுக்கு மிகப் பெரிய வருத்தம் ஏற்படும். இதைவிட ஒரு கொடுமை அம்மாவுக்கு வேறு எதுவும் இல்லை. தயவு செய்து புரிந்துகொள்.

உள்ளே ஒரு ஆழ்மனசு கதறிற்று, பிறன்மனை நோக்கா பேராண்மை என்பது ஏன் உனக்குத் தெரியவில்லை.

என்ன அழகு இது. உன் வீட்டில் உன் சொத்தை இன்னொருவன் வந்து கை போட்டு எடுத்துப் போனால் எத்தனை பதறுமோ அத்தனைதானே மற்றவருக்கும் பதறும். இதைச் செய்யாதே.

திரும்பத் திரும்ப கட்டளையிட்டான்.



சரி. நான் பேராண்மையான ஆள்தான். ஆனால், இப்படி எதிரே வந்து இவள் ஆட்டம் போட்டால் என்ன செய்வது தாங்கிக்கொள். உறுதியாக இரு.

மனம் விதம்விதமாக கட்டளைகள் அனுப்பியது.

முடியாது போலிருக்கே.

அவன் முனகினான்.

"என்னாச்சு. திகைச்சு போய் நிக்கறேள்."

"லவ் பண்ணணும்னு ரொம்ப ஆசை."

"பண்ணலாமே."

''ஆனா, இது தப்பில்லையா. அதான் பயமா, இருக்கு.''

"லவ்வுக்கு வயசு, படிப்பு, யோக்கியதை, தகுதி, காசு பணம் எதுவும் கிடையாது."

''இன்னொருத்தன் பொண்டாட்டிங்கறது கூட கிடையாதா.''

"கிடையாது."

"நியாயமாப்படலையே."

"அப்போ லவ்வே நியாயமில்லை."

"இல்லை. கல்யாணமாகாத ஒரு பொண்ண பார்த்து பேசி, பழகி அதுலேர்ந்து வர காதல் சௌக்கியமா இருக்காதா."

அவன் வெகுளியாகக் கேட்டான்.

"அந்தப் பொண்ணுக்கு லவ் பண்ணத் தெரியணுமே. உன்னைப் பார்த்தவுடனே மிரளும். ஐயோ அப்படின்னு நெஞ்சுல கை வச்சுக்கும். நீங்க ஏன் என்னை பயமுறுத்தறேள் அப்படின்னும். ரொம்ப நெருங்கி நீங்க பேசினேள்னாக்க, ஐயோ தயவுசெய்து என்னை வீணா இம்சை பணணாதீங்கோ. நான் ரொம்ப நல்லவோ அப்படின்னு நடிக்கும். தூரக்கப் போனா உங்களையே உத்துப் பார்க்கும். கிட்ட போனா வேற பக்கம்

போயிடும். வெறும அலைக்கழிக்கும். எதுக்கு அலைக்கழிக்கறோம்னு கூட தெரியாத அலைக்கழிக்கும். தானும் அலைக் கழிஞ்சி மத்தவாளையும் அலைக்கழிக்கறதுக்கு பேர்தான் லவ்வுன்னா தாராளமா அந்த லவ்வையே பண்ணுங்கோ."

"அப்போ லவ்வுன்னா என்ன."

"பரஸ்பரம் மதிப்பது."

அவள் தெள்ளத் தெளிவாகப் பேசினாள்.

அவன் அவளையே வியப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பத்து மாசத்துல கிடார் கத்துண்டியாமே. என்ன நன்னா வாசிக்கற. எனக்கு என் புருஷன் இந்த மாதிரி ஏதாவது வாத்தியம் வாசிக்கணும். பாட்டுப் பாடணும். குழைவா பேசணும். கொஞ்சணும்னு ஆசை. உனக்கு உன்னுடைய பாட்டை யாரோ பாராட்டணும். ஏன் இப்படி வேர்க்கறதுன்னு நெத்தி துடைச்சு விடணும்னு ஆசை. இல்லையா."

அவன் ஆமாம் என்று மாடு போல தலையசைத்தான்.

"இதை தான் பரஸ்பரம் மாத்திக்கறோம்."

"இது எங்க போய் முடியும்."

"அட, ஆரம்பிக்கவே இல்லை. முடிவைப் பத்தி யோசிப்பானேன். ப்பா... கத்தாழைச் செடியா இருக்கேள்."

"ஆமாம், நிறைய பட்டிருக்கேன். கத்தாழைச் செடியில ஒத்தையா ஒரு பூ பூக்கும் தெரியுமா. மஞ்சளா சிகப்பா நாலே நாலு இதழ். திக்கா வானம் பார்த்துண்டிருக்கும். எவ்வளவு தூரத்துல நின்னு பார்த்தாலும் என்ன இருட்டுல பார்த்தாலும் அதன் நிறம் தெரியும்."



"கத்தாழைச் செடியும் தாவரம்தான். எல்லாருமே மல்லிச் செடி, முல்லை கொடியா இருந்துட முடியுமா."

"எனக்குப் புரியலை."

"எனக்குப் புரியறது."

"என்ன புரியறது."

"அம்மாகிட்ட பயம். அதனால என்னைத் தொட தயக்கம்."

எப்படி இவ்வளவு அழகாக மனதைக் கண்டு பிடிக்கிறாள் என்று அவன் ஆச்சரியப்பட்டான்.

"என்ன மூஞ்சியில பெரிய ஆச்சரியம் தெரியறது. என்னடா இவ்வளவு கெட்டிக்காரியா இருக்காளே, இதெல்லாம் எப்படி தெரிஞ்சுண்டான்னா. எங்க வீட்ல என்னையும் சேர்த்து ஆறு பெண்கள். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான மனோபாவனை. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினை. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான கல்யாணம். எனக்கு மூணு அக்கா, ரெண்டு தங்கை. இதுகள் சுத்தறதைப் பார்த்துட்டு, இதுகளை சுத்தற ஆண்களைப் பார்த்துட்டு நான் நிறையவே கத்துண்டேன். எங்காத்துலயே லவ் பண்ணாம கல்யாணம் பண்ணிண்டவா நான் ஒருத்திதான். ஆச்சரியமா இல்லை. அப்பா யாரைச் சொன்னாரோ அவரைக் கல்யாணம் பண்ணிண்டேன். யாரையும் லவ் பண்ணலை. கிட்டக்கவே சேர்க்கலை."

"அப்போதெல்லாம அப்படி இருந்துட்டு இப்போ ஏன் இப்படி."

அவன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்துக் கேட்டான்.

"அதான் தெரியலை. நேத்து ராத்திரி நான் கேள்வி கேட்டுண்டேன். அதுக்கு கிடைச்ச ஒரு முதல் பதில் நீ ரொம்ப அழகா இருக்க. ரெண்டாவது பதில் உனக்குள்ள ஒரு ஏக்கம் ததும்பறது. பெண்களுக்கு

ஏங்கற ஆண்களை, பெண்களுக்கு பிடிக்கும். எப்பவும் அவன் அனுசரிச்சுண்டு போவான்னு ஒரு நம்பிக்கை. காதலே வேண்டாங்கற நாயோட குடித்தனம் பண்றது ரொம்ப கஷ்டம். நாலாவது நீ ரொம்ப நல்லவன். வெகுளி. உன் கண்ல அந்த வெகுளித்தனம் நிக்கறது. வெள்ளைக் காக்காய் பார்த்தியான்னு சொன்னா, எங்க எங்கனுக்கு கேட்பியே தவிர ஏய், பொய் சொல் லாத அப்படின்னு சொல்லவே தெரியாது. இப்படிப் பட்ட ஆண் மகனை காதலிப்பது பெண்களுக்கு பரமசுகம். கெட்டிக்காரனைக் கண்டா பயம். தந்திரசாலியைக் கண்டா குலை நடுக்கம். முரடனைக் கண்டா மூச்சே நின்னுடும். நம்புன்னு ஒரு பொண்ணு சொல்லி அவன் நம்பிட்டான்னா அவனை விட உத்தமன் உலகத்துல யாரும் இல்லை. இது நானா சொல்ற விஷயமில்லை. நாங்க ஆறு பேரும் சேர்ந்து நிறைய பேசிப் பேசி தெரிஞ்சுண்ட விஷயம். நீ அப்பாவி. அதனாலதான் உன்னைப் பிடிச்சுருக்கு."

அவன் சற்று தளர்ந்து கட்டிலில் உட்கார, அவள் அருகே போய் அவன் தலையை தடவிவிட்டாள். முகம் நிமிர்த்தினான். இதழில் முத்தமிட்டாள். கன்னங்களில் உதடு பதித்தாள். மெல்ல அவனுக்கருகே உட்கார்ந்து அவன் இடுப்பைக் கட்டிக் கொண்டு அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அதற்கு மேல்...

மாசறு பொன்னே
வலம்புரி முத்தே...

என்று பாட்டு உள்ளே ஓடியது.

எந்தப் பாட்டு எந்த சமயத்தில் யாரைப் பார்த்து. சிரிப்பும் வந்தது.

எவளைக் கட்டி அணைத்துக் கொண்டிருக்கி றோமோ அவளே கற்புக்கரசி. எவள் கைக்கும், மனசுக் கும் வசப்படாமல் இருக்கிறாளோ அவள் வேறுவிதம். இப்படித்தானே ஆண் யோசிக்கிறான்.



அவன் உள்ளுக்குள் தொடர்ந்து யோசித்துக் கொண்டே அவளை இறுக்கிக் கொண்டான்.

திருட்டுத்தனம்... திருட்டுத்தனம்... திருட்டுத்தனம் என்று ஒன்றின் மீது ஒன்றாக திருட்டுத்தனம் செய்து முகம் கறுத்துப் போயிற்று.

ஆனால். அவள் இன்னும் அழகா இருந்தாள். எந்த பயமும் இல்லாமல் இருந்தாள்.

அம்மாவுக்கு ஒரு நாள் மொட்டைக் கடுதாசி வந்தது. பிரித்துப் படித்து விட்டு அதிர்ந்து போனாள். அவனிடம் காட்டினாள்.

உங்க பையன் அடுத்த வீட்டுப் பெண்மணியோடு ஜல்சா செய்வது எங்களுக்குத் தெரிந்து விட்டது. இன் றோடு இந்த ஆபாசக் கூத்துக்கு ஒரு முடிவு கட்டச் சொல். உடனே நிறுத்தச் சொல். இல்லையென்றால் சந்தி சிரிக்கச் செய்து விடுவோம்.

இப்படிக்கு,
**உண்மை விளம்பி.**

"என்னடா இது."

"தெரியலையேம்மா."

"பொய் சொல்லாத."

"உன் மூஞ்சி நன்னாயில்லை. ஏதோ ஒரு திருட்டுத் தனம் உனக்குள்ள வந்துடுத்து. சிரிக்கலையே, உரத்துப் பேசலையே, பாட்டுப் பாடலையேன்னு நான் கவலை பட்டுண்டிருக்கேன். இதான் காரணமா. ஏதாவது தப்பு பண்றியா."

"இல்லைம்மா."

"பொய் சொல்லாத. உண்மைய சொல்லு. ஏதாவது தப்பு பண்றியா."

"இல்லவே இல்லைம்மா."

"நீ யோசிச்சு பதில் சொல்றவன்டா. டக்டக்குனு பதில் சொல்றத பார்க்கும்போது நீ தெள்ளத் தெளிவா திருட்டுத்தனம் பண்றேன்னு தெரியறது. திருட்டுத்தனம் தொடர்ந்து பண்ணுவேன்னு பிடிவாதம் பிடிக்கறது தெரியறது. சொல்லு, ஏதாவது தப்பு பண்றியா."

அம்மா பல்வேறு வகையாய் அதட்ட அவன் ஆமாம் என்றான்.

"தப்புடா கண்ணு. ரொம்ப தப்பு. என்னடா இவ்வளவு கலகலப்பா இருக்காளேன்னு நான் அப்போவே நினைச்சேன். அது பாழ்பட்ட ஜென்மம். விட்டுடு. அது தன்னையும் பாழ் பண்ணிண்டு மத்தவாளையும் பாழடிக்கிற ஜென்மம். வேண்டாம். இது ரொம்ப தப்பு."

"எனக்குத் தெரியறதும்மா."

"ஆனா, விடமுடியலை அப்படிங்கறியா. இந்த க்ஷணம் இப்போ அம்மாகிட்ட பேசிண்டிருக்கற நேரம் அதை அறுத்துடு. ஆண் ரொம்ப கேவலமா போறது, புறமுதுகு காட்டி ஓடறதில்லை. அதுல ஒரு உயிர் பயம் இருக்கு. அது நியாயம். படிப்பில்லாத இருக்கறது இல்லை. அது சூழ்நிலை, வறுமையோடு இருக்கறது இல்லை. அது வரும், போகும். இன்னொருத்தன் பொண்டாட்டிய தனதுன்னு சொல்லி பெண்டாளறாம் பார் அந்த ஆம்பளை கேவலமானவன். பாம்பு கொத்த வந்தா கொத்திக்கோன்னு சொல்வியா. ஓடிப்போறதில்லை. அப்படி ஓடிப்போகணும் இதுக்கு. நான் அவகிட்ட சொல்லிடறேன். இனிமே, அவள் வர மாட்டாள்."

"அம்மா."

"அவளை எனக்குத்தெரியும். மிருதுவா பிரிக்க எனக்குத் தெரியும்."

அம்மா என்ன சொன்னாளோ, ஏது சொன்னாளோ தெரியவில்லை. மறுநாள் காலையிலிருந்து



அந்தப் பக்கம் வரவேயில்லை. மாடியில் ஏறிப்பார்த்த பொழுது அந்தப் பக்கக் கதவு பூட்டியிருந்தது.

ஒருவாரம் அவள் இல்லாமல் மனது புரண்டு புரண்டு தவித்தது. எப்படி சட்டென்று பிரிய முடிகிறது. அம்மா என்ன சொல்லி விட்டாள். ஏன் பார்க்க வேண்டுமென்று தோன்றாமலே இருக்கிறது. யோசித்தான்.

அப்போ, நான் விளையாட்டு பொம்மை. உன் இஷ்டத்துக்கு தூக்கி மடியில வச்சுப்ப வேண்டாம்னா தூக்கிப் போட்டுடுவ. யாராவது ஏதாவது சொன்னா, தெருவுல வீசிடுவ. அப்படித்தானா.

உள்ளம் குமுறியது.

நான் அழகன். அப்பாவி. அப்படியெல்லாம் கொஞ்சினாளே. இப்போ இதுவும் இல்லையா. திருட்டு ராஸ்கல் ஆயிட்டேனா என்று பொருமினான்.

வழியில் அவள் புருஷனைப் பார்த்து குட்மார்னிங் என்றான். பதிலுக்கு, அவள் புருஷன் குட்மார்னிங் சொல்லவில்லை.

"என்ன ஸார். ஊர்ல இல்லையா. உங்க வீட்ல யாரையுமே காணும்."

மிகச் சாதாரணமாக பேசுபவன் போல் நடித்தான்.

சியாமளாவின் புருஷன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"உன்னை மாதிரி இருக்கறவாகிட்ட எப்படி பேச முடியும்."

விருட்டென்று பதில் சொன்னான்.

"என்ன சொல்றேள்."

"உங்கிட்ட தம்பி மாதிரி பழகினா, அவ மேல கை வைக்கறயாமே. நன்னா அழகா இருக்கேள். கட்டிளங் கன்னியா இருக்கேள்னு பேசறியாமே. உங்கம்மாகிட்ட சொன்னா உங்கம்மாவும் உங்களுக்கு சப்போர்ட்

பண்றாளாமே. நானே இறங்கி நின்னு வாசப்படியில கத்தணும்னு நினைச்சேன். சியாமளாதான் பெரிய மனசு பண்ணி வேண்டாம் விட்ருங்கோன்னு சொன்னா."

அவன் பேசி முடித்தான்.

தூக்கி வாரிப் போட்டது.

சாகேதராமன் திகைத்துப் போய் நின்றான்.

அம்மாவிடம் வந்து தான் சியாமளா புருஷனிடம் பேசியதாகச் சொன்னான்.

அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

"பாதுகாப்பு. நம்பிக்கை. எங்க நான் இழுத்து விட்டுடுவேனோன்னு பயந்து தானே முந்திண்டு தன் புருஷன்கிட்ட தன்னை நல்லவள் மாதிரியும், உன்னை அயோக்கியன் மாதிரியும், என்னை அதுக்கு உடந்தை மாதிரியும் சொல்றா. ஒழிஞ்சு போகுது விடு."

"இல்லைம்மா."

"என்னது இல்லைம்மா. தப்பை நீ பண்ணிட்டு என்னத்துக்கு. பொம்மனாட்டி அப்படித்தான். அவ மேல தப்பில்லை. அதுவொரு ரெண்டுங்கெட்டான். தான் ரொம்ப கெட்டிக்காரின்னு நினைச்சுண்டிருக்கற மக்கு. உன் கெட்டிக்காரத்தனம் நல்லதுக்கு பயன்படலைன்னு வச்சுக்கோ. என்ன பிரயோஜனம். நீ வாழ்ந்து என்ன, வாழாட்டி என்ன. முன்னாடி எங்கயோ குடித்தனம் பண்ணாளே, அங்கயும் இந்தமாதிரிதான் ஏதோ கலாட்டா பண்ணியிருக்கா. அப்போ நாப்பத் தஞ்சு வயசு பெரியவரோட ரொம்ப நெருக்கமா இருந்திருக்கா. அவங்க கத்தி கலாட்டாவா மாறி இந்தப் பக்கம் வந்திருக்கா. இதெல்லாம் வாழ்க்கையினுடைய கடைசி வரைக்கும் இப்படித்தான் ஏதாவது பண்ணிண்டிருக்கும். பெருசா நினைச்சுக்காத வருத்தப் படாத. துடைச்சு எடுத்துடு. சுத்தமா இருக்கறதுக்கு ட்ரை பண்ணு". அம்மா மிருதுவாகச் சொன்னாள்.



அவன் அம்மாவின் கால்களில் விழுந்து வணங்கினான்.

"கோச்சுக்கவே மாட்டியா" என்று கைகளை பிடித்துக் கொண்டான்.

"நீ ரொம்ப நல்லவன்டா. உன்னை எதுக்கு கோச்சுக்கணும்."

அம்மா அவனை அணைத்துக் கொண்டாள்.

அவன் கிடாரை தூக்கி பீரோவில் வைத்தான்.

அது நடந்த நாற்பதாவது நாள் சியாமளியின் வீடு வேறு இடத்திற்கு குடிபெயர்ந்தது.

"இங்கே ரொம்ப வெக்கை அதனாலதான்" என்று அவள் யாரிடமோ சொல்லியிருந்தது காதில் விழுந்தது.

திடீரென்று ஒரு ஞாயிற்றுக் கிழமை கைதட்டும் சத்தம் கேட்க அவன், ஸ்டூலில் ஏறி நின்றான். அங்கே சியாமளா நின்றிருந்தாள்.

கண்ணில் கோபமும் ஆத்திரமும் குடிகொண்டிருந்தன.

"போடா, பொட்டை உன்னால நான் ஒரு நல்ல வீட்டை விட்டுட்டுப் போறேன். நான் இப்போ சொல்றேன். உனக்கு நல்ல பொண்டாட்டி கிடைக்க மாட்டா. நீ நல்லா இருக்கமாட்ட." கத்தி விட்டு உள்ளே போனாள்.

அவனுக்கு ஏனோ கால்கள் நடுங்கின. சற்று தள்ளாடிய படியே கட்டிலுக்கு வந்து படுத்துக் கொண்டான்.

ஏன் இப்படி, அந்த முகம் முற்றிலுமாய் ஏன் மாறிப் போயிற்று. இனிமையும், அழகும், அன்பும் காட்டிய முகம் எவ்வளவு கோரமாக இருந்தது. ஆக, ஒரே மனிதருக்குள் பல்வேறு முகங்கள் இருக்குமா அவன் அதிசயப்பட்டான்.

"எங்க தனியா அம்பாள் சன்னதி இருக்கோ அங்க போனால் மனக்கிலேசம் தீரும். சாவல் தேவதையா

உட்கார்ந்திருக்காளே அந்த மாதிரி சில பவர்ஃபுல் சன்னதிகள் எல்லா ஊரைச் சுத்தியும் இருக்கும். அங்க போய் நின்னு, என்னுடைய மனசை உடம்பை வாழ்க்கையை காவல் காக்க வேண்டும். என்னை ஜாக்கிரதையாக நீ பார்த்துக் கொள்ள வேண்டும் அப்படின்னு அவகிட்ட கேட்கலாம். அவ வேலை அது. அவ செய்வா. நீ கேட்கறத பொறுத்து செய்வா."

யாரோ யாருக்கோ சொல்லிக் கொண்டிருக்க, அது தனக்கு சொல்லப்பட்டதாக உணர்ந்தான்.

தன்னுடைய ஊர் காவல் தேவதை எது என்று யோசனை செய்தான்.

முண்டகக் கண்ணியம்மன் கோவிலுக்கு போய் நின்று நீதான் என் காவல் தேவதையா என்று வினவினான்.

பூ உதிர்ந்தது. சந்தோஷப்பட்டான்.

அன்றிலிருந்து தினமும் போக ஆரம்பித்தான்.

அவன் அலுவலக நண்பன் ஜேம்ஸ் ஹார்ட்லி சேஸ் வைத்திருக்க இடைவேளையின் போது வாங்கிப் பார்த்து படிக்க ஆரம்பித்து மதிய உணவு வேளை முடிந்த பிறகும் புத்தகத்தை மூட முடியாமல் படித்துக் கொண்டிருந்தான்.

"வைக்க முடியலை இல்ல. இதான். ஒண்ணுமில்லை சாதாரண த்ரில்லர். ஆனா, விறுவிறுவிறுன்னு எழு திண்டு போவான். அந்த ஹீரோ கொன்னுடறா னாடா."

"ஆங்- சொன்னா போயிடும். நீயே படி" என்று புத்தகத்தை அவனுக்கு கொடுக்க, அந்தப் புத்தகத்தில் வாடகை நூல் நிலையம் பெயர் எழுதியிருந்தது.

நாலரை மணிக்குள் எல்லா வேலையையும் முடித்து விட்டு ஃபைலுக்கு நடுவில் புத்தகம் வைத்துக் கொண்டு ஐந்தரை மணி வரை படித்துக் கொண் டிருந்தான்.



நடுவே மேலதிகாரியிடமிருந்து ஒரு போன் வந்தது.

"என்னடா பைலுக்கு நடுவுல புஸ்தகம் வச்சு படிச்சுண்டிருக்கியாமே."

"போட்டுக் கொடுத்துட்டாங்களா, அதுக்குள்ள. இன்னிக்கு ஒரு நாள் கண்டுக்காதீங்க. நாளைலேர்ந்து படிக்க மாட்டேன். எடுத்துட்டேன் வைக்க முடி யலை."

"ஜேம்ஸ் ஹார்ட்லி சேஸா."

"ஆமாம்."

"படிபடி. மொத்தம் அறுபது, எழுபது புக் இருக்கு ரொம்ப நன்னாயிருக்கும். வேலை எதுவும் பெண்டிங் இல்லையே."

"ஒண்ணுகூட இல்லை ஸார். நாளைக்கு வந்து பண்ண வேண்டியதைக் கூட இன்னிக்கே பண்ணி முடிச்சிட்டேன்."

"எனக்குத் தெரியும். இருந்தாலும் படிக்கறது இங்க வேண்டாம்டா. எவனாவது மேல போட்டு கொடுத் துடுவான்," என்று இதமாகப் பேசினார்.

"இந்த சீட்டுக்கு வரணும்னு பார்க்கறாங்க ஸார்."

"யார் வேணா எந்த சீட்டுக்கு வேணா வரலாம். வேலை செய்ய வேண்டாமா. உன்னை மாதிரி ஒரு நல்ல வொர்க்கரை நான் இழக்கறதுக்கு விரும்பலை. ஜாக்கிரதையா படி. வாசப்பக்கம் ஒரு கண்ணை வச்சுண்டு படி."

அலுவலகத்து சூழல் மிகவும் சுகமாக இருந்தது. அவனுக்கு தான் என்ன வேலை செய்கிறோம் என்று தெரிந்தது.

"ஜேம்ஸ் ஹார்ட்லி சேஸ் படிச்சா இங்கிலிஷ் இம்ப்ருவ் ஆகும். ஜெனரல் இங்கிலீஷ் நாவல் படிச் சாலும் நம்ம இங்கிலீஷ் வலுவாகும். மொழியோட

பரிச்சயம் இருந்துண்டே இருக்கணும்னா அந்த மொழியில நிறைய படிக்கணும்."

அலுவலகத்தில் விவாதிக்கப்பட்டது. அமெரிக்க ஆங்கிலம், பிரிட்டிஷ் ஆங்கிலம், இந்திய ஆங்கிலம் என்று பேசப்பட்டது. அவன் பேச்சில் மெருகு கூடியது. அவன் இரவு பகலாக நிறைய படிக்க ஆரம்பித்தான். இன்னும் நல்ல புத்தகங்கள் கிடைக்குமா என்பதற்கு தேவநேயப்பாவணர் நூலகத்திற்குப் போனான். நிறைய புத்தகங்கள் இருந்தன. அவனுடைய விசிட்டிங்கார்டும், இன்கம் டாக்ஸ் கார்டும் கொடுத்து வாசக சாலையில் அங்கத்தினரானான்.

வெளியே வரும்போது பெரிய சிரிப்பு சப்தம் கேட்டது. நூறு பேர் ஒன்றாக சேர்ந்து சிரிக்கின்ற சப்தம் கீழே எல்லோரையும் நிற்க வைத்தது.

ஒரு பலகையில் இலக்கிய சந்திப்பு என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் என்ன நடக்கிறது என்று பார்க்க படியேறி மேலே போனான். உள்ளே அறுபது ஆண்களும், ஆறேழு பெண்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

எந்த ஒரு தனி மனிதரையும் முன்னிட்ட சந்திப்பு இல்லையாம். நிறைய இலக்கிய ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து ஒருவரையொருவர் சந்தித்து தான் படித்த புத்தகங்களையும் தன் இலக்கிய அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் கூட்டமாம். மேடைப் பேச்சு மாதிரி தலைவருக்கு வணக்கம். சபையோருக்கு வணக்கம் என்றெல்லாம் சொல்லாமல், "இந்த புஸ்தகம் படிச்சிருக்கிங்களா" என்று எழுந்து நின்று ஆரம்பிக்கலாமாம். அதாவது மேடையே இல்லையாம். அறிவிப்பாளர் ஒருவர் பெயர் சொல்லி கூப்பிட எழுந்து நின்று பேச வேண்டியதுதானாம்.



இவன் பெயரையும் குறித்துக் கொண்டான். ஆனால், எனக்கு பேச ஒன்றுமில்லை என்று சொன்னான். பலபேர் பேசியதை ஆர்வத்தோடு கேட்டான்.

அதுவரை அவன் படித்திராத, பாரதியாருடைய வசன கவிதை ஒன்றை ஒருவர் சொல்லி அதை அனுபவித்தது பற்றி விவரித்து விட்டு உட்கார கூட்டம் பலமாக கை தட்டியது.

கூளப்ப நாயக்கன் காதல் என்பது பற்றி இன்னொருவர் பேசினார். அதுவும் சுவையாக இருந்தது.

"இன்னா நாற்பது, இனியவை நாற்பது படிச்சிருக்கீங்களா. எத்தனை பேர் படிச்சுருக்கீங்க."

ஒரு பெண் எழுந்து நின்று பேசினாள்.

நாலைந்து பேர் கை தூக்கினார்கள்.

"விஸ்தாரமா தெரியுமா."

சிலர் கை இறக்கினார்கள். ஒருவர் மட்டும் கை தூக்கியிருந்தார்.

"தேங்க்யு. ரொம்ப சந்தோஷம். இது மனப்பாடம் பண்ண வேண்டிய ஒரு நீதி நூல். குழந்தைகளுக்கு, நண்பர்களுக்கு சொல்ல வேண்டிய நீதி நூல். சில சமயம் நமக்கே அது உபயோகப்படும்."

சொல்லிவிட்டு மனப்பாடமாக ஐந்தாறு வெண்பாக்கள் சொல்லிக் காட்டினாள்.

கூட்டம் கைதட்டியது. வியந்தது.

"அவங்க பேர் என்ன."

பக்கத்திலிருந்தவர், "அவங்களா தமிழரசி கந்தசாமி" என்று பதில் சொன்னார்.

அவன், அவள் பெயரை கேட்பதையும் பக்கத்தில் இருந்தவர் சொல்வதையும் தொலைவிலிருந்து அவள் கவனித்துக் கொண்டாள்.

ஒருவர் பேசி முடித்து, இன்னொருவர் பேச ஆரம்பித்ததும் அமைப்பாளரை அழைத்து அவனைச் சுட்டிக்காட்டி அவனையும் எழுந்து பேச சொன்னாள்.

அவன் பெயர் கூப்பிடப்பட்டது. அவன் திகைத்துப் போய் நின்றான்.

"நான் பேசணும்னு சொல்லலீங்களே" என்றான்.

"பரவாயில்லை. பேசுங்க. சும்மா பேசுங்க. என்ன வேலை செய்யறீங்க. என்ன சம்பளம். அந்த மாதிரி ஏதாவது பேசுங்க," என்று ஒருவர் சொல்ல கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

"இங்க ஒரு ஈ புகுந்ததுங்க. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் வந்துட்டு மாடி ஏறி ஒரு ஈ வந்தது. இரும்பு அடிக்கிற இடத்துல ஈக்கு என்னா வேலை. பின்னாடி போயிட வேண்டியதுதானே. டம்டம்முனு அடிக்கற சத்தத்தை கேட்டு சுகமா உட்கார்ந்தது. அந்த ஈ வேற யாருமில்லை நான்தான்" என்று சொல்ல சிலர் வாய் விட்டு சிரித்தார்கள்.

"என்ன இங்க இரும்பா அடிச்சுண்டிருக்கோம்."

ஒருவர் முறைப்பாகப் பேசினார்.

"கணீர் கணீர்னு பேச்சுக் குரல் கேட்டு வந்தேங்க. அதைச் சொன்னேன்."

"நீங்க சொல்றது ரைட். இது பட்டறைதான். தமிழ்ப் பட்டறை," என்று இன்னொருவர் சொல்ல அவர்களுக்குள் காரசாரமாகப் பேசிக் கொண்டார்கள்.

"இருங்கய்யா அவர் பேசட்டும்" என்று சொல்ல அவன் மறுபடியும் தொண்டையை செருமிக் கொண்டான்.

"நாம் இலக்கியம் பத்திதானே பேசணும்."

"ஆமாம்" என்று எதிரில் உள்ளவர்கள் எதிரொலித்தார்கள்.



"ஆங்கில இலக்கியம் பத்தி பேசக்கூடாதுங்களா. அதுல பேசறதுக்கு நிறைய இருக்குங்க" என்று சொல்ல "போதும் நிறுத்து" என்று இன்னொருவர் சொல்ல, அவன் எழுந்து "ஏன் இங்க தமிழ் இலக்கியம் தான் பேசணும்னு என்னா, ஆங்கில இலக்கியத்தைப் பத்தி பேசக்கூடாதுன்னு என்ன சட்டமா எழுதி வச்சுருக்கோம். அவர் இலக்கியம் இல்லாம வேற ஏதாவது ரொம்ப பேசினார்னா விட்டுடலாம். அவர் இலக்கியம் ஆங்கிலத்துலேர்ந்து பேசறேன்றார். கேட் போமே."

மிகச் சாதாரண துப்பறியும் கதையான ஜேம்ஸ் ஹார்ட் சேஸில் ஒரு கட்டமைப்பு எப்படி இருக்கிறது, எப்படி கதையை ஆரம்பிக்கிறார்கள். எப்படி அழைத்துக் கொண்டு போகிறார்கள், எந்தவிதமான மொழியை பயன்படுத்துகிறார்கள் என்று விளக்கி ஆங்கிலம் கலந்த தமிழில் பேச கூட்டம் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தது. நன்றாக கதையெழுத வேண்டும் என்ற எண்ணம் உங்கள் எவருக்கேனும் இருப்பின் ஆங்கில இலக்கியத்தோடு பரிச்சயம் வைத்துக் கொள்வது நல்லது என்று சொல்ல, இரண்டு மூன்று பேர் வேகமாக எழுந்தார்கள்.

"இங்கிலீஷ் தெரிஞ்சாதான் தமிழ் எழுத முடியுமா. எனக்கு இங்கிலீஷ் தெரியாது. நாப்பது வருஷமா நான் எழுதிகிட்டிருக்கேன் என்று சொல்ல, கூட்டம் "நல்லா எழுதுவீங்க" என்று சொல்ல, "இது வரைக்கும் எழுதினது போறும்" என்று அவர் சொல்ல, "அப்போ நீங்க படிக்க வேண்டாம்" என்று இவன் சொல்ல மறுபடியும் கூட்டம் வாய் விட்டுச் சிரித்தது.

தமிழரசி கந்தசாமி எழுந்தாள்.

"சொல்றதுல என்ன தப்பு. உங்களுக்கு இன்னும் உங்களுடைய கதை வளத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் ஆங்கிலப் பரிச்சயம் வைத்துக் கொள்ளுங்கள். ஆங்கில இலக்கியம் படியுங்கள். இன்

ளொரு மொழி கத்துகோங்கன்னு சொல்றது என்ன தப்பு. பெங்காலி கத்துகோங்க, தெலுங்கு கத்துகோங்க, குஜராத்தி கத்துகோங்க, சைனா கத்துகோங்க. சும்மா கத்துக்க மாட்டேன்றதுக்கு ஒரு கூச்சலா. எது சொன்னாலும் எதிர்த்து பேசவேன்னா என்னத்துக்கு கூட்டத்துக்கு வரணும்."

"வரலைங்க. நான் வரலை." ஒருவர் எழுந்திருந்து வெளியே போனார்.

தன்னால், அந்தக் கூட்டத்தினுடைய சௌந்தர்யம் கெட்டுப் போய்விட்டதென்று அவன் வருத்தப்பட்டான்.

"மன்னிச்சுக்கோங்க. என்னை நீங்க பேசச் சொன்னீங்க. எனக்கு தெரிஞ்சதை பேசினேன். இவ்ளோ பெரிய சண்டையாகும்னு தெரியலை."

"அது கிடக்குங்க. அந்தாள் என்னிக்கோ வெளிய போயிருக்கணும். நல்ல வேளை நீங்க நுழைஞ்சீங்க. அவன் வெளிய போயிட்டான். இலக்கிய கூட்டம்னு வந்தா சருக்சருக்குனு வரது. ஒண்ணு கத்தறது. எனக்கு மட்டுமே தெரியும். தான் சொல்றதே இலக்கியம் அப்படின்னு உரக்கப் பேசறது. இதுவே ஒரு பந்தாவா போயிடுச்சு" என்று மற்றவர்கள் பேச அவன் மௌனமாக இருந்தான்.

கூட்டம் இரண்டு மூன்று பேர் பேசி கலைந்தது.

தமிழரசி கந்தசாமி அவனுக்கருகே வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அவள் மத்திய போலீஸ் துறையில் உளவுப் பிரிவில் இருப்பதாகச் சொன்னாள்.

அவன் திகைத்துப் போனான். பலபேரிடம் தன் உத்தியோகத்தை சொல்லி அவர்கள் திகைப்பதை அவள் ரசித்திருக்க வேண்டும்.

இப்பொழுதும் அவள் தன்னை ரசிக்கிறாள் என்பது தெரிந்து. அவளை உற்சாகமூட்ட அவன் இன்னும்



திகைப்பது போல் நடந்து கொண்டான். மெல்ல தப்பித்து ஓடுவது போல் பின்னடைந்தான்.

கூட்டம் அவனை சுவாரசியமாக வேடிக்கை பார்த்தது.

"என்னாச்சு உங்களுக்கு."

அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இந்த லைப்ரரிலேர்ந்து ரெண்டு புக் திருடியிருக்கேங்க. தயவு செய்து அதுக்காக என்னை கைது பண்ணிடாதீங்க நான் திருப்பி வச்சிடறேங்க" என்று சொல்ல அங்கிருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"நான் ஒரு கூடை எடுத்துட்டு போயிருக்கேன். நான் எப்படி உங்களை கைது பண்றது," அவள் சொல்ல மேலும் சிரித்தார்கள்.

"ஐயோ... நீங்க போலீஸா. எனக்கு போலீஸ்னா ரொம்ப பயம். பேண்ட்டோட ஒண்ணுக்கு போயிடுவேன்" என்று ஒரு ஆள் சொன்னான். "முதல்ல வெளிய போ. இந்த இடத்துல போகாத அப்படின்னு சொன்னான். ஏன்னு கேட்டான். இதுக்கு வாடகை நான்தான் தரேன். நீ அசிங்கம் பண்ணா என்னைதான் கேட்பான் அப்படின்னேன்."

நாலைந்து பேர் மறுபடியும் சிரி.ந்தார்கள்.

லேசாக சாகேதராமன் சிரித்தான்.

தன்னுடைய உத்தியோகத்தை சொன்னான்.

"அடடே... ஒயிட்ஸ் ரோட்ல இருக்கும். தெரியும்... தெரியும். ஒரு பெரிய பில்டிங். ஒரு தடவை அதை தாண்டி போறபோது நமக்கு தெரிஞ்சவங்க யாரோ இதுல வேலை செய்றாங்கன்னு எனக்கு தோணும்."

அவள் சாதாரணமாகச் சொன்னாள்.

ஆனால், அவன் கூர்மையாக அவளைப் பார்த்தான்.

"சரி... சரி போகலாம். மணி எட்டேகால் ஆச்சு" என்று அவள் விடை பெற்றாள்.

எங்கோ போய் சாவியை கொடுத்து விட்டு வந்தாள். யாருக்கோ காசு கொடுத்தாள். தேதி சொல்லி காலண்டர் பார்த்து யாருடனோ விவாதித்து நேரம் குறித்து அதற்கும் காசு கட்டினாள்.

"எல்லாம் இந்த அம்மாதானா. வேற யாரும் இல்லையா."

"அது வசதியான பொண்ணு ஸார். அதனால செய்யுது. அது செய்யறதுனால நாங்களும் விட்டுட் டோம்."

"அது இல்லைன்னா நாமதான் செய்யணும்" என்று இன்னொருவர் சொன்னார்.

"வசதின்னா" என்று அவன் மறுபடியும் கேட்டான்.

"அதுக்கொண்ணும் வேலை செய்யணும்னு அவசி யமே இல்லை. நல்லா பெரிய இடத்துப் பொண்ணு. அவங்கப்பா தமிழ்ப் புலவர். அரசியல்ல இருக்கார். தஞ்சாவூர் பக்கம் தோட்டம் தொரவெல்லாம் இருக்கு. வடக்கயிருந்து சமையல் எண்ணெய் வாங்கிண்டு வந்து டிஸ்ட்ரிபியூட் பண்றாரு.. சோப்பு ஒரு கம்பெனியில எடுத்து டிஸ்ட்ரிபியூட் பண்றாரு. எல்லாம் அண்ண னுங்க கவனிச்சுக்கறாங்க. முதலாளி மாதிரி வலம் வராங்க."

"இன்னும் கல்யாணம் ஆவலையா."

"செவ்வாய் தோஷம்."

"செவ்வாய் தோஷமெல்லாம் இல்லீங்க. இதை கல்யாணம் பண்ணிக்கறது கொஞ்சம் கடினம். அவங் கப்பாவும் பார்த்து பொறுமையா நல்ல பையனா வந்த பிறகு கல்யாணம் பண்ணலாம்றாங்க."

"நல்ல படியாதானே பழகறாங்க."

"இங்க மீட்டிங் பேசறதுக்கெல்லாம் நல்லபடிதான். ஆனா கொஞ்சம் அடாவடியான பொண்ணு. இதை வச்சு குடித்தனம் பண்றது கஷ்டண்ணா."



"யோவ் சும்மாயிரு. உனக்கு என்னா மீட்டிங்குக்கு வந்தோமா, போனோமான்னு இல்லாத."

பேசியவரை இன்னொருவர் அடக்கினார்.

"அடாவடியா எனக்கு தெரியலையே ஸார்."

அவன் மறுபடியும் நின்றான்.

"பொம்பளைங்க கவிதையே எழுதக்கூடாது. அப்படி மீறி ஒரு பொம்பளை கவிதை எழுதினா அவ பஜாரி அப்படின்னு ஒரு மீட்டிங்ல ஒருத்தன் கொஞ் சம் தண்ணி போட்டுட்டு பேசிட்டான். அவன் குடி போதையில் இருந்ததால அந்த மாதிரி பேசினான். இவளுக்கு வந்தது கோபம். போய் விட்டா ஒரு அறை."

"அவ இவன்னு பேசாத. மரியாதையா பேசு." மறுபடியும் இன்னொருவர் எச்சரித்தார்.

"அந்தாள் எகிறி இவ தலைமுடிய பிடிக்க அவன் கைய தட்டிவிட்டு செருப்பெடுத்து பின்னிட்டா. ஒரு இருவது முப்படி அடி விழுந்துடுச்சு. போலீஸ் கேஸ் ஆச்சு. நாங்களெல்லாம் உள்ள புகுந்து பெரிய மனசு பண்ணி செருப்படியோட விட்ருமா இதுக்கு மேல வேணாம். இவனை ஜெயிலுக்கு அனுப்பினா அவன் புள்ள குட்டிக்கு அவமானமாயிடும்னு சொல்லி விட் டோம். பேப்பர்ல எல்லாம் வந்துதே பார்க்கலிங்களா."

"இல்லை. பார்க்கலை."

"மலேசியால நடந்த முதல் உலகத் தமிழ் மாநாட் டுக்கு பதினாறு வயசுல போய் கவிதை படிச்சுட்டு பதக்கம் மாட்டிகிட்டு வந்தது. எங்கபோனாலும் பதக்கம் கொடுப்பாங்க."

"போக்குவரத்து செலவு யார் பார்க்கறது. ஏதாவது எழுதியிருக்காங்களா."

"சொல்லும்படியா ஒண்ணும் இல்லை. அப்பப்போ ஏதாவது கவிதை மாதிரி சொல்லுவாங்க. அவ்ளோ தான்."

"அது கவிதை இல்லைன்னு சொல்றீங்களா."

"பிடிச்சவனுக்கு கவிதை. பிடிக்காதவனுக்கு கவிதை இல்லை."

"எது பிடிச்சவனுக்கு?"

"அந்த பொண்ண பிடிச்சவனுக்கு அது கவிதை. ஆஹா ஓஹோன்னு பாராட்டறதுக்கு நாலஞ்சு பேர் இருக்காங்களே."

"அப்படியா."

"அங்க பாருங்க. பின்னாடியே சுத்தறான்."

"கவிதை பிடிச்சுருக்கும், அதனால சுத்தறான்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க. அவளையே கல்யாணம் பண்ணி குடித்தனம் பண்ணணும்னு மனசுல நப்பாசையே இருக்கு."

"பல பேருக்கு நடுவில போட்டியே இருக்கா."

"இருக்குன்னு நினைக்கறேன்."

சாகேதராமனுக்கு பல பேர் போட்டியிடும் பெண்ணாக அவள் இருக்கிறாள் என்பது சந்தோஷமாக இருந்தது. தானும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவனை அறியாமல் உள்ளே எழுந்தது.

யாரெல்லாம் சுற்றுகிறார்களோ அவர்களை உற்றுப் பார்த்தான். அவள் அவர்களை மதிக்கவே இல்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

"அடுத்த முதல் ஞாயிற்றுக்கிழமை என்ன தேதி."

"தெரியலைங்களே."

"போய் பார்த்துட்டு வாங்களேன். உங்ககிட்ட கேட்கறதே வந்து தெரியலையேன்ற பதிலை வாங்கறதுக்கா. இதோ சொல்றேன்னு ஓட வேண்டாம். போ. தத்தி" என்று அவள் அலுத்துக் கொண்டாள்.



சாகேதராமன் தொலைவில் இருந்தபடியே ஐந்தாம் தேதி என்று உரக்கக் கத்தினான்.

அவள் நன்றி சொல்லிவிட்டு விண்ணப்பப் படிவத்தில் வேகமாக எழுதத் துவங்கினாள்.

அந்த ஆள் மறுபடியும் வந்து ஆறாம் தேதி என்று சொல்ல திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

சாகேதராமனைப் பார்த்தாள்.

சாகேதராமன் ஐந்து என்று விரல்கள் விரித்துக் காண்பித்தான்.

"போய் மறுபடியும் பார்த்துட்டு வாங்க" என்று அவனை விரட்ட அவன் மறுபடியும் ஓடினான். திரும்பி ஓடிவந்தான்.

"ஐந்து. ஸாரி." என்றான்.

தலையில் அடித்துக் கொண்டாள்.

விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு சாகேதராமனை நோக்கி ஓடிவந்தாள்.

"ஒரேயொரு லேடியா அத்தனையும் செய்றேன். இங்க ஒருத்தரும் ஒரு உதவியும் பண்ணமாட்டேன்றாங்க. பண்ண முடியலை. பண்ணத் தெரியலை. இலக்கியம் தெரிஞ்சா, கவிதை எழுதினா சாதாரண வாழ்க்கையில ஒரு சாமர்த்தியமும் இருக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டமா. என்னமோ அப்படியொரு வேஷம் போடறாங்க. அப்படி இருக்கப் பிரியப்படறாங்க. எனக்கு ஆச்சரியமா இருக்கு."

"இல்லைங்க. இலக்கியம் தந்திரமயமானது. எல்லாக் கலைகளும் தந்திரமயமானவை. யாருக்கு தந்திரமாக கலைகள் செய்ய வருகின்றதோ அவருக்கு இல்லற வாழ்க்கையில, அதாவது லௌகீக வாழ்க்கையில் மிக அற்புதமாக சாமர்த்தியமாக காரியங்கள் செய்ய வரும். இவர்கள் செய்ய மறுக்கிறார்கள். செய்ய முடியாது என்று அலட்டுகிறார்கள். அவ்வளவே."

"சபாஷ்."

அவள் வாய்விட்டு பாராட்டினாள். கை நீட்டி அவன் கை பற்றி குலுக்கினாள்.

"பாட்டு சங்கீதமெல்லாம் கூட தந்திரமானதுன்னு சொல்றீங்களா."

"ஆமாம். ரொம்ப தந்திரமானது. என்ன பண்ணா எதிர இருக்கிறவன் ஆஹான்னுவான். அழுவான்... அப்படின்னு தானே எல்லாருக்கும் கணக்கு. மத்தவங்களை திகைக்க வைக்கணும்னுதானே எண்ணம்."

"நான் ஒத்துக்கலைங்க" என்று இன்னொருத்தர் சொல்ல "வேணாம் விட்ருங்க" என்று அவன் சொல்ல, அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

"உண்மையில ஒத்துக்கலைன்னு அர்த்தம். நீங்க ஒத்துக்கலைன்னா உண்மை பொய் ஆயிடாது" என்று சொல்லி விட்டு அவள் வெளியே வர காற்று சில்லென்று அடித்தது.

சாகேதராமன் மோட்டார் சைக்கிளுக்கு போய் சாவி போட்டு திறந்து ஒரு வட்டமடித்து அவர்களுக்கு அருகே வந்து நிறுத்தினான்.

"அப்போ நான் கிளம்பறேங்க."

"உங்களுக்கு வீடு எங்க."

அவள் மெலலிய குரலில் கேட்டாள்.

"மயிலாப்பூர்."

"அட நம்ம வீட்டுக்குகிட்டத்தான்," என்று அவள் துள்ளலோடு சொன்னாள்.

"உங்க வீடு எங்க."

அவன் பதிலுக்குக் கேட்டான்.

"சாந்தோம்."

"வர்றீங்களா. கொண்டு போய் விட்டுடறேன்."



மிகச் சாதாரணமாக முகத்தை வைத்துக் கொண்டு பேசினான். உள்ளுக்குள் அவள் சரியென்று சொல்ல வேண்டுமே என்ற துள்ளல் இருந்தது. இத்தனை பேருக்கும் நடுவே அவளை லவுட்டிக் கொண்டு போவதில் ஒரு ஆனந்தம் இருந்தது.

"நானே கேட்கணும்னு நினைச்சேன். தேங்க்யூ ஃபார் யுவர் காலிங்."

அவள் கீழேயிறங்கியதும் ஆங்கிலத்திற்கு தாவினாள். இலக்கிய வேஷத்தை உதறினாள்.

மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். வழி முழுவதும் ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருந்தாள்.

காபி சாப்பிடலாமான்னு கேட்கலாமா. இல்ல தப்பாயிடுமா.

அவன் யோசித்துக் கொண்டே அவள் கேள்விகளுக்கு பதில் சொல்லி வந்தான். வேண்டுமென்றே முக்கியமான சில ஹோட்டல் வழியாகப் போனான். அந்த வழியாகப் போக வேண்டிய அவசியமில்லை. ஆனாலும், அவள் என்ன என்று கேட்பாள் ஹோட்டலுக்கு என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தான்.

ஆனால் அவள் கேட்கவும் இல்லை. அவன் நிற்கவும் இல்லை.

ஒரு தெரு முனையில் வண்டி திரும்பும் போது "ஒரு காபி சாப்பிட்டிருக்கலாம். தொண்டை ரொம்ப தாகமா இருக்கு," என்று சொன்னாள்.

"ஏங்க அங்கயே சொல்ல வேண்டியதுதானே."

சட்டென்று வண்டியை நிறுத்தினான். அவள் குலுங்கி அவன் மீது மோதிக் கொண்டாள்.

"நீங்க ஹோட்டல் பக்கம் போகும்போது நிப்பீங்களோ, கேட்பீங்களோன்னு நினைச்சேன்."

"கேட்டா தப்பாயிடுமோன்னு பயந்தாங்க."

"அதென்னங்க தப்பாயிடும்."

"நீங்க போலீஸ்காரங்க. பளார் பளார்னு செருப்பெடுத்து, பிச்சிட்டீங்கன்னா, எனக்கு கையும் ஓடாது. காலும் ஓடாது."

"சும்மா ஏதாவது சொல்லி மிரட்டினாங்களா. அந்தாள் அசிங்கமா, தப்பா, எல்லாப் பொண்ணுங்களும் பஜாரிங்கன்னு பேசினான். பிச்சியெடுத்துட்டேன். நியாயத்துக்கு அவன் எனக்கு சொந்தக்காரன்."

"அப்படியா, அதனாலதான் அடிச்சீங்களோ என்னவோ."

"எங்கப்பா அவனை என்னை வேவு பார்க்க அனுப்பினார். என்னை கல்யாணம் பண்ணிக்க சொல்லி சொன்னாரு. முடியாது போங்கன்னு சொல்லிட்டேன். இவனை அனுப்பி, அவ என்ன பண்றா பாருன்னு சொன்னரு. நான் இங்க வந்து பேசினதை பார்த்துட்டு சும்மா அவன் ஏதோ வெறுப்பேத்தறதுக்கு ஆரம்பிச்சான். வச்சி வாங்கிட்டேன்."

"சொந்தக்காரனா, இல்லாத வெளி ஆளா இருந்தா விட்டிருப்பீங்களா."

"கொலை பண்ணியிருப்பேன்."

அவள் உரத்த குரலில் சொன்னாள்.

"வாங்க. காபி சாப்டுட்டு போகலாம்."

"எதுக்கு திடீர்னு. வீட்டுக்கு வந்துட்டோமே."

"கொலை பண்ண போறேன்ற பொண்ண ஒரு தடவை உத்துப் பார்க்க வேண்டாமா" என்று அவன் சொல்ல, அவள் மறுபடியும் சிரித்தாள்.

அவர்கள் இரண்டு பேரும் மயிலாப்பூரில் ஒரு சிறிய சந்தில் இருக்கிற ராயர் ஹோட்டலுக்குப் போனார்கள்.

எட்டே கால் மணிக்கு எந்த பயமும் இல்லாமல், ஒரு ஆளுக்கு பக்கத்திலே உட்கார்ந்து தோசையும்,



இட்லியும் காபியும் சாப்பிடுகிற ஒரு பெண்ணை அவன் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"யூனிஃபார்மெல்லாம் கிடையாதா."

"இருக்கு. எப்போவாவது பரேடுக்கு போகும்போது போட்டுக்கணும்."

"உங்க தகுதி என்ன."

"சப்இன்ஸ்பெக்டர்."

"எந்த மாதிரியான வேலை இருக்கும்."

"சும்மா, எல்லாம் டேபிள் வேலைதான். களத்துல இறங்கி வேலை செய்யறாங்க இல்ல. அவங்களுக்காக நிறைய தகவல் சேகரிக்கறது. சில சமயம் அவங்களுக்கு தேவைப்பட்டா குடும்பப் பெண் மாதிரி, வேலைக்காரி மாதிரி வேஷம் போட்டுகிட்டு போகறது."

"போயிருக்கீங்களா."

"நிறைய."

"எப்போ. எங்க."

"போலிஸ் நின்னா கண்டுபிடிச்சுடுவாங்கற இடத்துல எங்களை அனுப்புவாங்க. யாரை வாச் பண்ணணுமோ, அவங்க வீட்டுக்கு எதிர கூடை நிறைய மாங்காய் எடுத்துகிட்டு போய் விக்கறா மாதிரி உட்கார்ந்து அவன் யாருன்னு கேட்க, நான் சேரி பாஷையில பேச சரி இருந்துட்டுப் போ அப்படின்னு சொல்ல, மூணு நாள் அங்கயே ராப்பகலா இருந்தேன். வரவங்க போறவங்க அத்தனை பேரையும் ஒயர்லெஸ்ல சொன்னேன். சுத்தி வளைச்சு உள்ள போடப்போறாங்க, அதிரடி நடவடிக்கை அப்படின்ற போது டக்குனு பேக் பண்ணிட்டேன். கடைசி வரைக்கும் கேட்டுகிட்டிருந்தாங்க. அந்தப் பொம்பளை யாரு. அந்தப் பொம்பளை யாருன்னு."

"பார்த்தா கஷ்டமில்லையா."

"ஹூம்... இல்லை."

"ஏன்."

"அப்போ என்னை நீங்க பார்த்திருந்தீங்கன்னா, உங்களால அடையாளம் தெரிஞ்சுக்கவே முடியாது. அப்படியொரு மேக்கப். அதுக்கெல்லாம் எங்க டிபார்ட்மெண்ட்ல ஆள் இருக்கு. அதைத் தவிர என் உயிர், எனக்கு விலை இல்லையா. நானே ரொம்ப ஜாக்கிரதையா இருந்துப்பேன்."

"உங்களை மாதிரியே எல்லாப் பெண்ணும் இருந்தா நல்லா இருக்குங்க."

அவன் பொதுப்படையாகச் சொன்னான்.

"என்னை விட பெரிய டேர்டேவிலெல்லாம் இந்த ஊர்ல இருக்கு. உங்களுக்கு தெரியாது. பெண்கள் கோழைகள், பயந்தாங்கொள்ளிகள்னு நினைக்கறதெல்லாம் தப்பு. சும்மா நடிக்கறாங்க. அதான் நிஜம். புருஷன் அந்தப் பக்கம் போனா, இந்தப் பக்கம் இன்னொருத்தனோட கொஞ்சற பொம்பளைங்க எத்தனை பேர் இருக்காங்க தெரியுமா."

"பயம் இருக்கற பொம்பளை செய்வாளா."

"அவளுக்கு வேணும்னா பயம். வேண்டாம்னா தைரியம். ஆம்பளையவிட, மூணு மடங்கு பொம்பளை கில்லாடி."

"கடவுளே... இதை ஒரு பொம்பளையே சொல்றீங்களே நல்லாயிருக்குமா."

"வெளியே சொல்வேணா. சொன்னா என்னை செருப்பால அடிப்பாங்க." சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்.

அவனுக்கு அவளோடு பேசுவது பிடித்திருந்தது.

முரட்டுப் பசுவாக, மூர்க்கமுள்ளவளாக இருப்பவளாய் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

அவன் வீட்டிற்கு அழைத்தான்.



அவள் மறுநாளே வந்தாள். பை நிறைய மாம்பழங்கள் கொண்டு வந்தாள். அம்மாவின் கைகளில் கொடுத்தாள். விழுந்து வணங்கினாள்.

"என்னத்துக்கு இதெல்லாம்."

அம்மா திகைத்துப் போய் கேட்டாள்.

"என் பேரு தமிழரசி கந்தசாமி. கந்தசாமி எங்கப்பா பேரு. நான் ஒரு சப் இன்ஸ்பெக்டர். இந்திய புலனாய்வுத் துறையில் இருக்கேன். துப்பறியறதுதான் என்னுடைய வேலை. அப்பப்போ இலக்கியம், கவிதை அப்படின்னு பேசறது வழக்கம். நேத்து மீட்டிங்ல பார்த்தேன். உங்களைப் பத்தி உங்க புள்ள ரொம்ப உசத்தியா சொன்னாரு. எனக்கு நல்ல புள்ளங்களை பெத்த அம்மான்னா ரொம்ப இஷ்டம். நல்ல புள்ளங்களை வளர்த்த பெண்மணி கொண்டாடப்பட வேண்டியவள் அப்படின்றது என்னுடைய அபிப்ராயம். நல்லா வளர்க்காத குழந்தைகள்தான் தேசத்தினுடைய மிகப்பெரிய பிரச்சினையா, எதிரியா போயிடுது. சாகேதராமன் ஒரு அற்புதமான மனிதர். அதுக்கு நீங்க காரணம். அதுக்காக இன்னொரு தடவை நமஸ்காரம் பண்றேன்."

அம்மா ஆடித்தான் போனாள். சில்லென்று முகம் மாறியது. பெரிய சிரிப்பு படர்ந்தது.

அம்மாவும் தமிழரசியை அணைத்துக் கொண்டாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

"வாடி என்ன சாப்பிடற" என்று உரிமையாக உள்ளே கூட்டிக் கொண்டு போனாள்.

பதினைந்து நிமிடத்தில் அவர்கள் இரண்டு பேரும் வருடக் கணக்காக பழகிய தோழிகள் போல கைகோர்த்துக் கொண்டும், ஒட்டி உரசிக் கொண்டும், ஒருவர் மீது ஒருவர் இடித்துக் கொண்டும் ஒருவர் காலில் ஒருவர் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பழகினார்கள். பேசினார்கள். திரட்டுப்

பாலை ஸ்பூனில் எடுத்து அம்மா ஊட்ட அம்மாவின் கைகளை பற்றிக் கொண்டு மூன்று நிமிடத்திற்கு ஒரு முறை முத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

"ஆசை ஆசையா பேசலாம்னு கூட்டிட்டு வந்தேன். இங்க நீ என்னமோ பறிச்சுனுட்டியே இவளை" என்று சாகேதராமன் புலம்ப, "போடா, நாளைக்கு பேசிக்கோ" என்று அம்மா துரத்தி விட்டாள்.

வெகுநேரம் கழித்து தமிழரசி மாடிக்கு வந்தாள். அவன் அறையை சுற்றிப் பார்த்தாள். சில புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள். பீரோவைத் திறந்து எப்படி அடுக்கியிருக்கிறான் என்று பார்த்தாள்.

"எனக்கு பிடிச்சுருக்கு சாகேதராமா, நிறைய பேர் வீட்டை குப்பை மாதிரி வச்சுருக்காங்க. வீட்ல துணி தொங்கினா எனக்கு எரிச்சல் வரும். நான் கத்துகிட்ட முதல் விஷயம் என்னுடைய பீரோவை, என்னுடைய இடத்தை சுத்தமா வச்சக்கறது. உங்க வீட்ல ஒட்டடையே இல்லை. எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு."

"ஒட்டடை இருந்தா எனக்கும் பிடிக்காது. அம்மாவுக்கும் பிடிக்காது."

"என்னை கல்யாணம் பண்ணிக்கிறியாடா..."

அவள் திரும்பி நின்று கேட்டாள்.

"என்ன திமர்னு."

அவன் அதிர்ந்தான்.

"உங்க அம்மாவை பிடிச்சுருக்குடா."

"என்னை பிடிச்சுருக்குன்னு சொல்ல வேண்டாமா."

"உன்னையும் பிடிச்சுருக்கு. என்னை கல்யாணம் பண்ணிக்கறயா."

"எங்க அம்மாவை கேளு."

"கேட்டேன். உங்க வீட்ல சரின்னா எனக்கும் சரின்னு சொல்லிட்டாங்க."



"மவளே... அங்க கேட்டுட்டு வந்து இப்போ என்னை பர்மிஷன் கேட்கற மாதிரி சொல்றியா."

"உங்க அம்மா ஓகேன்னு சொல்லிட்டாங்க. ஆனா, நான் அதை முடியாதும்மான்னு சொல்லிட்டேன்."

"ஏன்."

"நீங்க வேற. நான் வேற. உங்க வீடு வேற. என் வீடு வேற. என் வீட்டை உங்க வீடு தாங்காது. உங்க வீட்டை எங்க வீடு அக்செப்ட் பண்ணிக்காது."

"நீதான் ஆரம்பிச்ச. நீதான் இல்லைங்கற."

"ஆரம்பிச்சதெல்லாம் நடந்துடுமா சாகேதராமா. நடக்காது."

"என்ன இவ்ளோ வேகமா பேசற."

"ஏன். என்ன தப்பு."

"நீ பேசாம இருந்தாதான் ரெண்டு நாள் கழிச்சு, நான் உன்னை பார்த்து ஐ லவ் யூன்னு சொல்லியிருப்பேன்."

"எனக்குத் தெரியும். நீ சொல்லுவேன்னு தெரியும். டக்குனு லவ் யூன்னு சொல்ற ஜாதின்னு தெரியும்."

"எப்படி தெரியும்."

"எழுதி ஒட்டியிருக்கு உன் மூஞ்சியில."

"அப்படியில்லை."

"ஏன் பொய் சொல்ற. பக்கத்து வீட்டு பொண்ணோட கிடார் வாசிச்சு கொஞ்சல. அங்க அசிங்கப்பட்டலை. சீதாலட்சுமியை லவ் பண்ணிட்டு தோத்துட்டு திரும்பலை. அதுக்கு முன்னாடி ஒரு பொண்ணோட லவ்வுன்னு சொல்லி மனசை பறி கொடுக்கலை."

"ஏய்... யார் சொன்னா இதெல்லாம்."

"உங்கம்மா."

"ஒன்றரை மணிநேரத்துல இத்தனை பேசிட்டீங்களா."

"யெஸ். உன்னைப் பத்தி கவலைப்படறா உங்கம்மா."

அவன் திகைத்துப் போய் கிடந்தான். அவள் அருகே உட்கார்ந்தாள். அவன் கைகளை கோர்த்துக் கொண்டாள். அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"இதோ உங்க வீட்ல தைரியமா உன் கன்னத்துல முத்தம் கொடுக்கறவ நான். உங்கம்மாகிட்ட சொல் விட்டு வந்தேன். அவன் கூட நான் கொஞ்சம் பேசறேன்னு. டேய்.. சாகேதராமா உனக்கும் எனக்கும் கல்யாணம் ஆகாது. ஆனால், உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு. உனக்குள்ளேயும் என் மேல ஒரு ஆசை இருக்குன்னு தெரியும். இந்த வீட்டுக்கு மருமகளா நான் வந்தேன். உங்கம்மாவை அப்படி கொண்டாடுவேன். சப்இன்ஸ்பெக்டர் வேலையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு, இருபத்து நாலுமணி நேரம், இந்த வீட்டை காவல் காக்கற அல்சேஷன் நாயா மாறிடுவேன். ஆனா, இப்படியொரு கொடுப்பினை எனக்கு இல்லை."

"என், நீயா ஆரம்பிச்சுட்டு நீயா ஏன் முடிக்கற."

"என் வீடு பத்தி உனக்கு தெரியாதுடா. போயும் போயும் ஐயரு பையனா கல்யாணம் பண்ற. அது தரித்திரமாச்சே அப்படின்னு ஆரம்பிப்பாங்க. உங்கம்மாவுக்கு தாங்குமா. இல்ல, உனக்கு தாங்குமா. இல்ல, உன்னை கல்யாணம் பண்ண பிறகு அப்படியொரு வார்த்தை எனக்கு தாங்குமா."

அவள் குழைவாகப் பேசி இன்னும் நெருங்கி உட்கார்ந்தாள்.

அவள் மூச்சுக்காற்று அவன் மீது பட்டது.

"நீ என்ன ஜாதின்னு கூட நான் கேட்கலை தமிழரசி."

"தமிழரசி தமிழ் ஜாதி. நீங்க வேற ஜாதி. உங்க கலாச்சாரம் வேற. உங்க பழக்க வழக்கம் வேற. உங்க



திறமைகள் வேற. குணநலன்கள் வேற. நீயும் வேகம், நானும் வேகம். அட சட்டுனு எனக்குள்ள ஒரு கனவு. நானும் பொம்பளைதானே. என்னதான் சப்இன்ஸ்பெக்டரா இருந்தாலும் நல்ல ஆம்பளை வேணும்னு ஏங்கறவள்தானே. உன்னை பார்த்தவுடனே ஒரு கனவு. அடடா, இவ்வளவு ஜெண்டிலா இருக்கற இந்த ஆள் எனக்கு புருஷனா வந்தா நல்லாயிருக்குமேன்னு. உங்க அம்மாவை பார்த்தவுடனே பொங்கிடுச்சு. தாங்கவே முடியலை. பொடேர்னு பானையை போட்டு உடைச்சா மாதிரி உடைச்சேன். உங்கம்மா ஒரு நிமிஷம் என்னை உத்துப் பார்த்துட்டு ரொம்ப ஏங்கிண்டிருக்கியாடி கண்ணுன்னு கேட்டா. அடிப்பாவி... இப்படி மனசு படிக்கறியேடின்னு சொல்லி கட்டி பிடிச்சுகிட்டேன். அவளும் கட்டிகிட்டா. நான் மனசு படிக்கிறேன்னு உனக்கு தெரியறதா. சாகேதராமனுக்கு தெரியவே மாட்டேங்கறது அப்படின்னு சொல்றா. நீ ஏன் உங்கம்மாவை புரிஞ்சுக்கலை."

அவன், திரும்பத் திரும்ப, விதம் விதமாக விழுந்த சொற்பிரயோகங்களில் அடிபட்டு சுருண்டு போனான். பயந்தான்.

அம்மாவும், இவளும் சேர்ந்தால் ஊரையே கலக்கி விடுவார்களே என்று யோசித்தான். சிரித்தான்.

"சரி. இப்போ கடைசியா நாம் யார். நமக்குள் என்ன உறவு."

"நாம் நண்பர்கள்."

"நான் லவ் யூன்னு சொல்லலாமா கூடாதா."

"சொல்லு. வார்த்தைதானே சொல்லு. நூறு தடவை சொல்லு. இல்லை. இம்போஸிஷன் எழுதிக் காட்டு கையெழுத்து போடறேன்."

அவள் கை குலுக்கி பெரிதாகச் சிரித்தாள். வெளியே போனாள்.

அவள் வீட்டில் விடை பெற்றுக் கொண்டு வெளியே போன பிறகு, அவன் திரும்பி அம்மாவைப் பார்த்தான்.

"என்னம்மா இந்த பொண்ணு இவ்வளவு வேகமா இருக்கு."

"ஆறேழு, வருஷமா அடக்கி வச்சுண்டிருக்கு. உன்னை பார்த்தவுடனே, என்னை பார்த்தவுடனே டப்புனு பொங்கிடுத்து. சின்ன குழந்தைதானே. ஆசை இருக்கும் இல்லையா. இருவத்தஞ்சு வயசாச்சு. உனக்கும் அவளுக்கும் ஒரு வயசுதான் வித்தியாசம். எங்கடா ஆம்படையான் கிடைப்பான்னு பார்த்துண்டிருக்கா. அவள் வீட்ல ஏன் பார்க்கலைன்னு தெரியலை."

"கேட்டியா."

"யாரோ சொந்தக்காரனை கல்யாணம் பண்ணிக் கோன்னு, வீட்ல சொல்றாளாம். அந்த நாயை கல் யாணம் பண்ணிகறதுக்கு நான் தூக்கு போட்டுண்டு தொங்குவேன்னு சொல்லிட்டாளாம்." அம்மா முடித்தாள்.

நடுவே நாலு முறை போன் செய்தாள்.

"ஐ ஆம் காலிங் ப்ரம் சென்ட்ரல் இன்டலிஜென்ஸ் போர்ஸ்" என்று அவள் டெலிபோன் ஆப்பரேட்டரி டம் சொல்ல, அவன் அலறி அடித்துக் கொண்டு கனெக்ஷன் கொடுத்தான்.

"என்னப்பா எங்கெங்கோ இருந்தெல்லாம் போன் வருது. நீ என்ன பண்ண" என்று கேட்டான்.

நாலு பேரிடம் சொன்னான்.

அவர்களும் வந்து விசாரித்தார்கள்.

"சிநேகிதியா..." அவன் சொல்வதை அலுவலகத்தில் உள்ளவர்கள் சந்தேகத்தோடு பார்த்தார்கள்.



"இவனை மாதிரி உயரமா, அகலமா ஃபுல் ஹாண்ட் சர்ட்டும், பேண்ட்டுமா இருந்தாக்க எவளும் லவ் பண்ணத்தான் செய்வா."

"ஐயோ... லவ் இல்லை, ஸ்நேகிதம்னு சொல்றேன் இல்ல."

"லவ்வுன்னு டிக்ளேர் ஆகற வரைக்கும் ஸ்நேகிதம். லவ்வுல என்ன பண்ணலாமோ அத்தனையும் ஸ்நேகி தத்திலும் பண்ணலாம். யார் தடுக்கறா."

"உங்களுக்கெல்லாம் வயசாயிடுத்துய்யா."

அவன் பதிலுக்கு சீற, "ஆமாம். அதான் கொஞ்சம் பொறாமையா பார்க்கறோம். என்னென்னலாம் பண்ண" என்று கேட்க அவன் முகத்தை திருப்பிக் கொண்டான்.

அவர்கள் பத்து நிமிடம் உட்கார்ந்து சிறிவிட்டுப் போனார்கள்.

சாகேதராமனுக்கு குதூகலமாக இருந்தது.

"தமிழரசி நான் உங்க வீட்டுக்கு வரட்டுமா."

"உலகத்துல என்ன வேணாலும் பண்ணு. அந்த தப்பு மட்டும் பண்ணாத."

"ஏன்."

"நீ உள்ள நுழைஞ்சு தமிழரசி இருக்காளா என்று கேட்டின்னா அவ்ளோதான். ஒரு இருவது பேர் சுத்தி வந்து உட்கார்ந்துப்பாங்க. என்னாத்துக்கு தமிழரசி கேட்கற. ரொம்ப நாள் சங்காத்தமா அப்படின்னு ஆரம்பிப்பாங்க. ஒரு வார்த்தை உன்னால அவங்க பேசறதை ஜீரணம் பண்ண முடியாது."

"என்ன சொல்ற தமிழரசி."

"நான் சேற்றில் மலர்ந்த செந்தாமரை. செந்தாமரைக் கும் சேற்றுக்கும் சம்பந்தமில்லை. ஆனால், அது அங்குதான் வளருகிறது."

"ரொம்ப முரடனுங்களா."

"இல்லை. முட்டாள்கள். முரடன்களோட பழகிட லாம். முட்டாள்களோட பழகவே முடியாது."

"ஆபீஸ்ல வேலை செய்யற அதுவும் சப் இன்ஸ்பெக் டரா இருக்க உன்னை தேடிகிட்டு ஆளே வராதா."

"வருமே. நானே ஆறு பேர் அனுப்புவேனே."

"என்ன செய்வாங்க."

"லபோ லபோன்னுவாங்க."

"வேற என்ன சொல்வாங்க."

"எனக்கு சொந்தக்காரங்க நிறைய. தண்டச்சோறு வீட்ல நிறைய. எங்கப்பாக்கு கொஞ்சம் வசதி இருக்கு. அதனால வெறுமன சாப்டுட்டு எங்கப்பா பக்கத்துல வந்து உட்கார்ந்து பேசறதுக்கு ஒரு பன்னெண்டு ஆள் இருக்காங்க. ஆம்பளையும், பொம்பளையுமா, அவங்க தான் தொந்திரவே."

"வெளிய அனுப்ப முடியாதா."

"இல்லை. சின்ன வயசுல அப்பாவை வளர்த்தவங்க. சோறு போட்டவங்க. நன்றிக்கடனா அப்பா இப்போ வளர்த்துகிட்டிருக்காரு. அது தவிர அப்பாக்கு அவங்க தேவையா இருக்கு."

"ஸ்நேகிதம்னு சொன்னா ஒத்துக்க மாட்டாங்களா."

அப்படியொரு விஷயமே கிடையாது. ஒண்ணு நீ புருஷனா இருக்கணும். இல்லை அண்ணனா இருக்க ணும். அண்ணன்னு சொல்லிட்டு வந்தா உட்காருன் னுவாங்க. ஸ்நேகிதம்னு சொன்னா உட்காரவே சொல்ல மாட்டாங்க."

"நான் வரவே கூடாதா."

"பின்னால ஒரு நாள் நாம பிரியபோறோம்கறபோது வந்து பார்த்துட்டு போ."

"ஏய்.. என்ன தடுக்கு தடுக்குனு பேசற."



"சும்மாப்பா. இதெல்லாம் அப்படியே ஓட்ட முடி யுமா. எனக்கு கல்யாணம்னு வரபோது உன்னை பார்க் கக் கூடாதுன்ற ஒரு முடிவுக்குத்தான் வந்தாகணும்."

"சந்தோஷமா இருக்கியா. இல்ல. துக்கமா இருக் கியா."

"ரெண்டும்தான். எஸ்.ஐ. வேலை கிடைச்சதுனால ஒரு சந்தோஷம். இலக்கியம் தெரிஞ்சதுனால ஒரு சந் தோஷம். உன்னை மாதிரி ஸ்நேகிதன் கிடைச்சதுனால சந்தோஷம். இப்படியொரு வீடு கிடைச்சதுனால துக்கம். இதை மீறி என்னால வரமுடியலைன்றதும் துக்கம்.

எல்லார் வாழ்க்கையும் அப்படிதான்டா. சந்தோஷம் மட்டுமே யாருக்கு இருக்கும் சொல்லு. கம்பனும் ஷெல்லியும் ஒரு கூட்டத்துல பேசணும். எனக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்றயா."

உடனே அவன் ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியின் புத்தகங்களை எடுத்து வந்தான். படித்தான். பிறகு விளக்கிச் சொன்னான்.

அவள் கம்பராமாயாணம் முழுவதும் பாடம் கேட்டிருந்தாள். அவன் சொல்லச் சொல்ல, விளக்கி உரையாற்ற பல குறிப்புகள் எடுத்துக் கொண்டாள். அவன் கூறும் ஆங்கிலக் கவிதைகள் எழுதிக் கொண் டாள்.

மூன்று நாள் அலுவலகத்திற்கு லீவு போட்டு விட்டு பெரிய உரை தயாரித்தாள்.

"இந்த உரையை படிக்கறதுன்னு முதல்ல நான் நினைச்சேன். ஆனா, ஏத்த இறக்கத்தோட பேசினா தான் நல்லாயிருக்கும். நான் கிட்டத்தட்ட மனப் பாடம் பண்ணியிருக்கேன். ஒரு தடவை உங்க வீட்ல அம்மா முன்னாடி உன்னையும் வச்சு பேசிடட்டுமா" என்று தொலைபேசியில் கேட்டாள்.

அவன் சம்மதம் தெரிவித்ததும், ஒரு நாள் காலை ஒன்பது மணிக்கு வந்து, காபி குடித்துவிட்டு நாற்பத்தைந்து நிமிடம் மலையருவி போல், காட்டாற்று வெள்ளம் போல் பேசினாள்.

அவன் அதிர்ந்து போனான்.

"அடேங்கப்பா... இவ்வளவு அழகா கம்பராமாயணம்."

அம்மா கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள்.

"ஷெல்லியை தாண்டிட்டாள் தமிழரசி. எங்கயோ இருக்கான் கம்பன்" என்று சாகேதராமன் சொல்ல "அதைத்தான் நாம செய்யணும். நாம ஷெல்லியையும் படிக்கலை. கம்பனையும் படிக்கலை. ரொம்ப அநியாயம் பண்ணிண்டிருக்கோம். எப்படியாவது கம்பனை படிக்க வைக்கறதுக்கு நாம முயற்சி பண்ணணும்" என்று சொன்னான்.

வெகு நாள் கழித்து, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை அம்மாவும் அவனும் கூட்டத்திற்கு போனார்கள்.

விலை உயர்ந்த பட்டுப் புடவையில் தலை நிறைய பூவோடு அழுத்தமான கொண்டையோடு, நெற்றியில் திருநீறும் சாந்துப் பொட்டோடும், காதுகளில் முத்து ஜிமிக்கியோடும் மேடைக்கு வந்தாள். எல்லோரையும் பார்த்து கை கூப்பினாள். குறிப்பாய் அம்மா இருக்கும் திக்கை நோக்கி அம்மாவை சுட்டிக் காட்டி அவள் கை கூப்பி தலை வணங்கினாள்.

கூட்டம் அவர்களைத் திரும்பிப் பார்த்தது.

வீட்டில் பேசியதை விட இன்னும் அழகாகப் பேசினாள். கூடுதலாக சில குறிப்புகள் வெளிப்பட்டன.

ஆங்கிலத்தில்தான் பேசுவேன் என்று அலட்டிக் கொள்கிறீர்களே. ஆங்கிலம்தான் அற்புதமான மொழி என்று சொல்கிறீர்களே. ஆங்கிலத்தில் எல்லா விஷயங்களும் இருக்கிறது என்று சொல்கிறீர்களே. இதோ நான்-கம்பனைச் சொல்கிறேன். கம்பனுக்கு இணையாக ஷெல்லியையும் சொல்கிறேன். உங்களுக்கு யார் கவிஞர் என்பதை புரிய வைக்கிறேன் என்று சொல்லி ஷெல்லியின் கவிதையைச் சொல்லி, அதேவிதமாக கம்பன் எப்படி யோசித்திருக்கிறான் என்று சொல்ல, கூட்டம் எழுந்து நின்று கைதட்டியது.



நாற்பத்தைந்து நிமிடங்கள் பேச வேண்டியவள், ஒரு மணி நேரம் ஐந்து நிமிடங்கள் பேசினாள்.

கூட்டம் அவளை உட்காரச் சொல்ல வில்லை. ஒரு வரும் எதிர்க்குரல் எழுப்பவில்லை. ஆணி அடித்தது போல் திகைத்துக் கிடந்தார்கள்.

அவள் முடித்ததும் கூட்டம் எழுந்து கரவொலி எழுப்பியது. மேடைக்கு நாலைந்து பேர் ஓடி அவளை கை குலுக்கினார்கள். தலையில் கை வைத்து ஆசிர் வதித்தார்கள். ஒரு பெண் ஒருசால்வை கொண்டு போய் அவளுக்கு போர்த்தினாள். மற்ற பேச்சாளர்கள் முகம் சுளித்தார்கள்.

"பார்ப்பானுங்களுக்கெல்லாம் பேயறை வச்ச. இங்கிலீஷ்ல தான் பேசுவேண்டான்னு சொல்றானுங்க பாரு. ஆப்பு அடிச்ச நீ போ" என்று சொல்ல பல் தெரிய சிரித்தாள்.

மெல்ல மெல்ல அம்மாவுக்கும், சாகேதராமனுக்கும் அவளைப் பற்றி புரியத் துவங்கியது.

அவள் வேறு வகை. அடிப்படையில் வேறு கொள்கை. தமிழ் மட்டுமே சிறந்த மொழி என்று சொல்ல வேண்டுமென்ற வெறி அவளுக்கும் இருக்கத் தான் செய்கிறது. நேரம் வந்தபோது அதை வெளியே சொல்லியும் சரியான நேரம் இல்லாதபோது உள்ளே பதுக்கி வைத்தும் தந்திரமாக நடந்து கொள்கிறாள். ஆங்கிலம் கற்பதே ஆங்கிலத்தை இழிவுபடுத்துவதற்குத் தான். அவளுக்கு தமிழ் வெறி சிறுவயதிலிருந்து ஊட்டப்பட்டிருக்கிறது. தமிழர் மட்டுமே உலகத்தில் உயர்ந்தவர்கள் என்று சொல்லித் தரப்பட்டிருக்கிறது.

அதை நாகரீகப் போர்வையால் மறைத்துக் கொண்டாலும் அவ்வப்போது அந்த முகம் வெளிப்படுகிறது. இவளை எப்படி மனைவியாக ஏற்றுக் கொள்வது. ஸ்நேகிதியாக ஏற்றுக் கொள்வது கூட சிரமம்தான். எனக்கு தமிழரசி கந்தசாமியைத் தெரியும் என்றுதான் சொல்ல வேண்டும். அதற்கு மேல் அவளோடு எந்த சங்காத்தமும் வைத்துக் கொள்ள முடியாது.

வீட்டிற்கு வரும் வரை அம்மா மௌனமாக இருந்தாள்.

"எப்படிம்மா இருந்தது ஸ்பீச்."

"ஆங்.. நல்லாயிருந்தது. கை தட்டல் வாங்கணும்னு தான் பேசினாளே தவிர உண்மை என்னன்னு பேசலையே. கைதட்டல் வேணும்னு நினைச்சா வாங்கிட்டா. உண்மை வேற."

"என்னம்மா உண்மை."

"ஷெல்லியும் கம்பனும் இரண்டு தாவரங்கள். அந்த பூமிக்கு ஏற்றபடி அந்தச் சூழ்நிலையில் ஒரு தாவரம் வளருகிறது. இந்த பூமிக்கு ஏற்றபடி ஒரு சூழ்நிலையில் ஒரு தாவரம் வளருகிறது. இந்தத் தாவரம் உயர்வா, அந்தத் தாவரம் உயர்வா என்று எவரும் ஒப்பிட்டு பார்க்கக் கூடாது. ஒப்பிட்டுப் பார்த்தவன் முட்டாள். எனக்கு ஷெல்லியே தெரியாது. ஆனால், நீ சொல்லி ஷெல்லியைத் தெரிந்து கொள்ளுகிறபோது எவ்வளவு அற்புதமான மனிதன். ஒரு குளிர்பிரதேசத்திலிருந்து, நெடுங்கால நாகரீகம் இல்லாத ஒரு இடத்திலிருந்து ஒரு தனி மனிதன் எவ்வளவு அழகாக தத்துவ வாதியாக மேலே வந்திருக்கிறான். கம்பனுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் முன்பு வாழ்ந்திருந்த வேதகாலம் உதவி செய்திருக்கிறது. அது தவிர இன்னொரு விஷயத்தை இவர்கள் மறந்து விட்டார்கள்."

"என்னம்மா."

"ஷெல்லி ஒரிஜினல். கம்பன் அப்படியல்ல."



"என்னம்மா சொல்ற."

"ஷெல்லி தனக்குள் பட்டதை பொங்கி வெளியே சொல்லியிருக்கிறான். கம்பனோ ராமாயணம் என்கிற வடமொழிக் காவியத்தை ஜீரணம் செய்து அந்தத் தத்துவங்களை உள்வாங்கி அதை தமிழ்ப் படுத்தியிருக்கிறான். அதில் தன்னுடைய கை வண்ணங்கள் அதிகம் காட்டியிருப்பினும் கம்பனுடைய ராமாயணம் மொழி பெயர்ப்பு அல்லவா. கம்பனுடைய மூலம் வேறு இடத்தில் இருக்கிறதல்லவா. அங்கே தத்துவங்கள் நிரம்ப இருக்கின்ற ஒரு காவியமாகவே அது பாராட்டப்பட்டு வருகிறது அல்லவா. ஷெல்லிக்கு அப்படியொரு மூலம் ஏதுமில்லையே. அவனே மூலம்தானே. அவனே விதைதானே. கம்பன் கிளை. ஷெல்லி விதை."

"ஏம்மா அவகிட்ட சொல்லலை."

"தமிழ் மொழியை இழிவு செய்கிறவர்கள் யாராயினும் விடமாட்டேன்னு அவ கத்துவா. எதுக்கு."

"உனக்கு தமிழரசியை பிடிக்கலையாம்மா."

"எந்த விஷயத்தில் முரட்டுத்தனம் செய்தாலும் எனக்குப் பிடிக்காது. கம்பனையும், ஷெல்லியையும் ஒப்பிட்டு இரண்டு பேரும் அற்புதமான கவிஞர்கள்னு சொல்லணுமே தவிர, கம்பனை மாதிரி ஒரு கவிஞன் உண்டான்னு சொல்றதுக்கு ஷெல்லியா. முருங்கைக் காய் பார் எத்தனை நீளம். பரங்கிக்காய் பார் எத்தனை குட்டைன்னு யாராவது பேசுவாளா. முட்டாள்தனமா இல்லை. அடிப்படையிலேயே இவங்ககிட்ட ஏதோ ஒரு தப்பு இருக்குடா. உலகம் முழுவதும் அணைத்துக் கொள்கிற புத்தி வந்தாதான் இனிமே நன்னாயிருக்க முடியும். சின்னக் குழுவா இருந்தா மனசும் குறுகிப் போய், புத்தியும் குறுகிப்போய் வாழ்க்கையும் குறுகிப் போயிடும்."

"தமிழரசி வந்தா என்ன சொல்லலாம்."

"வரமாட்டா."

"ஏன்."

"அவளுக்கு நண்பர்கள் வட்டம் பெரிது. அவளால நண்பர்களை ஏற்படுத்திக் கொண்டே இருக்க முடியும். விலக்கிக் கொண்டேயிருக்க முடியும் கல்யாணம் ஆகறவரைக்கும்."

"அதுக்கப்புறம்."

"உதைப்பான். வீட்ல உட்கார்ந்து சோறு சமைடின்னு சொல்லுவான். அதுவரைக்கும் நண்பர் வட்டத்தை பெரிசு பண்ணிக்கறதுதான் அவளுடைய ஆசை. ஒரு ஆட்டம் ஆடிப் பார்க்கறதுதான் அவளுடைய எண்ணம். அதனால்தான் அத்தனை வேகமா ஓடிவரா. அத்தனை வேகமா பழகறா."

"அம்மா நீ கூட கை கோர்த்துண்டு கொண்டாடினியே."

"நம்மள ஒருத்தர் கொண்டாடறப்போ நாம மரம் மாதிரியா இருக்க முடியும். இருந்தா தப்பில்லையா. பதிலுக்கு கொண்டாடினேன். அவ விட்டுட்டுப் போறா. சரின்னு நாமளும் நகர்ந்துக்க வேண்டியது தான்."

அம்மா சொன்னது சரியாயிற்று.

அடுத்த ஒரு மாதம் அவள் வரவேயில்லை. ஒரு டெலிபோன் கூட இல்லை.

எம்.டி. அழைப்பதாக ஒரு நாள் தகவல் வந்தது. ஓடிப்போய் உள்ளே நின்றான். அவர் உட்காரச் சொன்னதும் உட்கார்ந்தான்.

"நான், என் பொண்டாட்டி, என் பொண்ணு, என் புள்ளை ஐரோப்பா டூர் போகப் போறோம். ஒரு இடர்னெரி தயார் பண்ணணும். டிராவல் ஏஜன்ட்டிடம் போய் ஒண்ணுக்கு நாலு விதமா இடர்னெரி தயார் பண்ணிண்டு வரணும். எந்தெந்த ஊர் பார்க்கணும். அந்த ஊர்ல என்ன விசேஷம். எத்தனை நாள் தங்க



ணும். அந்த ஊர்ல என்ன செலவாகும். அப்படிங்கற மாதிரி நிறைய தகவல்கள் வேணும். இது கொஞ்சம் பெரிய பிராசஸ். கவனமா பண்ணிண்டு வரியா. நீ சொல்றதைப் பொறுத்துதான் என் டூர் நன்னா அமையும்" என்று அவர் பல் தெரிய சொல்ல "நிச்சயமா பண்ணிண்டு வரேன். இப்போ உங்க மனசுல என்ன இருக்கு. எது எது பார்க்கணும்னு இருக்கு."

"எனக்கு ஒண்ணுமே தெரியாதுடா. ஐரோப்பா பத்தி எங்க நாலு பேருக்கும் ஒண்ணும் தெரியாது. நீ ஐரோப்பா பத்தி கொஞ்சம் படிச்சதுனால சொல்றோம்" என்று சொல்ல 'சரி ஸார்' என்று போனான்.

"டேய்... சாகேதராமா."

"என்ன ஸார்."

"அதுவரைக்கும் உன் டேபிள்ள இருக்கற வேலையையெல்லாம் வரதாச்சாரிய பார்க்கச் சொல்லு. நீ இதே வேலையா இரு. இது பெரிய வேலைன்னு எனக்குத் தெரியும்" என்று சொன்னார்.

அவன் தன்னுடைய இடத்திற்கு வருவதற்குள் வரதாச்சாரிக்கு கட்டளை வந்து விட்டது.

"வாங்கோண்ணா. எடுபிடி ஆயிட்டேளா. நினைச்சேன். என்னிக்கோ ஒரு நாள் நீ எடுபிடி ஆகப் போறேன்னு, அதுகள் உன்னையேதான் ரொம்ப நாளா பார்த்துண்டிருந்தது. பளிச் பளிச்சுனு வேலை செய்யறியோன்னோ, கூட்டிண்டுடுத்து."

"என்ன தப்பு."

"இந்த வேலை அற்புதமான வேலை. இந்த வேலையை தெரிஞ்சவனுக்கு வேற எந்த பைனான்ஸ் கம்பெனியும் வேலை தரும். குறிப்பா நீ பாம்பேக்கு கிளம்பி போனேன்னு வச்சுக்க. இந்த இடத்துல ஏழு வருஷமா நான் இருந்தேன். இன்ன டிபார்ட்மென்ட்டை கவனிச்சுண்டேன்னு சொன்னன்னு வச்சுக்கோ, உன்னை கண்டேன் கண்டேன்னு எடுத்துப்

பான். இன்னிக்கு உனக்கு சம்பளம் பதினாலாயிரம் ரூபா. பாம்பே போனா இருவத்தஞ்சாயிரம் ரூபா சப்ஜாடா கொடுப்பான். பாம்பே போறேன்னு சொல்லு. உனக்கு வேற வேலைக்கு நான் ஏற்பாடு பண்றேன். பைனான்ஸ் கம்பெனிலேர்ந்து கூப்பிடச் சொல்றேன்."

"எதுக்கு உம்ம மச்சினிக்கு என் சீட்டை கொடுத்துடலாம்னு பார்க்கறீரா."

"போடா, சோம்பேறி."

சாகேதராமன் சொன்னதிற்கு அடுத்த சீட் வரதாச்சாரி கெட்ட வார்த்தையில் பலதும் சொன்னார்.

"உனக்கு நல்லதுன்னு சொன்னேன் பார். என்னை ஜோட்டால அடிக்கணும்" என்று எழுந்து நின்று திட்டினார்.

"பாம்பேல்லாம் போனா லவ் பண்ண வேண்டிய அவசியமில்லை."

வேறு யாரோ சொன்னது ஞாபகம் வந்தது.

"ஏன் எல்லாரும் ரொம்ப பிசியா இருப்பாளா."

"அதெல்லாம் இல்லை. படுக்க வறியான்னு மூஞ்சிக்கு நேரா பொம்மனாட்டிகிட்டக் கேட்கலாம். அவ வரேன், வரமாட்டேன்னு சொல்லிடுவா. என்ன இப்படி கேட்டுட்டான்னு ஒருத்தியும் மூஞ்சியை தூக்கி வச்சுக்க மாட்டா."

"கடவுளே என்னால அப்படியெல்லாம் கேட்க முடியாது."

"கேட்க முடியாதா. படுத்ததுக்க முடியாதா."

"இதோ பார். நீ பொம்மனாட்டிய இழிவா நினைக்கிற. நான் அப்படி நினைக்கலை. அவளை கொண்டாடணும்னு ஆசைப்படறேன். அவாளும் என்னை கொண்டாடணும்னு நினைக்கிறேன்."

"அதாவது தெய்வீகக் காதல்."



"தப்பா."

பாம்பே போய் பழந்தின்று கொட்டை போட்டவருக்கு எதிராகப் பேசும் போது "அதெல்லாம் நாப்பது வயசுக்கு அப்புறம் பேரெழவுன்னு தோணும்டா. பொம்மனாட்டி ஒரு உபயோகம். பொம்மனாட்டிக்கு நாம ஒரு உபயோகம். அவ்ளோதான். காதல்னு சொல்றது ஒரு மயக்கம். ஒரு அசட்டுத்தனம். புத்தியில்லாதவன் செய்ற விஷயம். மக்கா இருக்கறவனுக்குத்தான் காதல் வேணும். பரபரன்னு இருக்கறவனுக்கு காதல் இல்லை. நிறைய காசு சம்பாதிடா. காதல் என்ன என்னென்னமோ வரும். சொடுக்கினா பொம்பளை வருவா."

"நான் சொடுக்கவும் மாட்டேன். சொடுக்கி வர பொம்பளை எனக்கு வரவும் வேண்டாம்."

சாகேதராமன் சொல்ல இரண்டு பேர் கை குலுக்கினார்கள். இரண்டு பேர் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

உலகம் எப்பொழுதுமே இரண்டாகத்தான் இருக்கிறது என்பதை சாகேதராமன் புரிந்து கொண்டான்.

மானேஜிங் டைரக்டரின் குடும்பம் ஐரோப்பாவுக்கு பயணப்பட, எந்த டிராவல்ஸை அணுகலாம் என்று பலரிடம் விசாரித்து கௌ அண்ட் கிறிஸ்டோபர் என்ற கம்பெனியை நோக்கிப் போனான்.

கௌன்னா பசு. பசுக்கும் உல்லாசப் பயணத்துக்கும் என்ன சம்பந்தம் என்று யோசித்தபடி உள்ளுக்குள் போக அங்கே கம்பெனி பெயரைக் கேட்டதும் ஒரு இடத்திற்கு வழிகாட்டினார்கள். பெரிய அறைக்கு அழைத்துப் போனார்கள். அந்த அலங்கரிக்கப்பட்ட அறைக்குள் போய் உட்கார்ந்து அவன் முப்பத்தைந்து வயது பெண்ணிடம் கை நீட்டினான்.

"என் பெயர் சாகேதராமன்."

"ஆமாம். கேள்விப்பட்டிருக்கேன். உங்க எம்.டி. உங்களைப் பத்தி ரொம்ப நல்லா சொன்னார். நான் கௌசல்யா."

சட்டென்று உள்ளே ஒரு பொறி தட்டியது.

"கௌசல்யா அண்ட் கிறிஸ்டோபரா அதனால தான் கௌ அண்ட் கிறஸ்டோபர்னு போட்டேளா."

"ஆமாம்" என்று அவள் சிரித்தபடி பதில் சொன்னாள்.

"ரொம்ப நேரமா வழியில கௌவுக்கும் உல்லாசப் பயணத்துக்கும் என்ன சம்மந்தம்னு யோசிச்சுகிட்டிருந்தேன்."

"என்னை வீட்ல எல்லோரும் கௌன்னுதான் கூப்பிடுவா."

"கொஞ்சம் அந்த சாயல்தான் இருக்கு" என்று அவன் சொல்ல அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

கொஞ்சம் தாஷ்டிகமாக இருந்தாள். பெரிய உதடுகள். அகலமான கண்கள். கொழு கொழுவென்ற கன்னம். பெரிய இடை. பெருத்த தொடை. ஆனால் பம்பரமாகச் சுழன்றாள். இதமாகப் பேசினாள். வேகமாக முடிவெடுத்தாள்.

"ஐரோப்பா டூர் அவ்ளோதானே. இதுக்கு நான் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆறு விதமான டூர் இருக்கு. நிதானமா போறது. ரொம்ப வேகமாக போறது. கொஞ்சம் நிதானமும், கொஞ்ச இடத்துல வேகமாகவும் போறது அப்படின்னு பல் வேறு விஷயங்கள் இருக்கு. இந்தாங்க இந்த ஆறையும் படிச்சு பாருங்கோ. ஆயிரம் டாலர் முன்ன பின்ன ஆகுமே தவிர பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை. உங்க எம்.டிக்கு என்னுடைய அபிப்ராயப்படி நிதானமா போறதுதான் நல்லது. எல்லா இடத்துலயும் ஒன்றரை நாள் ஸ்டே. டே முழுக்க, ஒரு நைட் முழுக்க, ஒரு அரை நாள் ஷாப்பிங்குக்கு அப்படின்னு போட்



டிருக்கு. இந்த பி குரூப்புதான் நன்னாயிருக்கும். ஏ குரூப் ரொம்ப நிதானம். லண்டன்ல மட்டும் மூனு நாள் டைம் கொடுப்போம். ரொம்ப வயசானவாளுக்கு எல்லாப் படியையும் ஏறி இறங்க முடியாது இல்லையா அதுக்காக. இதைப் படிச்சுண்டு வாங்கோ அதுக்கப்புறம் சொல்லுங்கோ. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் பார்க்கட்டுமா."

அவனை உடனடியாக வெளியே துரத்தினாள். வந்து அவன் எல்லாவற்றையும் பிரித்துப் படித்தான். குறிப்புகள் எடுத்துக் கொண்டான். எம்.டியோடு பேசினான்.

"ஆஸ்திரியால என்னடா இருக்கு. அது வேணாம் எடுத்துடு."

"ஸார். தப்பு. சும்மா ஆஸ்திரியால தெரு பெஞ்சுல உட்கார்ந்துக்கோங்க ஸார். ஒரு வயலின் வாசிப்பான். பக்கத்துல உட்கார்ந்து கேட்டுண்டிருங்க ஸார். சும்மா காலார நடந்து போங்க ஸார். குளுகுளுன்னு இருக்கும். சரியான சீஸன்ல போறேன். ஆஸ்திரியாவ மிஸ் பண்ணிடாதீங்க ஸார். வாழ்க்கையில் ஒரு தடவை ஆஸ்திரியாவ நீங்க பார்த்தே ஆகணும் ஸார். ஸ்பெயின்ல மாட்டு சண்டை."

"டேய்.. கத்தியில குத்தி சாவடிக்கறதை எதுக்குடா பார்க்கணும்."

"நம்மூர்ல ஆடு வெட்டலையா, அந்த மாதிரிதான்."

"டக்குனு ஒரு வெட்டுல சாவடிச்சுடுவோம். அதை குத்தி குத்தி மெல்லதானே சாவடிக்கறான். என்னால உட்கார்ந்து பார்க்க முடியாது."

"ஸார் விதம் விதமான அனுபவம் வேணும். போயிட்டு வாங்க."

"அந்த தேசத்து பெண்கள் ரொம்ப அழகா இருப்பா. நம்ம நிறம். ஆனா, வேற கட்டமைப்பு."

"பொண்டாட்டியோட போறேண்டா ஞாபகம் வச்சுக்கோ."

அவன் வீட்டுக்கு வந்து ஐரோப்பிய மேப்பை ஆராய்ந்து கொண்டிருந்த போது போன் மணி அடித்தது.

"சும்மா நான் மயிலாப்பூருக்கு வந்தேன். இன்னும் ஒரு பத்து நிமிஷத்துல உன் வீட்ல இருப்பேன். வரலாமோன்னோ."

எம்.டி. குரல் கேட்டது.

"ஸார். வாங்க ஸார்."

அவன் பரபரத்தான். வீட்டு ஹாலை சரி செய்தான். எல்லா விளக்குகளையும் எரிய வைத்தான். வாசலுக்குப் போய் பவ்யமாக காத்திருந்தான்.

அம்மா விவரம் கேட்க எம்.டி வருவதைச் சொன்னான்.

"ஏதாவது டிபன் பண்ணட்டுமா."

"பண்ணேன் ஸ்வீட் ஏதாவது இருக்காம்மா அவருக்கு ரொம்ப பிடிக்கும்."

"ஒண்ணுமே இல்லையே. என்ன பண்றது."

அம்மா திகைத்தாள்.

பக்கத்திலுள்ள சூர்யா ஸ்வீட் ஸ்டாலுக்கு டெலிபோனில் பேசினான்.

தன்னால் வரமுடியவில்லை என்றும் உடனடியாக அரைகிலோ பாதாம் அல்வா வேண்டும் என்றும் சொல்ல ஐந்தே நிமிடத்தில் பாதாம் அல்வா வந்து இறங்கியது.

அடுத்த மூன்றாம் நிமிடம் எம்.டி. காரைவிட்டு கிழிறங்கினார். கூடவே மனைவியும், மகளும் இறங்கினார்கள்.

மகளுக்கு பதினெட்டு வயது. பி.எஸ்.ஸி. இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருக்கிறாள் என்று அறிமுகப்படுத்த, அவன் பவ்யமாக கை கூப்பினான்.



அம்மா வாசலுக்கு வந்து அவர்களை வரவேற்றாள். உட்காரச் சொல்லி குளிர்ந்த ஜலம் கொடுத்தாள்.

அவர்கள் ஐரோப்பிய டூர் பற்றி உரத்த குரலில் விவாதிக்கத் தொடங்கியபோது அம்மா பாதாம் அல்வா கொண்டு வந்து வைத்தாள். தயிர் போண்டா என்கிற மேங்களூர் போண்டாவை சுடச்சுட கொண்டு வந்து பரிமாறினாள்.

"சபாஷ். நன்னாயிருக்கே இந்த போண்டா. இது என்னது."

எம்.டி. அதிசயமாகக் கேட்க அதனுடைய தன்மையைப் பற்றி அம்மா சொன்னாள்.

"இன்னும் ரெண்டு போடுங்கோ" என்று தட்டை நகர்த்த அம்மா நாலு போண்டா கொண்டு வந்து கொடுத்தாள்.

மறுபடியும் அவர்கள் குனிந்து விதம் விதமான சுற்றுப் பயணத் திட்டங்களைப் பார்த்து சாகேதராமனோடு விவாதித்தார்கள். கடைசியில் சாகேதராமன் சொல்கின்ற ஒன்றரை நாளுக்கு ஓரிடம் என்கிற இடமே முடிவாயிற்று.

லண்டனில் மூன்று நாள் இருக்கும்படியாக அவன் கேட்டுக் கொண்டான்.

"லண்டன் பார்த்தால் போதும். ஐரோப்பா பார்த்தது போல" என்று சொன்னான்.

லண்டனில் பார்க்க வேண்டிய இடங்கள் என்று ஒரு புஸ்தகம் கௌசல்யாவிடம் வாங்கியிருந்தான். அதை உடனே கொடுத்து விடலாமா என்று நினைத்தான். ஆனால், அந்தப் புத்தகம் மறுபடியும் கௌசல்யாவுக்கே வேண்டும். இவரிடம் புத்தகம் போனால் மறுபடியும் கௌசல்யாவுக்கு புத்தகம் கிடைக்காது.

"நாளைக்கு சாயந்தரத்துக்குள்ள லண்டன் பத்தின அத்தனை விவரங்களையும் நான் தரேன். ஸ்பெயின்

பத்தியும் தர முயற்சிக்கிறேன். ஆஸ்திரியா பத்தி நிச்சயமா தரேன்" என்று சொன்னான்.

மறுநாள் காலை ஏழு மணிக்கு ஆபீஸுக்குள் நுழைந்து வாட்ச்மேனைத் திறக்கச் சொல்லி உள்ளே போய் போன் புக்கைப் பிரித்து லண்டனைப் பற்றிய ஆறுபக்கமும், ஆஸ்திரியா பற்றி மூன்று பக்கமும், ஸ்பெயின் மற்றும் இதர நாடுகளைப் பற்றி இரண்டு பக்கமும், பிரான்ஸ் பற்றி ஆறுபக்கமும் ஜெராக்ஸ் செய்தான். பட்டியல் தயார் செய்தான்.

ஊருக்குப் புறப்படும்போது என்னென்ன கவனமாக இருக்க வேண்டுமென்று வேறு ஒரு புத்தகத்தில் போட்டிருந்தது. அவைகளைப் பற்றி கம்ப்யூட்டரில் டைப் செய்தான். பிரிண்ட் அவுட் எடுத்தான். ஒரு ஃபோல்டரில் கொண்டு போய் சரியாக வைத்து வீட்டிற்குக் கிளம்பிப் போனான்.

டிபன் சாப்பிட்டு விட்டு எம்.டியிடம் வீட்டிற்கு வருவதாகச் சொல்லி அங்கிருந்து நேரே மோட்டர் சைக்கிளில் வீட்டிற்குப் போனான்.

எம்.டி. கிளம்பிக் கொண்டிருந்தார்.

"ஆபீஸ்ல பார்க்கலாமே."

"இல்லை. ஸார் ஆபீஸ்ல வேண்டாம்."

"ஏன்."

"நீங்களும் நானும் இதைப்பத்தி உட்கார்ந்து பேசினா தேவையில்லாத திருஷ்டி படும். முதல்ல அதை அவாயிட் பண்ணனும். ரெண்டாவது நீங்க மட்டும் முடிவு பண்ணக்கூடிய விஷயமில்லை. அவாளும் பார்க்கணும்கறதுக்காகத்தான் அதைக் கொண்டு வந்தேன்." இரண்டு ஃபோல்டர்களையும் அவரிடம் நீட்டினான்.

அவர்கள் ஆவலாக வாங்கிப் பார்த்தார்கள். எம்.டியின் திருமகள் துள்ளிக் குதித்தாள்.



"எக்ஸலெண்ட் எவ்வளவு அழகா எழுதியிருக்கீங்க" என்று பாராட்டினாள். அருகே வந்து சந்தேகங்கள் கேட்டாள்.

அவன் நெஞ்சு குறுக்கே கட்டிய கைகளை பிரிக்கவே யில்லை.

மேடம்.. மேடம் என்றுதான் எம்.டியின் திருமகளை அழைத்தான்.

"நான் சொந்த செலவுலதான் ஐரோப்பா போறேன். ஆனா ஐரோப்பா போகறதுக்கு உல்லாசப்பயணம் மட்டுமே காரணம் இல்லை. லண்டன்ல மூணு நாள்னு சொல்றியே. நான் நாலு நாள் தங்கப் போறேன். லண்டன்ல ஒரு பைனான்ஸ் கம்பெனி என்னை வந்து ஏரியா முழுக்க எடுத்துக்கறியா. நீ கண்ட்ரோல் பண்ணுவியா அப்படின்னு கேட்கறான். ஏசியான்னு பேரை தவிர இந்தியா, பர்மா, மலேசியா, சிலோன், பாகிஸ்தான், வெஸ்ட் பெங்கால் இதுதான் முக்கியம். இந்தோனேசியா பிலிப்பைஸ் எல்லாம் வேற சில பேர் பார்த்துக்கறா. மாசத்துக்கு ரெண்டே முக்கால் லட்ச ரூபா சம்பளம் தரேங்கறான். அதான் அந்தப் பக்கம் போயிடலாமான்னு யோசனை பண்றேன். பி.குருப் பையே எடுத்துக்கலாம். கௌசல்யாகிட்ட சொல்லிடு. எவ்வளவு தரணும்."

"மொத்தமா கொடுத்துடணும்."

"கூடவே தரேன் வச்சுக்க சொல்லு."

ஐந்து லட்ச ரூபாய்க்கு ஒரே செக் கொடுக்கப் பட்டது.

கௌல்யாவைப் பார்க்கப் போக விதம் விதமாக பேசிக் கொண்டிருந்தாள். லண்டன் டெலிபோனோடு மன்றாடிக் கொண்டிருந்தாள்.

"நேத்து முழுக்க ஹோட்டல்ல குடிச்சுட்டு படுத்து தூங்கிட்டானுங்க. ப்ளைட்ட விட்டுட்டானுங்க.

இப்போ என் தாலியை அறுக்கறாங்க" என்று கோபமாகப் பேசினாள்.

"எதுக்கு கெட்ட வார்த்தையெல்லாம் சொல்லிண்டு."

"என்ன கெட்ட வார்த்தை."

"இப்போதான் கொஞ்சம் முன்னாடி சொன்னேளே."

"தாலி அறுக்கறேங்கறதா. அது ஒண்ணும் கெட்ட வார்த்தை இல்லையே."

"அது ஒரு மங்கலமானச் சின்னமில்லையா."

"எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை. கொஞ்சம் குண்டா இருக்கறதுனால கல்யாணமாகி குழந்தை பெத்துட்டேன்னு நினைச்சுண்டிருக்கீங்களா."

"உங்களை யாராவது சொல்வாளா. அந்த வார்த்தையைச் சொன்னேன்."

"ஏனோ எனக்கு அடிக்கடி அந்த வார்த்தைதான் வருது."

"ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா."

"பண்ணேன். லண்டன்ல இந்த நம்பர் பிடிச்சுக் கொடேன்.'

அவன் மடமடவென்று டெலிபோன் எண்களை அழுத்த தொலைதூரத்தில் மணி அடிக்கும் சத்தம் கேட்டது.

அவன் இன்னார் இருக்கிறாரா என்று விசாரித்து டெலிபோனை நீட்டினான்.

அவள் இன்னொரு நம்பர் எழுதி அவனிடம் கொடுத்தாள்

"இது பிரான்ஸ் நம்பர். அவன் இங்கிலீஷ்ல பேச மாட்டான். பிரெஞ்சுலதான் பேசுவான். பெல் அடிச்சவுடனே எங்கிட்ட கொடுத்திடுங்கோ" என்று சொன்னாள்.



அவன் அந்த நம்பரை அழுத்திக் கொடுக்க மறுபடியும் தொலைதூரத்தில் மணி அடித்தது. ஆனால், ஆங்கிலத்தில் அவர்கள் பேசினார்கள்.

"நாங்கள் சென்னையிலிருந்து பேசுகிறோம். மெட்ராஸ்" என்று உரக்க குரல் கொடுக்க அவர்களுக்குப் புரிந்தது.

"வி ஆர் வெயிட்டிங் ஃபார் யுவர் கால்" என்று ஆப்ரேட்டரிடம் சொல்லி வேறு யாரிடமோ தொலைபேசியை மாற்றிக் கொடுத்தாள். அந்த டெலிபோனையும் வாங்கி கௌசல்யா பேசினாள்.

லோக்கல் கால் ஒன்று அலறிற்று. அவன் எடுத்துப் பேசினான்.

வேறு ஏதோ ஒரு கம்பெனியிலிருந்து ஐரோப்பாவிற்கு எந்த விதமாகப் போவது நல்லது என்று கேட்டார்கள். கௌசல்யா இருக்கிறார்களா என்று விசாரித்தார்கள்.

"கௌசல்யா உதவியாளர் பேசுகிறேன் ஸார். ஐரோப்பாவிற்கு ஆறு வழிகள் இருக்கின்றன. அதில் இரண்டாவது வழி நிதானமானது. நீங்கள் தனியாகப் போக வேண்டுமென்றால் வேறு ஒரு விதம் இருக்கிறது. குடும்பத்தோடு போக வேண்டுமென்றால் வேறு விதம் இருக்கிறது. நீங்கள் எப்படி சுற்றுலா போக விரும்புகிறீர்கள்" என்று கேட்க தன் மனைவியோடு மட்டுமே போக விரும்புவதாக அவர் சொன்னார்.

"அப்படியானால் உங்களுக்கு பி குரூப்தான் சரியாக வரும்."

"என்ன செலவாகும்" என்று கேட்ட போது அவன் ஒரு ஆளுக்கு இத்தனை ஆகும் என்பதையும் விவரித்தான்.

நீங்கள் ஷாப்பிங் செய்வதைத்தவிர மற்ற எல்லாச் செலவுகள் எங்களுடையது என்று அவன் விவரிக்க அவர் சரியென்று சொன்னார்

வேறொரு டெலிபோன் அடித்தது.

கௌசல்யா பிரான்ஸோடு பேசிக் கொண்டிருந்தாள்.

அந்த டெலிபோனை அவன் எடுக்க அதில் ஒரு நடிகரின் குரல் கேட்டது.

ஆஸ்திரியா என்பதில் விசேஷம் என்ன என்று கேட்க அவன் ஆஸ்திரியாவைப் பற்றி தனக்குத் தெரிந்தது அத்தனையும் சொன்னான். அவர் மிக ஆர்வமாகக் கேட்டுக் கொண்டு குறிப்பெடுத்துக் கொண்டார்.

உங்கள் பெயர் என்ன என்று கேட்டபோது "நான் கௌசல்யாவின் உதவியாளன். என் பெயர் சாகேதராமன்" என்று சொல்ல மிக்க நன்றி என்று சொல்லி விட்டு வைத்தார்.

"ரொம்ப தேங்க்ஸ். நிஜமாவே இன்னிக்கு ஹார்ட் அட்டாக் வந்து செத்துப் போயிடுவோமோன்னு பயந்தேன். நீ வந்து காப்பாத்தின. சின்ன ஹெல்ப் பண்றியா. ஒரு ரெண்டு நாள் எனக்கு ஹெல்ப் பண்றியா. இது ஒரு பீக் அவர். மெட்ராஸ்ல மொத்தம் ஆறேழு டிராவல்ஸ் பிரமாதமா இருந்தது. அது ரெண்டு நொடிச்சு போச்சு நாலுதான் ஆப்பரேட் ஆகறது. அந்த நொடிச்சு போன கம்பெனி ஆளுங்க எல்லாரும் நம்மகிட்ட வராங்க. இது ஒரு நல்ல நேரம். லபக் லபக்குனு அள்ளலாம். ஒரு ரெண்டு நாள் என் கூட வந்து வேலை செய்யேன்."

"எனக்கு ஒண்ணும் தெரியாதே."

"நான் சொல்லித் தரேன். பெரிய விஷயமா. எனக்கு இந்த இடர்னெரி போட்டுக் கொடுத்துடு."

"ஒரு டூ ஹவர்ஸ்ல அழகா போட்டுக் கொடுத்துடறேன்."

அவன் பையிலிருந்து புத்தகம் பிரித்து புத்தகத்திலிருந்து செக் எடுத்து அவளிடம் நீட்டினான். ஒரே



செக்காக ஐந்து லட்சம் வந்தது பார்த்து அவள் குதித்தாள்.

"கடவுளே, நாளைக்கு கார்த்தால காசு இல்லையேன்னு நினைச்சுண்டிருக்கேன். அழகா கொடுத்துட்ட. தேங்க்யு வெரிமச்."

"இதையே க்ராஸ் பண்ணித் தரேளா."

"ஒரு தப்பும் ஆகாது. நீ இப்பவே சொல்லி பேங்க்ல மாத்திக்கோ. இல்லை, என் பேங்க்ல சொல்லி மாத்தச் சொல்றேன்."

"அதை கொஞ்சம் தயவு செய்து சொல்லேன். உன் பேங்க்ல கேரண்டி கொடுக்கச் சொல்லேன்."

அவள் உடனடியாக தன்னுடைய பேங்கை அழைத்து ஒரு ஆளிடம் செக்கை கொடுத்து அனுப்ப இவன் தன்னுடைய பேங்க்குக்கு எம்.டி. யினுடைய செக் போயிருப்பதாகச் சொல்ல அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொண்டு அடுத்த நாப்பதாவது நிமிடம் அவள் கேட்ட காசை கொடுத்தார்கள்.

"வா, போய் ஏதாவது சாப்டுட்டு வரலாம்."

அவள் சட்டென்று பையை மாட்டிக் கொண்டு மாருதி காரில் ஏறி அமர்ந்து கொண்டாள். அவன் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டான். நேரே பேங்க் போய் நிறுத்தினாள்.

ஒரு லட்ச ரூபாய் காசு கரன்சியாக வாங்கிக் கொண்டாள். சுற்றி ஒரு பேப்பரில் போட்டுக் கொண்டு பையில் திணித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

சரவண பவனுக்குள் நுழைந்து இரண்டு பேருக்கும் ஆர்டர் செய்தாள்.

"அழகா இருக்க. கெட்டிக்காரனா இருக்க. நல்ல பர்சனால்டியா இருக்க. இங்கிலீஷ் பிரமாதமா பேசற. எங்கிட்டயே வேலைக்கு வந்துடறியா."

அவன் சிரித்தான்.

"ரெண்டு நாள்தானே கேட்டீங்க. பர்மனென்டா அடிமையாக்கப் பார்க்கறீங்களே."

"இல்லை. நான் யாரையும் அடிமையாக்க மாட்டேன். அடிமை ஆகவும் மாட்டேன். அது என் குணம்."

"அப்போ கல்யாணம்."

"எதுக்கு கல்யாணம் சொல்லு. தேவையில்லாத வேலை. நிறைய பணம் சம்பாதிக்கணும். காசு இப்போ வேண்டாம்னு தோணும். பின்னால ரொம்ப அவசியம். உன் பதினாலாயிரம் ரூபா காசு உனக்கு காசே இல்லை. ஒரு மாசத்துக்கு ஒரு ஆள் குறைந்த பட்சம், மிகக் குறைந்த பட்சம் ஒரு லட்ச ரூபா சம்பாதிக்கணும். அதுக்குண்டான வசதியை வீட்ல வச்சுக்கணும். அப்பா சம்பாதிச்ச வீடு இருக்குன்னு நீ சொல்றதே எனக்கு அபத்தமா இருக்கு. நீ என்ன சம்பாதிச்ச. உன் வீடு எது. உன் சம்பாத்தியத்துல நீ வீடு வாங்கணும். ஏன் மோட்டர் சைக்கிள்ள வர. கார்ல வரணும். ஏன் பைனான்ஸ் கம்பெனியில ஒர்க் பண்ற. நீ ஒரு பைனான்ஸ் கம்பெனி ஆரம்பிக்கணும்."

"நான் அந்த மாதிரி வேகத்துக்கு இன்னும் தயாராகலை."

"இப்போ ஆரம்பிச்சாதான் நாப்பது வயசுல அந்த இடத்துக்கு போக முடியும். இப்போ வேணாம்னு உட்கார்ந்துட்டா கடைசி வரைக்கும் கிடைக்கவே கிடைக்காது."

"எனக்கு வேண்டாம்னு சொல்றேன்."

"ஏன் சொல்ற. உனக்கு அந்த திறன் இருக்கு. நூறு மைல் ஓடக்கூடிய திறன் இருக்கு. ஓடு, நான் நாப்பது மைல்தான் போவேன்னு சொன்னா அது உனக்கு நீ பண்ற துரோகம்."

"உனக்கு அப்பா அம்மா யாரும் இல்லையா."



"இருந்தா."

"இருந்தான்னா."

"பாம்பேல இருக்கா."

"ஏன் இங்க கூட்டிட்டு வரவேண்டியதுதானே."

"என் லைஃப் அவாளுக்கு பிடிக்கலை."

"என்னது என் லைஃப்."

"நான் எவன் கூடயாவது சுத்துவேன். ராத்திரி ஆனா கொஞ்சம் தண்ணிபோடுவேன். இதெல்லாம் பார்த்துட்டு எங்கப்பா மிரண்டுட்டார். ஐய்யய்யோ- நீ இந்த ஆத்துல இருக்காதடி. நீயொரு அவமானச் சின்னம், அப்படின்னார். அவமானச் சின்னத்தை வீட்ல வச்சுப்பானேன்னு சொல்லி நான் உதறிட்டு கிளம்பிட்டேன்."

"எதுக்கு தண்ணி போடணும்."

"இந்த கத்து கத்தறேனேடா. ஒரு நேரத்துல மூணு ஃபோன் அட்டெண்ட் பண்றேனே. மூளை கொதிச்சு போறது. அது அடங்கணும்னா ரெண்டு பெக் விஸ்கி அடிச்சாதான் முடியும்."

"ஆத்துல யார் சமைக்கறா."

"ஒரு ஜட்டி கூட தோய்க்கறது கிடையாது. எல்லாத்தையும் லாண்டரிக்கு போட்ருவேன். ஆபீஸ் விட்டு போறபோது கடைக்குப் போய் என்ன வேணுமோ அதை வாங்கிண்டு போயிடுவேன். குறைந்த பட்சம் நான் செய்யற சமையல் வேலை, ஒரு காபி போட்டுக்கறது. முட்டை ஆம்லெட் பண்றது அவ்ளோதான்."

"சமைக்க மாட்டியா."

"சமைக்கத் தெரியாது."

"ஏதாவது ஹர்தால் வந்து ஹோட்டல் மூடிட்டா."

"மெட்ராஸ்ல நல்ல மெஸ் இருக்குடா. அவன் என்ன ஹர்தாலா இருந்தாலும் எத்தனை நாள் ஹர்தாலா இருந்தாலும் அழகா கொண்டு வந்து வீட்ல

பரிமாறி டிபன் பாக்ஸை அலம்பி எடுத்துண்டு போயி டுவான். நான் என்ன சொல்றேனோ அதை சமைச்சு கொண்டு வந்து கொடுப்பான். என்ன கூட இருவது ரூபா. கொடுத்துட்டுப் போறது. அந்த சாப்பாடு சாப் பிட்டிருக்கியா. எழுபது ரூபாய்க்கு ரொம்ப நன்னா யிருக்கும். சிக்கன் சாப்பிடுவியோ."

"இல்லை. பழக்கம் இல்லை."

"நான் சாப்பிடுவேன். எனக்கு ரொம்ப பிடிச்சது போர்க். பன்னிக்கறி. உடம்புக்கு அவ்வளவு நல்லது."

"நீ குண்டா இருக்கறதைப் பார்த்தா நல்லா சாப்பிடுவியோன்னு தோன்றது."

"இல்லை. எக்ஸர்ஸைஸ் இல்லை. இளைக்கணும்னு ஆரம்பிச்சேன் வச்சுக்கோ ஒரே வாரத்துல இளைச்சு காண்பிப்பேன். கீரை, வெள்ளரிக்காய், ஆப்பிள் அப்ப டின்னு சாப்டுட்டு சோறு பக்கமே போகாத சப்பாத்தி கூட சாப்பிடாத பச்சைக் காய்கறி சாப்டுட்டு ஒரு வாரம் எக்ஸர்ஸைஸ் பண்ணாக்க உடம்பு சருக்குனு இளைச்சுடும். நீ யாரு கௌசல்யா சிஸ்டரான்னு என்னையே கேட்பாங்க. காலையில எட்டுமணிக்கு கிளம்பினா ராத்திரி எட்டு ஒன்பது மணி ஆகறது. போய் எங்க எக்ஸர்ஸைஸ் பண்றது. தண்ணி போட் டுட்டு தூங்க வேண்டியதுதான்."

"உன்னுடைய இடர்னெரி எப்போ ரெடியாகும்."

"இப்போ நாலு மணிக்குள்ள கொடுத்துடறேன். ஆனா ரெண்டு நாள் எனக்கு ஹெல்ப் பண்ணக் கூடாதா. பைனான்ஸ் கம்பெனியில அப்படியே உட்கார்ந்து பல்லு குத்திண்டிருக்கறதுக்கு இந்த மாதிரி பரபரன்னு வந்து வேலை செய்யக்கூடாதா."

"உன் கூட இருக்கறது சந்தோஷமாகத்தான் இருக்கு. இந்த பரபரப்பு எனக்கும் பிடிச்சருக்கு."

"உன்னால தாக்கு பிடிக்க முடியுமான்னு தெரியலை."



"ரெண்டு நாள் உன் கூட இடர்னெரி ப்ரிபேர் பண்ணிண்டிருக்கேன்னு சொன்னா அவர் ஒண்ணும் சொல்ல மாட்டார். ரெண்டு நாளைக்கு அப்புறம் கொடுக்கலைன்னா நான் மாட்டிப்பேன். அதனால இன்னிக்கு சாயந்திரத்துக்குள்ள கொடுத்துடு. நாளைக் கும் நாளை மறுநாளும் நான் உன் கூட இருக்கேன். எந்த உதவியானாலும் பண்றேன்."

"தேங்க்யு வெரி மச்."

அவனை இழுத்து சரவண பவனுக்குள்ளேயே முத்தமிட்டாள்.

மறுபடியும் கார் ஏறி வந்தாள்.

மிகக் கவனமாக பட்டியலைத் தயாரித்தாள். பலமுறை தன் சந்தேகங்களை அங்கங்கே தெளிவு படுத்திக் கொண்டு விதம் விதமான அனுபவங்களை அவர்களுக்கு தரவேண்டுமென்று ஆசைப்பட்டு. பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றி மீண்டும் குறிப்புகள் எழுதி அவனுக்குக் கொடுத்தாள்.

ஒரு மணி நேர வேலைக்குப் பிறகு மிக அற்புதமான ஒரு பட்டியல் தயாராகியது.

"இது ஓ.கே.யா இதை ஓ.கே.ன்னு சொல்லிட்டா, உடனே கன்ஃபார்ம் பண்ண ஆரம்பிச்சுடு. இன்னி லேர்ந்து பதினஞ்சு நாளைக்கப்புறம் அவர் கிளம்ப லாம்."

"ஓ.கே. நான் சொல்றேன். போட்டுடு" என்று சொல்ல, லண்டன் பாரீஸ் என்று அவள் பேசத் துவங் கினாள். டெலிபோனில் தெளிவாக உரையாடினாள். ஆங்கிலம் அருவி போல் பொங்கியது.

அவள் பேசிக் கொண்டிருக்கும்போத அந்த இடத்தை சுத்தம் செய்ய ஆரம்பித்தான். ஒரு டர்க்கி டவலை கொண்டு வந்து டேபிளைத் துடைத்து பேப் பர்களை அடுக்கி வைத்து மேலேயிருந்த ஒட்டடை களை அகற்றி படங்களைத் துடைத்து அவளை எழுந்

திருக்கச் சொல்லி சற்று நொடித்துக் கொண்டிருந்த அவள் சுழல் நாற்காலியை சரி செய்து, ஏ.சி.யின் சத்தத்தை குறைத்து டேபிளில் ஏறி மின் விசிறியை சரி செய்து அந்த இடத்தை முடிந்தவரைக்கும் அழகு படுத்தினான். ரூம் ஸ்ப்ரேயர் அடித்தான்.

லண்டனோடு பேசி கொண்டே சின்முத்திரை காட்டி அற்புதமாக இருக்கறது என்று சொன்னாள்.

"ஸ்பெயின்லேர்ந்து கன்ஃபர்மேஷன் வரலை. வீட்டுக்கு போன் போடச் சொல்லியிருக்கேன் வா, என் வீட்டுக்கு வா. என் வீடு பார்" என்று சொல்லி அவர்கள் இரண்டு பேரும் வீட்டிற்குப் போனார்கள்.

அவள் வீடு அழகாக இருந்தது. நிறைய சாமான்கள் இருந்தன. பல சாமான்கள் வெளிநாட்டு சாமான்களாகவே காணப்பட்டன.

அவன் கண்ணில் ஒரு மாண்டலின் பட்டது. சுவரில் மாட்டியிருந்தது. அதை எடுத்து துடைத்தான். மடியில் வைத்துக் கொண்டான்.

அவள் வாங்கி வந்த பொட்டலங்களை பிரித்து பரப்பினாள். உள்ளே போய் பால் காய்ச்சிக் கொண்டு வந்தாள். இரண்டு டீஸ்பூன் ஹார்லிக்ஸ் போட்டு அதை அப்படியே மிக்ஸியில் விட்டு கரைத்தாள். இரண்டு டம்ளர்கள் கொண்டு வந்து எதிரே வைத்தாள்

அவனுக்கு சுக்கா ரொட்டியும், உருளைக் கிழங்கும், அவளுக்கு வெள்ளைச் சாதமும், கிரேவியோடு கூடிய கோழி வறுவலுமாய் கூடிய உணவு பரிமாறினாள்.

"கொஞ்சம் இதை சாப்பிடறியா" என்று அவனைக் கேட்க அவன் வேண்டாமென்று மறுத்தான்.

அவள் ராவாக ஒரு டம்ளரில் விஸ்கியை ஊற்றிக் கொண்டு வேகமாக குடித்தாள்.

அவன் மாண்டலின் வாசிக்க ஆரம்பித்தான்.



டோரைவிட மாண்டலினில் சின்ன மாற்றங்கள் இருந்தன. ஆனால், டோர் வாசிக்கறவனால் மாண்டலின் வாசிக்க முடிந்தது.

முதலில் விரல் அசைவுகள் சற்று தடுமாறின.

"ஹேய்.. வாசிக்கிறியே."

"நீ வாசிப்பியா" என்று அவளைக் கேட்க "இல்லை சும்மா ஒரு ஹாபீஸ். மேண்டலின் பார்த்தவுடனே வீட்ல மாட்டி வைக்கணும்னு தோணித்து. வாங்கிண்டு வந்தேன். ஸ்பெயின்ல விக்கறான்."

மெல்ல பாட்டுகள் வாசிக்க "ஏக்ளாஸ். ரொம்ப நல்லா வாசிக்கற. டேய் நீ பெரிய ஆளுடா. என்னென்னவோ தெரிஞ்சு வச்சுண்டிருக்க."

அவள் இன்னொரு கிளாஸ் விஸ்கி ஊற்றிக் கொண்டாள். சரக்கென்று குடித்தாள். கோழியை பிய்த்து வாயில்போட்டுக் கொண்டு மென்றாள். விரலால் கிரேவியை வழித்து நக்கினாள். கொஞ்சம் சாதத்தில் ஊற்றி பிசைந்து விழுங்கினாள்.

"நீ சாப்பிடலை"

"நீ சாப்பிடு. நான் சாப்பிடறேன்."

சாகேதராமன் அவளை பார்த்தபடியே வாசித்தான். அவளுக்கு ஆறுதலாக இருக்க வேண்டுமென்று நினைத்தான்.

அவள் கண்கள் போதையில் மிதந்ததைப் பார்த்து என்ன வாசிப்பது என்று உள்ளுக்குள் வேகமாக யோசனை செய்தான். அவள் மயங்கும் வண்ணம் வாசிக்கிற ஒரு பாடல் என்ன என்கிறபோது அவள் எழுந்து நின்று அவனுக்கு அருகில் வந்தாள். காலைத் தூக்கி அவனுக்கருகே வைத்துக் கொண்டாள்.

"சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா.. வாசிப்பியா. வாசி. நான் சாகறதா இருந்தா அதை கேட்டுண்டே நான் செத்துப் போகணும். அந்த உன் கண்ணில் நீர்

வழிந்தால்— அப்படின்னு பாடி அதை காது கேட்டுண்டே இருக்கும்போது என் பிராணன் போகணும்னு எனக்கு ஆசைடா வாசி. அதை வாசி. அதை வாசிச்சா போதும். நான் என்னை மறந்துடுவேன்."

ஓடி வருகையிலே கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால்
உன்னைப் போய் ஆவி தழுவுதடி
உச்சிதனை முகர்ந்தால் கர்வம் ஓங்கி வளருதடி
மெச்ச உன்னை ஊரார் புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி...

அவன் வாசிக்க அவள் கண்ணிலிருந்து நீர் பெருகியது. அவள் டம்ளரை கீழே வைத்துவிட்டு தரையில் உட்கார்ந்து கொண்டு அவன் முழங்காலில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

கன்னத்தில் முத்தமிட்டால்
உள்ளந்தான் கள் வெறி கொள்ளுதடி....

அவன் வாசித்தான்

அவள் எழுந்து நின்று மார்பில் அடித்துக் கொண்டாள். அழுதாள்.

"இப்படி கொஞ்சணும். இப்படி கொஞ்சணும்னு எத்தனை ஏங்கயிருக்கேன். எவ்ளோ பேரை கேட்டிருக்கேன். எல்லோரும் எட்டி எட்டி உதைச்சாளே. எங்கப்பாலேர்ந்து, எங்கம்மாலேர்ந்து என்னை தரதரன்னு தலைமுடியை பிடிச்சு இழுத்துண்டு வந்தாளே தவிர யாரும் இந்த கௌசல்யாவை கொஞ்சவே இல்லைடா. ஃபர்ஸ்ட் ரேங்க், செகண்ட் ரேங்க்தாண்டா வருவேன். என்ன பெரிய ரேங்க் அப்படின்னு பிடிச்சு தள்ளுவாடா எங்கம்மா. ஏன் எங்கம்மாக்கு என்ன கண்டா பிடிக்கவேயில்லைன்னு தெரியவேயில்லை. நாலும் பொண்கள், நான் மூணாவது பொண்ணு. செருப்படி வாங்கியிருக்கேன். அடிவாங்க அடிவாங்க



கோபம் வரும். இவாள எதிர்த்து நிக்கணும்னு வரும். இவா இல்லாத நிக்கணும்னு வரும். நின்னுட்டேண்டா. பதினேழு லட்ச ரூபா என்னோட சொந்தப்ணாட். பதினேழு லட்ச ரூபா பகடி கொடுத்து அந்த இடத்தை பிடிச்சுருக்கேன். என் கம்பெனி நின்னுடுத்துடா. என்னை தேடி ஜனங்க வர ஆரம்பிச்சுட்டா. எனக்கு ஒரு ஆள். ஒரு ஆள் என் கூட இருந்தா போதும். நான் உலகத்தையே ஜெயிச்சு காண்பிப்பேன். கூட இருக்கற ஆள் ஒரு ஆணா இருந்தா, என் ஆம்படையானா இருந்தா எத்தனை அற்புதமாக இருக்கும். ஒரு பொம்மனாட்டியை ஜெயிக்க விடமாட்டேங்கறாடா. ஒரு பொம்மனாட்டிக்கு ஒரு ஆம்பளை துணையா இருக்கப்படாதா. ஏன் இங்க ஆம்பளைக்குத்தான் பொம்மனாட்டி துணையாக இருக்க முடியுமா. எந்த ஆம்பளையையும் விட நான் கெட்டிக்காரண்டா: என்னால எந்த வேலையையும் செய்ய முடியும். ஏழாம் கிளாஸ் குழந்தைக்கு பாட்டு சொல்லித்தர முடியும். தையல் வேலை செய்ய முடியும். சமையல் கத்துப்பேன்னு தீர்மானம் பண்ணேன்னா ஒரே வாரத்துல ஓவில் டுத பெஸ்ட் குக் இன் த வேர்ல்ட். என்ன போட்டி தெரியுமா இந்த டிராவலிங் ஏஜென்ஸியில. எல்லாத்தையும் தாண்டி நின்னேன். ஒரு வேளை ஸ்பெயினுக்கு போனா என்னை பத்தி கேட்டுப் பார். வெறுமனே ஆள் அனுப்பினா போதும் காசே கொடுக்க மாட்டேன். பிரான்ஸ்ல போய் இறங்கினா நீ நானுன்னு என்னை ரிஸீவ் பண்ண ஆறு கம்பெனி போட்டி போடுதுடா. எல்லாரும் ஆள் அனுப்பியிருப்பாங்க. நாலு நாள் தங்கி எல்லா கம்பெனிக்கும் போயிட்டு வந்தேன். என்ன அற்புதமான உறவு பின்னி வச்சுருக்கேன் தெரியுமா.

பத்து ரூபா பிள்ளையார் கோவில் உண்டியல்ல ஃபர்ஸ்ட் ரேங்க் வாங்கி பாஸ் பண்ணா போடறேன்னு வேண்டிண்டு போட்டதுக்காக எங்கம்மா எனக்கு சூடு

வச்சா. உங்கப்பா காசு எடுத்து நீ என்னடி உண்டியல்ல போடறது அப்படின்னு அடிச்சா. இன்னிக்கு நான் ஒரு பிள்ளையார் கோவில் கட்டி வச்சுருக்கேன் தெரியுமா உனக்கு. வறியா... பார்க்கலாம் வறியா" என்று அவன் இழுக்க, அவன் வேண்டாமென்று மறுத்தான்.

அவள் அவனை ஜன்னலோரம் அழைத்துக் கொண்டு போனாள். மூன்றாம் மாடியிலிருந்து ஒரு தெரு தள்ளி ஒரு விமானம் தெரிந்தது.

"அது நான் கட்டிய பிள்ளையார் கோவில், இடிஞ்சு ரெளடிகள் சூதாடற இடமா இருந்தது. நான் உள்ளுக்குள்ள நுழைஞ்சு அந்தப் பிள்ளையாரை எடுத்துட்டு வேற பிள்ளையாரை வச்சு பிரமாதமா விமானம் கட்டினேன். அந்த கோவில் பிள்ளையாரை இங்க வச்சுருந்தேன். அமெரிக்காலேர்ந்து ஒரு ஆள் வந்தவன் இங்க என்ன பிள்ளையாரை வச்சுருக்கியேன்னு கேட்டான். இது கோவில் பிள்ளையார். வேற பிள்ளையாரை அங்க வச்சுட்டேன். அதனால இந்த பிள்ளையார் எங்கிட்ட இருக்குன்னேன். நான் எடுத்துண்டு போயிடட்டுமான்னு கேட்டான். காசை கொடுத்துட்டு எடுத்துண்டு போன்னு சொன்னேன். எனக்கு எழுநூறு டாலர் கொடுத்தான். அதை நான் எடுத்துக்கலை. அந்த விமானத்துக்கு பெயிண்ட் அடிச்சு அந்தப் பிள்ளையாருக்கு வெள்ளிக் கவசம் சார்த்தி, உற்வசருக்கு ஒரு பிள்ளையாரை வாங்கி எல்லா காசும் அதுக்கே செலவு பண்ணேன். அந்தக் கோவிலுக்கு என்ன பேர் தெரியுமா. புத்தி விநாயகர் கோவில். கோவில், கட்டட அமைப்பு, சிலைகள், விமானம், உபயம் கெளசல்யா அப்படின்னு போட்டிருக்கும். அந்தப் பிள்ளையாரை பார்க்கற போதெல்லாம் எங்கம்மா சூடு வச்சதுதான் ஞாபகம் வரும்.

மெட்ராஸ் வந்தவுடனே எனக்கு கிடைச்ச முதல் வேலை. டிராவல் ஏஜன்ஸியில ரிசப்ஷன் கிளார்க்.



ஒரு மூணு வருஷம் மெட்ராஸ் ஹாஸ்டல்லேர்ந்து என்ன பாடு பட்டிருக்கேன் தெரியுமா. பேசின மூணாவது நிமிஷம் படுக்க வறியாடின்னு கேட்பான். நான் பாம்பேலேர்ந்து இங்க வந்தேனா, சரியா எனக்கு மாரை மூடக் கூட தெரியாது. நான் திறந்து போட்டிண்டிருக்கறதே அவனை கூப்பிடத்தாங்கறதா நினைச்சுண்டிருக்கான். அப்புறம் இங்க இருக்கற பொம்மனாட்டிகள் சொல்ல சொல்லத்தான் எனக்கு மூடத் தோணித்து. இதை என்னத்துக்கு மூடறது. என்னத்துக்கு திறக்கறதுன்னுதான் நான் பேண்ட், சட்டைக்கு வந்துட்டேன். குறுக்க நெடுக்க நடக்கறதுக்கு செளகரியமா இருக்கு. நான் அழகா இருக்கேனா."

"ரொம்ப அழகா இருக்க."

"பொய் சொல்லாதடா."

"நான் எதுக்கு பொய் சொல்லணும்."

"பணத்துக்கு ஆசைப்பட்டு அழகு போயிடுத்துடா. நான் உப்பு மூட்டை மாதிரி இருக்கேன். நினைச்சா ஒல்லியாக முடியும். ஒல்லியாகி என்ன பண்றது. சோர்வா இருக்கும். ஓட முடியாது. நல்லா சாப்பிட்டாதான் நிறைய வேலை செய்ய முடியறது. ஏதாவது தின்னுண்டே இருப்பேன். ஏதாவது தின்னுண்டே இருக்கறதுனால குண்டாயிட்டேன். டேய், நான் அழகா இருக்கேனோ."

இந்த முறை தள்ளாடி வந்து அவனுக்கருகே தோள் மீது கை போட்டுக் கொண்டாள்.

அவன் அவள் இடுப்பை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"ரொம்ப அழகா இருக்கே" என்று கன்னங்களில் முத்தமிட்டான்.

"தேங்க்யூ."

அவனை மெல்ல அழைத்துக் கொண்டு கட்டிலுக்கு போனாள். ஏ.சி.யைப் போட்டாள். அவனை உட்காரச்

சொல்லி புடவையை உருவி எறிந்து விட்டு பாவடையும், ஜாக்கெட்டுமாய் அவன் மடியில் படுத்துக் கொண்டாள். அவன் தலை வருடி விட்டான். முதுகு தடவி விட்டான். தூங்கு... தூங்கு... என்று சொன்னான். தூங்கிய பிறகு அவளை படுக்கையில் உருட்டி விட்டு இரண்டு பக்கமும் தலையணையை வைத்து சாப்பிட்ட இடங்களை சுத்தம் பண்ணி, வெளியே போட்டு விட்டு ஒரு பாட்டிலில் தண்ணீரும், இன்னொரு பாட்டிலில் கோகோ கோலாவையும் அவள் மேஜைக்கு அருகே வைத்து விட்டு கட்டிலையும், அடியில் போட்டிருந்த திண்டுகளையும் சரி செய்து விட்டு கதவின் பட்டனை அழுத்தி எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு சரக்கென்று மூடினான். உள்ளே கதவு பூட்டிக் கொண்டது. இறங்கி வெளியே நடந்தான்.

என்னை மாதிரியே அன்புக்கு ஏங்கற ஜென்மம். என்னை மாதிரியே எல்லா விஷயத்தையும் வேகமா கத்துக்கற கெட்டிக்கார ஜென்மம். கிட்டத்தட்ட இது பொம்பளை சாகேதராமன். நான் ஒரு ஆம்பளை கௌசல்யா.

ரெண்டு பேரும் சேர்ந்தா நல்லாயிருக்குமா.

தெரியலை. நன்றாக இருக்கலாம். இல்லாது போகலாம்.

அவன் வீட்டிற்கு வந்து சாதத்தில் மோர் ஊற்றி கரைத்து குடித்து விட்டு படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அவளுடைய அலுவலகத்து வாசலில் நின்றான். ஒன்பதே காலுக்கு அவள் புயல் மாதிரி வண்டி ஓட்டிக் கொண்டு வந்தாள். சற்று ஒதுக்கமாக நின்று கொள்ள கதவு திறந்தாள். அலுவலகத்து குமாஸ்தாக்களும், பியூன்களும் உள்ளே வர அவன் மெல்ல ஹலோ என்றான்.



"ஹேய்... வந்துட்டியா, வரமாட்டியோன்னு நினைச்சேன். நேத்து ராத்திரி எங்க படுத்துண்ட."

"எங்க வீட்ல."

"ஏன். என் பக்கத்தில படுத்துண்டா என்ன."

"ச்சு... ஏதாவது வம்பு பண்ணிடுவேனோன்னு பயம். அதான் ஓடிட்டேன்."

"நேத்து தப்பு பண்ணயிருக்கலாம்டா."

"எதுக்கு."

"தண்ணி போட்டிருந்தேன். அந்த லட்ச ரூபா காசு வந்தது. பரம சந்தோஷமா இருந்தது. நன்னா மனசை விட்டு அழுதேன். அதுவும் நிம்மதியா இருந்தது. நீயும் உருட்டி பிரட்டி ஏதாவது பண்ணியிருந்தேன்னாக்க அதுவும் நிறைஞ்சிருக்கும்."

"நீ தண்ணி போட்டிருந்ததனாலதான் நான் உன்னை ஒண்ணும் பண்ணலை. என்னடா இப்படி பண்ணிட்டியேன்னு கேட்பியோன்னு பயந்து பண்ணலை."

"கார்த்தால எழுந்தா அதுவும் நன்னாயிருந்ததுடா. ஒண்ணும் பண்ணாம போயிருக்கேன்னவுடனே ரொம்ப சந்தோஷமாயிடுத்து. சான்ஸ் கிடைச்சா போதும்னு எத்தனையோ பேர் தேடிண்டிருக்க, சான்ஸ் கிடைச்சும் நீ மரியாதையா வெளிய போனியே ஐ லவ் யூ சாகேதராமா."

அவள் கைகளை கோர்த்துக் கொண்டாள்.

"நேத்திக்கு ஸ்பெயின் கால் வரவேயில்லை இல்ல. இப்போ பேசியாகணும்" என்று சொல்லி உள்ளுக்குள் நுழைந்து ஸ்பெயினோடு தொடர்பு கொண்டாள்.

உடனே போன் செய்யாததற்கு கோபித்துக் கொண்டாள். இப்படிப்பட்ட ஆட்களோடு வியாபாரம் செய்வது கடினம் என்று சொன்னாள். உங்களை நம்பி நான் நான்கு பேரை அனுப்புகிறேன். எப்படி அனுப்பு

வது. எனக்கு இரவு தூக்கமில்லாமல் செய்து விடுவீர்களே என்று அலட்டினாள்.

"இப்போ நீ எதுக்கு வந்திருக்க சொல்லு."

"உனக்கு உதவி செய்வதற்கு."

"ரைட். எனக்கு என்ன உதவி வேணும் தெரியுமா. நாலு கம்பெனி தரேன். அவங்ககிட்ட நீயே போன் பண்ணி இந்த கம்பெனிலேர்ந்து பேசறேன். உங்களுக்கு ஏதாவது ஃபாரின் ட்ரிப் போகணும்னா நான் ஏற்பாடு பண்றேன்னு கன்வீனியன்ஸ் பண்ணணும். முடியுமா."

"பண்ணலாமே."

"இப்படி வா. என் பக்கத்துல உட்கார்ந்துக்கோ. ஏதாவது உனக்கு டவுட் இருந்தா இந்த பேட்ல எழுதி காண்பி. நான் உடனே பதில் சொல்றேன்."

அவள் வேறு வேலைகளை கவனிக்க அவன் வேகமாக கம்பெனிகளுக்கு தொடர்பு கொண்டு பேசினான். அவள் கொடுத்த ஒன்பது விலாசங்களில் ஏழு பேர் அதிக ஆர்வம் காட்டினார்கள். இரண்டு பேர் நேரே வருவதாக சொன்னார்கள். இரண்டு பேர் அவனை வரச்சொல்லி கட்டளையிட்டார்கள்.

லண்டன், பாரீஸ், பிராங்ஃபெர்ட் என்று மூன்று இடங்களுக்குப் போகவே அதிகம் பேர் விரும்பினார்கள்.

அவன் குளிரக் குளிர பேசினான்.

"மெட்ராஸ்லேர்ந்து திருச்சிக்கு போகறத விட பாது காப்பான விஷயம் பாம்பேலேர்ந்து பாரீஸ் போறது. வெளிநாட்டிற்கு போவதென்றால் அந்த மனோ நிலையை நாம் தயார்செய்து கொள்ள வேண்டும்" என்று அவன் விளக்கிப் பேச அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அவன் அவளுடைய கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்து, தான் அன்று செய்த வேலைகளைப் பற்றி



குறிப்புகளை மடமடவென்று டைப் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் வாங்கி படித்து விட்டு அவனை இறுக்க கட்டிக் கொண்டாள்.

"ப்ளீஸ். நாளைக்கும் வந்துடுறா. இன்னொரு நாலஞ்சு கம்பெனி பிடி போதும். நான் எங்கயோ போயிடுவேன்" என்று சொன்னாள்.

அவன் பேச முடியாது என்று கம்பெனியின் வெளியே போய் நின்று பேசினான்.

மாலை ஏழு மணிக்கு திரும்பி வந்தான்.

"நீ என்னவெல்லாம் உதவி செய்யற. என்ன சார்ஜ் பண்றேன்னு காண்பிச்சேன். ஆடிப் போயிட்டானுங்க, அந்தாளு அநியாயமா சார்ஜ் பண்றான்னு நினைக்கறேன். எவ்வளவு சார்ஜ் பண்றான்னு சொல்ல மாட்டேன்னுட்டாங்க. நிச்சயமயா நம்ம பக்கம் வந்துடுவான்னு தோணுது" என்று விவரித்தான்.

ஒன்பது மணிக்கு கதவு பூட்டினாள். காரில் ஏறி உட்கார்ந்தாள்.

"உன்னைக் கூப்பிடணும்னு எனக்கு ஆசை. ஆனா, நான் வீட்ல இல்லை. ஐ பிகம் பேட்டி. இன்னொரு நாள் வச்சுக்கலாமா" என்று சொல்ல அவன் சரியென்று தலையசைக்க அவள் வண்டியை கிளப்பிக் கொண்டு போனாள்.

ஏனோ உள்ளே லேசாய் வலித்தது. ஒரு தனிமை தென்பட்டது. சட்டென்று ஒரு கோபம் வந்தது. கோபத்தோடு ஒரு சந்தேகம் வந்தது.

அவன் மோட்டார் சைக்கிளில் கிளம்பி அந்த மாருதி காரை பின் தொடர்ந்தான்.

அந்த மாருதி கார் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் நுழைந்தது.

வாசலில் யாரோ காத்துக் கொண்டிருந்த ஒரு குண்டான ஆசாமி அவளைப் பார்த்ததும் ஓடி வந்து இறுக்கிக் கொண்டான். அவளும் தழுவிக் கொண்டாள். இருவரும் கட்டியணைத்தபடியே கண்ணாடி கதவு தாண்டி உள்ளே போனார்கள்.

அவனுக்கு சட்டென்று உள்ளே ஒன்று உடைந்து போயிற்று.

அன்புங்கறத நாய்க்கு பிஸ்கெட் போடற மாதிரி நினைச்சுண்டிருக்காளா என்று ஆத்திரம் வந்தது.

கலைச்சுடலாமா. எல்லார்க்கும் போன் பண்ணி இது குப்பை கம்பெனி இதை நம்பாதீங்கன்னு சொல்லிடலாமா.

ச்சே.. ச்சே.. அது என் வேலையில்லை.

எவ்வளவு வேகமாக என்னுடைய உறவுகள் ஆரம்பிக்கின்றனவோ, அத்தனை வேகமாக உடைந்து விடுகின்றன. தவறு என் மீது இருக்கலாம். நான் எல்லாருக்கும் எடுபிடி பையனாகவே இருக்கலாம். உனக்காக வொரு வாய்ப்பு கொடுத்தேன். அதை நீ பயன்படுத்திக்கலை என்ற திமிர் காரணமாக இருக்கலாம்.

இவளோடு சண்டை என்ன. இவள் தனியாக வளர்ந்த பெண். யார் யாரோலோ விதம் விதமாக காயப்படுத்தப்பட்ட பெண். இவளை நான் எதற்காக கடிந்து கொள்ள வேண்டும். இவளுக்கு நான் ஏன் துரோகம் செய்ய வேண்டும். இவள் வேண்டுமென்றா, ஆசைப்பட்டா நான் பிறந்திருக்கிறேன். எனக்கென்று உண்டானது எப்பவும் கிடைக்கும். இவளை நான் காயப்படுத்த விரும்பவில்லை. மாறாய் மறுபடியும் உதவி செய்யவே விரும்புகிறேன். நாளைக்கும் இவள் அலுவலகத்திற்கு போக வேண்டும் என்று தீர்மானித்தான்.

வீட்டிற்கு வந்து அவன் மேனேஜிங் டைரக்டருக்கு போன் செய்தான். எல்லாம் தயாராகிவிட்டது நாளை இரவு சந்திக்க வருகிறேன் என்று சொன்னான்.



மறுநாள் காலை ஒன்பது மணிக்கு அவளை வாயிலில் சந்தித்தான்.

"ஹேய்... வந்துட்டியா. நீ வரமாட்டியோன்னு நினைச்சேன்."

"ஏன்."

"நேத்திக்கு வேண்டாம்னு சொன்னதுல கோபமாயிடுத்தோன்னு தோணித்து."

"இல்லையே."

"உன் முகம் அப்படித்தான் இருந்தது. ஆனா, உன்னை வேண்டாம்னு சொல்லிட்டு நான் போய் ஒரு முட்டாள் கூட்டத்துல மாட்டினுட்டேன்."

"நேரா வீட்டுக்கு போகலையா."

"சோழா ஷெரட்டன் போனேன்."

அவள் கள்ளமின்றிப் பேசினாள். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"'நீ பேசினியே ஒரு கம்பெனி. அவன் ராத்திரி டின்னருக்கு வரச் சொன்னான். டின்னருக்கெல்லாம் வரமுடியாது. உன்கூட உட்கார்ந்து ரெண்டு பெக் சாப்பிடறேன் அப்படின்னு சொன்னேன். நீ சாப்பிடறவனா இருந்தா உன்னையும் கூட்டிண்டு போயிருப்பேன்.

அவன் ஒரு பெக் சாப்பிட்டவுடனேயே என் தொடையில கை வைக்க ஆரம்பிச்சிட்டான்.

நான் அந்த மாதிரியான பொண்ணு இல்லை. நாம வியாபாரம் மட்டும் பேசுவோம். வேற விஷயங்களுக்கு நான் தயாரா இல்லை அப்படின்னு சொன்னேன். கொஞ்ச அதிகப் பிரசங்கித்தனமா போயிட்டான். நான் பைலேர்ந்து பேட் எடுத்து காண்பிச்சு நான் போய் மாத்திட்டு வந்து கழட்டின பேடை காண்பிக்கறேன், பார்க்கறியா அப்படின்னேன். அவன் தலையில அடிச்சுண்டான். ஒழிஞ்சுப் போடி நாயேனுட்

டான். கிளம்பி வந்துட்டேன். கஷ்டப்பட்டு பிடிச்ச பிஸினஸ் காணாமப் போயிடுத்து. ஒழிஞ்சு போறான் பாவி." தொடர்ந்து மற்ற வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள்.

அவள் மீது மறுபடியும் காதல் பொங்கியது. உண்மையாகத்தான் இருந்திருக்கிறாள் என்ற எண்ணம் வந்தது. பிற்பகலுக்குள் மானேஜிங் டைரக்டருடைய நான்கு டிக்கெட்டுகளும், நான்கு விசாக்களும் மற்ற விவரங்களும் அடங்கிய பைலும் அவனுக்கு தரப் பட்டன.

அன்றும் அவனோடு மதிய உணவு சாப்பிட்டான்.

"நீ ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை."

அவள் கேட்டாள்.

"சரியான பொண்ணா கிடைக்கலை."

"நான் உனக்கு சரியானவள்னு நினைக்கிறியா."

"தெரியலையே. கொஞ்ச நாள் தானே பழகியிருக் கோம்."

"எனக்கு உன்னை மாதிரி ஒரு சின்சியரான ஒரு ஆள் தேவை. நீ என் கூட பார்ட்னரா லைஃப் பார்ட்னரா, பிஸினஸ் பார்ட்னரா இருந்துடறியா."

"இப்பவே என்னால சரின்னு சொல்ல முடியலை."

"ஏன் சொல்ல முடியலை."

"உன் வேகம் எனக்கு பயமா இருக்கு."

"இன்னும் ஒரு வாரம் என் கூட இருந்து பார். என் வேகம் உனக்கும் வந்துடும். வேகமா இருந்தா தான்யா காசு."

"காசு மட்டும்தான் வாழ்க்கையா."

"காசு இல்லைன்னா வாழ்க்கை இல்லை."

"அது எனக்கு தெரியும்."

அவள் திட்டமிட்டபடி பேசினாள்.



"நான் உனக்கு எதுக்கு வேணும். நிறைய காசு சம்பாதிக்கவா."

அவன் கூர்மையாக அவளைப் பார்த்துக் கேட்டான்.

"இரண்டு பேரும் சேர்ந்தா காசு சம்பாதிப்போம். ரெண்டுபேரும் சேர்ந்தா சந்தோஷமா இருப்போம்."

"சந்தோஷமா இருக்கறது வேற. காசு சம்பாதிக்கறது வேற."

"காசு சம்பாதிக்கறது சந்தோஷமா இருக்கறதுக்கு சந்தோஷமா இருக்கணும்னா காசு சம்பாதிக்கணும். ரெண்டும் ஒரே விஷயமில்லையா. ஏன் போட்டு குழப் பிக்கற" என்று அவள் சொல்ல அவன் அயர்ந்து கண் களை மூடிக் கொண்டான்.

"நாளைக்கு நீ ஆபீஸ் போகணுமில்லை."

"ஆமாம்."

"போயிட்டு வா. எப்போ முடியுதோ அப்போ வா. எனக்கு வேற என்ன ஹெல்ப் பண்ணலாம்னு சொல்லு."

"உன்னைப் பத்தி போன் பண்றதைவிட உன்னைப் பத்தி நீயே பேசிக்கறத விட, முதல்ல உன்னைப் பத்தி நீயே அறிமுகப்படுத்திக்கறது நல்லது. அதுக்கொரு சின்ன பேம்ப்லெட் தயார் பண்ணலாம். நான் ஒண்ணு பண்ணித் தரட்டுமா" என்று அவன் சொன்னான்.

"ஹா— அற்புதமான ஐடியா சொல்லேன்."

'நான் ஒரு டிராவல் ஏஜன்ட் அப்படின்னு ஆரம்பிப் பேன். கதை சொல்ற மாதிரி சொல்வேன்."

"சொல்லுடா."

அவன் அவளோடு எழுந்த மெல்லிய பிணக்குகளை மறந்துவிட்டு வேகமாக அவளைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து அவள் யார் என்று சுகமான ஆங்கிலத்தில்

எழுதிக் கொடுத்தான். யாரோடெல்லாம் தொடர்பு இருக்கிறது. என்ன விதமான உதவிகளெல்லாம் செய்திருக்கிறாள் என்றெல்லாம் விவரித்தான்.

"வெட்டிட்டு வான்னா கட்டிட்டு வந்துட்டான் பார்."

சகல காகிதங்களையும் புரட்டிப் புரட்டி பார்த்து மேனேஜிங் டைரக்டர் உரக்கக் கூவினார்.

டெலிபோனில் மனைவியை அழைத்து "எல்லாம் ரெடி. நீ பெட்டியை துடைச்சு அடுக்கி வைக்க ஆரம்பி" என்று சொன்னார்.

"வேண்டாம் ஸார். மாமியை அதுக்கெல்லாம் ஈடுபடுத்தாதீங்க."

"ஏண்டா."

"நான் வந்து பண்ணித் தரேன். அழகா பண்ணுவேன்."

இளம்பும் அன்று மிக அழகாக அவர்களுக்கு பெட்டியை அடுக்கிக் கொடுத்தான்.

யானை, கருடர், நாராயணர், ஹனுமார், பிள்ளையார் என்று சிறிய பித்தளைப் பொம்மைகள் வாங்கினான்.

"எதுக்குடா இது."

"தேவைப்படும் ஸார். இந்தியாலேர்ந்து போறேள். யாரோ உதவி செய்யறான். உதவி செய்யறவனுக்கு நீங்க பதிலுக்கு ஏதாவது தரவேண்டாமா. இதைக் கொடுங்கோ. ரொம்ப வேல்யூவா நினைச்சு வச்சுப்பான். இது என்னுடைய கடவுள். வச்சுக்கோ உனக்கு உதவி செய்வார்னு சொல்லுங்கோ. நெகிழ்ந்து போயிடுவான்."

"வெள்ளைக்காரனுக்கு பிடிக்குமா அதெல்லாம்."



"என்னுடைய கடவுளை உங்கிட்ட தரேன்னு சொன்னா யார் ஸார் வேண்டாம்னு சொல்வான். அங்க இந்தியர்களே ஹெல்ப் பண்ணா அவாளுக்கு கொடுங்கோ. மாமியை கடைக்கு அழைச்சுண்டு போய் நாலஞ்சு பட்டுப் புடவை வாங்கித் தாங்கோ. அதை தனியா வச்சுக்கோங்க. அங்க இருக்கற இந்தியர்களுக்கு கொடுத்தா ஒண்ணுக்கு மூணு விலையில கண்டேன் கண்டேன்னு வாங்கிப்பா. உங்களுக்கு மூணு வேளை சோறு போட்டா ஒரு புடவை தாராளமா கொடுக்கலாம்."

அந்த அறிமுகக் கடிதத்தை இரண்டு விதமாக தயாரித்தான் வெளிநாட்டவருக்கு விலாசமிட்டு, இந்தியாவைச் சுற்றிப் பார்க்க நான் இன்ன உதவி செய்வேன். நான் ஒரு டிராவல் ஏஜண்ட் என்று அதையும் ஆரம்பித்திருந்தான்.

அவளிடமிருந்த பல போட்டோக்களை வாங்கி அவளைப் பற்றிய குறிப்புகளையும் எடுத்து சுவையாக எழுதி அதை ஒரு தனிப்புத்தகமாகச் செய்யச் சொன்னான்.

அவன் கம்பெனிக்கு அச்சடிக்கிற ஆளிடம் போய் இதை அச்சடிக்கக் கொடுத்தான். அங்கு வேலை செய்யும் கம்ப்யூட்டர் இளைஞர்களுக்கு காசு கொடுத்து "நல்லா ஆழமா இருக்கணும் படம். அடர்த்தியா இருக்கணும். அந்தமாதிரி பண்ணா ரெண்டு பேருக்கும் வாட்ச் வாங்கித் ததரேன்" என்று சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தி படங்களை பிரமாதமாக வெளிக் கொண்டு வந்து அச்சில் ஏற்றி சரியானபடி மடித்து மேலே செலபோன் ஒட்டி அவளிடம் மூவாயிரம் காப்பி கொடுக்க அவள் திகைத்துப் போனாள்.

"நிறைய காசு ஆகியிருக்குமே சாகேதராமா" என்று திணறினாள்.

'டேய்... அவ்வளவு செலவு பண்ண முடியாதுடா. நீ பாட்டுக்கு நிறைய பண்ணிட்டியே" என்று பயந்தாள்.

''எவ்ளோ கொடுப்ப'' என்று சாகேதராமன் கேட்டான்.

"இருபதாயிரம் ரூபா ஆகாது."

"இல்லை."

"எவளோ. பன்னெண்டாயிரமா."

"அதுக்கூட ஜாஸ்திதான்."

"எவளோ."

"அஞ்சாயிரம்."

"நிஜமாவா. என்னடா. சொல்ற."

"அவன் எனக்கு தெரிஞ்சவன். இந்த அஞ்சாயிரம் தவிர ரெண்டு எலக்ட்ரானிக் வாட்ச். இருநூத்தி அம்பது இருநூத்தி அம்பது ரூபா இல்லை முன்னூறு, முன்னூறு ரூபா கொடுத்தா நன்னாயிருக்கும்."

"ஆறாயிரம் ரூபா தரேன்டா. நல்லதா கொடு."

அதற்கு தனி பலகை வாங்கி அவள் மாட்டினாள்.

அந்த வாசகங்களும், அந்த போட்டோக்களும் தனியாக அடித்த இந்தியாவைப் பற்றிய சிறிய புஸ்தகம் அவளுக்கு பெரிதும் உதவின,

அலுவலகம் பெருகியது. இரண்டு டெலிபோன் ஆப்பரேட்டர்கள். நான்கு குமாஸ்தாக்கள் அதிகமானார்கள்.

வேறு டிராவல்ஸிலிருந்து சில பேரை அவள் இழுத்து வந்தாள். கம்பெனியை விரிவு படுத்தினாள்.

"நாளைக்கு ஞாயித்துக் கிழமைதானே. ஆபீஸ்ல எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு வறியா."

"இல்லை. எனக்கு வரத்துக்கு இல்லை'' என்று அவன் பதில் சொன்னான்.



"ஏன்."

"அம்மாக்கு நாளைக்கு பிறந்தநாள். அம்மா கோவிலுக்கு கூட்டிண்டு போறியான்னு கேட்டா. சரின்னு சொல்லியிருக்கேன்.''

அதற்குப் பிறகு யாரோடோ டெலிபோனில் பேசினாள்.

மறுநாள் காலை ஏழு மணிக்கு கண்ணில் தூக்கக் கலக்கமும், சில்க் ஸாரியுமாக வந்தாள். பெரிய கேக் கொண்டு வந்து திறந்தாள். மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்தாள். அம்மாவை ஊதச் சொன்னாள்.

"இது என்ன பழக்கமோ எனக்கு புரியலை."

அம்மா ஊதி அணைத்து ஒரு துண்டு கேக் வெட்டி அவளுக்கு ஊட்டினாள்.

அவளைப் பற்றி விவரங்கள் விசாரித்தாள்.

"இந்த கேக் எனக்கு வேண்டாம். இதை வழியில ஏதாவது ஏழை ஜனங்களுக்கு கொடுத்துடு. இதை நான் நறுக்கித் தரேன். துண்டு துண்டா கொடுக்கறதுக்கு சௌகரியமாக இருக்கும்."

அம்மா கத்தி எடுத்து மடமடவென்று கீறல் போட்டாள். மெல்லிய துகள்களாய் இருபது முப்பது கேக்குகள் தயாராயின.

சாகேதராமன் நெகிழ்ந்து போனான். அம்மாவுக்காக கேக் வாங்கிக் கொண்டு வந்ததில் சந்தோஷமானான்.

"அது தவிர நீங்க கேக் சாப்பிட மாட்டேள்னு எனக்குத் தெரியும். ஆனா, நான் உங்களுக்கு வேற ஒரு விஷயம் வாங்கிண்டு வந்திருக்கேன்."

அவள் சின்ன பெட்டியைத் திறந்து மூன்று கல் பதித்த வைர மோதிரத்தை எடுத்து அம்மாவின் விரல்களில் மாட்டி வைத்தாள். மிகச் சரியாக அது பொருந்தியது.

"என்ன இப்படி திமிர்னு. நான் எப்படி வைர மோதிரமெல்லாம் வாங்கிப்பேன்."

"சாகேதராமனுக்கு போடணும். போட முடியலை. உங்களுக்கு போடறேன்."

"ஏன். போடு. சாகேதராமனுக்கே போடு."

"சாகேத். உங்கம்மா உனக்கு போடச் சொல்றா."

"வேணாம். அம்மாக்கே போடு."

அவன் அம்மாவுக்கு அவனை விட்டு கண்டிப்பாக போட வைத்தான். மாடிக்கு தன் அறைக்கு அழைத்துப் போனான்.

"நான் நினைச்சதை விட நல்லாயிருக்குடா உங்க வீடு. உங்கம்மா தெய்வீகமா இருக்காடா. விட்டுடலா மான்னு தோன்றது. எல்லாத்தையும் விட்டுட்டு அப்ப ளம் இட உட்கார்ந்துடலாமான்னு தோன்றது. டேய்... விட்டுடட்டுமா... என்னை காப்பாத்துவியா."

"நானும் அதைத்தான் கேட்கணும்னு நினைச்சேன். ஆனால், உன்னால் விட முடியும்னு தோணலையே."

"ஆமான்டா. ரொம்ப வேகம்டா எனக்கு. அப்பளம் இட உட்கார்ந்தா கூட ஒரு நாளைக்கு ஆயிரம் அப்பளம் இடணும்னு ஆயிடும். எதுக்குடா. உங்கம் மாக்கு என்னால என்னத்துக்கு வீண் சிரமம். அவ வேற மாதிரி பொம்மனாட்டி. என் வேகத்தை, என் குரலை அவ தாங்கவே மாட்டா. இதுதான் டோரா."

அவன் எடுத்துப் பார்த்தான்.

"யாரோ பக்கத்து வீட்டு பொண்ண லவ் பண்ணதா சொன்னியே இதுதான் மொட்டை மாடியா. அதான் வீடா. இப்போ இல்லையே அவோ, அவ பேர் என்ன சொன்ன."

அவன் மறுபடி மறுபடி கேட்டான்.

அவன் பெயர் சொன்னதும் வாய்விட்டுச் சிரித் தான்.



"உனக்குன்னு வந்து மாட்டுது பார். நல்ல பொண்ணா, அழகா, கள்ளம் கபடமில்லாத, ஒரு பொண்ணு உன் எதிர்க்க வரப்படாதோ."

"உங்கிட்ட ஒண்ணும் கள்ளம் கபடம் இருக்கற மாதிரியே தெரியலையே."

"இல்லைடா. நான் பெரிய திருடி. ஜாதி திருடி. என் திருட்டுத்தனமெல்லாம் கேட்டா, நீ செத்தே போயிடுவ. நான் சரியில்லைடா உனக்கு."

"எனக்கு ஆசையா இருக்கு நீ வேணும்னு."

"ஆனால் கட்டிண்ட பிறகு முறிச்சுக்குவோம்னு பயமா இருக்கு. நான் வேண்டாம் உனக்கு."

"உதறிட்டு போற இல்லை. அறுத்துட்டு போற இல்ல. எவ்ளோ திமிர் உனக்கு."

"என் மனசுல இருக்கற திட்டங்கள் வேற. என்னால இந்த மெட்ராஸ்ல குப்பை கொட்ட முடியாது."

"பிறகு."

"நான் வெளியூர் போகணும்னு ஆசை இருக்குறவடா. அங்க போய் செட்டில் ஆயிடணும்னு பார்க்கறேன். உனக்கு அங்க வர முடியுமா. வந்தாலும் உன் அம் மாவை விடமுடியுமா. உனக்கு மயிலாப்பூர் தாண்டா அழகு. நீ மயிலாப்பூர் பையன். ஐரோப்பா கூட எனக்கு போறாது. நியூயார்க், அமெரிக்காதான் என்னுடைய இலக்கு. அடுத்து சந்திர மண்டலம். என் ஸ்பீட் புரியறதா உனக்கு."

"புரியறது."

அவன் நிதானமாக பதில் சொன்னான்.

"உங்க அம்மா வருவாளா."

"வரமாட்டா."

"அப்போ நீ வா."

அவள் ஸில்க் ஸேரியை சரக்கென்னு உருவி கீழே எறிந்து விட்டு அவனை இறுக்க அணைத்துக் கொண்டாள். உதடு கவ்வி முத்தமிட்டாள்.

"எதுக்கு எதுக்காக இதெல்லாம்."

அவன் ஒரு மாதிரி விலக முற்பட்டான். அவள் விடவில்லை.

"நல்லாயிருக்கே. எனக்கு இத்தனை உதவி செய்திருக்க உனக்கு ஒண்ணுமே பண்ணலைன்னா எப்படி" என்று நெருங்கி வந்தாள்.

கன்னங்களில் முத்தமிட்டாள். கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சினாள். அவன் கைகளை எடுத்து இடுப்பைச் சுற்றி கட்டிக் கொண்டாள்.

அவன் மூர்க்கமானான்.

"உங்க அம்மாவுக்கு பார்த்டேயா. எனக்கு பார்த்டேயா."

அவன் அயர்ந்து போய் கைகளை பின்பக்கம் போட்டான்.

"என்னமோ நான் பிறந்தாப்போல இருக்கு. ரொம்ப சந்தோஷமா இருக்குடா. இவ்ளோ சந்தோஷமா நான் இருந்ததே இல்லை. சரி, நான் ஏன் இன்னிக்கு இப்படி செலிபரேட் பண்ணேன்னு தெரியுமா."

"தெரியலை."

"நான் உன்னை விட்டுட்டு இந்த மெட்ராஸை விட்டுட்டு போகப் போறேன்."

"எங்க."

"பிராங்.. ஃபர்ட்... ஜெர்மன் தேசத்துக்காரன்தான் நிறைய டூர் போவான். இந்தியாவை பார்க்கணுங்கற ஆசை அவாள்ள, நிறைய பேருக்கு உண்டு. பிரிட்டிஷ்காரன் ஆஸ்திரேலியாவுக்கு போறதுக்கு ஆசைப்படுவான். ஸ்பெயின்ல டூரிஸ்டே கம்மி. ஆஸ்திரேலியால இருக்கறவனெல்லாம் . மலேசியா, சிங்கப்பூர், பர்மான்னு போவான். ஜெர்மன்காரன்தான் நிறைய இந்தியாவுக்கு வருவான். குறிப்பா சவுத்துக்கு வருவான். அங்க போய் கடை போட்டா நான் அனுப்பறேன்னு சொன்னா நல்லாயிருக்காது. இங்க ஒரு மணிநேரத்துல ஆயிரம் ரூபா சம்பாதிக்கறதுக்கு அங்க ஒரு மணி நேரத்துல பத்தாயிரம் ரூபா சம்பாதிக்கலாம். ஜெர்மன்ல குடியேறிட்டோம்னா லண்டன், பிரான்ஸ் போறது சுலபம். அமெரிக்கா ரொம்ப சுலபம். இப்போ கூட நான் ஜெர்மன் எம்பஸிக்குத்தான் போயிண்டிருக்கேன்."



அவள் உடுத்திக் கொண்டு கீழே இறங்கினாள். அம்மாவையும் கட்டிக் கொண்டு முத்தமிட்டாள்.

வெளியே போய் கார் கிளப்பி மறைந்து போனாள்.

"கேக்கை விட்டுட்டுப் போறாளே."

அவன் கீழே கிடந்த பொட்டலத்தைப் பார்த்துக் கூவினான்.

"அவ அப்படித்தான்டா. அவளுக்கு கொடுக்கத் தான் தெரியும். வாங்கிக்க தெரியாது."

"என்னம்மா சொல்ற."

"ஏதோ ஒரு ஆனந்தத்துல ஏதாவது கொடுத்துட்டுப் போவா. எதுக்கு கொடுக்கறோம். பதிலுக்கு வாங்கிக்கற துக்கு தானே. பதிலுக்கு தேங்க்ஸ் சொன்னா கூட அவளுக்கு வாங்கிக்க தெரியாது. நேரமில்லைன்னு ஓடிப்போயிடுவா. இது தன்னை மட்டுமே யோசிக்கிற ஜென்மம். தான் மட்டுமே முக்கியம் தன்னை சுத்தியே உலகம்னு நினைக்கிற ஜென்மம். அதுக்கு நிறைய காசு சம்பாதிச்சு நிறைய கொடுக்கணும்னுதான் தெரியும். பதிலுக்கு என்ன கிடைக்கும்னு கேட்டா, ஏதாவது கிடைக்கறது அல்லது கிடைக்கலை எனக்கென்ன. கொடுக்கறதுலயே முடிஞ்சு போச்சு அப்படின்னு நினைக்கும்."

"கரெக்டா சொல்றம்மா. அரை மணி நேரம் பார்த்துட்டு இவ்ளோ அழகா சொல்றியேம்மா."

அவன் வியந்தான்.

"எல்லாம் ஒரு அனுபவம்தான்டா. இவளை ஒண்ணும் நீ லவ் பண்ணலையோன்னோ."

"ஏம்மா திடீர்னு இப்படி கேட்கற."

"அவ லவ் பண்ண சொல்லுவா, அப்புறம் டாட்டானு சொல்லிடுவா."

மறுபடியும் இன்னொரு குண்டையும் போட்டாள்.

"இதையும் இப்படி அழகா சொல்றியே எப்படி."

"இதே தியரிதான். இவோ உன்னை லவ் பண்ணுவா. நீ அவளை லவ் பண்றியா. அவளுக்கு அக்கறை இல்லை. அது ஒரு ஒன் வே டிராஃபிக். அது ஒரு ஐரோப்பிய புத்தி. இந்தியாவுல அப்படி இல்லை. நமஸ்காரம் பண்ணி பதிலுக்கு நமஸ்காரம் பண்ணணும். அப்படி நமஸ்காரம் பண்ணாதான் நமக்கு சந்தோஷம். அவ ஹாய் அப்படின்னு சொல்லிட்டு நடந்துண்டே இருப்பா. பதிலுக்கு நீ ஹாய்னு சொல்லணும்னு அவசியமே இல்லை. அவளுக்கு உள்ளுக்குள்ள ஒரு சந்தோஷம். உன்னை பார்த்தவுடனே அதை துப்பிடணும். துப்பிட்டு போயிண்டே இருக்கணும். நீ நிறுத்தி உன் பேர் என்னென்னு கேளு பயந்துடுவா. இதான் ஐரோப்பிய வாழ்க்கை. அந்த சாயல் அப்படியே இருக்கு. இவ இங்க இருக்க மாட்டாடா. ஊரை விட்டு ஓடிப் போயிடுவா."

"போக ஆரம்பிச்சாச்சு."

"அதானே பார்த்தேன்."

"ஏம்மா."

"வைர மோதிரம் கொடுத்திருக்காளே. நீ நிறைய பண்ணியிருப்ப உனக்கு பண்றதுக்கு பதிலா எனக்கு



பண்ணினா உனக்கு சந்தோஷம்னு வாங்கி போட்டிருப்பா."

"அம்மா அவ உனக்கு பண்ணது எனக்கு சந்தோஷம்தான்."

"சரி. விட்டுடு. இது பாட்டுக்கு போகட்டும். இதுக்கு பின்னாடி போகாத."

"என்னம்மா, அவ பின்னாடி என்னால எப்படி போக முடியும்."

"நான் உன்னை கட்டி போட்டிருக்கேன் இல்ல."

அம்மா கேட்க அவன் ஆமாம் என்றான். அம்மா மறுபடியும் வந்து அவன் தலையைத் தடவினாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

"கவலைப்படாத. உனக்குன்னு ஒருத்தி கிடைப்பா. உனக்கு ஏத்தாப்போல கிடைப்பா. இதை வேடிக்கை பார்த்துண்டிரு."

இரவு முழுவதும் பகலிலே பார்த்த அவளுடைய அங்க வடிவங்களே ஞாபகத்திற்கு வந்தன. அவனை துன்புறுத்தின.

கொஞ்சம்... கொஞ்சம் அமைதியா அடக்கமா இருந்தா நீ லட்டுடி.

அவன் வானத்தைப் பார்த்துக் கூவினான்.

அடுத்த வாரம் அவளை ஏர்போட்டில் வழியனுப்பி விட்டு தொலை தூரத்திலிருந்து அவள் நகருவதைப் பார்க்க காத்திருந்தான். உள்ளே அவள் யாரோடோ கட்டித்தழுவி பேசுவது தெரிந்தது. வீடு திரும்பினான்.

அவனுடைய டெலிபோன் மணி அடித்தது.

"டேய்... சாகேதராமா ஒரு ஹெல்ப் பண்ணணும்."

"என்ன."

"லண்டன்ல நான் பார்த்த ஒரு டிராவல் ஏஜென்ஸி பொண்ணு மெட்ராஸ் வந்திருக்கா. தஞ்சாவூர் பத்தி

ஃபோட்டோ எடுக்கணும்னு அஸைன்மென்ட்டாம். அவளை கூட்டிண்டு போறியா. கார்த்தால மூணு மணிக்கே வந்துட்டாளாம். நான் இந்த ப்ளைட்ல போறேன்னு ஆபீஸ்ல சொன்னதுனால இவ வந்திருக்காளாம். ப்ளூ டி ஷர்ட் பூ போட்ட ரோஸ் பாவாடை ஒத்த தலைப்பின்னல். ஷரோன் ஸ்டீபன்னு பேர். எஸ்.எஸ்.னு ஒரு போர்டை மட்டும் கையில் வச்சுக்கோ."

அவன் அட்டை தேடிப்பிடித்து எஸ்.எஸ். என்று எழுதி உயரப் பிடித்தான். பதினைந்து நிமிடத்திற்கு பின்பு ஒரு பெண் வெளியே வந்தாள். புடவைக்கடை பொம்மை போல கண்ணைக் கவரும் அழகாக இருந்தாள்.

ஐரோப்பியர்கள் வயது எத்தனை என்று முகத்தைப் பார்த்து சொல்லவே முடிவதில்லை என்று அவனுக்கு தோன்றிற்று.

ஆனால், அவளுடைய பாஸ்போர்ட்டை வாங்கிப் பார்த்து அவளுக்கு இருபத்து மூன்று வயது என்பதை புரிந்து கொண்டான்.

அந்த பாஸ்போர்ட் நம்பர்களையும், அவளுடைய விலாசத்தையும் அவள் உத்தியோகத்தின் நிலைமையையும் கம்பெனியின் பெயரையும் வேகமாக குறிப்பெடுத்துக் கொண்டான். சகல பேப்பர்களையும் அவளிடம் கொடுத்தான்.

"ஒருவேளை நீங்கள் காணாமல் போனால் நான் யார் என்று புரிந்து கொள்ள வேண்டுமல்லவா. நான் உங்களைப் பற்றி விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா" என்று சொல்ல "எல்லா டிராவல் ஏஜென்ஸியும் செய்கிற விஷயம்தான். நாம் இப்பொழுது எங்கே போகிறோம்" என்று கேட்க "நீங்கள் எங்கே விரும்புகிறீர்களோ அங்கே" என்று சொன்னான்.



"என்னிடம் காசு அதிகமில்லை. நட்சத்திர ஹோட்டல்களில் தங்க என்னால் இயலாது. மோசமான ஹோட்டல்களில் சேர்த்து விட வேண்டாம். கிளம்பும் போது கௌ ஒரு விஷயம் சொன்னார்கள்."

"என்ன விஷயம்."

"உன் வீட்டிலேயே தங்குவதற்கு நீ கேள். அவன் விருப்பப்பட்டால் நீ அங்கு தங்கு. அது பத்திரமான இடம் என்று சொன்னார்கள். உங்களுக்கு விருப்பமாயின் எந்த ஆட்சேபணையும் இல்லையெனில், உங்கள் வீட்டிலேயே தங்குகிறேன்," என்று அவள் சொன்னாள்.

அமெரிக்கத் தாய்க்கும், லண்டன் தகப்பனுக்கும் பிறந்தவள். அம்மா போன வருடம் விவாகரத்து வாங்கி விட அப்பாவோடு தங்கி விட்டவள். அம்மா காசு அனுப்பிக் கொண்டிருக்கிறாள். அதனால் வாழ்க்கை சற்று எளிதாக இருக்கிறது. இல்லையெனில் அப்பாவின் வருமானத்தில் காலம் கழிக்க முடியாது. டிராவல் ஏஜென்ஸியில் இப்பொழுது தான் சேர்ந்திருக்கிறாள். இனிமேல் தான் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்.

ஏதேனும் ஒரு தேசத்தை மையமாக எடுத்து அதைப் பற்றி நீயே தெரிந்து கொண்டு அதற்கு கெய்டாக இருப்பது நல்லது என்று டிராவல் ஏஜன்ஸி சொல்ல இந்தியாவை அவள் தேர்ந்தெடுத்தாள். குறிப்பாக தென்னிந்தியாவை தன்னுடைய களமாகக் கொண்டாள்.

நூற்றுக்கு இருபத்தேழு பேர்கள் இந்தியாவுக்குப் போக லண்டனில் ஆசைப்படுகிறார்கள். அதையும் தவிர தென்னிந்தியாவிலிருந்து லண்டனுக்கு வந்து சுற்றிப் பார்க்க விரும்புபவர்கள் நூற்றுக்கு நாற்பது பேர் இருக்கிறார்கள். எனவே, தனி ஆளாக செயல்பட்டாலும் இது அற்புதமான ஒரு தொழிலாகத்தான்

இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. அதனால் தென்னிந்தியா வந்திருப்பதாகக் கூறி முடித்தாள்.

"என் வீடு சௌகரியமாக இருந்தால் உபயோகப் படுத்திக் கொள்" என்று அவன் அழைத்துப் போனான்.

"அடடா– தங்கத்துல உருக்கி வார்த்த பொம்மைடா. என்ன அழகா இருக்கா."

அம்மா ஷெரோனை பார்த்து தமிழில் பேசினாள்.

"என்ன, என்ன சொல்றாங்க அம்மா" என்று அவள் கேட்க அவன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான்.

அம்மாவும் அவளோடு ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தாள்.

"ஓ– அற்புதமான ஆங்கிலம் பேசுகிறீர்களே" என்று அம்மாவை கையெடுத்து வணங்கினாள்.

அவள் கும்பிடுவது கூட அழகாக இருந்தது.

"உனக்கு வேண்டிய சமையலைக் கூட நீயே செய்து கொள்ளலாம். ஆனா நாங்கள் மாமிசம் சாப்பிட மாட்டோம். அவசியமிருந்தால் நீ அதையும் செய்து கொள்ளலாம்" என்று அம்மா சொல்ல "எனக்கு மாமிசம் முக்கிய உணவு. சாப்பிட்டே ஆக வேண்டும். ஆனால் இங்கு செய்து கொள்ளவில்லை. வெளியிலிருந்து வாங்கிக் கொள்கிறேன். இப்போதைக்கு நான் வெஜிடேரியனாக இருக்க முயற்சி செய்கிறேன்" என்று சிரித்தாள்.

அவள் சிரிப்பு சொக்க வைத்தது.

தங்கக் கலரில் தலைமுடி அதே கலரில் புருவம். பெரிய வெளிர்ந்த சிகப்பு நிற உதடுகள். குழி விழுந்த முகவாய். மிதமான உயரம். வளமான உடற்கட்டு.

அவள் உடைகளைக் கலைந்து விட்டு வெறும் ஷிம்மியோடு பாத்ரூம் நோக்கிப் போன போது அந்த உடல் வசீகரம் அவனை திக்கு முக்காட வைத்தது.



கீழே அப்பா உபயோகப்படுத்திக் கொண்டிருந்த அறையை அவளுக்கு ஒழித்துக் கொடுத்தான். வெகு நேரம் நீராடினாள்.

ரொட்டியில் வெண்ணையைத் தடவி லேசாக வறுத்து அதன் மீது தேன் ஊற்றி கடித்துத் தின்றாள். கருப்பு காபி குடித்தாள்.

"ஐஸ்கிரீம் வைத்திருக்கிறீர்களா" என்று ப்ரிஜைத் திறந்தாள்.

"தேவையானால் வாங்கிக் கொள்வோம். வைக்கும் பழக்கமில்லை," என்று அம்மா சொல்ல "நான் வாங்கி வைத்து விடவா. எனக்கு ஐஸ்கிரீம் சாப்பிட வேண்டும். பசிக்கு ஐஸ்கிரீம் நல்லது. இரவில் பசித்தால் இரண்டு கப் ஐஸ்க்ரீம் சாப்பிட்டு விட்டு படுத்து விடலாம். வேறு ஏதேனும் சாப்பிட வயிறு சிக்கலாகும்" என்று சொன்னாள்.

அவன் போய் இரண்டு கிலோ ஐஸ்க்ரீம் வாங்கி வந்தான். பழரசங்கள் கொண்டு வந்து வைத்தான். அவள் சந்தோஷமானாள்.

"இவைகளுக்கு நான் காசு கொடுத்து விடட்டுமா" என்று அன்னிய தேசத்து கரன்சியைப் பிரித்தாள்.

அம்மா மறுத்துவிட "இல்லை ஏதேனும் ஒரு வகைக்கு நாம் வ்ரவேண்டும். என்ன காசு என்று சொல்லி விடுங்கள். நான் வெறுமே தங்க விரும்பவில்லை" என்று சொன்னாள்.

"என்னடா செலவாயிடப்போறது. ஆயிரம் ரூபா வாங்கிக்கோடா போதும்" என்று அம்மா சொல்ல அவன் அதை கணக்கு போட்டு கொடுக்க "இவ்வளவு தானா... இவ்வளவு தானா... எனக்கு ஒரு மாசம் போதும். அதற்கு மேல் எனக்கு அங்கே வேலை இருக்கிறது" என்று விவரித்து விட்டு மிக நறுவிசாக உடுத்திக் கொண்டு தோளில் பை மாட்டி குதிகால் நீண்ட செருப்பு மாட்டி தெருவில் இறங்கினாள்.

மோட்டார் சைக்கிளில் ஏறி சென்னை நகரை வியப்போடு பார்த்து வந்தாள். குடிசைகளுக்கு அருகே நிதானமாக ஓட்டச் சொன்னாள்.

"நடுவிலே ஓடும் இவ்வளவு பெரிய நதியை சாக்கடையாக மாற்றி விட்டீர்களே என்ன அநியாயம் இது." பல்லைக் கடித்து கோபித்துக் கொண்டாள்.

"கடற்கரையை பாழடித்திருக்கிறீர்கள். ஒரு இளம் பெண்ணை கிழவர்கள் கூடி கற்பழிப்பது போல ஒரு கடற்கரையை எந்த பிரயோஜனமும் இல்லாமல் நாறடித்திருக்கிறீர்கள்."

உரத்த குரலில் கத்தினாள்.

"வாரத்துக்கு ஒரு நாள் கோவில் போனால் போதாதா. தினம் தினம் கோவில் போவது என்பது வேஸ்ட். அட்டுழியம், அயோக்கியத்தனம், கோவிலுக்குப் போவதே நிறைய பேருக்கு வேலையாகப் போய் விட்டது" என்று சீறினாள்.

"ஒழுக்கம் என்பது குறியைச் சார்ந்ததில்லை. உங்கள் நடத்தையைச் சார்ந்தது. பேச்சை சார்ந்தது. அடுத்தவருக்கு சிறிது கூட இடைஞ்சல் இல்லாத நேர்மையை சார்ந்தது. இந்தியாவில் எந்த மதத்தினருக்கும் ஒழுக்கம் பற்றிய அக்கறை இல்லை. எல்லோரும் பொய்யர்கள்" என்று மீண்டும் திட்டினாள்.

"என் தாயார் சொல்லி அனுப்பியிருக்கிறார். அதே போலவே நடக்கிறது," என்று சொந்த குரலில் பேசினாள்.

"என்ன."

"இந்தியாவுக்குப் போனதும் உனக்கு தலைகால் புரியாத கோபம் வரும். மனிதர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று ஆத்திரப்படுவாய். அதை வெளியே சொல்லி விடாதே. உள்ளுக்குள்ளே வைத்துக் கொள் என்றாள். நான் உளறி விட்டேன். உன்னை காயப்படுத்திவிட்டேனா. மன்னித்துக் கொள்." என்று கேட்டாள்.



"ஐரோப்பியர்கள் இப்படித்தான் கோபப்படுவார்கள் என்று கௌசல்யா சொல்லியிருக்கிறாள்'' என்று சாகேதராமன் சொன்னான்.

ஆனால் அவளுடைய அத்தனை கோபமும் அம்மாவோடு உட்கார பறந்து போயிற்று.

"கோலம் என்றால் என்ன. எதற்கு கடவுளுக்கு நான்கு கைகள், சிவன் யார், விஷ்ணு யார். அப்பொழுது ஏன் சக்தி என்கிற ஒரு பெண்ணை கும்பிடுகிறீர்கள். பெண் ஏன் தெய்வமாக கும்பிடப்படுகிறாள்." பல கேள்விகள் கேட்க அம்மா பதில் சொல்லி வந்தாள்.

"புருஷனுக்கு அடிபணிந்து நடப்பதுதான் பெண்ணின் குணமா. அப்படித்தான் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா. இது அநியாயமாக அல்லவா இருக்கிறது" என்று அம்மாவிடம் கேட்டாள்.

"அடிபணிவது என்று வெறுமே செயல்பட்டோமானால் அது ஆபாசமாகத்தான் இருக்கும். நாம் அன்பு வயப்பட்டோமானால் அடி பணிவது என்பது மிகச் சந்தோஷமான வெளிப்பாடாக இருக்கும். எனக்கு நடந்து நடந்து கால் வலிக்கிறது அப்படியா, என்னுடைய ஷெரோனுக்கு கால்வலியா என்று தவித்துப் போய் நான் உன் காலை மடியில் எடுத்து போட்டுக் கொண்டு மெல்ல பிடித்து விட்டேன் என்றால் அது அன்பு. அப்படி அடி பணிவதைத்தான் எங்கள் தேசத்தினர் காலம் காலமாக செய்து வருகிறார்கள். அன்னிய கலாச்சாரத்தினால்தான், உங்களைப் போன்றவர்கள் வருகையினால்தான் அந்த அன்பு செய்தல் என்பது அழிந்து போய்விட்டது. பெண்களை மதிப்பது என்பது மறந்து போய்விட்டது."

"கோவில் எதற்காக, வீட்டிலிருந்தே பூஜை செய்ய முடியாதா. இந்த இடம் கோவில் போல இருக்கிறதே. நீங்கள் இதைத் தாண்டியும் கோவிலுக்கு ஏன் போகிறீர்கள்."

அம்மா சற்றும் தயக்கமின்றி பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

"நீ ஒலிம்பிக் ஈட்டி எறிதலுக்கு உன்னை தயார் செய்து கொள்கிறாய் என்று வைத்துக் கொள். உன்னை என்ன செய்வார்கள். ஒரு வகுப்பறைக்கு கூட்டிக் கொண்டு போய் உன்னுடைய கைகள் எப்படி இருக்க வேண்டும். கால் எப்படி இருக்க வேண்டும், எவ்வளவு ஓட வேண்டும், எப்பொழுது நிற்க வேண்டும். எப்பொழுது வீச வேண்டும் என்றெல்லாம் சொல்லித் தருவார்கள். பிறகென்ன செய்வார்கள். உன்னை கூட்டிக் கொண்டு போய் மைதானத்தில் வைத்து இடையறாது ஈட்டி எறியச் சொல்வார்கள். இடையறாது ஈட்டி எறிந்தால் மட்டுமே ஈட்டி எறிதலில் தேர்ந்து விட முடியாது. ஈட்டி எறிதல் எப்படி என்று யாரேனும் ஒருவர் உனக்கு அருகே உட்கார்ந்து நெருக்கமாக இருந்து, உன் வகுப்பறைக்குள் ஒரு மூடிய இடத்தில் உனக்கு சொல்லிக் கொடுத்தால்தான் பட விளக்கங்களோடு பேசினால்தான் ஈட்டி எறிதல் உனக்கு சாத்தியமாகும். ஆகவே உள்ளே ஒரு வகுப்பு, வெளியே ஒரு வகுப்பு என்று இரண்டு வகுப்புகள் எடுத்துக் கொள்கிறது போல, உள்ளுக்குள் கடவுள் என்பதை விசாரித்துக் கொள்ள, அறிந்து கொள்ள, உணர்ந்து கொள்ள, வீட்டில் பயிற்சி எடுத்துக் கொண்டு வெளியே மிக பரந்துபட்ட இடத்தில் அவரை தரிசனம் செய்வதற்கு முயற்சி செய் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

நீ ஈட்டி எறிதலுக்கு தயாராவதைப் போல நூறு மடங்கு கடினமானது கடவுளை அறிதல். அது நீண்ட காலத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பயிற்சி."

ஷெரோனால் பதில் பேச முடியவில்லை: திகைத்துப் போனாள்.

"சரி. தென்னிந்தியா என்பதை ஒரு ஆங்கிலேயனுக்கு அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். தமிழ்நாட்-



டைப் பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். எப்படிச் செய்யலாம்."

அவள் கேட்க அம்மாவும், சாகேதராமனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இந்தியாவின் தென்கிழக்குப் பகுதிதான் தமிழ்நாடு. இந்தியாவினுடைய கலாச்சாரத்தாக்கம் முழுவதுமாய் நிரம்பிய இடம் அது. இந்தியாவிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத அம்சம் அது. இந்தியாவில் இருக்கின்ற எல்லா விதமான தத்துவத் தாக்கங்களும் தமிழ்நாட்டிலும் இருக்கின்றன. அது தாண்டி ஒரு தனித்த மொழி வளமும் கலாச்சார வளமும் அதற்குண்டு.

தென்னிந்திய மக்கள் எளிமையானவர்கள். அவர்கள் உடை எளிமையானது. காரணம், இது வெப்பம் மிகுந்த நாடு. இடுப்பில் ஒரு வேட்டி மேலே ஒரு துண்டு இது போதும். இதற்கு மேல் வேறு எது போட்டாலும் இங்கு உடம்புக்கு செய்யும் ஊறுதானே தவிர நல்லதில்லை என்பது அவர்கள் பண்பாடு.

நீங்கள் சொல்லுகின்ற ஜனநாயகம் என்கிற விஷயம் துவங்கியது தென்னிந்தியாவில் சோழர் காலத்தில். குடவோலைத் திட்டம் என்று ஒன்று உண்டு. அதன் மூலமாக மக்களை, மந்திரிகளை தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அவர்களில் யார் வரவேண்டும் என்பதை ஒரு குடத்தில் ஓலையில் பெயரிட்டு குழந்தையை விட்டு எடுக்கச் சொல்வார்கள். மக்கள் தேர்ந்தெடுத்தவர்களை கடைசியாக கடவுள் தேர்ந்தெடுப்பார். கடவுளும், மக்களும் தேர்ந்தெடுத்தவர்கள் அதிகாரிகளாக இருப்பார்கள், அதிகாரிகளாக இருப்பவர்கள் செல்வந்தராக இருக்க வேண்டும். மூன்று தலைமுறைக்கு அப்பழுக்கில்லாதவராக இருக்க வேண்டும். தாய் மாமன் வகையிலும், தந்தை வகையிலும் எவரும் சிறைக்குப் போகாதவராக இருக்க வேண்டும். அப்படிப்

பட்டவரே தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும் என்று வரைமுறை வைத்திருந்தார்கள்.

ஒருவர் எத்தனை உத்தமராக இருந்தாலும் அவர் குடும்பத்தில் உள்ளவர் எவரேனும் குறையுள்ளவராக இருப்பின் அவரால் அந்த உத்தமரின் பெயர் கெடும் என்று அவரையும் தேர்தலில் பங்கேற்றக் கூடாது என்று சொன்ன தேசம் இந்த தேசம் என்பதை அவள் குறித்துக் கொண்டாள்.

"எனக்கு சாகேதராமனை அனுப்பிக் கொடுங்கள். நான் நான்கு நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் தஞ்சைப் பக்கம் சுற்றுலா போய் விட்டு வந்து குறிப்புகளோடு திரும்பப் போகிறேன். எனக்கு சாகேதராமன் இருந்தால் பயணம் செய்வது எளிது'' என்று சொன்னாள்.

அம்மா லேசாக சங்கடத்தில் நெளிந்தாள்.

"ஒன்று செய்யுங்கள். நீங்களும் வந்து விடுங்கள்."

அவள் பாய்ந்து அம்மாவின் கரங்களை பிடித்துக் கொண்டாள்.

"வீட்டை பூட்டிட்டு வரணுமே."

"அதுக்கு கவலைப்படாதம்மா. நான் செக்யூரிட்டி வச்சுட்டு வரேன்."

அம்மாவும் பிள்ளையும் ஷெரோனோடு வெளியே கிளம்பினார்கள்.

தஞ்சாவூர் போய் இறங்கினார்கள்.

ஷெரோன் கோவில் உயரம் பார்த்து விட்டு திகைத்தாள்.

"இவ்வளவு பெரிய கருங்கல் கட்டடமா, எப்படி முடிந்தது. எப்படி முடிந்தது என்ன கிரேன்'' என்று தவித்தாள்.

கோட்டை மதில் சுவரில் ஏறி இறங்கினாள். நூற்றுக் கணக்கான புகைப்படங்களை எடுத்துக் கொண்டாள். என்ன சாப்பிடுகிறோம், என்ன குடிக்கிறோம் என்று



தெரியாமல் உள்ளும் புறமும் அலைந்தாள். ஓவியங்களை புகைப்படம் எடுத்துக் கொண்டாள். நடனக் கலைகளைப் பற்றிகேட்டு தெரிந்து கொண்டாள். படிக்கட்டுகளை தடவிப் பார்த்தாள்.

அது என்ன படி என்று ஆராயச்சியாளரை படிக்கச் சொன்னாள்.

அதை சாகேதராமனை விட்டு மொழி பெயர்க்கச் சொல்லி வாங்கிக் கொண்டாள்.

இது ஒன்று போதும். ஆயிரக்கணக்கான டூரிஸ்டுகளை வரவழைத்து விடுமே. இது பற்றி யாருமே லண்டனில் சொல்வதில்லையே.

சரபோஜி மஹாராஜா ஹாலுக்குப் போய் அங்குள்ள சிற்பங்களை பார்த்து வியந்தாள்.

மாலை ஏழு மணிக்கு வந்து படுத்துக் கொண்டாள்.

என்ன சாப்பிட்டாளோ எந்த காற்று தப்போ அவளுக்கு ஜுரம் வந்து விட்டது. நடந்து நடந்து பழக்கமில்லாதவள் போல் இருக்கிறது. கால் குடைச்சல் எடுக்க ஆரம்பித்து விட்டது.

அம்மா அவள் காலை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு தைலம் தடவி மெல்லப் பிடித்து விட அவள் ஜுரத்தில அரற்றினாள். கால் வலியில் நெளிந்தாள்.

சாகேதராமன் டாக்டரை அழைத்து வந்தான். "ஒரு நாள் ஓய்வெடுத்தால் சரியாகிப் போகும். அதீதமான உடலுழைப்பு அவளை அயற்சியடைய வைத்திருக்கிறது. அவளுக்கு தூங்குவதற்கு மாத்திரை கொடுக்கிறேன் அல்லது ஊசி போட்டு விடுகிறேன்'' என்று சொல்ல அவள் மாத்திரை போதும் என்று சொல்லி விட்டாள்.

மாத்திரை சாப்பிட்டாள்

மறுநாள் காலை பத்துமணி வரை அடித்துப் போட்டது போல் தூங்கினாள்.

அம்மாவும் பிள்ளையும் அறையில் உட்கார்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ச்சே... என்ன இது உங்கள் இருவரையும் இங்கே அழைத்து வந்து வெறுமே உட்கார வைத்து விட்டேனே."

மன்னிப்பு கேட்டாள்.

ஆனால் எழுந்திருக்க முடியாமல் தள்ளாடினாள்.

ரொட்டியில் ரசம் தோய்த்து சாப்பிட அம்மா சொல்ல சாத்துக்குடி ஜூஸும் பப்பாளியும் சாப்பிட, பேரிச்சம் பழங்கள் எடுத்துக் கொள்ள அவளுக்கு மாலைக்குள் சற்று உடம்பு தேறியது.

"இரவு கூத்து நடக்கிறதாம், பார்க்கலாமா" என்று கார் எடுத்துக் கொண்டு அவர்கள் மெலட்டூர் நோக்கிப் போனார்கள்.

அங்கு நாட்டிய நாடகம் பார்த்தார்கள்.

ஷெரோனுக்கு அவன் ராமாயணம் பற்றி விளக்கினான்.

சீதை தீக்குளிக்க அக்னி குண்டத்தில் இறங்கிய போது, "நோ...நோ..." என்று மறுத்தாள்.

எல்லோரும் அவளை திரும்பிப் பார்த்தார்கள். அம்மா அவளைத் தட்டி சமாதானம் செய்தாள்.

"இதைத்தான் அன்புக்கு அடிபணிதல் என்று சொல்கிறீர்களா. உங்கள் புருஷன் சொன்னால் நீங்கள் நெருப்பில் இறங்கி விடுவீர்களா, என்ன பேசுகிறீர்கள்" என்று சொல்ல, "ஆமாம் புருஷன் சொன்னான் என்று அவள் நெருப்பில் இறங்கி விட்டாள். தான் சொன்னால் அவள் நெருப்பில் இறங்குவாள், என்று அவனுக்குத் தெரியும். அதனாலேயே அந்தக் கொடுமை நடைபெற்றது. அதற்குப் பிறகு அவளைப் பற்றி யாரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ராமனைவிட மிக உயர்ந்த இடத்தில் சீதை அமர்ந்து விட்டாள். கடும் போர் புரிந்து உடம்பெல்லாம் புண்ணான ராமனை விட,



லட்சுமணனை விட, சீதை இந்தக் காவியத்தில் மிக வேகமாக மிக பலமாக போற்றப்பட்டாள்.

இங்கே ஒரு கவிஞர் பாடியிருக்கிறார்.

என் தாய் சீதையின் கரம் பற்றியதால் அல்லவோ ராமா, உனக்கு இத்தனை புகழ் வந்தது என்று பாடியிருக்கிறார்.

ராமனின் மனைவி சீதை நெருப்பில் இறங்கினாள். நெருப்பு குளிர்ந்தது. அக்னி பகவான் அவளை தூக்கிக் கொண்டு போய் வெளியே வைத்து ராமா இவள் உத்தமி என்று சொல்லி விட்டான்.

உலகம் வாயடைத்துப் போயிற்று.

இவளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று உலகத்தார் கெஞ்சினார்கள். தேவர்கள் கெஞ்சினார்கள்.

தேவியே இது ஒரு போராட்டம். இதில் என் புகழை நான் நிலை நிறுத்தினேன். யுத்தம் புரிந்து என் வெற்றிக் கொடியை நாட்டினேன். தேவியே என்னை சதா நினைத்துக் கொண்டு நெருப்பில் இறங்கி, நீ உன் கொடியை நிலை நாட்டினாய், எனக்கு இணையானாய் என்று ராமர் பேசுவதாக வால்மீகியின் வசனம் வருகிறது.

ராமர் எதிரியை அடித்து வீழ்த்தி விட்டு மனைவியைக் கொண்டு வந்து விட்டார் என்கிற விஷயத்தோடு இந்தக் காவியம் நிற்கவில்லை. எதிரி பலவந்தமாக தூக்கிப்போன பிறகும் அந்தப் பெண்மணி நெல் முனையளவும் அவனைப் பற்றி சிந்திக்கவில்லை என்று சொல்வதற்காகவே இந்தக் காவியம் இருக்கிறது.

நன்றாக யோசித்துப் பார். இது சாதாரண விஷயமில்லை என்று தெரியும். தன் மனைவியை தனக்கு இணையாக வைக்க அவர் வைத்த சோதனைதான் இது என்று புரியும்.

இப்படி எடுத்துக் கொள்வோம். ஒருவேளை இந்த சோதனையில் சீதை தோற்றுப் போயிருந்தால் சீதை

யோடு இது முடிந்திருக்குமா. இந்தத் தோல்வி ராமனுக்கும் வந்திருக்காதா. ஒரு வேளை ராமன் ராவணனிடம் தோற்றிருந்தால் சீதையின் கதி என்ன ஆகியிருக்கும். அதேகதி தான் சீதை தோற்றிருந்தால் ராமனுக்கும் ஆகியிருக்கும். ஒரு குடும்பம் என்று வந்துவிட்டால் இரண்டு பேருக்கும் தன்னை முன்னே வந்து நிலை நிறுத்தி வெற்றிக்கொடியை தூக்க வேண்டிய அவசியம் முக்கியம். கணவனும், மனைவியும் தத்தம் களத்தில் போராடி தத்தம் வெற்றிகளை குவித்து ஒருங்கே முன்னேறி நிற்க வேண்டும். ஒருவர் பின் ஒருவராக அல்ல, ஒருவர்க்கு ஒருவர் இணையாக நிற்க வேண்டும் என்று சொல்கிற தத்துவம்தான் இந்த ராமாயணக் காவியம்.

நீ மட்டும் போராடு. நான் உட்கார்ந்து நகம் கடித்துக் கொண்டிருக்கிறேன் என்று எந்த மனைவியும் சொல்ல முடியாது. உன்னை நீ நிரூபித்தாய். இதோ என்னை நான் நிரூபிக்கிறேன் என்று மனைவி தன் பங்கிற்கு தன் கொடியை உயர்த்திப் பிடிப்பதுதான் இந்த ராமாயணக் காவியம்.

தவறாக இதைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். தவறாக இதைப்பற்றி கேள்வி கேட்கிறார்கள். தவறாக இதற்கு பொருள் கொள்கிறார்கள். உண்மையான பொருளை நன்கு வாழ்ந்தவர்கள்தான் இதற்கு விளக்க முடியும். மனைவியை இம்சிக்கிறவர்கள்தான், இது ராமன் சீதைக்கு செய்த இம்சை என்று சொல்வார்கள். புருஷனை இம்சிக்க வேண்டும் என்று ஆசையுள்ள பெண்தான் இது புருஷன் ஒரு மனைவிக்கு செய்த துரோகம் என்று சொல்வாள். நன்றாக வாழ்ந்த எந்தப் பெண்ணுக்கும் இந்த ராமாயணக் காவியம் சரியாகப் புரியும்."

"நீங்கள் நன்றாக வாழ்ந்தீர்களா அம்மா."

உடனே ஷெரோன் கேள்வி கேட்டாள்.



அம்மா தன் புருஷனைப் பற்றி அவளுக்கு விளக்கிச் சொல்ல ஷெரோன் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

அம்மாவும், ஷெரோனும் ஒரே கட்டிலில் கைகோர்த்து படுத்துத் தூங்கினார்கள்.

தஞ்சை பசுமையில் தவித்துக் கொண்டிருந்தது. காவிரியில் நீர் கரைபுரண்டு ஓடிற்று. அவ்வப்போது மழை பெய்தது. தஞ்சையின் எல்லா மூலை முடுக்கு களிலும் அவர்கள் தோளில் சால்வை போர்த்தி லேசான குளிரை அனுபவித்த வண்ணம் ஏறி இறங்கி னார்கள்.

தஞ்சையிலிருந்தே தான் எடுத்த பிலிம் ரோல்களை எல்லாம் லண்டனுக்கு அனுப்பினாள். ஐந்து நாள் சுற்றிவிட்டு வீட்டிற்கு வந்தாள். வேகமாக அவனுடைய கம்ப்யூட்டரில் தன்னுடைய அனுபவங்களை டைப் செய்ய ஆரம்பித்தாள். அவ்வப்போது அம்மாவை அழைத்து விளக்கங்கள் கேட்டாள்.

ஒருநாள் எதிர்வீட்டு பெண்ணைப் பார்த்து பொட்டிட்டுக் கொண்டாள். மூக்கில் கண்ணாடி கல் ஒட்டிக் கொண்டாள். காதுகளில் ஸ்டெட் மாட்டிக் கொண்டாள். புடவை கட்டிக் கொண்டாள்.

சாகேதராமனை போட்டோ எடுக்கச் சொன்னாள்.

அம்மாவுக்கு ஷெரோனை புடவையில் பார்த்ததும் சந்தோஷம் தாங்கவில்லை.

என்ன அழகு... என்ன அழகு... சீதை மாதிரியே இருக்க நீ. சீதை மாதிரியே இருக்கடி நீ... என்று குதூகலித்தாள்.

அது ராமன். இது சீதா என்று ஷெரோன் காட்ட அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"அம்மா நீ என்னை மருமகளாக ஏற்றுக் கொள்வாயா" என்று ஒரு முறை ஷெரோன் கேட்க அம்மா திகைத்துப் போனாள்.

"உனக்கு அப்படியொரு எண்ணம் இருக்கிறதா."

"இல்லை. எனக்கு அப்படியொரு ஆசை இருக்கிறது. ஆனால், அது சரிவருமா என்று தெரியவில்லை. நீங்களும் நானும் சரிவராத இடங்கள் பல இருக்கின்றன. உங்கள் ரசம் படுகாரம். உங்கள் வீட்டு எல்லா உணவுகளிலும் உப்பு அதிகம். இத்தனை உப்பு ஒரு மனிதருக்கு தேவையே இல்லை. இது கெடுதலை உண்டு பண்ணும். தமிழர்கள் கொதித்து கொதித்து பேசுவது இதனால் தான். சின்ன விஷயங்களுக்கும் ஆவேசப்படுவது உப்பு அதிகம் சாப்பிடுவதினால்தான். உப்பு சாப்பிடுவதை தமிழ்நாடு நிச்சயம் குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் ஹிருதய கோளாறில் தமிழ்நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் பாதிக்கப்படுவார்கள். பாதிக்கப் பட்டிருக்கிறார்களோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது. உங்களை என்னால் சந்தோஷமாகக் கொண்டாட முடியும். ஆனால், உங்களை பார்க்க வருகின்ற பெண்கள் என்னைப் பார்க்கும் பொழுது ஏதோ ஒரு கரப்பான் பூச்சியை பார்ப்பது போல் பார்க்கிறார்கள். என்ன தோல் இது என்றுதான் நினைக்கிறார்கள். எவ்வளவு அழகு என்று பார்க்கிறார்கள். கல்யாணம் ஆகிவிட்டதா என்று விசாரிக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கல்யாணம் ஒரு கேடா என்பது போல பார்க்கிறார்கள். எங்களைப் போன்ற பெண்களுக்கு கற்பு உண்டு என்று சொன்னால் சிரிப்பார்களோ என்று எனக்குத் தோன்றுகிறது.

அம்மா, நான் இதற்கு முன் இரண்டு ஆண்களை காதலித்திருக்கிறேன். பள்ளியில் படிக்கும் போது ஒரு முறை கல்லூரியில் படிக்கும்போது ஒரு முறை என்று இரண்டு தடவை காதலித்திருக்கிறேன். இதைச் சொன்னால் நீங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வீர்களா. இங்கும் இதுபோல் பெண்கள் இருக்கலாம். ஆனால், அவர்கள் அதை பரிமாறிக் கொள்ள மாட்டார்கள். நாங்கள் அப்படி அல்ல. யார் புருஷன் என்று வரப் போகிறானோ அவனுக்கு இதைச் சொல்லி விடுவோம். பிறகு எல்லை தாண்டாமல் இருப்போம்."



அம்மா அவள் சொல்வதை மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

அம்மா மௌனமாக இருப்பது அவளுக்கு வலித்திருக்க வேண்டும். அவள் அறைக்குள் போய் உட்கார்ந்து வேலை செய்ய ஆரம்பித்தாள்.

அன்று மாலை போன் வந்தது.

சிலோனுக்கு போகலாமா என்று அவளிடம் கேட்கப்பட்டது.

எனக்கு ஒன்றும் தெரியாதே என்று அவள் திகைத்தாள்.

முயற்சி செய் என்று ஆசை காட்டினார்கள். பெரிய தொகை சொன்னார்கள்.

அவள் சரி என்று ஏற்றுக் கொண்டாள்.

சாகேதராமனிடம் வந்து சிலோனுக்கு என்னோடு மூன்று நாள் வாயேன் என்று சொன்னாள்.

சாகேதராமன் சரி என்று சொன்னான். அலுவலகத்திலிருந்து ஒரு நாள் லீவு போட்டான். அடுத்த நாள் பண்டிகை அதற்கு அடுத்த நாள் ஞாயிறு என்று வந்தது. அவர்கள் திட்டமிட்டு அந்த மூன்று நாளையும் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தார்கள்.

கொழும்புலிருந்து கதிர்காமமும், கண்டியும் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த மலைப் பகுதிக்கும் அவர்கள் போய் வந்தார்கள்.

கடற்கரை ஹோட்டலில் தங்கினார்கள். கிழக்குக் கடற்கரை மிகச் சுத்தமாக இருந்தது. ஒரே அறையில் இரண்டு பேரும் தங்கினார்கள். நண்பர்கள் என்று ஹோட்டலில் எழுதப்பட்டது.

"ஒரு கோணத்தில் எல்லாவற்றையும் உதறிவிட்டு உன் வீட்டோடு உன்னோடு உன் அம்மா செய்த, சொன்ன, அன்புக்கு அடிபணிதலாக உட்கார்ந்து விட வேண்டும் என்று தோன்றியது. ஆனால், இன்னொரு சமயம் நான்வேறு சில விஷயங்களுக்காக பிறந்திருக்

கிறேன். அவைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று வீறாப்பு எழுகிறது."

பெரிய இரட்டைக் கட்டிலில் இரண்டு பேரும் அருகருகே படுத்துக் கொண்டார்கள்.

ஷெரோன் அவனுடைய கையை எடுத்து தன் இடுப்பில் சுற்றிப் போட்டுக் கொண்டாள்.

"எவ்வளவு அழகாகன ஃபேமிலி. உன் அப்பாவைப் பற்றி உன் அம்மா எவ்வளவு பெருமையாகச் சொல்கிறாள். என் அப்பாவைப் பற்றி என் அம்மா அப்படிச் சொல்லவே இல்லை. அவர்கள் ஏன் பிரிந்தார்கள் என்ற ஒரு விஷயம் எனக்கு ரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. அது உனக்குத் தேவையில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், இங்கே உன் அப்பாவைப் பற்றி எல்லா விவரமும் உனக்கும் தெரிந்திருக்கிறது. விதவைகள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதெல்லாம் பொய். உன் அம்மா அந்த ஆர்ப்பாட்டமான வாழ்க்கையிலிருந்து விலகி அமைதியான வாழ்க்கைக்குப் போய் உட்கார்ந்து விட்டார்கள். தினமும் தியானம் செய்கிறார்கள். ஜபம் செய்கிறார்கள். சமையலைக் கூட பூஜையாக செய்கிறார்கள். ஏய்- சாகேதராமா எனக்கருகே இப்படி படுத்துக் கொண்டிருப்பது உனக்கு வேதனையாக இருக்கிறதா, நான் உன்னை கிளறி விடுகிறேனா."

"இல்லை நான் உன்னை வெறும் நட்பாக யோசித்து இப்படி படுத்துக் கொண்டிருக்க என்னால் முடியும்."

"நிறைய இந்திய இளைஞர்களுக்கு முடியவில்லையே ஏன்."

"அவர்கள் இந்த மாதிரி நட்புக்கு பழக்கப்படாதவர்கள்."

"நீ பழக்கப்பட்டவனா."

"ஆமாம்."

"இதற்கு முன் காதலித்திருக்கிறாயா."



"காதலித்திருக்கிறேன்."

"நான் என் காதலை வாயைத் திறந்து சொன்ன பிறகு நீ ஏன் சொல்லவில்லை."

"நீ இரண்டுதானே காதலித்திருக்கிறாய்."

அவன் மெல்ல சொன்னான்.

"நீ இன்னும் அதிகம் காதலித்திருக்கிறாயா."

"ஆமாம். நீ ஆறாவது பெண்" என்று சொல்ல அவள் வாயைப் பொத்திக் கொண்டு வியந்தாள்.

"நிஜமாவா. உன் அம்மாவுக்குத் தெரியுமா."

"தெரியும். அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன்."

"உன் அம்மா என்ன சொன்னாள்."

"ஜாக்கிரதை- ஜாக்கிரதை- என்று எச்சரித்தாள்."

"ஏன் தோல்வியுற்றது."

"ஏனோ தெரியவில்லை. என்னிடமிருந்து விலகிப் போய் விட்டார்கள்."

"உன் அம்மாவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினாயா."

"சிலருக்கு அறிமுகப்படுத்தினேன்."

"உன்னைக் கடைசியாகக் காதலித்தவள் யார்."

"கௌசல்யா."

"யார், அந்த டிராவல் ஏஜன்ஸி பெண்ணா. குண்டுப் பெண்ணா."

"ஆமாம்."

"அவளையா காதலித்தாய்."

"எனக்கு அவள்மீது அப்படியொரு பிடிப்பு இருந்தது."

"அவளும் உன்னை காதலித்தாளா."

"அவளும் மெல்லிய போதை மயக்கத்தில் என்னைக் காதலிப்பதாகச் சொல்லியிருக்கிறாள். என்னோடு நிறைய பேசியிருக்கிறாள். இழைந்திருக்கிறாள்."

"நீங்கள் உடலுறவு கொண்டிருக்கிறீர்களா."

"ஆமாம். சிலமுறை."

"இதுவும் உன் அம்மாவுக்குத் தெரியுமா."

"நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், நாங்கள் நெருக்கமாக இருக்கிறோம் என்று தெரியும்."

"அப்படியானால், இந்த ஷெரோனை ஏற்றுக் கொள்ள உன் அம்மா ஏன் தயங்கினாள்."

"எனக்குத் தெரியாது. அம்மாவிடம் தான் கேட்க வேண்டும்."

"இபபோது என்னிடம் சொல். நீ என்னைக் காதலிக்கிறாயா."

"தெரியவில்லை. நாம் பேசிப் பழகி இன்னும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டால் ஒரு வேளை காதல் வரும். உன்னை கவனமாக ஊருக்கு திருப்பி அனுப்ப வேண்டுமே என்ற கவலைதான் எனக்குள் இருக்கிறது."

"ஒருவேளை நான் ஐரோப்பிய பெண்ணாக இருப்பதால் சற்று விலகி இருக்கிறாயா."

"இருக்கிறது. உன் மீது காதலைவிட நல்ல நட்பு இருக்கிறது. அதனால்தான் என்னால் இப்படி அமைதியாக எந்த அசிங்கமும் செய்யாமல் படுத்துக் கொள்ள முடிகிறது. பெண் போகத்திற்கு மட்டுமில்லை. பெண் நல்ல ஸ்நேகிதம். நல்ல நட்பு. ஒரு பெண்ணோடு நட்போடு அணைத்துக் கொள்வது என்பது எங்களுக்குப் பழக்கமில்லை. உன் மூலம் நான் அதை தெரிந்து கொண்டேன்."

கட்டிலில் உட்கார்ந்து கொண்டு ஷெரோன் யோசிக்கத் துவங்கினாள்.

"உன் அம்மா என்னை ஏன் வேண்டாம் என்று சொல்லி விட்டாள் தெரியுமா. எனக்குப் புரிகிறது," என்று உரக்கக் கத்தினாள்.

"என்ன."



"என் அம்மா விவாகரத்து செய்து போய்விட்டாள். உன் அம்மாவுக்கு நான் இதற்கு முன் என்ன செய்தேன் என்பது பற்றி ஆட்சேபணையே இல்லை. இதற்குப் பிறகு எப்படி இருப்பேன் என்ற கேள்வி இருக்கிறது. என் அம்மாவைப் போல நானும் விட்டு விலகி விடுவேனோ என்று பயம் இருக்கிறது. தன்னுடைய பிணைப்பை உறுதியாக பற்றிக் கொள்கின்ற என்ன பிரச்சினைகள் வந்தாலும் அதை விட்டு விலகாத பெண்தான் உன் அம்மாவுக்குத் தேவை. உன் அம்மா அப்படிப்பட்ட பெண். நாங்கள் அப்படி இல்லையோ என்று நினைக்கிறாள். ஆனால் அது தவறு. ஐரோப்பிய பெண்களும் திருமணம் என்ற பந்தத்திற்குப் பிறகு விட்டு விலகாமல் இருக்கத்தான் விரும்புகிறார்கள். ஐரோப்பிய பெண்கள் மட்டுமல்ல. உலகத்திலுள்ள எல்லாப் பெண்களும் அப்படித்தான் விரும்புகிறார்கள். ஏதோ நிர்பந்தத்தினால்தான் பிரிந்து போகிறார்கள்."

அவர்கள் ஊர் திரும்பினார்கள்.

சிலோனைப் பற்றி எழுதி அனுப்பினாள். அவள் மட்டுமே கேரளாவுக்கு போய் வந்தாள்.

வீட்டிற்கு வந்து அம்மாவோடு நிறைய பேசினாள். புடவை கட்டிக் கொண்டு கபாலி கோயிலுக்கு போய் வந்தாள். பார்க்ஷெரட்டனுக்கு அம்மாவை கூட்டிக் கொண்டு போய் அங்கு நீச்சல் குளத்தில் நீந்திக் களித்தாள்.

விடைபெறும் நேரம் வந்தது.

அம்மாவை தழுவிக் கொண்டாள்.

"மறுபடியும் சொல்கிறேன். உங்களுக்காக உங்கள் பிள்ளையை நான் திருமணம் செய்து கொள்ளத் தயார். ஆனால் இது சரியாக வராது என்ற எண்ணம் உங்களுக்குள் ஏற்பட்டு விட்டது. அதனாலேயே இதை வற்புறுத்தாமல் விடுகிறேன். உங்கள் பிள்ளையும் அற்புதமானவர். மிக நல்ல குணம். மிக நல்ல ஆண். அவருக்கு நல்ல மனைவி வேண்டுமே என்று நான் பிரார்த்தனை

செய்யத் துவங்க வேண்டும்" என்று கைகோர்த்துக் கொண்டான்.

அம்மா அவளுக்கு இரண்டு புடவைகளும், மூன்று கடிதார்களும் கொடுக்க சந்தோஷமாக வாங்கிக் கொண்டாள். ஆயிரம் டாலர் எண்ணிக் கொடுத்தாள்.

"இதை நான் எப்படி வாங்கிக் கொள்வது" என்று அம்மா தயங்க "நீங்கள் உங்கள் பெயரால் அல்லது உங்கள் கணவர் பெயரால் யாருக்காவது மதிய உணவு கொடுங்கள். அந்தப் பழக்கம் உங்களுக்கு இருக்கிறதே" என்று சொல்ல அம்மா காசு வாங்கிக் கொண்டாள்.

"கௌசல்யா கிளம்பும்போது சொன்னாள். அது ஒரு அற்புதமான வீடு. நீ நன்றாக சுதந்திரமாக அங்கே இருக்கலாம் என்று சொன்னாள். எனக்கு இந்தியாவைப் பற்றிய பல அபிப்ராயங்கள் உன் அம்மாவாலும், உன்னாலும் மாறின. ஒரு மாதமும் உன்னோடு இருந்தது எனக்கு மிகப்பெரிய சந்தோஷத்தை கொடுத்தது. நான் வருகிறேன். என் வாழ்நாளில் உன்னையோ, உன் அம்மாவையோ மறக்க மாட்டேன். நாம் மூவரும் இருக்கின்ற படம் என்னுடைய மேஜையில் எப்பொழுதும் இருக்கும்" என்று சொல்லிவிட்டு விமானம் ஏறினாள்.

போய் சேர்ந்தவுடன் தகவல் சொன்னாள்.

நடுநிசியில் அவனுக்கு டெலிபோன் வந்தது. பம்பாயிலிருந்து எம்.டி. பேசினார்.

"வந்துட்டோம்டா. பிரமாதமா வந்துட்டோம். கஸ்டம்ஸ் க்ளியரன்ஸ் மெட்ராஸ்லதான். இங்க நான் மட்டும் கீழ இறங்கி உன்னோட பேச வந்திருக்கேன். அங்க மெட்ராஸ்ல ஏர்போர்ட்டுக்கு வந்துடறியா. மத்தியானம் பன்னெண்டரை மணிக்கு கிளம்பி ரெண்டரை மணிக்கு வருது" என்று சொல்ல அவன் அலுவலகத்திலிருந்து கார் எடுத்துக் கொண்டு அவரை வரவேற்கப் போனான்.



சுங்கத் தணிகைக்கு பொருள்கள் இருக்கின்றன என்று சொன்னவுடன் அவர்கள் இப்பொழுது நீங்கள் ஒன்றும் எடுத்துக் கொள்ளாமல் போங்கள். தணிக்கையை பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்ல, அவன் தணிக்கைக்கு உண்டான விஷயங்களை ஓரமாக வைத்து விட்டு அவரை மட்டும் சில துணிமணி பெட்டிகளோடு வெளியே கொண்டு வந்தான்.

"பைனான்ஸ் கம்பெனியா. இவர்தான் எம்.டி.யா வாங்க ஸார் வணக்கம். என்னாத்துக்கு ஸார் உங்களுக்கு கஸ்டம்ஸ். கிளம்பலாம் ஸார்," என்று அவர்கள் வழிவிட்டார்கள்.

காரில் ஏறியதும் எல்லோரும் சென்னையை ஆவலாகப் பார்த்தார்கள்.

"அப்பா... எங்க ஊர் சுத்தினாலும் நம்ம ஊர் குப்பைத் தொட்டிதான் நமக்கு சொந்தம். பாம்பே ஏர்போர்ட்லயே ரூம் எடுத்துண்டு நன்னா தூங்கினோம். அந்த கௌசல்யா ரொம்ப நன்னா கவனிச்சுண்டா. என்ன அதட்டல். என்ன மிரட்டல். சாகேதராமனுக்கு வேண்டப்பட்டவான்னா எனக்கும் வேண்டப்பட்டவாதான் அப்படின்னு சொல்லி லண்டன்லேர்ந்து நாலாபக்கமும் போன் போட்டு எங்க போனாலும் ஒரு ராயல் ட்ரீட்மெண்ட். அடடா. ஒரு வழியில ஒரு சிகப்புக் கம்பளம் விரிக்காத குறைதான். ரொம்ப நன்னா இருந்ததுடா. மறக்கவே முடியாத அளவுக்கு."

"கௌசல்யா ஆண்டி உங்களுக்காக மூணு சென்ட் கொடுத்திருக்காங்க," என்று சொல்லி ஒரு பாக்கெட் பிரிக்க அதில் இரண்டு வகை சென்ட்டுகளும் ஒரு ஆஃப்டர் ஷேவ் லோஷனும் இருந்தது.

கௌசல்யாவை நினைத்து உருகியபடியே அவன் அதை வாங்கிக் கொண்டான்.

"அப்போ நான் வரட்டுமா ஸார்," என்று அவரை வீட்டில் இறக்கி விட்டு கிளம்பும்போது "பேசிடுங்கோ

ளேன்" என்று எம்.டியின் மனைவி பேச "கொஞ்சம் இருடா" என்று சொன்னார்.

சமையற்காரனிடம் காபி வரவழைத்தார்.

எம்.டியும் அவர் மனைவியும் அருகே உட்கார்ந்து கொண்டார்கள்.

"நாங்க ஐரோப்பா முழுக்க சுத்தினோமே தவிர பல இடங்களில் உன்னைப் பத்தி பேசினோம்."

"என்னைப் பத்தியா, எதுக்கு ஸார்."

"இத்தனைக் காசு செலவு பண்றோமே. குழந்தைக்கு ஏதாவது பண்ண வேண்டாமா அப்படின்னு என் பொண்டாட்டி கேட்டா. அவளுக்கு நல்ல புருஷன் கிடைப்பான் கவலைப்படாதேன்னு சொன்னேன். வெறுமன சொன்னா போதுமா. நாம ஏதாவது முயற்சிகள் எடுக்க வேண்டாமா. ரெண்டாவது வருஷம் தானடி படிக்கறா. இன்னும் ஒரு வருஷம் இருக்கே என்னதுக்கு அவசரப்படறன்னேன். இல்லை. இப்போ ஆரம்பிச்சாதானே ஒரு வருஷத்துக்குள்ள ஏதாவது முடியும்னா. ஏதாவது மனசுல வச்சுண்டு பேசறியான்னு கேட்டேன். ஆமாங்கறா. என்னன்னு கேட்டபோது உன் பேரை சொன்னா. உனக்கு வீட்ல கல்யாணத்துக்கு பார்க்கறாளா."

"என்ன ஸார் திடீர்னு கேட்கறீங்க."

"ஒரு பொண்ண பெத்தவன் யாரைப் பார்த்தாலும் கேட்கலாண்டா. தப்பு ஒண்ணும் இல்லை."

"உங்களுக்கென்ன ஸார், நீங்க எங்க இருக்கீங்க. நான் எங்க இருக்கேன். என்னத்துக்கு என்னை பார்த்து இந்த கேள்வி கேட்கறீங்க."

"என் பொண்ண கொடுக்கறதுக்குத்தான்."

"ஸார். விளையாடறேளா. அவ குழந்தை. படிக்கறா."

"ஏதோ ஒரு காலத்துல கையில பிடிச்சு கொடுக்கணுமோன்னோ. உனக்கு இருவத்தஞ்சு வயசு ஆகறது. அவளுக்கு பத்தொன்பது வயசு ஆகறது. ஒரு வருஷம்



பொறுத்து உனக்கு இருவத்தாறு, அவளுக்கு இருவது. சரியா இருக்குமேடா."

"ஸார். நான் இதுக்கு உடனே பதில் சொல்ல முடியாதே."

"உங்கம்மாவை கலந்து சொல்லு. நான் உங்கம்மாவை வந்து பார்க்கலாமா. இது பத்தி பேசலாமாங்கறதுக்காகத்தான் இந்தக் கேள்வியை கேட்கறேன்."

"யார் வேணா கேட்கலாம் ஸார். யார் வேணா பார்க்கலாம். அதுல ஒண்ணும் தவறு இல்லை. ஆனால், இப்போவும் என்ன தோன்றதுன்னா உங்க மகள் குழந்தை."

"இல்லை. அவள் சொல்லித்தான் இந்தப் பேச்சையே ஆரம்பித்தோம்."

"என்ன ஸார் சொல்றேள்."

"நீ கொஞ்சம் அவகிட்ட பேசிப்பாரேன்."

"சரி ஸார்."

"நான் உங்கம்மாகிட்ட பேசறேன். அதுல ஒண்ணும் தப்பில்லையோன்னோ."

"தப்பில்லை ஸார்."

அவன் சென்ட் பாட்டில்களோடு வீட்டிற்கு வந்தான். அம்மாவிடம் நீட்டினான்.

"எங்க எம்.டி உங்கிட்ட பேசறேன்னு சொல்லியிருக்காரும்மா."

"பேசிட்டாருடா."

அம்மா அவனைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

"என்னம்மா கேலி பண்ற."

"ஷெரோன்தான் வேணும்னு சொல்லிடுவியோன்னு எனக்கு லேசா ஒரு கலக்கம் இருந்தது. சிலோன் போயிட்டு வந்தவுடனே அம்மா, நானும் ஷெரோனும் கல்யாணம் பண்ணினுட்டோம். கதிர்காமத்துல மாலை மாத்தினுட்டோம்னு சொல்லிடுவியோன்னு

பயமா இருந்தது. ஆனா, ஒரு முகமாறுதலும் இல்லாம வந்தது சந்தோஷமா இருந்தது.

எம்.டி.கிட்ட ஜாதகம் பார்த்துக்கலாமேன்னு சொன்னேன். பார்த்துட்டேன். வரதாச்சாரிகிட்ட உன் ஜாதகம் இருக்காம். போய் கேட்டு வாங்கிண்டாராம். ரெண்டும் ஒப்பிட்டு பார்த்தாராம். ரொம்ப நன்னா இருந்ததாம். வரதாச்சாரியே மறுபடியும் போன் பண்ணும்போது நன்னாயிருக்கு நீங்க ப்ரொசிட் பண்ணலாம்னு சொல்லிட்டாராம். நல்ல நாள் பார்த்துண்டு வீட்டுக்கு வரேன்னு சொல்லியிருக்கார். ஜாதகம் சரியா பொருந்தியிருக்கறதுனாலதான் அவாளுக்குள்ள இதைப்பத்தி பேச்சே ஆரம்பிச்சாளாம். அந்தப் பொண்ணும் எனக்கு அவர்னா ரொம்ப சம்மதம்ப்பா அப்ப டின்னு சந்தோஷமா சொல்லிடுத்தாம்."

"என்னம்மா. நமக்கு ரொம்ப ஹைட் இல்ல."

"நீதான் சொல்லணும். உனக்குதான் உன் எம்.டி.யைத் தெரியும்."

"இங்க வந்து உன்னை ஏதாவது தொந்திரவு படுத்தினா எனக்கு கஷ்டமாயிடும்மா."

"தன்னுடைய பணம் காசு அப்படின்னு ஏதாவது காண்பிச்சா எனக்கு பொறுக்காது. நாம காசுக்கே வழியில்லாதவா இல்லை. நமக்குன்னு சொத்து இருக்கு. பெரிய பணம் காசுக்கு நாம மயங்கறவா இல்லை. அது தவிர நல்ல சம்பத்தோட ஒரு பொண் வந்தா வேண்டாம்னு சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்தக் குழந்தை நல்லவளா, அது பார்த்துண்டா போதும்."

"எப்படிம்மா தெரியும்."

"பேசிப்பார்த்தா தெரியாதாடா."

"பேசிப் பார்த்துட்டு வேண்டாம்னு சொல்ல முடியுமாம்மா."



"அவாளும் உன்னை வேண்டாம்னு சொல்லலாமோன்னோ."

"அவா வேணும்னு சொன்ன பிறகு, நான் வேண்டாம்னு சொல்றதுக்கு கொஞ்சம் பயமா இருக்கும்மா. எம்.டியா வேற இருக்கார்."

"இதோ பார். உனக்கு இந்தக் கம்பெனிதான்னு அவசியமில்லை. வேற எந்தக் கம்பெனியிலயும் உனக்கு வேலை கிடைக்கும். வேலையைப் பத்தி பயப்படாத. உனக்கு அந்தப் பெண் சரியா வருவாளான்னு மட்டும் யோசனை பண்ணு."

எம்.டி. மனைவியிடமிருந்து போன் வந்தது.

நாளை காலை சுங்க இலாகாவிற்குப் போய் வேறு சூட்கேஸ்களை இனம் காட்டி எடுத்து வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டான். மிக மரியாதையோடு பேசினாள்.

"செய்யலாம் மேடம். ஆனா, எனக்கு எது எதுன்னு தெரியாதே."

"இல்லை. நாளைக்கு சாருமதியை கூட அனுப்பறேன். கார்ல வந்து உன்னை ஆபீஸ்ல பிக் அப் பண்ணிண்டு அப்படியே போய் க்ளியர் பண்ணிண்டு வந்துடுங்கோ. நாங்க உங்க அம்மாகிட்ட பேசினோம். சொன்னாளா."

"சொன்னா மேடம்."

"எல்லாம் நல்லபடியா முடியட்டும். பகவான் மேல பாரத்தை போடுவோம். எனக்கு அதை சீக்கிரம் கொண்டு வந்து கொடுத்துடுங்க. நிறைய சாமான்கள் ஃப்ரெண்ட்ஸுக்காக வாங்கி வச்சுருக்கேன்."

நிறைய காகிதங்களோடும் ஒன்றரை லட்ச ரூபாய் காசை தோல் பையில் போட்டுக் கொண்டும் காரில் சாருமதி ஆபீஸுக்கு வந்து இறங்கினாள்.

அவன் போய் ஏறிக் கொண்டான்.

டிரைவர் கார் ஓட்ட இரண்டு பேரும் மௌனமாக ஏர்போர்ட்டுக்கு போய் இறங்கினார்கள். அவன் பெட்டிகளை அடையாளம் காட்ட அவைகளை பிரித்துக் காண்பித்தான்.

"என்ன வச்சுருக்கீங்க."

அவர்கள் திறக்கும் வேகம் பார்த்து அதிகாரி கேட்டார்.

"எலட்க்ரானிக்ஸ் சாமான்கள் இருக்கு."

"சுமார் எவ்ளோ விலைக்கு வாங்கியிருக்கீங்க."

"ஆயிரம் டாலருக்கு வாங்கியிருப்போம்."

"அப்போ இன்னொரு ஆயிரம் டாலர் டூட்டி கட்டிடுங்க. எடுத்துட்டு போகலாம்."

"பிரிச்சு பார்க்க வேண்டாமா."

"நீங்களே சொல்றீங்களே. அப்புறம் நான் என்னத்துக்கு பிரிச்சு பார்க்கணும். பைனான்ஸ் கம்பெனி. பெரிய இடம். என்ன பொய் சொல்லப் போறீங்க. தைரியமா பிரிச்சு காட்டறீங்க. போதை மருந்து இருந்தாதான் பிரச்சினை. மத்தபடி மத்ததெல்லாம் நாங்க ஒண்ணும் பெருசா பார்க்க மாட்டோம்."

"வேணா நீங்க அதையும் செக் பண்ணி பார்த்துடுங்க ஸார்," என்று அவன் சொல்ல வேண்டாம் என்று அவரே ஜிப்பை இழுத்து மூடினார்.

ஐம்பதாயிரம் ரூபாய் காசு கட்டி ஏழு பெட்டிகளையும் வெளியே எடுத்து வந்தார்கள்.

பின் சீட்டில் அவளுக்கருகே சாகேதராமன் உட்கார்ந்து கொண்டான்.

"அப்பா ஏதாவது பேசினாரா" என்று மெல்லிய குரலில் அவள் கேட்டாள்

"பேசினார். நீங்க படிக்கறீங்க, என்னத்துக்கு அவசரம்னு சொன்னேன்."

"எனக்கு ஒண்ணும் அவசரமில்லை. ஆனால், நல்ல புருஷன் வரணும்னு ஆசை ரொம்ப இருக்கு."



"நான் நல்லவன்னு யார் சொன்னா உங்களுக்கு."

"ஒரு நம்பிக்கைதான். கெட்டிக்காராளா இருக்கறவாள எனக்கு ரொம்ப பிடிக்கும். நீங்க இடர்னெரி கொண்டு வந்து கொடுத்தேளே. அவ்வளவு அற்புதமா இருந்தது. அதைத் தவிர கௌசல்யா வேற சொன்னாங்க. வெரிஃபைன் ஜென்டில்மேன் அப்படின்னாங்க. இந்த மாதிரி அமைதியான ஆளை பார்க்கறது கஷ்டம்னு சொன்னாங்க. எங்கப்பாவுக்கு உங்களை பிடிச்சுருக்கு. எங்கம்மாவுக்கு உங்களை பிடிச்சிருக்கு. எங்க அண்ணாவுக்கு உங்களை பிடிச்சுருக்கு. நாழும் நாலு தடவை பார்த்தோம். ஒரு தடவை கூட நீங்க என்னை திரும்பி பார்க்கலை. எனக்கு அது ரொம்ப பிடிச்சிருந்தது. வயசானவாள்ளாம் பெண்களை எவ்வளவு விகாரமா பார்க்கறான்னு தெரியும். நீங்க எப்படி பார்க்காம இருந்தேள்."

மெல்ல அவன் தலை குனிந்து யோசித்தான்.

தான் அப்படிப் பார்க்காத ஆள் அல்ல. ஆனால், பார்க்காமல் இருந்திருக்க என்ன காரணமோ. எம்.டி. என்கிற பயம் காரணமா. பணக்காரர்கள் என்கிற பதட்டம் காரணமா. இல்லை. ஆனால் பெண்களை பார்க்கவும் முடியும். பார்க்காமல் இருக்கவும் முடியும். எல்லாப் பெண்களையும், எல்லா நேரமும் இளித்துப் பார்க்கிற புத்தி சட்டென்று போய் விட்டது. எப்போது போயிற்று.

தமிழரசி கந்தசாமி நெருங்கி உட்கார்ந்து பேசிப் பழகிய போதே போய்விட்டது. பெண்கள் அதிசயமாக இல்லை. காரணம் அதற்குப் பெண்கள், பெண்களோடு ஏற்பட்ட பழக்கம். கௌசல்யாவோடு ஏற்பட்ட நெருக்கத்தால் ஷெரோனோடு ஏற்பட்ட நட்பால் அவன் உள்ளம் மேலும் தெளிவாகி விட்டது. அவர்களைப் பற்றி ஆத்திரமில்லாத அலட்சியமுமில்லாத ஒரு மிருதுவான நிலை ஏற்பட்டிருந்தது.

இதுவே இரண்டு வருடங்களுக்கு முன்பு எம்.டி. வீட்டுக்கு அழைத்திருந்தால் யப்பா... வெடைக்குட்டி

என்று நிச்சயமா மனசுக்குள் வார்த்தை ஓடியிருக்கும். எப்பொழுது அந்த வார்த்தை உள்ளுக்குள் தோன்றியதோ அப்பொழுது தொடர்ந்து எண்ணங்கள் தடம் மாறும். உள்ளே எண்ணம் தோன்றும்போதே அதை கிள்ளி எறிய பழக்கம்தான் காரணம். அனுபவம்தான் அடிப்படை வித்து. இது புதிதல்ல. புதிரல்ல. புனிதமுமல்ல. அவள் நல்லதும், கெட்டதும் கலந்தவள். சரியும், தவறும் மிகுந்த பிறவி என்பதை இந்த அனுபவம்தான் எடுத்துச் சொல்லியது.

"உன் பேர் என்ன சொன்ன."

"சாருமதி."

"சாருமதி பி.எஸ்.ஸி. செகண்ட் இயர் தானே படிக்கற."

"ஆமாம்."

"இன்னும் ஒரு வருஷம் இருக்கில்லையா."

"ஆமாம்."

"அம்மாவை வந்து பார்த்து பேசி பழகிட்ட பிறகு நாம ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிப் பழகி புரிஞ்சுப்போம். உங்கப்பாவுக்கு உன்னை ஒரு நல்ல இடத்துல கல்யாணம் பண்ணி வைக்கணும்னு எப்படி ஒரு எண்ணம் இருக்கோ, அதே மாதிரி எங்க அம்மாவுக்கும் ஒரு நல்ல மருமகள் வரணும்கற ஆசை இருக்கு. நான் உங்கப்பாவுடைய ஆசையை பூர்த்தி பண்ணணும். நீ எங்க அம்மாவை மதிக்கணும். இது ரெண்டும் நடக்கறபோது அந்தக் கல்யாணம்கறது சிறக்கறது. கல்யாணத்துக்கு முன்னாடி ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சுப்போம்."

"எப்படி புரிஞ்சுகறது."

"லவ் பண்ணிதான் புரிஞ்சுக்க முடியும். நாம் காதலிப்போம். ஊர் சுத்துவோம். பேசுவோம், பழகுவோம். பழகப் பழக நம்ம யோக்கியதை நமக்கும் தெரியும். மத்தவாளுக்கும் தெரியும். ப்ளஸ், மைனஸ் ரெண்டும் எதிர்க்க விரிச்சு வைக்கறபோது அனுசரிச்சு



போகறதுக்கு புத்தி வந்துடும். என்ன நினைச்சுப்பானோ அப்படிங்கற பயம்தான் பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணம். புருஷன் என்ன சொல்வானோ என்கிற கேள்விக்குறிதான், கல்யாணமாகியும் பதினஞ்சு வருஷத்துக்கு பிறகும் ஒரு பொம்மனாட்டிக்கு இருக்கு. நமக்கு முதல்நாளே அந்த மாதிரியான கேள்வி வரக்கூடாது. சாகேதராமன் இப்படித்தான் இருப்பான். சாருமதி இப்படித்தான் இருப்பாள் என்று பரஸ்பரம் தெரிஞ்சுடுத்துன்னா அதைவிட சந்தோஷமான விஷயம் உலகத்துல எதுவும் இல்லை. அந்தக் கல்யாணம் நிச்சயம் ஜெயிக்கும்.

சாகேதராமனும் சாருமதியும் கல்யாணத்துக்கு முன்னாடியே பேசி புரிஞ்சுணுட்டாங்க. இந்தக் கல்யாணம் ரொம்ப நிச்சயமா வெற்றிகரமாயிடும். காசு பணம் சந்தோஷமில்லை சாருமதி. நல்ல மனுஷா கிடைக்கறது தான் சந்தோஷம். நல்ல மனுஷா அப்படின்றது நடவடிக்கைகள்ல இருக்கு. பொறுமையில இருக்கு. என்னைவிட காசைவிட நல்ல புருஷன் முக்கியம் அப்படின்னு நீ நினைச்சியோ பணக்காரனா இருக்கறவனை விட சாதாரண வீடா இருந்தாலும் சுமாரான சம்பளமா இருந்தாலும் அஸிஸ்டெண்ட் மானேஜரா இருந்தாலும் நிம்மதியா குடித்தனம் பண்ணணும்னு நினைச்சியோ அதுவே பிரமாதமான விஷயம்."

"இதைச் சொல்றபோதும் உங்களால அமைதியா கொஞ்சம் கூட காதலுங்கற பரவசமே இல்லாம, ஒரு கிளுகிளுப்பே இல்லாம, சொல்ல முடியறதே அது எப்படி."

"என் அம்மா எனக்கு நிறைய சொல்லி கொடுத்திருக்காங்க. அதுதான் காரணம்."

"கரெக்ட். எங்கப்பாவும் அதுதான் சொன்னார். அந்த பொம்மனாட்டி ரொம்ப கரெக்டா புள்ளைய வளர்த்திருக்கா. பார்த்து பார்த்து மேல கொண்டு வந்திருக்கா அப்படின்னார். அம்மாவை பார்க்கறதுக்கு எப்போ வரட்டும்."

"எப்போ வேணாலும் வா. இப்பவே கூட வா. அப்படியே போகலாம்."

அவன் சொல்ல அவள் சரியென்று தலையசைத்தாள்.

"கிட்ட வந்து உட்கார்ந்துகட்டுமா."

"வேண்டாம்."

"ஏன்."

"நான் கிட்ட வரேன்." அவன் நகர்ந்து அவளுக்கருகே வந்தான். கைகள் கோர்த்துக் கொண்டான். நிதானமாய் அவளைப் பார்த்தான். பிறகு கண்களை மூடிக் கொண்டான்.

ஆறு முறை காதலித்த பிறகு ஏழாவது முறை ஒரு பெண் காதல் என்று சொன்ன பிறகு இப்பொழுது தான் எந்தப் பதட்டமுமில்லாமல் விரலை கோர்த்துக் கொள்ள முடிகிறது. இவளோடு கோபமில்லாமல், ஆத்திரமில்லாமல், அசூயை இல்லாமல், அலட்டல் இல்லாமல் காதலிக்க பழக வேண்டும் என்று எண்ணம் தோன்றியது.

சட்டென்று ஒரு ஸ்பீட் பிரேக்கர் வண்டியைத் தூக்கிப் போட இரண்டு பேரும் முன்னே குலுங்கி பின்னே சரிந்தார்கள்.

இதுவே சாக்காக இருவரும் நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள்.

பிரச்சினைகள் வரவரத்தான் தெளிவை நோக்கி மனிதன் முன்னேற முடிகிறது என்று சாகேதராமன் நினைத்துக் கொண்டான்.

சென்னை மாவட்ட கிளை நூலகம்
கொளத்தூர், சென்னை 99